



பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்





எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication



மூவர் தேவாரம்
புதிய பார்வை

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தேவாரம் ஓர் இலக்கியமாக, இசை நூலாக
தமிழர்களின் வாழ்விற்குப் பயன்படுகின்ற
ஒரு பண்பாட்டுப் பெட்டகமாக விளங்கும்
பாங்கினைத் துய்த்துணரும்
ஓர் அரிய பெரும்நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-5-6



eBOOK ~ மின் நூல்

மூவர் தேவாரம் - புதிய பார்வை

இந்திய இசைத்துறை (செ.ப.க)
மறைமலை அடிகளார்
அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் (2002-2003)

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

1
தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

மூவர் தேவாரம் - புதிய பார்வை

முதற்பதிப்பு – 2003
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.350.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN: 978-81-938927-5-6


9 788193 892756 >

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

தேவர்எலாம் தொழச்சிவந்த செந்நாள் முக்கண்
செங்கரும்பே! மொழிக்குமொழி தித்திப்பு ஆக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
மூடனேன் புலம்புயசொல் முற்று மோதான்[1]

- தாயுமானவர்

பூவாரம் அணிந்தபிரான்
பொன்னடிக்கீழ் நின்றெளியோம்
தேவாரம் பாடில்அவர்
செவிக்கின்பம் ஆகாதோ?[2] *- கவிமணி தே.வி.*



மூவர் முதலிகள்

திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரமூர்த்தி சுவாமிகள்

1 தா பா கல் ஆலின் - 14

2 மலரும் மாலையும - சமூகம் - 15



அமரர் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி
முதல் இசைத்துறைத் தலைவர் (1937-61)

★

சென்னைப் பல்கலைக் கழக இந்திய இசைத்துறை
முதல் பேராசிரியர் - துறைத் தலைவர்
அமரர் பி. சாம்பமூர்த்தி அவர்கட்கு

அன்புப்படையல்

தென்னக இசையில் தேர்ந்தஆய் வாளர்;
திருப்பதி இசையியல் கழகம்
தன்னிலே முதல்வர்; வடமொழி தெலுங்கு
தமிழெனப் பலமொழி அறிந்தோர்;
சென்னையில் அமைந்த இசைத்துறை தன்னில்
திகழ்ந்திடும் முதல்துறைத் தலைவர்;
அன்னபேர் ஆசான் சாம்பமூர்த் திக்கே
ஆக்கியே படைத்தனன் இந்நூல்.



திரு.இராம. வீரப்பன் அவர்கள் வாழ்த்துரை

நம்மிடையே நடமாடும் தமிழ்க் கருவூல மாக விளங்குபவர் பேராசிரியர் டாக்டர் ந சுப்புரெட்டியார் அவர்கள் அவர்கள் தமிழிலே உள்ள எல்லா இலக்கியங்களையும், பெரும்பாலான அறிவியல் நூல்களையும் படித்துத் தெளிந்த அறிஞர் பெருமகனார் படித்த பண்டிதர் மட்டுமல்ல, அறிவியல் ஆராய்ச்சியாளர் ஆராய்ந்த கருத்துகளை மக்களுக்குப் பயனுள்ள வகையிலே வழங்குகிற ஆற்றல் படைத்தவர்

அறிவியல் என்றாலே ஆன்மிகத்திற்குத் தொடர்பு இல்லையென்று எண்ணுகிற இந்தக் காலத்தில் அறிவியலும், ஆன்மிகமும் இணைந்தால்தான் மனித வாழ்வு முழுமை பெறும் என்ற பேருண்மையை நிலைநாட்டிக் கொண்டிருக்கிற பெருமகனார்

அவர் எத்தனையோ நூல்களைப் படைத்திருக்கிறார்கள் அத்தனையும் வகை வகையான பொருள்களில், தலைப்புகளில் உண்டான நூல்கள் அந்த வரிசையில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இந்திய இசைத் துறையின் சார்பிலே அவர் ஆற்றிய அற்புதமான உரையை ''மூவர் தேவாரம் - புதிய பார்வை'' என்கிற தலைப்பில் நூலாக ஆக்கியிருக்கின்றார்

''மூவர் தேவாரம்'' என்றால் தமிழ் மக்களுக்கு அறிமுகமான ஒரு பெயர்தான் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் தங்களுடைய திருமுறையாக ஏற்றுக் கொண்டிருக்கிற நூல் தேவாரம் அந்த தேவாரம் இலக்கியமாக இசை நூலாக தமிழர்களின் வாழ்விற்குப் பயன்படுகிற ஒரு பண்பாட்டுப் பெட்டகமாக உணர்ந்து கொள் ளாமல் சமய வழிபாட்டிற்குரிய வணக்கத்திற்குரிய திருமுறைக ளாகவே தமிழ்மக்கள் எண்ணி பூசை அறையிலேயே பூட்டி வைத்துவிட்டார்கள் அதனாலேதான் கடந்த காலங்களில் தேவாரத்தின் பெருமையை தமிழ் மக்கள் முழுமையாக அறிந்து

கொள்ள முடியாமல் போய்விட்டது சமீப காலமாகத்தான் மக்களிடையே மறுமலர்ச்சி தோன்றி திருமுறைகள் பூட்டப்பட்ட பூசை அறையிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு மக்கள் மன்றத்திலே படிக்க வேண்டிய, படித்து ஆராய்ந்து உணர வேண்டிய, பின்பற்றுவதற்குரிய வாழ்வியல் நூலாக விளங்கிக் கொண்டிருக்கிறது அத்தகைய ஒரு சீரிய பணியில் நம்முடைய சுப்புரெட்டியார் அவர்கள் இந்த நூலை ஆக்கியிருக்கிறார்கள்

''**மூவர் தேவாரம்**'' என்கிற பகுதியில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி அடிகளார் என்ற மூவருடைய தேவாரத்தையும் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்ட வகையில் விளக்கியிருக்கிறார்கள் அந்தப் பகுதி என்பது தேவார மூவர் களின் முக்கியமான பாடல்களை எடுத்துச் சொல்லி அதைப் பாடிய களங்கள், பாடியதற்கான சூழ்நிலை, அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்று எளிய நடையில் சுருக்கமாக விளக்கியிருக் கிறார் ஆனால், இந்த நூலின் தலைப்பிற்கு ஏற்ற வகையில் இரண்டாவது பகுதிதான் தேவாரத்தின் புதிய பார்வையிலே பார்க்கத் தூண்டுகிற பகுதியாகும் பண் சுமந்த தேவாரப் பாடல்கள் என்பது இரண்டாம் பகுதி. தமிழில் இசை பாட வேண்டும் என்பதைத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் நூறு ஆண்டுகளாக விவாதங்களுக்கிடையில் போராட் டமாக நடத்திக் கொண்டிருக்கிற துயரமான வரலாற்றைக் கொண்டது தமிழகம். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிலப்பதிகாரம் இசைக்கு இலக்கணம் வகுத்திருக்கிறது என்றும், அதற்கு முன்பே சங்க இலக்கியங்களில் இசையைப் பற்றிய செய்திகள் வந்துள்ளன என்றும், அதற்குப் பிறகு காரைக்கால் அம்மையார் காலத்திலே தொடங்கி 7ஆம் நூற்றாண்டு, 8ஆம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்த தேவார மூவர்கள்வரை, அதற்குப் பிறகு அருணகிரிநாதர் போன்றவர்கள், சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்த வள்ளல் பெருமான்வரை, நமது காலத்திலே தோன்றிய மாபெரும் புரட்சிக் கவிஞராக விளங்கிய மகாகவி பாரதியார் உள்பட தமிழிலே இசையை அடையாளம் காட்டியவர்கள்

இப்படிப்பட்ட வரலாற்றை வைத்துக் கொண்டிருக்கிற தமிழர்கள்தாம் தமிழிலே இசை உண்டா என்று கேட்கிற அவலத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் அதற்கு இன்றும் போராடிக் கொண்டிருக்கிறோம் அப்படிப்பட்ட போராட்டங்களில் பண்ணோடு இசைக்கப்பட்ட தேவாரம் உண்டு என்பதையும், 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தன்' என்ற பாராட்டுப் பெற்றவர் என்றும், ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவன் இருக்கிறான் என்று அடையாளமும், 'அர்ச்சனையும் பாட்டேயாகும்' என்று விளக்கமளித்ததையும் நம்முடைய தேவாரம் வரலாறாக நமக்குத் தந்திருக்கிறது என்பது மட்டுமல்ல, அந்தக் காலத்திலேயே பண் அமைத்து தாளத்தோடு பாடல்களை நாடெங்கும் பாடிய அந்தப் பெருமையையும் நமக்கு விட்டுவிட்டுச் சென்றிருக்கிறது. ஆனால் தமிழன் பலவற்றை இழந்தது போல இசைப் பெருமையையும், இழந்து தவிக்கிறான். அந்த நேரத்திலேதான் நம்முடைய பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் இந்த நூலிலே 'பண் சுமந்த - தேவாரப் பாடல்கள்' என்ற பகுதியை அற்புதமாக விளக்கியிருக்கிறார்

இயல் துறையிலே மாத்திரம் நம்முடைய சுப்புரெட்டியார் அவர்கள் திறமை பெற்றவர் இல்லை. இசை நுணுக்கங்களிலும், தேவாரம் போன்ற இலக்கியங்களைப் படித்ததினாலே அதிலே பேரறிவு பெற்றிருக்கிறார் என்பதையும் இந்தப் பகுதி எடுத்துக் காட்டுகிறது. அதற்கு உதாரணமாக தேவாரப் பதிகங்களிலே, ''நட்ட பாடை, தக்கேசி, தக்க ராகம், குறிஞ்சி, பழந்தக்க ராகம், வியாழக் குறிஞ்சி, யாழ்முரி'' என்ற ஏழு பண்கள் அடங்கிய நூற்று முப்பத்தாறு பதிகங்கள் முறைப்படுத்தப்பட்டிருப்பதைத் தெளிவாக எடுத்து விளக்கி இருக்கிறார்கள் இந்தப் பண்களின் பெயர்களை எடுத்துச் சொல்கிற நேரத்தில் அதை எப்படி இசை வல்லுநர்கள் பாடுகிறார்கள், அதற்கு அடிப்படையாக தாளக் கட்டோடு எப்படி அவைகள் அமைந்திருக்கி.ன்றன **'தனனா தன தானா, தானா தனதானா, தானன தான தனா'** என்பது போன்ற பல பாடல்களுக்கு அந்தப் பண்ணின் வெளிப்பாடாக குறிப்பிட்டுக் காட்டியிருப்பது சிறப்பான ஓர் எடுத்துக்காட்டாகும்.

இப்படி இசைத்துறையிலேயும் தாம் பெற்றிருக்கிற அறிவை இந்தப் பகுதியிலே அவர்கள் மிகத் தெளிவாக விளக்கியிருக் கிறார்கள் அதிலே இயல் இசைத் தமிழாகிய தேவாரத் திருமுறை களில் ஒவ்வொரு பண்ணிலும் அமைந்த திருப்பதிகங்கள் யாப்பு வகைகளிலே கட்டளை வழங்குகிறது என்கிற மரபையும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்கள்

> ''இயலிசைத் தமிழாகிய, தேவாரத் திருமுறைகளில் ஒவ்வொரு பண்ணிலும் அமைந்த திருப்பதிகங்களின் யாப்பு வகையினைக் **'கட்டளை'** என வழங்குதல் மரபு. 'கட்டளை என்பது மாத்திரையளவும் எழுத்தியல் நிலையும் பற்றிச் செய்யுட்களில் அமைந்த ஓசைக் கூறுபாடாகும் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை உரையில் 'ஆடல் பாடல் இசையே தமிழே' என வரும் தொடருக்கு 'தமிழ்' என்பதற்கு 'வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தாலே கட்டப்பட்ட ஓசைக் கட்டளைக் கூறுபாடுகளும்' என அரும்பதவுரையாசிரியர் விளக்க வுரை கூறுவர் இதனைக் கூர்ந்து நோக்குங்கால் இசைத் தமிழில் வழங்கும் 'கட்டளை' என்ற சொல் செய்யுட் களில் அமைந்த ஓசைக் கூறுபாட்டினையே குறிப்ப தென்பது நன்கு துணியப்படும் ஓசைவகையாகிய இக்கட்டளை யமைப்பின் அடியொற்றியே இசைப் பாடல்களின் தாளம் முதலிய பண்ணீர்மை அமைதல் இயல்பு இந்நுட்பம் 'கட்டளைய கீதக் குறிப்பும்' என வரும் பழம் பாடல் தொடரால் நன்கு புலனாதல் கண்டு மகிழலாம்''

இப்படி அருமையான தமிழருடைய கருவூலமாக விளங்கு கிற தேவாரப் பாடல்களை மக்களுக்கு எடுத்து விளங்குகிற வகையில் பல்கலைக்கழகத்தில் அருமையான உரையாற்றி இருக் கிறார்கள் எனக்கு இவ்வளவு காலமாக இருந்து வந்த ஒரு ஐயத்தை இதிலே பேராசிரியர் அவர்கள் அற்புதமாக நீக்கி யிருக்கிறார்கள்

நம்முடைய மூவர் தேவாரத்தை ஏழு திருமுறைகளாக வகுத்திருக்கிறார்கள் வகுத்தவர்கள், திருஞான சம்பந்தருடைய தேவாரத்தை முதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பர் பெருமான் என்று புகழப்படுகிற திருநாவுக்கரசர் தேவாரத்தை அடுத்த 4,5,6வது திருமுறைகளாகவும், சுந்தர மூர்த்தி அடிக ளாரின் தேவாரத்தை ஏழாம் திருமுறையாகவும் வகுத் திருக்கிறார்கள் நான் பல நேரத்தில் பலரிடத்திலே இப்படி ஏழு திருமுறைகளை வகுத்த நேரத்தில் முதல் திருமுறையாக திருஞானசம்பந்தருடைய தேவாரம் ஏன் அமைந்தது? என்று என்னுடைய ஐயத்தைக் கேட்டிருக்கிறேன். ஏனென்றால் அப்பர் பெருமான் திருஞானசம்பந்தரை விட வயதிலும் மூத்தவர். ஆகவே அவர் தொடக்கத்திலே பாடியிருக்கக் கூடும் அதை விட்டுவிட்டு அதற்குப் பிறகு பிறந்து சிறு வயதிலேயே புகழ் பெற்ற திருஞானசம்பந்தருடைய தேவாரத்தை முதல் திருமுறை யாக ஏன் எடுத்தார்கள் என்று கேட்ட நேரத்தில் வணக்கத்திற் குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூட அதற்கு வேறொரு காரணத்தைச் சொன்னார்களே தவிர, ஒரு தெளிவான - விளக்க மான பதில் அன்றைக்கும் கிடைக்கவில்லை

ஆனால் நம்முடைய பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் இந்த நூலில் 'பண்சுமந்த - தேவாரப் பாடல்கள்' என்ற பகுதியை தொடங்குகிறபோது முதல் திருமுறை ஆளுடை பிள்ளையார் முதன் முதலில் அருளியது 'தோடுடைய செவியன்' என்னும் முதற்குறிப்புடைய பிரமபுரத் திருப்பதிகமாகும் ' என்று தொடங்கு கிற இந்தப் பகுதியில் அதற்கான காரணத்தை மிக அற்புதமாக விளக்கியிருக்கிறார்கள் இந்த நூலைப் படித்ததற்குப் பிறகுதான் ஏன் திருஞான சம்பந்தருடைய தேவாரம் முதல் திருமுறையாக அமைக்கப்பட்டது என்பதை அதனுடைய முதல் பாடலாக 'தோடுடைய செவியன்' அமைந்தது என்ற காரணம் மிகத் தெளி வாகப் புரிந்தது மிகச் சரியாகவும் தெரிந்தது அந்தப் பகுதியினை அவருடைய உரையிலே தெரிவிக்கிறேன்

முதல் திருமுறை

ஆளுடைய பிள்ளையார் முதன் முதல் அருளியது 'தோடுடைய செவியன்' (1.1) என்னும் முதற்குறிப் புடைய பிரமபுரத் திருப்பதிகமாகும். எல்லையிலா மறைகளுக்கெல்லாம் முதலாக அமைந்தது 'ஓம்' என்னும் எழுத்தாகிய பிரணவம் ஆகும். 'ஓம்' என்பதி லுள்ள ஓகாரத்தினை 'தமிழ்' என்பதன் முதல் எழுத்தாக அமைந்த தகர மெய்யுடன் இணைத்துத் தோன்றிய சிறப்பு 'தோடுடைய செவியன்' என்ற இத்திருப்பதி கத்துக்கு உண்மையால் முதல் திருமுறையில் முதல் திருப்பதிகமாக முறைப்படுத்தப் பெற்றது.''

இப்படித் தெளிவான கருத்துகளை தமிழர்களின் ஆன்மிகக் கருவூலமாக விளங்குகிற தேவாரத்தை நடமாடும் தமிழ்க் கருவூலமாக நம்மிடையே வாழ்ந்து தமிழுக்கும், தமிழர்களுக்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிற பெரியவர் 86 வயதைத் தாண்டி இன்றைக்கும் உழைத்துக் கொண்டிருக்கிற இளைஞர். ஓய்வறியாமல் எழுதிக் கொண்டிருக்கிற ஓர் அபூர்வமான மனிதர் இந்த நூலை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் ஐந்து நூல்கள் வெளியிட வேண்டும் என்று திட்டமிட்டு உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஐந்து நூல்கள் அல்ல, பல நூல்கள் அவர் கள் தமிழர்களுக்கு வழங்க வேண்டும். அதற்கான ஆற்றலும், ஆயுளும் அவருக்கு இறைவன் என்று அழைக்கிற பெயரானாலும் சரி, இல்லையில்லை இயற்கை என்றுதான் சொல்வோம் என்று கூறுகிற பெயரானாலும் சரி, நம்மை நடத்திக் கொண்டிருக்கும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் நம்மை மீறிய சக்தி நம்முடைய சுப்புரெட்டியார் அவர்களுக்கு நீண்ட ஆயுளை வழங்க வேண்டும், இதுபோன்ற அருமையான நூல்களைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு வழங்க வேண்டும் என்று வணங்கி வாழ்த்தி நிறைவுசெய்கிறேன். வணக்கம்.

அணிந்துரை

(டாக்டர் பிரமீளா குருமூர்த்தி இந்திய இசைத்துறை செ.ப.க)

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் அயராது பல நூல்கள் படைத்துள்ள சிறந்த அறிஞர் பெருமகனார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியராகத் தமிழ் இலக்கியத்துறையிலும், தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபு வழிப் பண்பாட்டு நிறுவனத்தின் மதிப்பியல் இயக்குநராகவும் அருந்தொண்டாற்றியவர். இவரது தனித்திறமை யாதெனில் சொற்பொழிவுகளை எல்லாம் நூலாக்கும் பணி என்ற அரும் சாதனையாகும்.

2002-2003ம் ஆண்டு மறைமலை அடிகள் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள அறக்கட்டளை சொற்பொழிவுகளை இவர் ஆற்றினார். 'மூவர் தேவாரம்' என்ற தலைப்பில் இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளைப் பேராசிரியர் **பி. சாம்பமூர்த்தி** அவர்களுக்கு அன்புப் படையலாக சமர்ப்பித்துள்ளமை போற்றற்குரியது.

தென்னக இசை வரலாற்றில் தோன்றிய பாடல் வரிசையில் பண் மற்றும் தாளத்துடன் உருவான முதல் இசைப்பாடல்கள் தேவாரங்கள் என்று பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளது இங்கு நினைவு கூரத் தக்கது.

'மூவர் - தேவாரம் புதிய பார்வை' என்று சிறப்பான தலைப் பிட்டு திருமுறைகண்ட சோழனான இராஜராஜ சோழன் மற்றும் நம்பியாண்டார் நம்பி ஆகியோரின் திருப்பணி பற்றியும் தேவாரங்களை அவர்கள் முதல் மூன்று நான்கு ஐந்து ஆறு மற்றும் ஏழு என்று சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடல்கலைத் தொகுத்தமையைச் சிறப்பாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார். இதனைத் தொடர்ந்து நாலாயிரம் தொகுக்கப்பட்டுள்ள முறையை யும் சீராக வழங்கியுள்ளார். சைவ வைணவ பேதமின்றி இலக்கியப் பொக்கிஷங்களாக விளங்கும் பண்டைய சீர்மை பெற்ற பக்திக் காப்பியங்களை இவ்வாறு ஆய்வு நோக்கில் வழங்கியமை பேராசிரியரின் புதிய கண்ணோட்டத்தைக் காட்டுகிறது. அவர்தம் ஆழ்ந்த அறிவைப் புலப்படுத்துகிறது வாரப் பாடல், தேவ பாணி ஆகியவற்றிற்குச் சிறப்பான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர் சீரிய வாழ்வில் நிகழ்ந்த அரிய நிகழ்வுகள் அற்புதமாகப் பாடிய பதிகங்கள் இவற்றை விளக்கங்களுடன் அளித்துள்ளமை பாராட்டத்தக்கது.

சைவத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஒப்பற்ற சேவை செய்த சம்பந்தப் பிரான் 7ஆம் நூற்றாண்டிலேயே சாதி வேற்றுமை பாராட்டாது திருநீலகண்ட யாழ்ப்பாணரைச் சிறந்த முறையில் தன்னுடன் சீடராகப் போற்றிய பாங்கு அக்காலத்தில் சிறந்து விளங்கிய சமூக நாகரிகத்துக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு. பதினாறு வயதுவரை வாழ்ந்தாலும் சம்பந்தரின் சீரிய வாழ்வும் அவரது அரிய ஆற்றல் தோய்ந்த பாடல்கள், பண்ணிற்கும் தாளத்திற்கும் பாடல் நயத்துக்கும் சந்தங்களுக்கும் எடுத்துக் காட்டாய்த் திகழ்வன. இவற்றையெல்லாம் சிறப்பாக உயர்திரு சுப்புரெட்டியார் தமிழ் கூறு நல்லுலகத்திற்குப் படைத்திருக்கும் ஆற்றல் போற்றத்தக்கது. இது போலவே அப்பர் பிரான் மற்றும் தம்பிரான் தோழர் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளையும் பாடல் களையும் பெரிய புராணச் செய்திகளுடன் சேர்த்துத் தருகிறார். இதனைத் தொடர்ந்து பண்களைப் பற்றிய விரிவான செய்திகள் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு திருமுறை வாரியாகப் பண்கள் சுட்டிக்காட்டப் பெற்று பாடல் வகைகளும் விளக்கப்பட்டுள்ளன.

வடமொழி மற்றும் தமிழில் உள்ள இவரது திறனாய்வு வடமொழி யாப்பியத்தின் மரபு எனும் பகுதியில் சிறப்பாக வெளிப்படுகின்றது. கட்டளை எனும் பகுதியில் இவர் தரும் விளக்கங்கள் ஆய்வாளர்களுக்குப் பெரும் விருந்தாக அமைகின்றன.

மொத்தத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் சீரிய ஆய்வுக் கட்டுரைகளாக எழுத்து வடிவம் பெற்று நூலாக மாறி யுள்ள தன்மை கடும் முயற்சியின் விளைவு மட்டும் அன்றி அவரது தெளிந்த ஆழ்ந்த உழைப்பின் மேன்மையைப் பறைசாற்றும்.

வாழ்க அவர்தம் பணி.

- பிரமீளா குருமூர்த்தி

இந்திய இசைத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சேப்பாக்கம், சென்னை - 600 005

நூல் முகம்

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
　　பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
　　உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்
　　கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
　　நமச்சி வாயத்தை நான்மற வேனே.[3]

- *இராமலிங்க அடிகள்*

மறைமலையடிகள் அறக்கட்டளைப் பொழிவுகள் (2002-2003) பற்றிய அழைப்பு சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறையிலிருந்து வந்ததும் (பிப்ரவரி 22, 2003), அந்தப் பொழிவுகள் மூவர் தேவாரம் பற்றியே இருக்க வேண்டும் என்ற குறிப்பிட்டிருந்ததை அறிந்ததும் ''மூவர் தேவாரம் - புதிய பார்வை'' என்ற தலைப்பில் பேசுவதாக உறுதிசெய்து என் பேச்சை எழுத்து மூலம் தயாரிக்கத் தொடங்கி விட்டேன்.

இந்த நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய திரு. இராமவீரப்பன் (சென்னைக் கம்பன் கழகம், எம்.ஜி.ஆர் கழகம் - இவற்றின் தலைவர்). அவர் அமைச்சராக இருந்த காலம் முதல் நான் அறிவேன். இவர் அமைச்சராக இருந்த காலத்தில் தான் மதுரை - காமராசர் பல்கலைக் கழகம் அடியேனுக்கு தமிழ்ப் பேரவைச் செம்மல் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டை ஆண்ட நல்ல அமைச்சர்கள் சிலருள் இவர் முன்னணியில் இருப்பவர் எம்.ஜி.ஆர்.ஐப் போலவே விரிந்த

3. திருஅருட்பா - இரண்டாந் திருமுறை - நமச்சிவாய சங்கீர்த்தனலகரி - 7

மனம் உள்ளவர் ஏழை எளியவர்களின்பால் பாசமும் நேசமும் மிக்கவர். அவர்கள் வாழ்வு செழிக்க வேண்டும் என்ற பெரு நோக்கம் கொண்டவர். தந்தை பெரியார்வழி நின்று சாதி வேறுபாட்டைக் கடிபவர். பெரியார் கொள்கைகள் பலவற்றை ஏற்று நடப்பவர். பொது அறிவு (Common sense) மிக்கவர். தமிழ்ப்பற்று மிக்கவர். தமிழ் வளர்ச்சிக்காகத் தம் இல்லத்தையும் ஈந்தவர் (வள்ளல் அழகப்பரை போல). நான் சில ஆண்டுகள் (1995-2003) மதிப்பியல் இயக்குநராகப் பணியாற்றிய தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பண்பாட்டு நிறுவனத்தில் பாரத ரத்னா டாக்டர் சி. சுப்பிரமணியத்திற்குப் பிறகு சில ஆண்டுகள் காப்பாளராக இருந்து நிறுவனத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி என் பணிக்குத் துணையாக இருந் தவர். இத்தகைய பேரன்பர் இந்நூலுக்கு வழங்கியது இந்நூலின் பேறு; என் பேறுங்கூட; வாழ்த்துரை வழங்கிய வள்ளலுக்கு என் இதயம் கனிந்த நன்றி என்றும் உரியது.



இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியவர் **டாக்டர் எம். பிரமீளா** குருமூர்த்தி (பேரா சிரியர் இந்திய இசைத் துறைத் தலைவர்) இராணி மேரிக் கல்லூரியில் கற்று M.A. தேர்வில் முதல் நிலைகளில் தேறி பல பரிசுகள் பெற்றுப் புகழ்பெற்ற புகழ்வாய்ந்த கதா காலட் சேபத் தலைப்பில் ஆராய்ந்து பிஎச்.டி (1988) பட்டம் பெற்றவர்கள். தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய ஐந்து மொழிகளில் பயிற்சி பெற்றவர்கள், இவர்தம் இசைப் புலமையைப் பாராட்டி இராமலிங்கர் பணிமன்றம் 'இசைக் கலைச் செல்வர்' என்ற விருதையும் (1997), ஐம்ப தாண்டு சுதந்திரம் நிறைவு விழா 'ஸ்ரீரத்னா' விருதையும் (1998) வழங்கிச் சிறப் ித்தன. இத்தகைய புகழ்பல பெற்ற அம்மையார் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியது. இந்நூலின் பேறு; என் பேறும் கூட. அணிந்துரை வழங்கியமைக்கு ஏன் இதயங்கனிந்த நன்றி என்றும் உரியது.



டாக்டர் இராமநாதன் அவர்களை ஈண்டு குறிப்பிடாமல் இருக்க முடியாது. தம் தலைமைப் பதவியை தம்முடன் பணி யாற்றும் பேராசிரியர் ஒருவருக்கு அவர் முன்னேற்றம் கருதி விட்டுக் கொடுத்த தியாக உணர்வு பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பெற வேண்டிய தொன்று. இப்பெருமகனாரை நான் 1996 - முதல்தான் அறிவேன். நான் பணியாற்றும் தெற்கு தென்-கிழக்கு ஆசிய நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறு வனத்தின் ஆலோசகராக இருந்து வருவதால்[4] நன்கு அறிவேன். அவர்தம் சுறுசுறுப்புணர்வும் சேவை மனப்பான்மையும், பிறருக்கு உதவும் பண்பும், எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டிய நேர்மையும் என்னை அதிகமாகக் கவர்ந்தன. பண்பாட்டு நிறுவனத்திற்கு ஒல்லும் வகையெல்லாம் உதவி வரு பவர். நிறுவனத்தின் ஆதரவில் நான் நடத்தும் எல்லா இலக்கிய விழாக்களில் இறைவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து பாடவும் இசைத்துறை மாணவிகளை அனுப்பி வைத்து உதவியது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இந்த நூலின் கைப்படியை அன்புடன் ஏற்று வெளியிடு வதற்கு உதவிய நிவேதிதா பதிப்பக உரிமையாளர் திருமதி தேவகி இராமலிங்கத்திற்கு என் அன்புகலந்த நன்றி என்றும் உரியது. வெளியிடும் செலவு ஒன்றுக்குப் பத்தாகப்

---

4. திருப்பதியில் ஓய்வு பெற்ற பிறகு சென்னையில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வெளியீடாகிய தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியபோது (1978 பிப்பிரவரி முதல் 1979 ஜூன் வரை - 18 மாதங்கள்) அருகிலிருந்த இசைத் துறையுடன் தொடர்பு இல்லை. 1978 முதல் டாக்டர் இராமநாதன் இசைத்துறையில் பணியாற்றியிருந்தும் அவரைப் பார்க்க எந்தவித வாய்ப்புகளும் ஏற்பட வில்லை. நானும் 1979 முதல் வெளியூர் நிறுவனங்களில் பணியாற் றியமையால் செ.ப.க த்துடன் எந்தவிதத் தொடர்பும் ஏற்படவில்லை.

பெருகியுள்ளதையும் பொருட்படுத்தாது வெளியிட்டமை இந் நூலின் பேறு; என் பேறுங் கூட.

இந்த நூல் அச்சேறுங்கால் மூலக் கைப்படியுடனும் பார்வைப் படிவங்களுடனும் ஒப்பு நோக்கிச் சரிபார்த்து உதவிய என் அபிமான புத்திரி டாக்டர் மு.பு. சியாமளாவுக்கு என் அன்பும் ஆசியும் கலந்த நன்றி என்றும் உரியது.

இந்த அரிய நூலை இந்திய இசைத் துறை முதல் பேராசிரியர் துறைத் தலைவர் பி. சாம்பமூர்த்தி அவர்கட்கு அன்புப் படைய லாக்கிப் பெருமிதம் அடைகின்றேன். 1960 ஜூலை முதல் திருப்பதியில் பணியாற்றியபோது ஆறு ஆண்டுகள் குடும்ப மின்றித் தனிமையாக இருந்த காலத்தில் இசைக் கல்லூரியில் பணியாற்றிய ஜானகி ராமன் (கண்ணொளி இல்லாதவர்) தம் மனைவியுடன் அடுத்த தெருவில் வாழ்ந்தவர். அவரைப் பார்க்க அடிக்கடிச் செல்வதுண்டு. அக்கல்லூரி பல்கலைக் கழகம் உள்ள சாலையின் ஓரத்தில் அமைந்திருந்ததால் அடிக்கடி திரும்பும் போது அங்குச் சென்று வருவதுண்டு. இதனால் திரு. பசுபதி என்ற இசைப் பேராசிரியரும் தமிழ் பேசும் பிறரும் நண்பர் களானார்கள். அப்போது பேராசிரியர் பி. சாம்பமூர்த்தியும் (1964-66) நண்பரானார். அவரிடம் தெலுங்கில்தான் பேசுவேன். இதனால் நெருக்கம் அதிகமாயிற்று (அவர் வயது முதிர்ந்த நிலை); அவர் வீட்டிலும் சென்று பழகுவதுண்டு.[5] 1970க்குப் பிறகு திருப்பதி பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தொடங்கப் பெற்று வளரும் நிலையில் பல்வேறு விழாக்கள் நடைபெறும் போது பெரும்பாலும் பேராசிரியர் பசுபதி அவர்களே இறை வணக்கம் பாடுவதற்கு ஏற்பாடு செய்து வந்தேன். சில சமயம் திரு ஜானகிராமன் அவர்களும் பாடுவதுண்டு. (அவர் தம் தந்தையார் இலால் குடி உயர்நிலைப்பள்ளியில் கணித ஆசிரிய ராகப் பணியாற்றி ஓய்வு பெற்றபின் தன் மகனுடன் வாழ்ந்து

5. இதற்குப் பிறகு அவர் தொடர்பு இல்லை.

வந்தவர். இசையின்றி பக்தி இலக்கியம் இல்லையாதலால் இசைத் துறை தொடர்பு நெருக்கமாகவும் இருந்தது. இவற்றையெல்லாம் நினைந்தவண்ணம் பேராசிரியர் பி. சாம்பமூர்த்திக்கு இந்த நூலை அன்புப் படையலாக்கி மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூலையும்[6] இது போன்ற பலநூல்களை எழுதுவதற்கும் தமிழ்ப்பணியே தெய்வப் பணியாக கருதி வாழும் அடியேனுக்கு நல்ல உடல் நிலையும் 87-ஆம் அகவையிலும் கண்ணொளி கெடா நிலையும் வழங்கி என்னுளே தோன்றாத்துணையாக அந்தர் யாமியாக எழுந்தருளியிருக்கும் வேங்கடம் மேய விளக்கிற்குப் பெரிய பிராட்டியார் மூலம் எண்ணற்ற சரணாகதி வணக்கங்கள்.

புல்லும் பசுவிற்காம்; பூண்டும் மருந்திற்காம்;
கல்லும் திருக்கோயில் கட்டுவதற்காம்; - தொல்லுலகில்
ஏழை எளியேன் எதற்காவேன்? செந்நிநகர்
வாழும் வடிவேல வா.[7]

- கவிமணி தே.வி.

'வேங்கடம்'
AD-13, அண்ணாநகர்
சென்னை - 600 040

ந. சுப்புரெட்டியார்
தொ.பே : 26211583

6. இதுதான் இசைத்துறையில் முதன் முதலாக அச்சேறி வெளிவந்த முதல் அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலாகும்.

7. மலரும் மாலையும் - முருகன் புகழ் மாலை - 1

உள்ளுறை

முதற் பொழிவு

நாள் : 24-03-2003

முற்பகல் - 10 மணி

1. தோரண வாயில்

தலைவர் அவர்களே,
தமிழ்ச் சான்றோர்களே,
மாணவச் செல்வங்களே.

அனைவருக்கும் வணக்கம். அறக்கட்டளைச் சொற்பொழிவு களைத் தொடங்கும் முன்னர் முன்னுரையாகச் சில சொல்ல விரும்புகிறேன்.

முதலாவது ஞானசம்பந்தர் தேவாரம். சம்பந்தர் மூன்றாண்டுப் பருவத்தில் இறையருளால் கவிபாடியவர். பதினாறு வயதில் சிவப்பேறு அடைந்தவர். சம்பந்தப் பெருமான் அந்தணர் குலத் தவர். இவர்தம் அருளிச் செயல்கட்கு பண் வகுத்து இவருடன், திருக்கோயில்தோறும் சென்று யாழில் அமைத்துப் பாடியவர் திரு நீலகண்ட யாழ்ப்பாணர்; இவர் சமுகத்தினரால் தாழ்ந்த குலம் (தீண்டத் தகாதவர்) என்று முத்திரை இடப்பெற்ற குலத்தைச் சார்ந்தவர். அக் காலத்தில் வைணவர்கள் இவரைத் திருக்குலத் தார் என்ற பெயரால் வழங்கிச் சிறப்பித்தனர்.

இரண்டாவது நாவுக்கரசர் தேவாரம். 'நாவுக்கரசர்' என்ற திருப்பெயர் இறைவனால் வழங்கப்பெற்றது. இவர் வேளாளர் குலத்தவர். இளமையில் பெற்றோர் மரித்தமையால் திலகவதியார் என்ற தமக்கையார் பராமரிப்பில் வளர்ந்தவர். சமண சமயத்தைத் தழுவியவர், பல்லாண்டுகள் அங்கிருந்து பல அரிய தொண்டுகள் ஆற்றி மீண்டும் சைவ சமயத்திற்கு வந்தவர். சம்பந்தரால் 'அப்பர்' என வழங்கப்பெற்றும் போற்ற பெற்றவர். 81 ஆண்டுகள் வாழ்ந்து சிவப்பேறு அடைந்தவர். திருமணம் ஆகாதவர்.

மூன்றாவது **சுந்தர மூர்த்தித் தேவாரம்.** ஆதி சைவர் குலத்தில் பிறந்தவர். இறையருளால் பாடல் பாடும் ஆற்றல் பெற்றவர். **கணிகர்** குலத்துப் பெண் ஒருத்தியையும் **வேளாளர்** குலத்துப் பெண்மணி ஒருத்தியையும் மணந்து கொண்டவர். பற்றற்ற நிலையில் இல்லறத்தில் இருந்துகொண்டு இறையநுபவத்தில் தோய்ந்து, ஆழங்கால்பட்டு, சேரமான் பெருமாளுடன் இந்த உடலுடன் கயிலைக்குச் சென்று சிவபெருமான் திருவடிகளில் கலந்தவர். காழிப்பிள்ளையாரும் நம்பியாரூரரும் நேரே இறைவன் உலகு சென்ற காட்சியை அனைவரும் கண்டனர். நாவுக்கரசர் எண்ணுகேன் (6.99) என்ற பதிகம் பாடிப் புகலூர்ப் பெருமானின் திருவடியில் கலந்தார் என்பது வரலாறு.

இந்த வரலாறுகளினால் சாதி வேறுபாடு அற்ற சமூகத்தைக் காண முடிகின்றது. இந்த அடிப்படைக் கருத்துகளை மனத்தில் இருத்திக்கொண்டு சொற்பொழிவுகளைத் தொடங்கக் கருதுகிறேன்.

2. மறைந்த நிலையும் தொகுப்பு முறையும்

இன்று அருள் **திரு மறைமலை அடிகளார் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை** நிகழ்த்த உங்கள் முன் வந்து நிற்கின்றேன். மறைமலை அடிகளை அறிமுகம் செய்வது கொல்லத் தெருவில் ஊசியை அறிமுகம் செய்வதோ டொக்கும். அவருடைய தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் உலகறிந்த செய்திகள். அவர்தம் தமிழுணர்வு ஈடும் எடுப்பும் அற்றது. பெற்றோர் இட்ட **'வேதாசலம்'** என்ற பெயரை **'மறைமலை'** (வேதம் - மறை; அசலம் - மலை) என்று மாற்றிக் கொண்டதும் தாம் நடத்தி வந்த **'ஞான சாகரம்'** என்ற திங்கள் இதழின் பெயரை **'அறிவுக்கடல்'** (ஞானம் - அறிவு; சாகரம் - கடல்) என்று மாற்றிக் கொண்டதும் இவற்றைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.[1] இத்துடன் இவை நிற்க.

இராசராசசோழன்: சொற்பொழிவு தலைப்புக்கு வருவோம். காவிரி பாயும் சோழ வளநாட்டில் **இராசராச சோழன்** (இவனே திருமுறை கண்டசோழன்) ஆண்டு வந்த காலம். அந்நாளில் அவனுடைய அவைக் களத்திலே எழுந்தருளி வரும் சிவனடி யார்கள் மூவர் பாடிய தேவாரப் பதிகங்களில் தமக்குத் தெரிந்த ஒவ்வொரு திருப்பதிகத்தையே ஓதக் கேட்டபோது பக்தி உணர்வு தலை தூக்கியது; கைகள் இரண்டும் தலைமேற் குவிந்திட, கண்களில் நீர் தாரை தாரையாகச் சொரிய, மெய்மயிர் சிலிர்ப்ப, நெஞ்சம் நெக்குருக, இறைவனை வழிபடும் இன்பநிலை அவனுக்கு

---

1. இவருக்கு முன் இருந்த தமிழ்ப்பெரியார் சூரிய நாராயண சாஸ்திரியார்' என்பார் தம் பெயரை பரிதிமாற் கலைஞர் (சூரியன் - பரிதி; நாராயணன் - மால்; சாஸ்திரியார் - கலைஞர்) என்று மாற்றிக் கொண்டதை நினைவு கூர்கின்றோம்.

உண்டாயிற்று. எனினும் இனிய தேவாரத் திருப்பதிகங்களின் திருவருள் நலத்தில் திளைத்த வேந்தன் மூவர் முதலிகள் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் அனைத்தையும் தேடிக்கண்டு ஒரு சேரத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டான். எங்கும் தேடியும் அவை கிடைக்கவில்லை. அதனால் அம் மன்னனின் மனம் கவலையால் அல்லலுற்றது.

நம்பியாண்டார் நம்பியின் அற்புதச் செயல்: எப்படியோ திருநாரையூரில்[2] பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசனை புரிந்து வந்த நம்பியாண்டார் நம்பி புரிந்த அற்புதச் செயல் இவனுடைய செவிக்கு எட்டியது. அந்த அற்புதச் செயல் என்ன? பொல்லாப் பிள்ளையார்க்குப் பூசனை புரிந்து வந்த ஆதி சைவ குடும்பத்தில் சைவ சமயம் வாழ ஒரு நற்புதல்வர் பிறந்தருளார். அக் குழந்தை உரிய பருவத்தில் உப நயனம் செய்யப் பெற்று வேதம் முதலிய கலைகளை ஓதி வரும் நாளில் ஒரு நாள் தந்தை வேற்றூர்க்குச் செல்ல நேர்ந்தது. அன்று பொல்லாப் பிள்ளையார்க்குச் செய்ய வேண்டிய பூசனையைத் தம் புதல்வரைச் செய்யும்படி சொல்லி விட்டு அவர் வெளியூர்க்குச் சென்றார். தந்தையார் சொற்படி பிள்ளையார்க்குப் பூசனை செய்யச் சென்ற அந்தச் சிறுவன் பிள்ளையார்க்குத் திரு மஞ்சனம் முதலிய எல்லாவற்றையும் செய்து திருவமுதினைப் பிள்ளையார் திருமுன் வைத்து 'எம்பெருமானே, திருவமுது செய்தருளல் வேண்டும்' என வேண்டி நின்றார். விநாயகப் பெருமான் திருவமுது செய்ய வில்லை. நிவேதனம் என்பது தெய்வத்திற்குத் 'திருவமுது காட்டுதல்' என்னும் பொருளில் வழங்கும் சொல்லாகும். நிவேதிக்கும் பொருளை இறைவனே உட் கொள்வான் என்பது அச்சிறுவனின் எண்ணமாகும். அவ் வெண்ணத்தால் தூண்டப்பெற்ற அந்தச் சிறுவன் 'அடியேன் ஏதேனும் தவறு செய்த துண்டோ? அடியேன் படைத்த திருவமுதினை உண்ணாதது ஏன்?' என்று சொல்லிக் கொண்டு தனது தலையைக் கல்லிலே மோதப் புக்கான். உடனே

2 தில்லைக்கு அருகில் சில கல தொலைவிலுள்ளது.

பொல்லாப் பிள்ளையார் 'நம்பி பொறு' என்று சொல்லித் தடுத்து நிவேதனப் பொருள் முழுவதையும் உட்கொண்டருளினார். அது கண்ட சிறுவன் மனம் மகிழ்ந்து 'எம்பெருமானே, இன்று மிகவும் நேரம் கடந்த நிலையில் அடியேன் பள்ளிக்குச் சென்றால் ஆசிரியர் அடிப்பார். ஆதலால் எல்லா நூல்களையும் தேவரீரே அடியேனுக்கு ஓதுவித்தருளல் வேண்டும்' எனக் குறையிரந்து நின்றான். அவன் விரும்பிய வண்ணமே பிள்ளையாரும் அச் சிறுவனுக்கு எல்லா நூல்களையும் ஓதுவித்தருளினார். இங்ஙனம் பொல்லாப் பிள்ளையாரால் ஆட்கொள்ளப்பெற்றமையால் அச்சிறுவன் 'நம்பியாண்டார் நம்பி' என வழங்கபெற்று 'திருவிரட்டை மணிமாலை' என்னும் தமிழ்ப் பிரபந்தம் பாடி தம்மை யாட்கொண்ட பொல்லாப் பிள்ளையாரைப் போற்றிப் பரவினான்.

மன்னன் செவிக்கு செய்தி எட்டுதல்: திருநாரையூரில் நடைபெற்ற இத்திருவருட் செய்தி தமிழ் நாடெங்கும் காட்டுத் தீயைப்போல் விரைவாகப் பரவியது. இச் செய்தி சோழ மன்னன் இராசராசனின் செவிக்கும் எட்டியது. அம் மன்னனும் தனது நிலைக்கேற்ப ஏராளமான பழ வகைகள், தேன், அவல், பொரி யுருண்டை, எள்ளுருண்டை, முதலிய படைப்புப் பொருள்கள் நிறையக் கொண்டு திருநாரையூரை யடைந்து நம்பியாண்டார் நம்பியைச் சேவித்து தம் குறையை விண்ணப்பித்தான். நம்பியும் அனைத்து நிவேதனப் பொருள்களையும் பிள்ளையார் திரு முன் வைத்த அளவில் அன்பால் படைக்கப் பெற்ற அவையனைத்தை யும் பிள்ளைப் பெருமான் திருவமுது செய்தருளினார். அது கண்ட மன்னன் மிக்க மனம் மகிழ்ந்து, நம்பியாண்டார் நம்பியை வணங்கி, ''வேதியரே, சமய குரவர் மூவர் அருளிச் செய்த தேவாரத் திருமுறைகளும் திருத் தொண்டர்களும் பக்தர்கள் வாழும் இந்நிலவுலகத்தில் விளக்கம் பெறுதல் வேண்டும். பிள்ளைப் பெருமான் திருமுன் இவற்றை விண்ணப்பித்து ஆவன செய்தருளல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

நம்பியும் மன்னன் வேண்டு கோளில் அமைந்த அன்பின் திறத்தை உணர்ந்து, பொல்லாப் பிள்ளையாரை இறைஞ்சி நின்று, 'விநாயகப் பெருமானே, தேவாரத் திருமுறைகள் இருக்கும் இடத்தையும் திருத்தொண்டர்களுடைய வரலாறுகளையும் அடியேனுக்கு அருளிச் செய்தல் வேண்டும்'' என வேண்டிக் கொண்டார். அவரது வேண்டுகோளுக்கிசைந்த பொல்லாப் பிள்ளையாரும், ''தில்லையில் கூத்தப் பெருமான் திருநடம் புரியும் பொன்னம்பலத்தின் அருகிலே தேவார ஆசிரியர்கள் மூவருடைய அழகிய கைகளின் அடையாளமுள்ள அறையி னுள்ளே தேவாரத்திருமுறைகள் வைத்துப் பூட்டப் பெற்றுள்ளன'' என்று கூறித் திருத்தொண்டர்களின் வரலாறுகளையும் திருவாய் மலர்ந்தருளினார்.

பிள்ளையாரின் அருட் குறிப்பு: பிள்ளைப் பெருமானின் அருளாணையைக் கேட்டு மகிழ்ந்த நம்பியாண்டார் நம்பியும் சோழ மன்னனும் தில்லைக்கு ஏகி கூத்தப் பெருமானை வணங்கி னார்கள். பின்னர் சோழமன்னன் தில்லைச் சிற்றம்பலத்திற்கு மேற்றிசையிலுள்ள அறையில் தேவாரத் திருமுறைகள் இருத் தலைத் தில்லைவாழ் அந்தணர்களிடம் தெரிவித்து அவ்வறை யைத் திறந்து காட்டுமாறு வேண்டினான். தேவார ஆசிரியர்கள் மூவருடைய கைகளின் இலச்சினையுடன் பூட்டப் பெற்றுள்ள அறையினை அம் மூவரும் வந்தாலன்றித் திறத்தல் இயலாது எனத் தில்லைவாழ் அந்தணர்கள் தெரிவித்தார்கள்.

'பாம்பின்கால் பாம்பறியும்' என்பதற்கிணங்க நம்பியாண்டார் நம்பிகளின் யோசனைப்படி அரசன் தில்லைவாழ் அந்தணர் கட்குச் சிறப்புச் சன்மானம் வழங்கித் தில்லை அம்பலவாணர்க்குச் சிறப்புப் பூசனை வழிபாடுகள் செய்து தேவார ஆசிரியர் மூவருடைய திருமேனிகளுக்கு வழிபாடியற்றி, அத் திருவுருவங் களைத் திருவீதி வலம் வரச்செய்து அவர்களைத் திருப்பதிகங்கள் சேமித்து வைக்கப் பெற்றுள்ள அறையின் முன்னர்க் கொண்டு வந்து நிறுத்தி தில்லை வாழ் அந்தணர்களை நோக்கி ''மூவரும்

வந்தனர் அறையினைத் திறக்க ஏற்பாடுகளைச் செய்தருள்க'' என்று அரசன் பணித்தான்.

அரசனது ஆணையால் அறை திறக்கப்பெற்றது. அவ்வறை யினுள் சென்று சோதித்தபொழுது தேவாரப் பதிகங்கள் எழுதப் பெற்றிருந்த ஏடுகள் கரையான் புற்றால் மூடப்பெற்றுச் சிதைந்த நிலையில் இருக்கக் கண்டார்கள்; மிகவும் வருந்தினார்கள்.

நம்பியின் தொகுப்பு: புற்று மண்ணால் மூடப் பெற்றிருந்த அவ்வேடுகளின்மேல் எண்ணெயைச் சொரிந்து அவற்றைப் புறத்தே கொணர்ந்து எடுத்துப் பார்த்த அளவில் அவற்றுள் பெரும்பாலான ஏடுகள் பழுதுபட்டிருந்தன. மன்னன் அளவிலாத் துயர முற்றான். அந்நிலையில் ''**தேவாரப் பதிகங்களிலே இக் காலத்திற்கு வேண்டுவனவற்றை மாத்திரம் வைத்துவிட்டு மற்றவற்றைச் செல்லரிக்கச் செய்தோம்**'' என்றதொரு அருள் வாக்கு அங்குள்ளார் அனைவரும் கேட்கத் தோன்றியது. அதனை யுணர்ந்த மன்னன் ஆறுதல் அடைந்தான். ஒருவாறு மனம் தெளிந்து செல்லரிக்காதிருந்த திருப்பதிகங்களை மட்டிலும் சிதையாமல் எடுத்துத் தொகுத்துத் தருமாறு நம்பியாண்டார் நம்பியை வேண்டிக் கொண்டான். நம்பியும் மன்னனது விருப் பத்திற்கும் வேண்டுகோளுக்கும் ஒருவாறு இசைந்து செயலில் இறங்கினார். சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்களை **முதல் மூன்று** திருமுறைகளாகவும் அப்பர் சுவாமிகள் அருளிச் செய்தவற்றை **நான்கு, ஐந்து, ஆறு** என **மூன்று** திருமுறைகளாகவும், சுந்தர மூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருப்பதிகங்களை **ஏழாந் திருமுறை** என ஒன்றாகவும் வகுத்தருளினார்.

பண்முறை வகுப்பு: தேவாரத் திருப்பதிகங்களுக்குரிய பண் முறையினைத் தெரிந்து இசையமைக்க எண்ணினர் சோழ வேந்தனும் நம்பியாண்டார் நம்பியும் அவர்கள் திருத் தில்லைக்கு மேற்குத் திசையில் உள்ளதும் **திருநீல கண்ட யாழ்ப்பாணர்**

பிறந்தருளியதுமான திருவெருக்கத்தம் புலியூர் என்ற திருத்தலத்திற்கு வந்து அவ்வூர் திருக்கோயிலை வலம் வந்து 'எம்பெருமானே, தேவாரத் திருப்பதிகங்களுக்குரிய இன்னிசையினை எங்களுக்கு உணர்த்தியருளுதல் வேண்டும்'' என இறைஞ்சி விண்ணப்பித்தனர். அந்நிலையில் ''திருநீலகண்டர் பெரும்பாணர் மரபிலே பிறந்த பெண்ணொருத்திக்கு இசைத் திறனை அளித்துள்ளோம்'' என்ற அருள் வாக்குத் தோன்றியது. இதனைக் கேட்ட இருவரும் **அப்பாடினியாரை** அழைத்து வந்து திருக்கோயில் வாயிலில் நிறுத்தினர். அவ்வளவில் ''இவளைத் தில்லைக்கு இட்டுச் சென்று அங்குத் தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுக்கக் கடவீர்'' என மீண்டும் ஓர் அருள் மொழி எழுந்தது. அதனைக் கேட்ட சோழ மன்னனும் நம்பியாண்டார் நம்பியும் அவ்வம்மையாரைத் தில்லையம்பல முன்றிலுக்கு அழைத்துவந்து தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண் வகுக்கச் செய்தனர். அங்ஙனமே தேவாரப் பண்களுக்குரிய **கட்டளைகள்** வரையறுக்கப் பெற்றன. இறைவன் திருவருள் துணை கொண்டு அம்மையார் வகுத்த இசை மரபே தேவார திருப்பதிகங்களுக்குப் பொருந்திய தெய்வ இசையாகத் தென்னாட்டில் சிறப்புற்று வளர்வதாயிற்று. இசைத் துறை ஆசிரியர்களும் மாணாக்கர்களும் இந்த வரலாற்றை மனத்தில் இருத்தினால் அது அவர்களது இசையாராய்ச்சிக்குப் பெருந் துணையாக இருக்கும்; அடிப்படையாகவும் அமையும்.

நாலாயிரத் தொகுப்பு வரலாறு: திருமுறைத் தொகுப்பைப் போலவே நாலாயிரத் தொகுப்பும் அமைந்துள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. அதனையும் ஈண்டு உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருதல் சாலப் பொருத்தமாக அமையும். ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் மன்னிய பேரிருள் நீங்கி ஊரும் நாடும் உலகமும் அவன் தன் பேரும் தார்களுமே பிதற்றும்படி செய்து அந்தமில் பேரின்பத்தை அளித்துக் கொண்டு வந்தன. இஃது இவ்வாறு இருக்க இம்மைப் பேற்றையே

விரும்புவார் சிலர் இவை மோட்ச நூல்கள் என்று கூறித் தத்தம் திருமாளிகையில் இருந்த ஓலைச் சுவடிகளைச் செல்லுக்கு இரை யாக்கலாயினர். மேலும் சிலர் இவை வடமொழி வேதங்களின் புகழுக்குக் குந்தகம் விளைவிப்பதாகக் கருதி அவற்றைத் தாமிரபரணி ஆற்றில் தள்ளிக் கடலுக்கு அனுப்பி விட்டனர். இதனால் நாலாயிரம் வழக்காற்றில் இல்லாத நிலை.

ஆழ்வார்கள் வீடுபேறு பெற்று நெடுங்காலம் ஆன பிறகு வீர நாராயண புரத்தில் (தில்லைக் கருகிலுள்ள காட்டு மன்னார் கோயில்) மன்னனாருக்கு நித்திய கைங்கரியம் செய்து கொண்டும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்திக் கொண்டும் வாழ்ந்து வந்தார். **நாதமுனிகள்** என்னும் ஒரு வைணவப் பெரியார். இங்ஙனம் இருக்கும் காலத்தில் ஒரு நாள் மேல்நாட்டிலிருந்து சில சிரீவைணவர்கள் எழுந்தருளி மன்னனாரைச் சேவித்து அவர் சந்நிதியில் **'ஆராவமுதே'** (திருவாய் 5.8) என்கின்ற திருவாய்மொழியை[3] அநு சந்தானம் செய்தனர். இதனை நாதமுனிகள் செவிமடுக்க நேர்ந்தது. இதன் பல சுருதிப் பாசுரத்தில் ''குருகூர்ச்சடகோபன் குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்'' (5.8:11) என்ற தொடரைக் காட்டி ''ஆயிரம்'' பாசுரங்களையும் தேவரீர் அறிவீரோ?'' என்று வினவ, அவர்கள் எங்கட்கு இவ்வளவு தான் தெரியும். இதற்கு மேல் தெரிந்தவர்கள் வேறொருவரும் இலர்' என்று தெரிவித்தனர்.

நாதமுனிகள் எப்படியாவது இப்பிரபந்தத்தை வெளி கொணர வேண்டும் என்று திருவுள்ளங்கொண்டு கும்பகோணம் சென்று **சார்ங்கபாணிப் பெருமாளைச்** சேவித்து அவர்பால் விடை பெற்றுக் கொண்டு நம்மாழ்வார் திருவவதாரம் செய்த **திருக்குருகூருக்கு** (இப்பொழுது ஆழ்வார் திருநகரி என்று

3 · இது கும்பகோணத்தில் எழுந்தருளியிருக்கும் சார்ங்கப்பாணிப் பெருமாள் மீது மங்களா சாசனம் செய்யப் பெற்ற திருவாய் மொழி.

திருப்பெயரால் வழங்குவது) சென்றார்[4] ஆழ்வாரையும் பொலிந்து நின்ற பிரானையும் சேவித்தார். மதுரகவிகளின் சீடர் பரம்பரையில் வந்த ஒருவரான **பாராங்குச தாசர்** என்ற அடியார் ஒருவரைக் கண்டு ''இவ்விடத்தில் திருவாய்மொழி ஓதினவர்கள் உண்டோ? திருவாய்மொழிச் சுவடி உண்டோ?'' என்று வினவ, அவரும் ''திருவாய்மொழியும் ஏனைய பிரபந்தங்களும் நெடுங் காலத் திற்கு முன்னே ஒழிந்து போயின. என் குருநாதர் அடியேனுக்கு அருளிய **'கண்ணி நுண் சிறுத்தாம்பு'** என்ற பிரபந்தம் மட்டிலும் உள்ளது. அதனை ஆழ்வார் திருவடிகளைத் தியானித்துக் கொண்டு நியமத்துடன் **பன்னீராயிரம் முறை** அநுசந்தித்தால் ஆழ்வார் பிரசன்னராவார்'' என்று தம் ஆசிரியர் சொன்னதை நாதமுனிகளிடம் கூறி அதனையும் அவரிடம் தந்தருளினார்.

நாதமுனிகளும் **திருப்புளியாழ்வார்** அடியில் அர்ச்சை வடி வில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வார் திருமுன்பு அப்பிரபந்தத்தை அவர் சொன்னபடி பன்னீராயிரம் முறை அநுசந்திக்க ஆழ்வார் அவர்முன் பிரசன்னராகி ''நம்மை நோக்கி உபாசிப்பதன் காரணம் என்ன?'' என்று வினவ நாதமுனிகளும், ''திருவாய் மொழி முற்றும் அடியேனுக்கு இரங்கியருள வேண்டும்'' என்று விண்ணப்பித்தார். ஆழ்வாரும் பேரருள் புரிந்து நாதமுனி களுக்குத் திவ்விய ஞானக்கண் தந்தருளி **'இரகசியத்திரயசாரம்', 'திருவாய்மொழி'** முதலிய திவ்வியப் பிரபந்தங்களையும், அகிலதர்சன தாத்பர்யங்களையும், அட்டாங்க யோக இரகசியத் தையும் பிரசாதித் தருளினார்.

நாதமுனிகளும் வீர நாராயணபுரம் திரும்பி திவ்வியப் பிரபந்தங்களை அநுசந்தித்துக்கொண்டும், விரும்பி வேண்டிய வர்க்கு அவற்றை ஓதுவித்துக்கொண்டும் காலம் கழித்து வந்தார். இவற்றை மன்னனார் நியமனப்படி இயலும் இசையுமாக்கித் தம்முடைய **மருமக்களான** கீழை அகத்தாரையும் மேலை

4 அடியேன் குடும்பத்துடன் 108 திவ்விய தேசங்களில் 102ஐச் சேவித்து ஆறு திருத்தலப் பயண நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன்.

அகத்தாரையும் கொண்டு பண் தாளம் முதலியவற்றை வகுக்கச் செய்தார். மீண்டும் நாலாயிரம் உலகத்தில் பெரும் புகழுடன் திகழ்வதாயிற்று.

நாதமுனிகளும் வேதவியாசர் திருமறைகளை நான்காக வகுத்ததுபோல நாலாயிரத்தையும் நான்காக வகுத்தார். முதல் மூன்று பகுதிகளையும் **இசைப்பா** தொகுதியிலும் நான்காவதை இயற்பா தொகுதியிலும் அடக்கினார். **முதலாயிரத்தில்** (முதல் பகுதி) 'திருப்பல்லாண்டு தொடங்கி கண்ணி நுண் சிறுத்தாம்பு' முடிய அடக்கினார். இதில் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார் திருமழிசைபிரான், தொண்டரடிப் பொடிகள், திருப்பாணாழ்வார், மதுர கவிஞர்கள் ஆகியோர் அருளியவை அடங்கும். **பெரிய திருமொழி** (இரண்டாம் தொகுதி)யில் திருமங்கையாழ்வார் அருளிய 'பெரிய திருமொழி', 'திருக்குறுந் தாண்டகம்', 'திருநெடுந்தாண்டகம்' ஆகிய **மூன்றும்** அடங்கும். நம்மாழ்வார் அருளிய **'திருவாய் மொழி'**யை தனித் தொகுதியாக (மூன்றாம் பகுதி) அடைவுபடுத்தினார். **இயற்பா** என்ற நான் காவது தொகுதியில் பொய்கையாழ்வார், பூதத் தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் அருளிய பத்துத் திவ்வியப் பிரபந்தங்களையும் அடக்கினார். இராமாநுசர் காலத்தில் **திருவரங்கத்தமுதனார்** இயற்றிய **'இராமாநுச நூற்றந்தாதி'**யும் இத்தொகுதியில் சேர்ந்தது.

தேவாரப் பதிகங்கள் தொகுத்த வரிசை முறை: தேவாரத் திருப்பதிகங்களின் வரிசை முறை அவ்வாசிரியர்கள் பிறந்த குலம், வயது முதலிய உலகியல் முறைகளை ஒரு சிறிதும் கருதாமல், அப் பெருமக்கள் இவ்வுலக வாழ்வினைத் துறந்து இறைவன் திருவருளிற் கலந்து வீடுபேற்றடைவினை உளத்தில் கொண்டு அமைக்கப் பெற்றதாகும்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருநல்லூர்ப் பெருமணத்தில் தம் திருமணத்திற்கு வந்த அடியார் திருக் கூட்டத்தோடு சிவபெருமானது ஈறில் பெருஞ்சோதியினில் புகுந்த வரலாற்றை

நாம் அறிவோம். அங்கு வந்தவர்கள் அனைவரும் ஒருவர் விடாமல் சிவப்பேறு அடைந்தனர் என்பது வரலாறு. பிள்ளை யாருக்கு நெருங்கிய நண்பரும் **'அப்பர்'** என்று தம்மால் வழங்கப் பெற்ற நாவுக்கரசர் பெருமானும் நெருங்கிய தொடர்புடைய நமிநந்திய அடிகளும் ஏன் வரவில்லை என்பது விளங்காப் புதிராகவே உள்ளது. வந்திருந்தால் அவர்களும் கயிலைப்பேறு பெற்றிருப்பர்.

திருமணத்திற்குச் சில ஆண்டுகள் கழிந்த பின்பே நாவுக்கரசர் பெருமான் திருப்புகலூரில் நண்ணரிய சிவானந்தவடிவே யாகி அண்ணலார் சேவடிக்கீழ் எய்தி இன்புற்றார் என்பதை நாம் அறிவோம். இக் கருத்து ஆசிரியர் சேக்கிழார் தம் பெரிய புராணத்துள் அடக்கியுள்ளார். திருநாவுக்கரசர் புராணத்தையும் திருஞானசம்பந்தர் புராணத்தையும் ஒருங்கு வைத்து ஆராய் வாருக்கு இனிது புலனாகும். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் என்னும் இருவருள் முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் திருவருளை தேனினும் இனிய இன்னிசைச் செந்தமிழ்ப் பாடல் களால் முதன் முதல் போற்றியவர் திருஞானசம்பந்தப் பிள்ளையாரே யாவார். தேவாரத் திருமுறைகளுள் முதன்முதல் பாடப் பெற்ற பழைமையுடைய திருப்பதிகம் **'தோடுடைய செவியன்'** (1:1:1) எனத் தொடங்கும் காழிப் பிள்ளையாரின் தேவாரமே யாகும்.

சிவபெருமானை இன்னிசைத் தமிழால் முதலில் பாடிப் போற்றினமையாலும், அப் பெருமான் திருவடியில் முதலில் கலந்தமையாலும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் **முதல் மூன்று** திருமுறைகளாக வகுத்துறைக்கப் பெற்றன.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருநல்லூர்ப் பெருமணத்தில் இறைவன் திருவடியில் கலந்து மறைந்த பின்னர்த் திருப்புகலூரில் திருநாவுக்கரசர் இறைவன் திருவடிகளில் கலந்து மறைந்தா ராதலின் அவர் பாடியருளிய திருப்பதிகங்கள் திருஞானசம்பந்தர்

தேவாரத் திருப்பதிகங்களை யடுத்து **நான்கு, ஐந்து, ஆறாந் திருமுறைகளாக** வரிசைப்படுத்தப் பெற்றன. இந்த இருவர்க்கும் காலத்தாற் பிற்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகங்கள் அவ்விருவர் திருப் பதிகங்களையடுத்து **ஏழாம் திருமுறையாக** அமைக்கப்பெற்றன.

பாடல்களின் தொகை: முதல்திருமுறையில் 136 பதிகங்களும் இரண்டாம் திருமுறையில் 122 பதிகங்களும் மூன்றாம் திருமுறையில் 125 பதிகங்களும் ஆக 383 பதிகங்கள் அடங்கியவை சம்பந்தரின் தேவாரம். பதிகம் என்பது **பத்துப்** பாடல்கள் அடங்கிய பகுதி. பிற்காலத்தில் **'திருவிடைவாய்'** திருப்பதிகம் கல் வெட்டினின்றும் எடுக்கப் பெற்று மூன்றாம் திருமுறையின் இறுதியில் சேர்க்கப்பெற்றுள்ளது. தேவாரம் தொகுக்கப்பெற்ற காலத்தில் இது கிடைத்திருப்பின் இஃது இரண்டாம் திருமுறையின் பண் **இந்தளத்தில்** சேர்க்கப் பெற்றிருக்கும். இவற்றுடன் இவர் பாடிய திருப்பாடல்கள் 4158ஆகத் தொகை பெறுகின்றன.

நான்காம் திருமுறையில் 113 பதிகங்களும், ஐந்தாம் திருமுறையில் 100 பதிகங்களும், ஆறாம் திருமுறையில் 99 பதிகங்களும் அடங்கியவை நாவுக்கரசரின் தேவாரம். இவற்றுடன் இவர் பாடிய திருப்பாடல்கள் 3066ஆகத் தொகை பெறுகின்றன.

ஏழாம் திருமுறையில் 100 பதிகங்கள் உள்ளன. இவற்றிலுள்ள பாடல்கள் 1026ஆகத் தொகை பெறுகின்றன.

ஆகவே,

சம்பந்தர்	திருமுறை	பதிகம்	பாடல்கள்
	1	136	1469
	2	122	1331
	3	125+1	1358
		384	4158

நாவுக்கரசர்	4	113	1070
	5	100	1015
	6	99	981
		312	3066
சுந்தரமூர்த்தி	7	100	1026

மேலும்,

சம்பந்தர்	1-3	384	4158
நாவுக்கரசர்	4-6	312	3066
சுந்தரமூர்த்தி	7	100	1026
	7	796	8250

திருமுறை என்னும் இப்பெயர் மூவர் திருப்பதிகங்கட்கு மட்டுமே வழங்கியதாகும். நம்பியாண்டார் நம்பியின் காலத் திற்குப் பின்புதான் திருவாசகம் முதலிய ஏனைய நூல்கட்கும் வழங்கப் பெற்றது என்பது திருமுறை கண்ட வரலாற்றால் நன்கு பெறப்படும்.

தேவாரம் என்னும் பெயர் வழக்கு: மூவர் திருப் பதிகங்களை **'தேவாரம்'** என வழங்கும் வழக்கம் இரட்டையர்கள் பாடிய **'ஏகாம்பரநாதர் உலா'**வில்தான் முதன் முதலாகக் காணப்பெறுகின்றது.

'மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்'

என்பது அவ்வுலாவிலுள்ள தொடராகும். இத் தொடரில் 'தேவாரஞ் செய்த திருப்பாட்டு' என்றவிடத்து 'தேவாரம்' எனப் பெயர் நிலையில் வைத்துரையாமல் 'தேவாரம் செய்த' என வினை நிலையில் வைத்துரைத்தலால் 'திருப்பாட்டு' என்பது மூவர் செய்த திருப்பாடல்களையும் 'தேவாரம் செய்த' என்பது அத் திருப்பாடல்களை இசைப்படுத்திப் பாடிய தொழில் நிலையையும் குறித்து நின்றன எனக் கொள்ள வேண்டியுள்ளது.

மூவர் திருப்பதிகங்களையும் **'தேவாரம்'** என்ற பெயரால் முதன் முதல் தெளிவாகக் குறிப்பிட்டு வழங்கியவர் **சைவ எல்லப்ப நாவலர்** ஆவர். இவர் தாம் பாடிய திருவருணைக் கலம்பகத்தில் (திருவண்ணா மலைக்குரிய கலம்பகம்) சைவ சமய குரவர் நால்வரையும் போற்றியது.

சைவத்தின் மேற்சம யம்வே
றிலையதில் சார்சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லெனும்
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவத்த சீர்திருத் தேவார
மும்திரு வாசகமும்
உய்வைத் தரஞ்செய்த நால்வர்
பொற்றாள் உயிர்த்துணையே.[5]

என்பது காப்புச் செய்யுள். இதில்

''வாய்மை வைத்த சீர்திருத்
தேவார மும்திரு வாசகமும்,
உய்வைத் தரஞ்செய்த நால்வர்
பொற்றாள் உயிர்த் துணையே''

என்ற அடிகளில் (3, 4வது அடி) மூவர் திருப்பதிகங்களும் என்ற பெயரால் குறிக்கப் பெற்றிருத்தல் காணலாம். இரட்டையர்க்குக் காலத்தாற் பிற்பட்டவர் எல்லப்ப நாவலர். முன்னவர் குறிப்பிட்ட 'திருப்பாட்டும்' பின்னவர் குறிப்பிட்ட 'தேவாரமும்' ஒன்றே என்பது பின்னவர் கூற்றால் இனிது தெளிவாகும்.

இரட்டையர் அடைகொடுத்த சிறப்பு: இதன் காரணத்தை ஒரு சிறிது நோக்குவோம். **'தேவாரம்'** என்ற தொடருக்கு அறிஞர் பலரும் வேறு வேறாகப் பொருள் கொண்டனர். இதனைத் தேவ + ஆரம் எனப் பிரித்து இறைவனுக்கு மாலையாயது எனப்

---

5 இப்பாடலே அவருடைய பெயருடன் 'சைவ' என்ற அடைமொழி சேர்ந்ததற்குக் காரணமாகக் கருதலாம்.

பொருள் கூறுவர் சிலர். தேவார ஆசிரியர் மூவரும் இறைவனுக்கு அணியும் பாமாலைகளாக அழகிய திருப்பதிகங்களைப் பாடிப் போற்றிய திறத்தை இன்னோர் தம் கொள்கைக்கு ஆதாரமாகக் கொள்வர். தே + வாரம் எனப் பிரித்து தெய்வத்தினிடத்து அன்பை விளைவிப்பது எனப் பொருள் கூறுவர் சிலர், 'வாரமாகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர் பெறுவதென்னே'' (7.5:9 திருவாரூர்ப்பதிகம்) என வரும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் **'வாரம்'** என்னும் சொல் இறைவன்பால் மெய்யடியார்கள் வைத்த பேரன்பு என்னும் பொருளில் வழங்கப் பெறுதல் ஈண்டு கருதுவதற்கு உரியதாகும். படைவீட்டு இராச்சியத்தை ஆண்ட **மல்லிநாத சம்புவராயன்'** (கி.பி 1321 - 1339) காலத்துப் புலவர் பெருமக்களான இரட்டையர்களே மூவர் திருப்பதிகங்களையும் **'தேவாரம்'** என்ற பெயரால் முதன் முதல் வழங்கியுள்ளார்கள்.[6] 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் வரையப் பெற்ற சோழ வேந்தர் கல்வெட்டுகளில் **'தேவாரம்'** என்ற சொல் **'வழிபாடு'** என்ற பொருளில் வழங்கப் பெற்றுள்ளது. மூவர் திருப்பதிகங்களும் இறை வழிபாட்டில் பாடப்பெற்று வந்தமை பற்றி **கி.பி.14-ஆம் நூற்றாண்டு முதல்** அப் பதிகங்கள் தேவாரம் என்ற பெயரால் வழங்கப்பெற்று வருகின்றன என்றும் அதற்கு முன்னர் அவை அவ்வாறு வழங்கப்பெற்று வந்தன என்பதற்குக் கல்வெட்டுகளிலோ பிறவற்றிலோ சான்றுகள் கிடைக்கவில்லை என்றும் ஆராய்ந்து கூறுவர் தி.வை சதாசிவ பண்டாரத்தார்.[7] அவர் காட்டியபடி **'தேவாரம்'** என்ற பெயர் சோழர் கல்வெட்டுகளில்தான் முதன்முதல் காணப்பெறுகின்றது. கி.பி 11-ஆம் நூற்றாண்டுக்குமுன் **'தேவாரம்'** என்ற சொல் **'வழிபாடு'** என்னும் பொருளில் வழங்கியது என்பதற்கு இலக்கியச் சான்றோ

6. சதாசிவ பண்டாரத்தார் தி.வை: தமிழிலக்கிய வரலாறு (13, 14, 15ஆம் நூற்றாண்டுகள்) - பக். 66

7. செந்தமிழ் 45-ஆம் தொகுதி - பக்.121-28. 'தேவாரம்' என்னும் பெயர் வழக்கு' என்ற கட்டுரையில்

கல்வெட்டுச் சான்றோ கிடைக்கவில்லை. சோழர் மன்னர் ஆட்சிக் காலத்தில் **'வழிபாடு'** என்னும் பொருளில் வழங்கப் பெறுவதற் குரிய காரணம் யாதென ஆராய்வது இன்றியமையாதது.

ஆராய்ச்சி: 'தே' என்பது தெய்வம் என்னும் பொருளைக் குறித்து வழங்கும் ஓரெழுத்தொரு மொழி. **'வாரம்'** என்பது இசையின் கூறுபாட்டினைக் குறித்து வழங்கும் தமிழ்ச் சொல். வாரமாவது **முதல் நடை, வாரம், கூடை, திரள்** என்னும் இசை இயக்கம் நான்கனுள் ஒன்று. மந்த நடையுடையதாய்த் தாழ்ந்து செல்லும் இன்னிசை இயக்கம் **முதல் நடை** எனப்படும். முடுகிச் செல்லும் விரைந்த நடையினையுடைய இசையியக்கம் **திரள்** எனப்படும். இவ்விரண்டிற்கும் இடை நிகர்த்ததாய்ச் சொல் லொழுக்கமும் இசையொழுக்கமும் பொருந்திய பாடல் **வாரம்** எனப்படும். சொற்செறிவும் இசைச் செறிவும் உடைய பாடல் **கூடை** எனப்படும். இவ்விசை இயக்கம் நான்கின் இயல் பினையும் சிலப்பதிகார உரையில் **அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும்** நன்கு விளக்கியுள்ளனர். **இழுமென** ஒழுகிய சொல்நடையும் செம்பாகமாகப் பொருணர்த்தும் பொருள் தெளிவும் வாய்க்கப் பெற்ற செய்யுளே **வாரம்** என்னும் இசை யியக்கம் வாய்ந்த பாடலாகும் என்பது **அடியார்க்கு நல்லார்** முதலிய உரையாசிரியர்களின் கருத்தாகும். இசைப்பாட்டுடன் இசைக் கூறுபாடுகளை இசைத்துப் பாடவல்ல இசைப் புலவனை **'வல்லோன்'** எனவும், அவனால் இப்பாடலுடன் புணர்க்கப் பெறும் இசைக் கூறுபாட்டினை **வாரம்** எனவும் இயலிசைத் திறத்தில் வன்மையில்லாதவனாற் புணர்க்கப் பெறும் வார இசை சிதைந்தொழியும் இயல்பிற்றெனவும் **'வல்லோன் புணரா வாரம் போன்றே'**[8] என வரும் உவமையால் ஆசிரியர் தொல்காப்பிய னார் விளங்க யுணர்ச்சியுள்ளார்.

---

8. தொல்.பொருள் - மரபு - 109.

இயற்கை வனப்பும் தெய்வ வனப்புமாகிய இருவகை வனப்புகளே இசைப்பாடலுக்குரிய சிறப்புடைப் பொருள்களெனப் பண்டைத் தமிழாசிரியர் கருதினர். இக் கருத்தினாலேயே இசைப்பாடல்கள் யாவும் முதற்பொருளும் கருப்பொருளுமாகிய உலகியற் பொருள்களின் இயற்கை யழகினையும் அவற்றின் உடனாய் விளங்கும் தெய்வ அழகினையும் பொருளாகக் கொண்டு பாடப் பெறுவனவாயின. இசையில் வல்ல **பாணர்** முதலிய கலைச் செல்வர் தம் இசைத்திறத்தை அவையின்கண் புலப்படுத்தும் பொழுதெல்லாம் இசைப் பாடலுக்குச் சிறப்புடைய பொருளாய் விளங்கும் முழுமுதற்பொருளைப் போற்றும் தெய்வப் பாடலையே முதன்மையாகப் பாடும் வழக்கம் ஆயிற்று. பண்டை நாளில் வாழ்ந்த **பாணர்** முதலியோர் இம் முறையினைத் தொன்று தொட்டு வரும் இசை மரபாகக் கொண்டு போற்றுதலைத் தமது முதற் கடமையாகக் கடைப்பிடித்து வந்துள்ளனர். இச் செய்தியினைப் **பத்துப் பாட்டுள்** ஒன்றாகிய **மலைபடுகடாத்துள்,**

மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவதறிந்த இன்குரல் விரலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்வு வழாஅது
அருந்திறல் கடவுள் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி[9]

எனவரும் அடிகளில் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் தெளிவாக விளக்கியுள்ளமை கண்டு மகிழலாம்.

'வாரம் பாடுதல்' என்பது இசைப்பாடலால் கடவுளைப் போற்றி வழிபடுதல் என்ற பொருளில் கடைச் சங்க காலத்தே வழங்கி வந்ததாகத் தெரியக் கிடக்கின்றது. சிலப்பதிகார அரங்கேற்று காதையில்,

---

9. மலைபடுகடாம் - அடி 534 - 39

தொன்னெறி வியற்கை தோரிய மகளிரும்
சீரியல் பொலிய நீரல் நீங்க
வாரம் இரண்டும் வரிசையிற் பாட[10]

எனவரும் அடிகட்கு ''ஆடி முதிர்ந்தாராகிய மகளிர் நன்மை யுண்டாகவும் தீமை நீங்கவும் வேண்டித் தெய்வப் பாடல் பாட'' என **அரும்பத ஆசிரியரும், அடியார்க்கு நல்லாரும்** பொருள் கூறியுள்ளனர். எனவே இவ்வடிகளில் வரும் **வாரம்** என்ற சொல் தெய்வப் பாடல் என்ற பொருளில் இளங்கோ வடிகளால் ஆளப் பெற்றது என்பது நன்கு பெறப்படும். அன்றியும் சிலப்பதிகாரத் தில் **கடலாடு காதையில்**[11] திருமாலைப்பாடும் தேவபாணியும் இறைவனைப் போற்றும் **தேவபாணியும்** வருண பூதர் நால்வரை யும் பரவும் நால்வகைத் **தேவபாணியும்** ஞாயிறு திங்கள் என்னும் தெய்வத்தைப் பரவிய **தேவபாணியும்** கூத்தின்கண் பாடுதற் குரிய இசைப் பாடல்களாகக் கொள்ளப் பெற்றன என **இளங்கோவடிகள்** குறிப்பிட்டுள்ளார். **பாணி** என்பது பண்ணொடு கூடிய இசைப்பாட்டு. தெய்வத்தைப் **பண் பொருந்தப்** போற்றிப் பாடிய இசைப்பாடல் **தேவபாணி** எனப் பெயர் பெறுவதாயிற்று. ''தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுள் ஈறாகவுள்ள **செந்துறை** விகற்பங்கள் எல்லாம் புறநாடகங்களுக்குரிய உருவாவன'' என அடியார்க்கு நல்லார் கூறுவர்.

தேவபாணி: தெய்வத்தை முன்னிலையில் வைத்துப் பரவிய பாடலே தேவபாணி என வழங்கும் சிறப்புடையதாகும். இதனை,

ஏனை யொன்றே
தேவர் பராஅய முன்னிலைக் கண்ணே.[12]

---

10. சிலம்பு. அரங்கேற்று காதை - அடி 135 - 137
11. சிலம்பு - கடலாடு காதை - அடி 35
12. தொல்.பொருள். செய்யுள் - சூத்திரம் - 133

என செய்யுளியற் நூற்பாவில் **ஒத்தாழிசைக் கலி**யின் வகையாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். ''ஒத்தாழிசைக் கலி முன்னிலை யிடமாகத் தேவரைப் பராவும் பொருண்மைத்து'' என்பது மேற்குறித்த செய்யுளியற் நூற்பாவின் பொருளாகும். எனவே தெய்வத்தினை முன்னிலையாகச் சொல்லப் பெற்றனவே **தேவ பாணியாம்.** அல்லன தேவபாணி எனத் தகா எனவும், தெய்வம் படர்க்கை யாய வழி **புறநிலை வாழ்த்தாம்** எனவும், தெய்வத் தன்மையில் சொல்லிற்றாகச் செய்யுள் செய்தல் கூடாதெனவும் கூறுவர் **பேராசிரியர்** என்னும் தொல்காப்பிய உரையாசிரியர். தேவபாணி முத்தமிழ்க்கும் பொதுவென்றும் அஃது இயற்றமிழில் வருங்கால் கொச்சக ஒரு போகாய்ப்[13] **பெருந்தேவ பாணி, சிறு தேவபாணி** என இருவகைத் தாய் வரும் என்றும் அவ்வாறு வரும் **தரவினை** நிலையென அடக்கி முதலிலுள்ள தரவினை **முகநிலை** எனவும் இடையிலுள்ள தரவினை **இடை நிலை** எனவும், இறுதியில் நிற்பனவற்றை **முரிநிலை** எனவும் பரவுதற் பொருண்மையால் செய்யுளியலில் ஆசிரியர் பெயர் கொடுத்தார் என்றும் **அடியார்க்கு நல்லார்** விளங்கக் கூறுவர்.

''கூறிய உறுப்பிற் குறைபா டின்றித்
தேறிய விரண்டு தேவபாணியும்''

என்பது அடியார்க்கு நல்லார் தரும் உரை மேற்கோளாகும்.

தேவபாணி என்னும் பெயரை யொட்டியே **தேவாரம்** என்னும் இப் பெயரும் தோன்றி வழங்கியிருத்தல் வேண்டும். தேவபாணி என்பது முன்னிலையிடத்தில் தெய்வத்தைப் பரவிய செய்யுளைக் குறித்த பெயரென்பது பேராசிரியரின் கருத்தாகும். **'வாரம்'** என்பது முன்னிலை படர்க்கை என்னும் ஈரிடத்திற்கும் பொது வாகிய தெய்வப் பாடலைக் குறித்து வழங்குவதாகும். 'வாரம்' என்னும் சொல்லுக்கு இசை இயக்கம் நான்கினுள் ஒன்று என்னும் **பொதுப் பொருளும்** தெய்வப் பாடல் என்ற சிறப்புப் பொருளும் உரியனவாதலின் அப் பொது நீக்கித் தெய்வப்பாடல் என்ற

13. தொல்.பொருள் - செய்யுள் 143 (இளம்)

சிறப்புப் பொருளையே அச் சொல் தருதல் வேண்டிப் பிற்காலத் தார் அதனைத் **தேவாரம்** எனச் சிறப்புடை யடைமொழியுடன் சேர்த்து வழங்குவாராயினர். இன்னிசையால் இறைவனைப் பாடிப் போற்றுதலையே பண்டைத்தமிழர் சிறப்புடைக் கடவுள் வழி பாடாகக் கைக் கொண்டொழுகினர். அதனால் தெய்வ இசைப் பாட்டினைக் குறித்த **'தேவாரம்'** என்னும் சொல் இறைவனை உளமுருகிப் போற்றும் வழிபாட்டினையும் குறிப்பதாயிற்று.

முதல் **இராசராச சோழன், கங்கை கொண்ட சோழன்** முதலிய சோழ மன்னர்கள் மூவர் முதலிகள் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களைக் காதலாகி ஓதி எல்லாம் வல்ல சிவபெருமானை வழிபடும் பதிகப் பெருவழியில் ஒழுகியவராவர். அன்னோர் தாம் வழிபடுவதற்கென அமைத்துக்கொண்ட இறைவன் திருவுரு வினைத் **'தேவாரதேவர்'** எனவும், திருப்பதிகம் ஓதி வழிபாடு செய்வதற்குரிய பூசையிடத்தினைத் **'தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி'** எனவும், தாம் செய்யும் இறைவழி பாட்டிற்குச் சாதன மாக மூவர் திருப்பதிகங்களையும் இசையுடன் பாடி உள்ளத்திற்கு அமைதியுண்டாக இசைத் தொண்டு செய்பவரைத் **'தேவார நாயகம்'** எனவும் கல்வெட்டுகளில் குறித்து வழங்கியுள்ளனர். இவ்வாறு கல்வெட்டுகளில் **'தேவாரம்'** எனக் குறிக்கப்பெறும் வழிபாட்டிற்கும் தெய்வப் பாடலாகிய மூவர் திருப்பதிகங் களுக்கும் தொடர்புண்டு எனலாம்.

பல்வேறு கல்வெட்டுக்குறிப்புகளால் இரண்டாம் **இராசராச சோழன்** காலத்தில் **'தேவாரம்'** என்ற சொல் திருமுறையாகிய இசைப்பாடலையே குறித்து வழங்கி வந்ததாக உறுதிப்படு கின்றது. கி.பி 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வடநாட்டு இசையாசிரியரான **சாரங்க தேவர்** என்பார் தாம் இயற்றிய **'சங்கீத ரத்னாகரம்'** என்ற வடமொழி இசை நூலில் மூவர் திருப்பதிகங் களில் காணப்பெறும் தமிழ்ப் பண்கள் சிலவற்றைத் **'தேவாரவர்த்தநீ'** என்னும் அடைமொழியுடன் குறிப்பிட்டுள்ளனர். இக் குறிப் பினை ஊன்றி நோக்குங்கால் அவ்வாசிரியர் வாழ்ந்த காலமாகிய கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே மூவர் திருப்பதிகங்களும் **'தேவாரம்'** என்ற பெயரால் சிறப்பித்து வழங்கப் பெற்றன என்பது தெளிவாகத் தெரிகின்றது.

3. மூவர் அருளிய திருப்பதிகங்கள்

மூவர் முதலிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்கள் பற்றிய சில குறிப்புகள் ஈண்டுத் தரப் பெறுகின்றன.

1. திருஞானசம்பந்தர்



வருபகற் கற்பம் பலமுயன் றாலும்
    வரலருந் திறனெலாம் எனக்கே
ஒருபகற் பொழுதில் உறஅளித் தனைநின்
    உறுபெருங் கருணைஎன் உரைப்பேன்
பெருமண நல்லூர்த் திருமணம் காணப்
    பெற்றவர் தமையெலாம் ஞான
உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த
    உயர்தனிக் கவுணிய மணியே.

- இராமலிங்கர் (திருவருட்.ஐந்.திருமுறை
ஆளுடைய பிள்ளையா அருள்மாலை - 10)

சீகாழியில்[1] அவதரித்தவர். தந்தையார் கௌண்டின்ய கோத்திரம் என வழங்கப்படுகின்ற கௌணிய கோத்திரத்தைச் சார்ந்த **சிவபாத இருதயர்;** அந்தண சீலர். தாயார் **பகவதி**. பதினாறு வயதுவரை வாழ்ந்து சிவப்பேறு அடைந்தவர். இவர் பாடிய திருப்பதிகங்கள் 383. 1918-இல் **விடைவாய்** (திருவிடை வாசல்) என்ற இடத்தில் அரசு கல்வெட்டுத் துறையினரால் கண்டறியப் பெற்ற பதிகம் ஒன்று; "**மறியார் கரத்தெந்தை**" என்ற முதற்குறிப்புடையது. A.R. No 8 of 1918 என்று பதிவு செய்யப்பெற்றுள்ளது. மூன்றாந் திருமுறை இறுதியில் தனியாகக் காணப் பெற்றுள்ளது. இதனையும் சேர்த்து **காழிப்பிள்ளையார்** அருளியவை 384 திருப்பதிகள் ஆகும். இவற்றுள் **அற்புதத் திருப்பதிகங்களை** மட்டிலும் சில விவரங்களுடன் ஈண்டுக் காட்டுவேன்'. அற்புதத் திருப்பதிகங்கள் என்பவை தெய்வ அருளால் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கொண்டவை யாகும்.

1. ஞானப்பால் உண்டது: காழிப்பிள்ளையாரை சைவ அன்பர்கள் **முருகப்பிரானின்** அவதாரமாகக் கருதினார்கள். ஓராண்டு நிரம்புவதற்கு முன்னரே தாதியர்களின் கைகளைப் பற்றி நமது தளர்ச்சி நீங்கிப் பாதம் நிலத்திற் பொருந்த நடந்து விளையாடினார். இரண்டாம் ஆண்டு நிரம்பிய நிலையில் சிறு தேர் உருட்டுதல், சிறுமியர் செய்த மணல்வீடுகளை அழித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டார். மூன்றாம் ஆண்டுப் பருவத்தில் முன்னைப் பிறப்புணர்வு முகிழ்க்கத் தொடங்கியது. இந்நிலையில் அக்குழந்தை தன் தந்தையாருடன் திருக்கோயிலுக்குச் செல்ல

---

1. 'சிய்யாழி' எனவும் வழங்குவர். 'சீர்காழி' என்று எழுதுவது தவறு. விழுப்புரம் - மயிலாடுதுறை இருப்பூர்தி பாதையில் 'சிய்யாழி' என்ற நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவு. பாடல்பெற்ற தலங்களுள் மிகுதியான பதிகத் தொகை (71) இத்தலத்திற்கு உண்டு. இத்தலம் கழுமலம், காழி, கொச்சைவயம், சண்பை, சிரபுரம், தோணிபுரம், பிரமபுரம், புகலி, புறவம், பூந்தராய், வெங்குரு, வேணுபுரம் என்ற 12 திருப்பெயர்களை உடையது (பெ.பு.திருஞான.14). சம்பந்தர் மட்டிலும் 67 பதிகங்கள் அருளியுள்ளார்.

வேண்டும் என்று பிடிவாதமாய் அழுதது. தந்தையார் அக் குழந்தையை இட்டுச் செல்லுகின்றார். **பிரம்ம தீர்த்தத்தின்** கரையில் பிள்ளையாரை அமரச் செய்துவிட்டு விரைவில் நீராடித் திரும்பும் கருத்துடன் நீரில் இறங்கிச் செய்தற் குரிய பல நியமங் களைச் செய்கின்றார். பிள்ளையாரும் அவற்றை ஒன்று விடாமல் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றார். பின்பு சிவபாத இருதயர் நீரில் மூழ்கிச் செபித்தற்குரிய 'அகமருட மந்திரத்தை' ஓதுதற் பொருட்டு நீருள் சிறிது நேரம் மூழ்கி இருக்கின்றார்.

கரையிலமர்ந்த பிள்ளையார் தம் தந்தையாரைக் காணாமல் முற் பிறப்பின் நினைவு மூளப்பெற்றுக் கண்களில் நீர் ததும்பக் கைகளால் பிசைந்து உதடுகள் துடிப்பப் பொருமி அழுகின்றார். வேறொன்றையும் நோக்காது திருத்தோணி புரத்து விமானத்தின் சிகரத்தைப் பார்த்து **'அம்மையே அப்பா'** என்று அழைத்து அழுகின்றார். இந்நிலையில் தோணிபுரத்து இறைவன் உமா தேவியாருடன் விடை மீது எழுந்தருளிப் பிரம தீர்த்தக் கரையை அடைகின்றார். உமையம்மையை நோக்கி ''நின் துணை முலைகள் பாலடிசிலைப் பொன்வள்ளத்தில் ஊட்டுக'' எனப் பணிக்க, அவரும் திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்தருளிச் சிவஞானமாகிய அமிழ்தத்தையும் குழைத்துப் பிள்ளையார் கையில் கொடுத்து அவரது அழுகையைத் தீர்த்துப் பாலடிசிலை ஊட்டியருளுகின்றார். இங்ஙனம் கவுணியப்பப் பிள்ளையார் இளம்பருவத்தில் அம்மையப்பரால் ஆட் கொள்ளப் பெற்றமையால் **''ஆளுடைய பிள்ளையார்''** எனவும், தேவர்க்கும் முனிவர்க்கும் கிடைத்தற்கரிய **சிவஞானம்**[2] பெற்றமையால் **திருஞானசம்பந்தர்** எனவும் போற்றப் பெறுகின்றார். இந்நிலையைச் சேக்கிழார் பெருமான்,

---

2 சிவஞானம் - பதி ஞானம். பதி ஞானத்திற்குத்தான் பதிப் பொருள் இனிது விள்ங்கும். பதிஞானத்தால் இறைவனை அறிதலையே சைவ சமய ஆச்சாரியர்கள் 'அருட்கண்ணால் காணுதல்' என்று கூறுவர். இந்த ஞானம் பசு ஞானம், பாச ஞானம் இரண்டிலும் வேறுபட்டது; உயர்ந்தது.

சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும்
பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாம்உணர்ந்தார் அந்நிலையில்[3]

என்று காட்டுவர்.

இந்நிலையில் நீராடி நியமங்களை முடித்த சிவபாத இருதயர் தடாகக் கரைக்கு வருகின்றார். சிவஞானத்தின் திருவுருவாகக் கரையில் நின்று கொண்டிருக்கும் பிள்ளையாரின் செவ்வா யிதழின் இருமருங்கும் பால் வழிந்து கொண்டிருப்பதைக் காண் கின்றார். அவரை நோக்கி, ''பிள்ளாய்! யார் அளித்த பால்டிசிலை நீ உண்டனை? எச்சில் கலக்கும்படி உனக்கு இட்டாரைக் காட்டுக'' என வெகுண்டு அருகிற் கிடந்த கோலொன்றை எடுத்து அடிப் பதற்கு ஓங்குகின்றார். பிள்ளையார் தம் உச்சிமேல் குவித்த கைவிரலொன்றினால் தோணி புரத்து இறைவனைச் சுட்டிக் காட்டி, தம் உள்ளத்தே பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால்,

தோடுடைய செவியன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்
தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெருமான் இவனன்றே (1)

என்ற திருப்பாடலை முதலாகவுடைய பதிகத்தைப்[4] பாடி 'எம்மை இது செய்த பிரான் பிரமாபுர மேவிய பெம்மான் இவனே' எனத் தம் தந்தையாருக்கு அடையாளங்களுடன், சுட்டிக் குறிப்பிடுகின்றார்.

---

3. பெரி.புரா. திருஞா. சம்ப. புரா - 70
4. சம்பந்.தேவா (1.1)

மண்ணுலக மக்கள் அறியாமையால் பிழை செய்தாலும் பின் தம் தவற்றை வுணர்ந்து இறைவனை உளமுருகிப் போற்றி வழிபடுவாராயின், இறைவனது திருவருள் அவர்களை உய்விக்கும் என்ற உண்மையை அறிவுறுத்தக் கருதிய சண்பை வேந்தர், இறைவன் வீற்றிருக்கும் திருக்கயிலாயத்தை ஆராயாது எடுக்க முயன்ற இராவணன் அம்மலையின்கீழ் அகப்பட்டு வருந்தித் தன் தவறுணர்ந்து இன்னிசைப் பாடலால் இறைவனைப் போற்ற, இறைவனும் அவனுக்கு அருள் புரிந்த பெருங்கருணைத் திறத்தினை **எட்டாம்** பாடலில் எடுத்துரைக்கின்றார்.

இறைவனை அன்பினால் வழிபடும் அடியார்களுக்கே இறைவனது திருவருள் எளிதிற்கிடைக்கும் என்னும் நல்லுணர்வுடன் அப் பெருமானைத் தொழாமல் தாங்களே முதல்வர் என் வழுவான மனத்தினால் மயக்கமுற்ற திருமாலும் நான்முகனும் பன்றியும் அன்னமுமாகி இறைவனுடைய அடியும் முடியும் தேடி அயர்வுற்றுப் பின்பு திருவைந்தெழுத்தினை ஓதி உய்ந்த செய்தியினை **ஒன்பதாவது** திருப்பாடலில் எடுத்துரைக்கின்றார்.

கலை ஞானங்கட் கெல்லாம் முதல்வராகிய கயிலை நாதனின் திருவருள் நெறியினை அறிந்து உய்யும் மெய்யுணர்வின்றித் தம்மில் தன்மையைத் தேடிக் கொள்ள முயலும் சமண சாக்கியர் இவர்தம் சமய நெறிகள் பழி விளைக்கும் குற்றமுடையனவே என்பதனைப் **பத்தாம்** திருப்பாடலில் எடுத்துக் காட்டுகின்றார்.

பத்துப் பாடல்களால் பதிகத்தை நிறைவு செய்து பதிகப் பயன் கூறும் **பதினொன்றாம் பாடலாகிய** திருக்கடைக்காப்பினையும்[5] பாடி தம் திரு நாமத்தையும் அதில் பதித்துத் தம் கண் எதிரே விசும்பின்கண் விடைமீது தோன்றியருளிய அம்மையப்பரைத் தொழுது நிற்கின்றார்.[6]

---

5. வைணவர்கள் (ஆழ்வார் பெருமக்கள்) பாடியவற்றைப் **பல சுருதிப் பாசுரம்** என்று வழங்குவர்.

6. இங்ஙனம் சம்பந்தர் பதிகங்களில் எட்டாம் பாடலில் இராவணன் செய்தியும், ஒன்பதாம் பாடலில் திருமால் - நான்முகன்பற்றிய செய்தியும் பத்தாம் பாடலில் சமணர் சாக்கியர் செய்தியும் திருக்கடைக் காப்பில் தம் பெயரும் விடாமல் மரபாக வருவதைக் காணலாம்.

பிறவிப் பெருங்கடலைக் கடந்திடும்படி தம் திருவடிப் புணையினைச் சம்பந்தப்பெருமானுக்குத் தந்தருள வந்த சிவபெருமான் உமாதேவியாருடன் திருத்தோணிபுரத் திருக் கோயிலை நோக்கி எழுந்தருள்கின்றார். காழி ஞானச் சிவக் கன்றும் தம் கண்வழி சென்ற கருத்து விடாது தொடர்ந்து செல்லத் தாமும் திருத்தோணிபுரக் கோயிலை நண்ணுகின்றார். தவம் பல செய்து இவருக்குத் தாதை எனும் பெருமை பெற்ற சிவபாத இருதயரும் பிள்ளையாரை அடித்தற்கெடுத்த சிறு கோலும் தம் கையினின்றும் நெகிழ்ந்து கீழே விழ வெருட்சியும் வியப்பும் உடையவராகின்றார். தம் இரு கைகளையும் தலை மேற்கூப்பித் தொழுது தம் அருமருந்தன்ன மகன் பாடியருளிய **அகப்பொருள் துறை** வாய்ந்த செந்தமிழ்ப் பாடல்களின் குறிப்பின்ன உணர் கின்றார். தம் மகன் கண்ட இறைவனது திருவுருவக்காட்சியினைத் தாம் முற்றிலும் காணப் பெற்றிலராயினும் தம் திருமகனுக்கு உண் டான சிவஞானப் பெருக்கின் விளைவுகளை நேரில் காண்கின் றார். இதனைத் தோணி புரத்து ஈசனின் திருவருள் என்றே துணிந்து தம் மகனைத் தொடர்ந்து தாமும் திருக்கோயிலுக்கு ஏகுகின்றார்.

(2) பொற்றாளம் பெறுதல்: உமையம்மையார் அளித்த பாலடிசில் உண்டு பாலறாவாயராகிய பிள்ளையார் மறுநாள் திருக்கழுமலக் கோயிலை அடைந்து அம்மையப்பரை வணங்கி அருகேயுள்ள **கோலக்கா**[7] என்னும் திருப்பதியிலுள்ள பெருமானை வணங்கும் விருப்புடன் வருகின்றார். வந்தவர் **'மடையில் வாளை'** (1.23) என்ற இன்னிசைத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்று கின்றார். இதில்,

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றைக் கலந்த சென்னியன்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகொள் பாதம் அடைந்து வாழ்மினே (6)

---

7. **கோலக்கா:** (திருத்தாளமுடையார் கோயில்) சீகாழிக்கு மேற்கே ஒன்றரைக் கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர் கையினால் தாளம் போட்டுப் பாடும்போது இத்தலத்து எம்பெருமான் ஐந்தெழுத்து வரையப்பெற்ற பொற்றாளங்கள் இரண்டை அவருக்குத் தந்தான்; அம்பிகை தாளங்கட்கு [illegible] 1.27

என்பது **ஆறாவது** பாடல். இந்தப் பதிகத்தைத் **தக்க ராகத்தில்** கைகொட்டிப் பாடியதைக் கண்ட கோலக்காப் பெருமான் இந்தப் பிஞ்சுக் கை வருந்தும் என்றெண்ணித் திருவைந்தெழுத்து வரையப் பெற்ற பொற்றாளம் இரண்டைப் பிள்ளையார் கையில் வந்து பொருந்தும்படி அருளுகின்றார். அம்பாள் அத்தாளத்திற்கு ஓசை கொடுக்கின்றார். இதனால் இங்குள்ள ஈசன் **திருத்தாளமுடையார்** என்றும் அம்பாள் **ஓசை கொடுத்த நாயகி** என்றும் திருநாமங்க ளால் வழங்கப் பெறுகின்றனர்.

சம்பந்தருக்கு **நூறு ஆண்டுகட்குப்** பின்னர் வந்த நம்பியாரூரருக்கு கோலக்காவில் பிள்ளையார் பொற்றாளம் பெற்ற செய்தி தெரிந்து, இத் திருத்தலத்தின் வழியாக ஏகின போது கோலக்கா இறைவனை வணங்கி,

> **நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்**
> **ஞானசம்பந் தனுக்கு உலகவர்முன்**
> **தாளம்ஈந் தவன்பாடலுக் கிரங்குந்**
> **தன்மையாளனை என்மனக் கருத்தை**
> **ஆளும்பூ தங்கள் பாடநின்றாடும்**
> **அங்கணன்தனை என்கண மிறைஞ்சும்**
> **கோளிலிப் பெருங்கோயி லுளானைக்**
> **கோலக்காவினில் கண்டு கொண்டேனே.**[9]

என்ற திருப்பாடலில் உளமுருகிப் போற்றியுள்ளதைக் கண்டு மகிழ்கின்றோம். இதன்கண் 'உலகவர்முன் தாளம் ஈந்த' எனத் தம்பிரான் தோழர் தெளிவாகக் குறிப்பிடுகின்றதால் சம்பந்தர் பொற்றாளம் பெற்ற அருட்செயல் உலகமக்கள் கண் காண நிகழ்ந்ததென்பது தெளிவாகின்றது. சீகாழியில் **திருமுலைப்பால் உற்சவத்**தன்று ஞானசம்பந்தரைக் கோலக்காவிற்கு எழுந்தருளச் செய்து தாளம் வாங்கிச் செல்வதாக உற்சவம் இன்றளவும் நடைபெற்று வருகின்றது.

(3) முத்துச்சிவிகை முதலியன பெறுதல்: திருநீலகண்டர் யாழ்ப்பாணருடன் அவர் பிறந்த எருக்கத்தம்புலியூர், முதுகுன்றம், பெண்ணாகடம் முதலிய தலங்களை வழிபட்டுக் கொண்டு

9. சுந்த. தேவா. 7.62:8

'நெல்வாயில் அரத்துறை'[10] நோக்கி வருகின்றார். இதற்குமுன் எல்லாம் வழிநடை இளைப்பு நீங்க ஒவ்வொரு சமயம் தம் தந்தையார் தோளின்மேல் அமர்ந்து செல்லும் பழக்க முடைய பிள்ளையார் திருவரத்துறையை நோக்கிச் செல்லும்போது அப் பழக்கத்தை விடுத்து நடந்து செல்கின்றார். மலரினும் மெல்லிய திருவடிகள் தரையிற்பட்டு வருந்த விரைந்து நடக்கின்றார். இதுகண்டு தந்தையாரும் பரிவுறுகின்றார். பிள்ளையார் திருவைந் தெழுத்தினை ஓதிக் கொண்டு **மாறன்படி** என்ற ஊரினை அடை வதற்கு முன்னர் கதிரவனும் மேற்றிசையில் மறைகின்றான். அன்றிரவு பிள்ளையாரும் அடியார்களும் மாறன்பாடியில் தங்குகின்றனர்.

பிள்ளையாரது வழிநடைவருத்தத்தைத் திருவுளங்கொண்ட அரத்துறை ஈசன் நெல்வாயிலிலுள்ள மறையோரின் கனவில் தோன்றி ''ஞானசம்பந்தன் நம்மை நோக்கி வருகின்றான். அவனுக்கென **முத்துச்சிவிகை, குடை, சின்னம்** ஆகியவற்றை நம்பாற் பெற்றுக்கொண்டு அவனையடைந்து கொடுப்பீர்களாக'' என்று அருள் செய்து மறைந்தருள்கின்றார். அஃதுணர்ந்த மறை யவர் அனைவரும் வியப்புற்று விழித் தெழுகின்றனர். தாம் கனவில் கண்ட காட்சியை ஒருவருக்கொருவர் கூறி மகிழ்கின் றனர். அருணோதயத்தில் அரத்துறைக் கோயிலைத் திறந்து பார்க்கும்போது **முத்துச் சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னம்** என்பவை இருத்தலைக் கண்டு மகிழ்கின்றனர். அவற்றை எடுத்துக் கொண்டு மங்கல ஒலி முழங்க காழிப் பிள்ளையாரை எதிர் கொண்டு அழைக்கச் செல்லுகின்றனர்.[11]

அரத்துறை இறைவன் பிள்ளையார் கனவிலும் தோன்றி, ''நாம் அரத்துறை வாழும் வள்ளல். மகிழ்ந்தளிப்பவற்றை நீ ஏற்றுக் கொள்ளலாம்'' என்று கூறி மறைகின்றார். சண்பை

---

10. **நெல்வாயில் அரத்துறை:** பெண்ணாகடம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. 'நிவா' என்ற வெள்ளாற்றங்கரையிலுள்ளது. சம்பந்தருக்கு முத்துச் சிவிகை, குடை, சின்னங்கள் சிவபெருமானால் தரப் பெற்ற அற்புதத் தலம்.

11. பெரி.புரா.ஞானசம். புராணம்.

வேந்தரும் திருவைந்தெழுத்து ஓதி காலைக் கடன்களை முடித்துக் கொண்டு இறைவன் திருவருளைச் சிந்தித்த வண்ணம் அமர்ந்திருக்கின்றார். இந்நிலையில் அரத்துறை மறையவர்கள் காழிப்பிள்ளையார் தங்கியிருக்கும் இடம் ஏகி, ''அந்தமில்சீர் அரத்துறை ஆதியார் தந்த பேரருள் தாங்குவீர்'' எனப் பணிந்து தமக்கு இறைவன் உணர்த்திய அனைத்தையும் எடுத்துரைத்துத் தாம் கொணர்ந்த பொருள்களை பிள்ளையாரிடம் சமர்ப்பிக்கின்றனர்.

ஆளுடைய பிள்ளையார் இறைவனது பேரருளை நினைந்து **''எந்தையீசன்''**[12] என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ச் சொல் மாலையால் அரத்துறை ஈசனை ஏத்துகின்றார். இதன் முதற் பாடல்,

எந்தை யீசன்எம் பெருமான்
ஏறமர் கடவுள்என்று ஏத்திச்
சிந்தை செய்பவர்க்கு அல்லால்
சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமலர் உந்திக்
கரும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தணர் சோலைநெல் வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே (1)

என்பது. ஒவ்வொரு பாடலும் ''அரத்துறை அடிகள் தம் அருளே'' என்று இறுவது கண்டு இன்புறத் தக்கது. பின்னர் பிள்ளையார் திருவைந்தெழுத்து ஓதி முத்துச் சிவிகையில் ஏறி அமர்கின்றார்; குடை நிழற்றத் திருச்சின்னம் ஊத அரத்துறை ஆலயத்தை அடைகின்றார். இந்த இடத்தில் சேக்கிழாரின் வருணனை[13] படித்து இன்புறத்தக்கது. காட்சிகளை மனத் திரையில் அமைத்து மகிழத்தக்கது. சில நாட்கள் அரத்துறையில் தங்கி விடுகின்றார் காழிவேந்தர்.

(4) முயலகன் நோய் தீர்த்தல்: திருஞானசம்பந்தர் வரலாற்றைக் கேள்வியுற்ற திருநாவுக்கரசு சுவாமிகள் அவரைக் காண்பதற்கு சீகாழிக்கு வந்தார். சுவாமிகளும் அவரை எதிர் கொண்டழைத்து உபசரித்து இருவருமாகக் கோயிலை வணங்கிச் சில நாட்கள் இன்புற்றிருந்தனர். பின்னர் தலங்களைச் சேவிக்கப்

12. சம்பந். தேவா. 2 90

13. பெ.பு.ஞானசம்.புராணம் - 216-294

பிரிந்தனர். சம்பந்தப் பெருமான் சிவனடியார் புடை சூழப் பல பதிகளைச் சேவித்து திருப்பாச்சி லாச்சிராமத்தை[14] அடைகின்றனர். ஆங்குள்ள **கொல்லி மழவன்** என்ற குறுநில மன்னன் தன் மகள் **முயலகன்** என்னும் நோயினால் வருந்துவதைக் கண்டு பலவகை மருத்துவ முறைகளைக் கையாண்டும் அந்நோய் தணியாமை யால் இறைவன் திருவடியே உறுதுணையெனக் கொண்டு தன் மகளைத் திருபாச்சிலாச்சிராமத்து இறைவன் திரு முன்னர் இட்டு வைத்தனன், இந்நிலையில் திருஞானசம்பந்தப் பிள்ளையார் ஆங்கு எழுந்தருள்கின்றார் என்ற செய்தியைக் கேள்வியுற்று அவ்விடத்தை விட்டு நீங்கிய பிள்ளையாரைப் போற்றும் பெரு விருப்புடன் தன் நகர் முழுவதையும் அலங்கரித்து எதிர் கொண்டு இறைஞ்சினான். பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கித் திருக்கோயில் வழிபடச் செல்லும்பொழுது இளங்கொடிபோல் வாளாகிய கன்னியொருத்தி உணர்வற்று நிலத்திற் கிடத்தலைக் கண்டு 'இஃது என்ன?' என வினவினார். அது கேட்ட மழவன் பிள்ளையாரை வணங்கி நின்று, 'இவள் அடியேன் பெற்ற மகள்' இவளை முயலகன் என்னும் நோய் வருத்துதலால் இறைவன் திரு முன்னர் இட்டு வைத்தேன்' என்றான். அருள் கூர்ந்த சிந்தையாராகிய ஆளுடைய பிள்ளையார் பாச்சிலாச்சிராமத்துப் பரமனைப் பணிந்து,

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமு டித்துப்
பணிவளர் கொள்கையர் வாரி டஞ்சூழ
ஆரிட மும்பலி நேர்வர்
அணிவளர் கோளமெல் லாஞ்செய் துபாச்சில்
ஆச்சிரா மத்துறை கின்றசில்
மணிவலர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோஇவர் மாண்பே. [15]

15. சம்பந். தேவா (1.44:1)

14. திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி): திருச்சிமாவட்டம் பிட்சாண்டார் கோயில் 2 1/2 கல் தொலைவு. கொல்லிமழவன் புதல்வியின் முயலகன் நோயைச் சம்பந்தர் தீர்த்த அற்புதத்தலம். இத்தலத்து நடராசர் ஊன்றிய திருவடியின்கீழ் முயலகன் இல்லை.

என்ற திருப்பதிகத்தைப் பாடி, 'திருநீலகண்டமுடைய அருளாள னாகிய பெருமான் தன்னை வழிபடும் இளநங்கையாகிய இவளை நோய் மெலிய வைத்தல் மாண்பாமோ?' என வினவிப் போற்றி னார்; இந்நிலையில் உணர்விழந்து தரைமிசைக் கிடந்த மழவன் மகள் நோய் நீங்கி உணர்வுற்றெழுந்து தன் தந்தையின் பக்கத்தில் வந்து நின்றாள். அது கண்ட கொல்லி மழவன் அளவிலா மகிழ்ச்சி யடைந்து தன் அருமை மகளுடன் ஆளுடைய பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். பிள்ளையாரும் பிணி தீர்த்தருளிய இறைவன் திருவடிகளை ஒன்றிய சிந்தையுடன் பணிந்து போற்றினார். இவ்வாறு ஆளுடைய பிள்ளையார் கொல்லி மழவன் மகளது முயலகன் என்ற பொருட்பிணியைத் தீர்த்தருளிய அருட்செயலை,

மழவன் சிறுமதலை வான்பெருநோய் தீர்த்த
குழகன் குலமறையோர் கோமான்

என்ற அடிகளால் நம்பியாண்டார் நம்பி உளமுருகிப் போற்றி யுள்ளார்.

(5) பனிநோய் தீர்த்தல்: பிள்ளையர் கொங்குநாட்டு வழிபாட்டின்போது **கொடிமாடச் செங்குன்றூர்**[16] வருகின்றார். அப்பொழுது பனிக்காலமாதலால் அந்நாட்டின் இயல்பின்படி

16. **கொடிமாடச் செங்குன்றூர்** (திருச்செங்கோடு) சேலம் - ஈரோடு இருப்பூர்தி வழியில் சங்கரி - துர்க்கம் என்ற நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு. பேருந்து வசதியுண்டு (நாமக்கல்லிலிருந்தும் போகலாம்). மலைமேல் கோயில் உள்ளது. அர்த்த நாரீசுவரர் மூலத்தானத் திருவுருவம் சலவைக் கல்லாலாகியது; மிக அழகியது. சம்பந்தர் முன்பனிக் காலத்தில் இங்கெழுந்தருளியபோது உடன் வந்த தொண்டர் குழாம் குளிர்காய்ச்சலால் வருந்தினபோது திருநீலகண்டப் பதிகம் (சம்பந்.தேவா.1.116) பாடி அதனைப் போக்குவித்தனர். (1958 மே மாதம் காரைக்குடி கம்பன் அடிப்பொடி சா. கணேசனுடன் அடியேன் இத்தல வழிபாடு செய்தேன்) சம்பந்தர் பதிகம் மட்டிலும் பெற்றதலம்.

தோன்றுவதாகிய பனி என்னும் சுரநோய் ஆளுடைய பிள்ளையாருடன் வந்த அடியார்களைத் தொடர்ந்து வருத்தியது. இதையுணர்ந்த சண்பை வேந்தர் ''இந்நிலத்தின் இயல்பெனினும் இறைவன் அடியார்களாகிய நமக்கு எய்தப்பெற்றது'' என்று கூறி இறைவனைப் போற்றுகின்றார். உலகினை அழிக்க வந்த நஞ்சைத் தன்னகத்தடக்கி இடர்நீக்கியது இறைவனது திருநீல கண்டம் ஆதலால் ''எவ்விடத்தும் அடியார்களைப் பற்றிய இடர்களை தீர்த்தருள்வது எம்பிரான் திருநீலகண்டம்'' என்று அதன்மீது ஆணை வைத்து **''அவ்வினைக் கிவ்வினை''**[17] என்ற பதிகம்பாடி பரமனைப் போற்றுகின்றார்.

மறக்கு மனத்தினை மாற்றியெம்
மாவியை வற்புறுத்திப்
பிரப்பில் பெருமான் திருந்தடிக்கீழ்ப்
பிழையா வண்ணம்
பறித்த மலர்க்கொடு வந்துமை
ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறா
திருநீல கண்டம் (6)

என்பது இதன் **ஆறாவது** பாடல். இப் பதிகத்தில் ஏழாவது பாடல் காணப் பெறவில்லை.

(6) முத்துப் பந்தர் பெறுதல்: கொங்கு நாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு சோழ நாட்டிற்கு வருகின்றார் சண்பை வேந்தர். திருவலஞ்சுழி, பழையாறை முதலிய தலங்களை சேவித்துக் கொண்டு **பட்டீசரத்திற்கு**[18] வருகின்றார். சரியான முதுவேனில் காலம் வந்த நேரம் நண்பகல். நிழல் தருவதற்கு

17. சம்பந்.தேவா.1.116

18. **பட்டீசரம்:** தாராசுரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 2 கல்தொலைவு சம்பந்தருக்கு முத்துப்பந்தர் கொடுத்தருளிய தலம். அமர்நீதி நாயனார் வாழ்ந்த தலம். அப்பர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

ஆகாயத்தில் சிவபூதங்கள் **முத்துப்பந்தர்** ஒன்று தாங்கின. பிள்ளையாரின் முடி முத்துப் பக்தரைப் பிடித்து ''எம்மை விடுத்து அருள் புரிந்தார் பட்டீசர்'' என்று கூறின. அவ்வானொலியும் முத்துப்பந்தரும் ஆகாயத்தில் தோன்றக் கண்ட ஆளுடைய பிள்ளையார் இறைவன் திருவருள் இதுவானால் ஏற்றுக் கொள்ளத் தகுவதே எனக் கருதி நிலமிசைப் பணிந்தார். வானத்தி லிருந்து இறங்கும் முத்துப்பந்தரினை அடியார்கள் கைக் கொண்டு விரித்துப் பிடித்தார்கள் ஞான சம்பந்தரும் அவ்வழகிய பந்தரின் நிழலை 'ஈசன் இணையடி நிழல்' எனக் கருதி இனிதமர்ந்து அடியார்கள் புடை சூழ திருப்பட்டீசரத் திருக்கோயிலை யடைந்து தமக்கு இனிய நிழல் தந்துதவிய இறைவனை வணங்கித் திருப்பதிகம் பாடிப் பரவி இன்புற்றார்.

முதுவேனில் வெப்பம் நீங்க முத்துப்பந்தர் அளித்தருளிய இறைவனைப் பிள்ளையார் போற்றிப் பரவிய திருப்பதிகம்

பாடல்மறை சூடல்மதி பல்வளையொர்
பாகமதில் முன்றொர் கணையால்
கூடவெரி யூட்டிஎழில் காட்டிநிழல்
கூட்டுபொழில் சூழ்ப ழசையுள்
மாடமழ பாடியுறை பட்டீச்சரம்
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடு மவரே *(3:73:1)*

என்ற பாடலை முதலாகக் கொண்டதாகும். ''பாடும் பாடல் மறையாகவும், திருமுடியிற் சூடுங்கண்ணி வெண்பிறையாகவும், உமையம்மையார் தமது ஒருபாகத்தின் கண்ணே திகழவும், திரியும் இயல்பினவாகிய மும்மதில்களையும் ஓரம்பினால் தீயுண்ணச் செய்து (எம்பொருட்டு முத்துப் பந்தரினை) எழில் பெறக்காட்டி (அதனால் வெயில் வெப்பம் தணியும்படி) நிழலைக் கூட்டியருளிய பொழில் சூழ்ந்த பழையாறையின் ஒரு பகுதியாகிய மழபாடிக் கூற்றிலுள்ள பட்டீச்சரத்தில் வீற்றிருக்கும்

அரவாபரணராகிய இறைவன், எக்காலத்தும் தனது திருவேடத்தினை இடைவிடாது நினைந்துருகும் ஒருமை உள்ளத்தையுடைய அடியார்களை வீட்டையும் நன்னெறியிற் செலுத்தி அவர்களைத் தொடரும் இருவினைகளையும் நீக்கியருளும் பேரருளுடையான்'' என்பது இத்திருப்பாடலின் பொருளாகும். திரிபுரத்தவுணருடைய மும்மதில்களையும் பொடிபட எரித்தருளிய இறைவன் இப்பொழுது எமக்குத் தண்ணிழல் தரும் முத்துப் பந்தரினை எழில் பெறக் காட்டியருளினான் என்பார். ''மதில் மூன்றொர் கணையால் கூட எரியூட்டி, எழில் காட்டி நிழல் கூட்டு... கட்டரவினார்'' எனக் குறிப்பினால் அறிவுறுத்திய திறம் உய்த்துணரத் தக்கதாகும்.

(7) உலவாக் கிழிபெறுதல்: பட்டீசுரத்தினின்றும் புறப்பட்ட பிள்ளையார் பல தலங்களையும் சேவித்து விட்டுத் திருவாவடுதுறையில் அமர்ந்திருந்தார். அவருடைய தந்தையார் அந்நிலையில் தாம் வேள்வி இயற்றுதற்குரிய காலம் அணுகியதெனத் தெரிவித்து அதற்குரிய பொருள் வேண்டுமெனத் தெரிவித்தார். அவரது வேண்டுகோட் கிசைந்த பிள்ளையார், ''எஞ்ஞான்றும் ஈறிலாப் பெருஞ் செல்வத்தைத் தந்தருள்வன ஆவடு துறையிலமர்ந்த எந்தையார் திருவடிமலர்களன்றோ'' என எழுந்து ஆவடுதுறை மாசிலா மணியீசர் முன்பு எய்தி நின்று ''நீள் நிதி வேண்டினார்க்கு ஈவதொரு பொருளையும் உடையேனல்லேன். நின் திருவடித்துணையன்றி மற்றொன்றைக் கனவிலும் அறியேன்'' எனக் கூறி இறைவனது பேரருளை வினவும் நிலையில்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடு துறையானே[19]

19. சம்பந்.தேவா.3.4:1

என நாலடிமேல் வைப்பாகிய திருப்பதிகத்தினைப் பாடிப் போற்றினார். இவ்வாறு ஓதினவுடன் ஒரு சிவபூதம் தோன்றி அகன் பீடத்துச்சி வைத்தது பசும் பொன் ஆயிரம் கிழியொன்றை, வைத்தபின்பு ''இப் பொற்கிழி எடுக்க எடுக்கக் குறையாத உலவாக்கிழி, இறைவனருளால் உமக்கு அளிக்கப் பெற்ற தாகும்'' எனக் கூறி மறைந்தது.

ஆவடு துறையீசன் அருளிய உலவாக்கிழியினைத் தந்தையார் கையில் தந்து ''நல்வேள்வி **தீதுநீங்க** நீர் செய்யும்'' என்று இயம்பினார். மேலும், ''பண்டை மறைமுறைப்படி செய்தற் குரிய நல்ல வேள்விகளை நீவிர் செய்தற்கு மட்டுமின்றித் திருக்கழுமலத்திலுள்ள வேதியர் அனைவரும் செய்வதற்கும் வேண்டும் பொன்களை மேன்மேலும் தந்து வளர்வது இவ்வுலவாக்கிழி'' என்று கூறினார். தந்தையாரும் மகன்பால் விடைபெற்றுச் சீகாழிப் பதியை அடைந்தனர்.

ஆவடுதுறைப் பெருமான் பிள்ளையார்க்கு ஆயிரம் பொன் நிறைந்த பொற்கிழியினைத் தந்தருளிய அற்புத நிகழ்ச்சியினை அவர்தம் கெழுதகை நண்பராகிய நாவுக்கரசர் பெருமானும்,

மாயிரு ஞாலமெல்லாம் மலரடி
வணங்கும் போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை
வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமலவூரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடுதுறைய னாரே.[20]

என வரும் திரு நேரிசையில் புகழ்ந்து போற்றியுள்ளார். நம்பி யாண்டார் நம்பியும் இவ்வற்புதத்தைத் தமது பிரபந்தங்களில் குறித்துப் போற்றியிருத்தல் இங்கு நோக்கத் தக்கதாகும்.

---

20. அப்பர் தேவா 4.56:1

(8) யாழ் முறிபாடியது: பல தலங்களையும் சேவித்துக் கொண்டு திரு நீலகண்டத்துப் பாணனார் தம் அன்னையார் பிறந்த ஊராகிய திருத்தருமபுரத்தை[21] அடைகின்றார். பாணருடைய வேண்டுகோட்கிணங்கியே இத்தலத்துக்கு வருகின்றார் பிள்ளையார். யாழ்ப்பாணருடைய உறவினர்கள் சம்பந்தரை எதிர்கொண்டு போற்றுகின்றனர். பெரும்பாணரும் தாம் பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை யாழில் வாசிக்கும் பேறு பெற்றமையைத் தம் சுற்றத்தாருக்கு எடுத்துரைக்கின்றார். தம் உறவினர்கள் தாம் பெற்ற பேற்றினைக் கண்டு மகிழ்வார்கள் என்றுதான் இவ்வாறு தெரிவித்தார். இதனைக் கேட்ட பாணரின் சுற்றத்தார்கள் ''நீவிர் திருப்பதிகத்தை யாழிலிட்டு வாசிப்பதால் தான் அதன் இசை யாண்டும் பரவுவதாயிற்று'' என்று பாணரை நோக்கி முகமன் உரைக்கின்றனர். உண்மையில், பாணர் குலத் தவர்கள் தமது இசைமரபைப்பற்றிப் பெருமை கொள்பவர்கள். இசைவாணர்கள் - ஏன்? எல்லாக் கலைஞர்களுமே - தம் மரபைப் பற்றிப் பெருமை கொள்பவர்கள். நாதஸ்வரக் கலைஞர்கள் தம் மரபில் உள்ளவர்களால்தான் கர்நாடக சங்கீதம் வழிவழியாக மரபு கெடாமல் காப்பாற்றப்படுகின்றது என்ற கருத்தினைக் கொண்டிருப்பதைப் பார்க்க வில்லையா?

தம் உறவினர்கள் கூறியதைக் கேட்ட பெரும்பாணர் அதிர்ச்சி யடைகின்றார். இறையருளால் பெறற்கரிய இசை ஞானத்தைப் பெற்ற பிள்ளையாரின் பாடல்கள் கேவலம் தம் யாழின் மூலமாகப் பெருமையடைந்தன என்ற சொற்களை உண்மைத் தொண்டராகிய அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஞானசம்பந்தரைப் பணிந்து திருப்பதிகத்தின் இசை அளவிலடங்காத் தன்மைய தென்பதனைத் தம் சுற்றத்தாரும் பிறரும் அறிந்து கொள்ளும்படிப் பாடியருளுமாறு வேண்டுகின்றார். அவரது வேண்டுகோட்கிணங்க

---

21. **திருத்தருமபுரம்:** காரைக்காலிலிருந்து ஒருகல் தொலைவு. சம்பந்தர் யாழ்முரிபாடிய அற்புதத்தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

திருப்பதிகத்தின் இசை உலகர் கண்டத்திலும் கருவியிலும் அடங்காத வண்ணம் 'மாதர்மடப்பிடியும்' (1:136) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடித் திருத்தருமபுரத்து இறைவனைப் போற்றுகின்றார்.

மாதர்ம டப்பிடியும் மடஅன்னமும் அன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படை நின்றிசைபாடவும் ஆடுவர்
அவர்படர் சடைநெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசை பாடுவராழ்கடல் வெண்டிரை
யிரைந்துரை கரைபொருது விம்மிநின் றயலே
நாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
யெழில்பொழில் குயில்பயில் தருமபுரம் பதியே (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்

இந்தப் பதிக்ப்பாடல்களில் மடக்கி மடக்கி வரும் சொற்கோவையைப் பலவிதத் தாளங்களில், பற்பல காலப் பிரமாணங்களில், பாடி முடிக்கின்றார். அதன் பின்னர் பெரும்பாணர் அந்தப் பதிகத்தைத் தமது யாழில் அமைத்துப் பாட முயல்கின்றார். யாழ் என்பது இருபத்திரண்டு நரம்பு கொண்ட ஓர் இசைக் கருவி; மெட்டு இல்லாத கருவி. இந்தக் கருவியில் ஒவ்வொரு நரம்பாக இசைக்கேற்ப நரம்புகளை மீட்டித்தான் வாசிக்க முடியும்! சம்பந்தர் பாடிய முறையில் யாழ்ப்பாணர் இந்தப் புதிய பதிகத்தை வாசிக்க முயன்றபோது அது யாழ்நரம்புகளில் அடங்கவில்லை. அவரது முயற்சிகள் யாவும் பலிக்க வில்லை. இதைக் காணும் பாணரின் சுற்றத்தார்களுக்கு அப்போதுதான் பிள்ளையாரின் இசை ஞானம் புரிகின்றது. பெரும்பாணர் பரிவும், நடுக்கமும், நாணமும் உற்று பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ''இந்த யாழைத் தொட்டு வாசித்ததனால் தானே இந்த அவமானம் எனக்கு வந்தது'' என்று சொல்லித் தம் கையிலுள்ள யாழை நிலத்தில் அறைந்து உடைக்க ஓங்குகின்றார். பிள்ளையார்

அதனைத் தடுத்தருளி, யாழைத் தம் கையில் வாங்கிக் கொண்டு, ''ஐயரே, நீவிர் யாழை முறிக்கப் புகுதல் முறையா? சிவபெருமானின் திருவருட் பெருமையெல்லாம் கேவலம் இக்கருவியில் அடங்க முடியுமா? சிந்தையால் அளவுபடாப் பதிக இசை செயலளவில் எய்தாது. ஆகவே நீவிர் இந்தயாழினைக் கொண்டே இறைவனின் திருப்பதிக இசையினை வந்தவாறு பாடி வாசிப்பீராக'' என்று கூறித் தம் கையிலுள்ள யாழைப் பாணர் கையில் திரும்பக் கொடுத் தருளுகின்றார். இந்தப் பதிகம் 'வியாழக் குறிஞ்சி' என்ற பண்ணி லுள்ளது. ஆனால் இதுவே ஒரு யாழை முரிக்கக் காரணமா யிருந்தமையால் ''**யாழ்முரி**''[22] என்ற பெயரைப் பெறுகின்றது. தருமபுரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனும் '**யாழ்முரிநாதர்**' என்ற பெயரைப் பெறுகின்றார். யாழ்ப்பாணரும் அதனைப் பெற்றுக் கொண்டு என்றும்போல் தமக்குரிய இசைத் தொண்டினை மேற் கொள்ளுகின்றார்.

(9) விடந்தீர்த்தல்: பல பதிகளையும் சேவித்துச் **செங்காட்டங் குடியில்**[23] தங்கியிருந்த போது **சிறுத்தொண்ட நாயனார்**

---

22. **யாழ்முரி: முரி** என்பது ஓரடியில் தொடங்கிய யாப்பியலையும் இசை நடையையும் அவ்வடியிலே முரித்து மாற்றி மற்றொரு யாப்பியலும் இசை நடையும் அமையப் பாடப்பெறுவதாகிய இசைப்பாட்டு. இதனை '**முரிவரி**' என்றும் கூறுவதுண்டு. இதன் இலக்கணத்தை

எடுத்த இயலும் இசையும் தம்மின்
முரித்துப் பாடுதல் முரியெனப் படுமே.

என்ற சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் காட்டிய மேற்கோள் நூற்பாவால் நன்குணரலாம். இங்ஙனம் விரைவில் முரிந்து மாறும் இயலிசை நடையமைந்த வரிப் பாடலை யாழ் முதலிய இசைக் கருவிகளில் வாசித்துக் காட்டுதல் இயலாததாகலின் முரியாகிய இந்த இசைப்பாடலை '**யாழ்முரி**' என்ற பெயரால் வழங்குதலும் உண்டு.

23. **திருச்செங்காட்டங்குடி:** நன்னிலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு. சிறுத்தொண்ட நாயனார் பிள்ளைக் கறி அளித்த அற்புதத் தலம்.

எதிர்கொண்டு போற்றி உபசரிக்கப் பெற்று திருமருகல்[24] என்னும் தலத்தையடைந்து இறைவனை வழிபட்டு அங்கு அமர்ந்திருக் கின்றார். அப்போது திருக் கோயிலுக்கு அருகிலுள்ள திருமடத்தில் அரவு தீண்டி இறந்து விடுகின்றான் யாரோ ஓர் இளைஞன். இந்நிலையில் அவனுடன் வந்த கன்னிப்பெண் அவனைத் தீண்ட வும் மாட்டாதவளாய் அழுதரற்றுகின்றாள். இவ்வழுகுரலைக் கேட்ட ஊரவர் சிலர் விடந்தீர்க்கும் மந்திரவல்லாரை அழைத்து வந்து மந்திரித்துப் பார்த்தும் விடம் இறங்கவில்லை. ஆகவே அத்தலத்து இறைவனை நினைந்து அரற்றுகின்றாள்.

இந்த அழுகையொலி வைகறைப் பொழுதில் மருகற் பெரு மானை வழிபட வந்த பிள்ளையாரின் திருசெவியில் அணை கின்றது. அவரும் அவள் தங்கியிருக்கும் திருமடத்தை அடைந்து அவளை நோக்கி, ''பெண்ணே, நீ அஞ்சற்க. நின் இடுக்கண் இதுவெனக் கூறுக'' என்று பணிக்கின்றார். இவ்வாறுதல் மொழி கேட்ட அக் கன்னிப்பெண் பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து கண்ணீர் சொரிய தன் வரலாற்றை எடுத்துரைக்கின்றாள். ''அருளுடையீர், என் தந்தை தாமன் என்பவர் வைப்பூரைச் சேர்ந்தவர். இப்போது அரவு தீண்டி ஆருயிர் நீங்கிய இவர் எந்தையின் மருகர்; எந்தைக்கு என்னுடன் பெண் பிள்ளைகள் எழுவர்; அவர்களுள் மூத்த பெண்ணை இவருக்குத் தருவதாக உறுதி கூறிய எந்தையார் சொல் தவறி பொருள் ஆசையில் பிறர் ஒருவருக்கு மணம் முடித்தனர். என்னையொழிந்த ஏனைய மகளிரும் இவ்வாறே ஒவ்வொருவராகப் பிறருக்கே மணம் செய்விக்கப் பெற்றனர். எந்தையை நம்பித் தளர்வுறும் இவருக் காகப் பரிவுற்ற நான் உறவினர் ஒருவரும் அறியாத வண்ணம்

24. **திருமருகல்:** நன்னிலத்திலிருந்து 7 கல் தொலைவு. விடந்தீண்டிய செட்டிப் பிள்ளையை உயிர்ப்பித்து அவனுடன் வந்த பெண்ணை அவனுக்கே சம்பந்தர் மணம் முடித்து வைத்த அற்புதத்தலம். மருகல் என்பது வாழை; வாழை தான் தல விருட்சம். ஆனால் இது கல் வாழை; சுவாமிக்கு நிவேதனம் செய்யலாம்; யாரும் சாப்பிடக் கூடாது. கோயில், மாடக் கோயில்.

இவருடன் இல்லத்தை விட்டு வெளியேறினேன். இவரும் இங்கு அரவு தீண்டியதால் இறந்தார். என் செய்வேன் பாவியேன்? துன்பத்திற்குத் துணையாவார் ஒருவருமின்றித் தவிக்கின்றேன். இந்நிலையில் சுற்றத்தவர்போல் இங்குத் தோன்றி என் துயர் நீங்க அருள் செய்தீர்'' என்று போற்றி நிற்கின்றாள்.

இத்துயரச் செய்தி கேட்டு நெஞ்சு நெகிழ்ந்து இளகிய காழிப் பிள்ளையார், ''அஞ்சற்க, உனக்கு எல்லாம் நன்மையாகவே முடியும்'' என்று தேற்றி, திருமருகரில் கோயில் கொண்டு எழுந் தருளிருக்கும் பெருமானைப் பணிந்து **''சடையாய் எனுமால்''** (2.18) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை வழிபடுகின்றார்.

சடையாய் எனுமால்; சரண்நீ எனுமால்;
விடையாய் எனுமால்; வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல். ''பெருமானே, இந்த ஒள்ளிழையாள் உளம் மலிந்து வருந்துதல் அருட்கடலாகிய நினது திருவுள்ளத்திற்குத் தகுவதாமோ?'' என்று முறையிடு கின்றார். இன்னொரு பாடல் (7) இது:

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயராக் கினையே (7)

இதில் கன்னிப்பெண்ணின் நிலையை எடுத்துக் கூறுகின்றார்.

இந்நிலையில் அரவு தீண்டப் பெற்ற இளைஞன் விடந் தீர்ந்து உயிர் பெற்றெழுகின்றான், இதனைக் காணும் அடியார் கூட்டம் வாழ்த்துகின்றது. கன்னியும் இளைஞனும் பிள்ளையார் திருவடி களில் வீழ்ந்து பணிகின்றனர். புகலிப் பெருமானும் அவர்கட்கு

மணம் புணரும் பெருவாழ்வை வகுத்தருளிப் பெருமை அடை கின்றார். இத் திருப்பதிகமும் **அகத் துறையில்** அமைந்துள்ளது. மருகற் பெருமானைக் 'காதலித்த மங்கையொருத்தியின் ஆற்றாமை கூறிச் செவிலி இரங்கல்' என்னும் துறையில் அமைந்துள்ளது.

அருளாசிரியர்களின் அருளிச் செயல்கள் யாவும் மந்திரங்க ளாதலின், வணிக இளைஞன் உயிர் பெற்றெழுகின்றான் என்று கொள்வது ஏற்புடைத்து.

(10) மறைக்கதவம் அடைத்தல்: ஆளுடைய பிள்ளை யாரும் திருவீழிமிழலையினின்றும் புறப்பட்டுத் **திருவாஞ்சியம்**[25] முதலான பல தலங்களைப் பணிந்து பாடி அன்பர்கள் எதிர் கொண்டு போற்றத் **திருமறைக் காட்டை**[26] அடைகின்றனர். திருமறைக்காட்டுப் பெருமக்களும் அடியார்களும் இவர்கள் வருகையை அறிந்து ஊரைக் கமுகு வாழை மரங்களாலும் தோர ணங்களாலும் அலங்கரித்து குடந்தீபங்கள் வார்முரசம் முதலிய மங்கல நாதங்கள் மல்க எதிர்கொண்டு வரவேற்கின்றனர். இரு பெருமக்களும் மறைக்காட்டுத் தொல்லை மூதூர் புகுந்த போது 'அரஹர' என்று மாதவர்களும் மறையவர்களும் எடுத்த ஓசை இரு விசும்பும் திசையெட்டும் பொங்கி எழுகின்றது.

மறைக்கதவம் திறத்தலும் அடைத்தலும்: இருபெரு மக்களும் திருமறைக் காட்டுத் திருக் கோயிலை வலஞ்செய்து கோபுரத்தில் நுழைந்து முன்றில் வாயிலை அணுகுகின்றனர்.

---

25. **திருவாஞ்சியம்:** நன்னிலத்திலிருந்து ஆறுகல் தொலைவிலுள்ளது. காசிக்கு நிகர் எனப்படும் தலங்களுள் ஒன்று.

26. **மறைக்காடு** (வேதாரண்யம்) சப்த விடங்கங்களுள் ஒன்று புவன விடங்கர்; ஹம்சபாத நடனம். வேதங்கள் பூசித்து மூடிவிட்டுப் போயிருந்த கதவுகளைப் பதிகம் பாடி, அப்பர் திறக்கவும் சம்பந்தர் மூடவும் செய்த அற்புதத் தலம், தேவாரம் வேதத்திற்குத் தாழ்ந்ததல்ல என்பதைக் கட்புலனாக உலகுக்குக் காட்டிய தலம். மேலைக்கோபுரவாயிலுக்கு எதிரிலுள்ள விநாயகர் சந்நிதி மிகுபுகழ் வாய்ந்தது.

முன்னாளில் அருமறைகள் சிவபெருமானை வழிபட்டு திருக்காப் பிடப் பெற்ற திருக்கதவை அருமறைகளை அன்புடன் ஓதும் அடியார்கள் ஒருவரும் திறக்காததால் அவ்வாயில் அடைக்கப் பட்டே இருப்பதையும், அன்பர்கள் வேறோர் பக்க வாயிலை அமைத்து அதன்வழியே வழிபாடு செய்து வருவதையும் அடியார் கள்மூலம் அறிகின்றனர். காழிப் பிள்ளையார் சொல் வேந்தரை நோக்கி, ''அப்பரே, மறைக்காட்டுப் பெருமானை எப்படியும் இவ் வழியாகச் சென்று நாம் வழிபடுதல் சிறப்பு; இத் திருக்கதவு **'திறக்கும்பாடி'** நீரே செந்தமிழ்ப் பாடியருளுவீர்'' என வேண்ட, அவரும் பிள்ளையாரின் திருவுளக் குறிப்பிற்கு இசைந்து **''பண்ணினேர் மொழியாள்'** (அப்பர் 5.10) என்று எடுத்து,

> **கண்ணி னாலுமைக் காணக் கதவினை**
> **திண்ணமாகத் திறந்தருள் செய்மினே** (1)

என்று பாடிப் போற்றுகின்றார். பாடல்களின் பொருட் சுவையினைத் துய்க்க விரும்பிய மறைக்காட்டு இறைவன் பதிகம் முடியும் அளவும் திருக்கதவைத் திருக்காப்பு நீக்கத் தாழ்ந் தருளுகின்றார். இது கண்டு வருத்தமுற்ற அப்பர் பெருமான்,

> **அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்**
> **இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே** (11)

என்ற இறுதிப் பாடலைப் பாடியதும் கதவின் திருக்காப்பு நீங்கித் திறந்து கொள்ளுகின்றது.

இரு பெரியார்களுடைய அளவிலா மகிழ்ச்சியடைந்து அடியார் களுடன் திருக்கோயிலில் புகுந்து இறைவன் திருமுன்னர் வீழ்ந் திறைஞ்சிச் செந்தமிழ் மாலைகள் சாத்திப் போற்றுகின்றனர். மறைக்காட்டு மணாளரை வழிபட்டு வெளியே வந்த பின் சொல்லரசர் சண்பை வேந்தரை நோக்கி, ''இத்திருக்கதவம் அடைக்கவுந் திறக்கவுப் அமையும்படி பாடியருளுவீர்'' என வேண்டுகின்றார். பிள்ளையாரும் **''சதுரம் மறை''** (2.37) என்ற முதற் குறிப்புடைய திருபபதிகத்தின்,

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் மொழிசூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே (1)

என்ற முதற் பாடலைப் பாடியவுடன் திருக்கதவம் மூடிக் கொள்ளு கின்றது. இதனைக் கண்ட அரசரும் அடியார்களும் இறைவன் திருவருட்டிறத்தை வியந்து போற்றுகின்றனர். பிள்ளையார் இத் திருப்பதிகத்தின் ஏனைய பாடல்களையும் பாடித் திருக்கடைக் காப்பு சாத்துகின்றார். பின்னர் இருபெருங் குரவர்களும் அடியார்களுடன் அங்குள்ள திருமடத்தில் தங்குகின்றனர்.

வாய்மூர் இறைவன் ஆடல் காட்டல்: அருமறைகளால் மூடப் பெற்ற கதவு தம்மால் அரிதில் திறக்கப் பெற்றதும், பிள்ளையாரால் எளிதில் அடைக்கப் பெற்றதுமாகிய இரு நிகழ்ச்சி களையும் எண்ணுகின்றார் நாவுக்கரசர். தாம் இறைவன் திருக் குறிப்பு அறியாது திறக்கப் புகுந்தது தவறு எனக் கருதிய உள்ளத் தினராய் திருமடத்தில் ஒருபால் துயில் கொண்டிருக்கும் போது சிவபெருமான் சைவ வேடத்துடன் அரசர் முன் தோன்றுகின்றார். ''நாம் **திருவாய் மூரில்**[27] இருப்போம். தம்மைப் பின் தொடர்ந்து வருக'' என்று கூறிப் போகின்றார். அவரைக் கண்டபொழுதே அவர்பால் ஈர்க்கப்பெற்று தலை மேல் கூப்பிய கையினராய் பேரார்வத்துடன் அவரைப்பின் தொடர்கின்றார். இங்ஙன் சொல் வேந்தரை இட்டுச் சென்ற இறைவன், அண்மையில் இருப்பவர் போல் காட்டி நெடுந்தூரம் சென்று வழியிடையே மறைந்தருளு கின்றார்.

---

27. **வாய்மூர்:** மயிலாடுதுறை - காரைக்குடி இருப்பூர்தி வழியில் திருநெல்லிக்கா என்ற நிலைய்த்திலிருந்து 8 கல் தொலைவு. அப்பருக்கு வருமாறு இறைவன் கட்டளையிட, அவர் சென்று தரிசித்ததை 5.50:1, 5.50:2 என்ற பாடல்கள் கூறும். சப்தவிடகங்கங்களுள் இங்குக் கமல நடனம் புரியும் நீலவிடங்கர் உள்ளார்.

இந்நிலையில் திருமறைக்காட்டில் திருமடத்தில் தங்கியிருந்த காழிப்பிள்ளையார் நாவுக்கரசரைக் காணாமல் "அவர் திருவாய் மூருக்கு ஏகினார்" என்று அடியார்கள் மூலம் அறிந்து அவரைத் தேடிக்கொண்டு திருவாய்மூரை நாடுகின்றார். வழியிடையே தம்மை இட்டுப்போந்த இறைவனைக் காணாது வருத்தமுற்ற நாவுக்கரசர் தம்மைத் தேடிவரும் ஞானக்கன்றைக் கண்டு மகிழ்கின்றார். "திருவருட் குறிப்பினையறியாது கதவினைத் திறக்க முற்பட்ட என்னைப் போலன்றி தொண்டின் நிலைமை நன்கு செறியப் பாடி அடைப்பித்த ஞானக்கன்று இதோ வந்து நிற்கின்றார்; வாய்மூர்ப் பெருமான் என்னையன்றி இவரையும் மறைந்து நிற்க வல்லரோ?" என்று வினவும் முறையில்,

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிழைகொள் செஞ்சடை யாரிவர் பித்தரே[28]

என்ற திருக்குறுந்தொகையைப் பாடிப் போற்றுகின்றார். அப்போது வாய்மூர் அடிகள் பிள்ளையாருக்கு எதிரில் தோன்றி ஆடல்காட்டி அருள்புரிகின்றார்.[29] பிள்ளையார் தாம் கண்ட அற்புதத் தெய்வக் காட்சியைத் **'தளிரிளவளரென'** (2.111) என்ற பதிகத்தால் போற்றித் தாம் கண்ட காட்சியை நாவேந்தருக்குக் காட்டி மகிழ்கின்றார்.

தளிரிள வளரென வுமைபாடத்
தாளமிடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியா வரையார்த்
தாடும்வேடக் கிறிமையார்

---

28. அப்பர் தேவா.5.50:8

29. வைணவத்தில் இறைவன் ஆழ்வார்கட்கு நேர்காட்சி தந்ததாகக் குறிப்பு இல்லை; மானசிகக் காட்சி (நம்மாழ்வாருக்கு) தந்ததாகவே குறிப்பு உண்டு.

விளரிள முலையவர்க் கருள் நல்கி
வெண்ணீறணிந்தோர் சென்னியின்
வளரிள மதியமோ டிவராணீர்
வாய்மூரடிகள் வருவாரே (1)

என்பது இதன் முதற்பாடல். இப் பதிகத்துப் பாடல் தோறும் நண்பராகிய அப்பரடிகளை '**இவர்**' எனச் சுட்டிக்காட்டி ''இவரை ஆட்கொள்ளும் நீர்மையையுடைய திருவாய்மூர் இறைவன் இதோ வருகின்றார்'' என்ற பொருளமைய ''இவர் ஆளநீர் வாய்மூரடிகள் வருவாரே'' எனப் பிள்ளையார் குறிப்பிட்டுப் போற்றியுள்ளமை கருதத் தக்கது. இதனால் பிள்ளையார் வாய் மூரடிகள் தமக்குக் காட்டிய ஆடற்கோலத்தை நாவுக்கரசர்க்குக் காட்டிய செய்தி நன்கு புலனாதல் காணலாம். இரு பெருமக்களும் திருவாய்மூரில் சில நாட்கள் தங்கிப் பெருமானைப் போற்றி மீண்டும் திருமறைக் காட்டினை அடைந்து திருமடத்தில் அமர் கின்றனர்.

(11) வாசிதீரக் காசு பெறுதல்: சண்பை வேந்தரும் சொல் வேந்தரும் சேர்ந்து பல தலங்களை வழிபட்டபின் **திருவீழிமிழலை**[30] என்ற திருத்தலத்தில் தங்குகின்றனர். நாடோறும் இருவரும் தொண்டர்களுடன் தலத்துப் பெருமானை வழிபடும் நியதியை மேற் கொண்டுள்ளனர். இக்காலத்தில் பல திருப்பதிகளைப் பாடி மிழலை மேவிய பெருமானையும் போற்றுகின்றனர்.

இருபெருங் குரவர்களும் திருவீழிமிழலையில் தங்கியிருந்த காலத்தில் மழையின்மையால் பஞ்சம் நேரிடுகின்றது. உயிர்களெல்லாம் பசியால் வருத்தமுறுகின்றன. சிவனடியார்களை

30. **வீழிமிழலை:** மாயூரம் - காரைக்குடி இருப்பூர்தி வழியில் உள்ள பூந்தோட்டம் நிலையத்திலிருந்து 7 கல் தொலைவு. சக்கராயுதம் பெறுவதற்காகத் திருமால் நாடோறும் இத்தலத்திறைவனை 1000 தாமரை மலர்களைக் கொண்டு அருச்சித்தவர், ஒரு நாள் ஒரு மலர் குறையத் தனது கண்ணையே எடுத்து அருச்சனையை முடித்துக் கொண்டதாக வரலாறு. அப்பரும் சம்பந்தரும் வாசி தீரக் காசு பெற்ற தலம்.

மட்டிலும் இப்பசிவிட்டிடுமா? சிவனடியார்கள் அல்லல்படும் நிலையை சம்பந்தரும் நாவரசரும் கண்டு ''கண்ணுதலோன் திருநீற்றுச் சார்வினோர் கடுங் கவலை வருமா?'' என்று சிந்தித்து சிவபெருமானின் திருக்கழல்களை நினைந்த வண்ணம் துயில்கின் றனர். இந்நிலையில் வீழிமிழலைப் பெருமான் அவர்கள் கனவில் தோன்றி, ''நீங்கள் கால நிலைமையால் மனத்தில் வாட்டம் அடைந்துள்ளீர். ஆயினும் உங்களை வழிபடும் அடியார்களின் துயரினை நீக்கும் பொருட்டு இப்பஞ்சம் நீங்கும் அளவும் நாம் நாள்தோறும் இத்திருக்கோயிலின் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் ஒவ்வொரு பொற்காசு நுமக்குத் தருகின்றோம்! பஞ்சம் நீங்கியபின் அக்காசு நுமக்குக் கிடைக்காது'' என்று சொல்லி மறைந்தருள்கின்றார். ஆளுடையபிள்ளையார் துயில் உணர்ந்தெழுந்து இறைவன் அருளைப் போற்றித் திருநாவுக்கரச ருடன் திருக்கோயிலிற் புகுந்தபோது கிழக்குப் பீடத்தில் பொற் காசு இருத்தலைக் காண்கின்றார். வியப்படைந்து திருவருளைத் தொழுகின்றார். அக்காசினை எடுத்துக் கொண்டு ''இறைவனடி யாரானார் யாவரும் வந்து உண்பார்களாக'' என்று இரண்டு வேளைகளிலும் பறை சாற்றி அறிவிக்கின்றார். அங்ஙனமே அவர் திருமடத்தில் வரும் அடியார் அனைவருக்கும் திருவமுது அளிக்கப் பெறுகின்றது. நாவுக்கரசரும் மேற்குப் பீடத்தில் வைக்கப் பெறும் காசினை எடுத்து அவ்வாறே சிவனடியார் கட்கும் நாடோறும் திருவமுது அளித்து வருகின்றார்.

இவ்வாறு அமுது அளித்து வருங்கால் சம்பந்தர் மடத்தில் அடியார்கள் திருவமுது செய்தற்குக் காலம் தாழ்க்கின்றது. அஃதுணர்ந்த சண்பை வேந்தர் அமுதளிப்பதற்குத் தம்மிடத்தில் காலந் தாழ்பதற்குரிய காரணம் என்னவெனக் கேட்கின்றார். திருவமுது ஆக்குவோர் பிள்ளையாரைப் பணிந்து தாங்கள் இறைவன்பாற் பெறும் படிக்காசைப் பெற்றுப் பண்டம் வாங்கு வதற்குக் கொண்டு சென்றால் அதற்கு வட்டம் கேட்கின்றனர் என்றும், நாவுக்கரசர் பெற்ற காசை வட்டமின்றி ஏற்றுக் கொள்கின்றனர்

என்றும் கூறி, இதுவே காலம் தாழ்த்தற்குரிய காரணம் எனத் தெரிவிக்கின்றனர். இதனையுணர்ந்த பிள்ளையார் ''அப்பர் பெருமான் கைத் தொண்டு செய்தலால் அவர் பெறும் படிக்காசு வட்டமின்றி ஏற்றுக் கொள்ளப் பெறுகின்றது'' எனச் சிந்தித்து அறிகின்றார். ''இனி வரும் நாட்களில் தரும் காசு வாசி தீரும்படி இறைவனைப் பாடிப் போற்றுவேன்'' என்று திருவுளம் கொள்ளு கின்றார். மறுநாட் காலையில் வீழிமிழலையில் இறைவனைப் பணிந்து **''வாசி தீரவே''** (1.92) என்று பதிகம் பாடிப் போற்று கின்றார். இதில்

''வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏச லில்லையே''

என்பது **முதற்**பாடல். இதனால் வாசியில்லாத நல்ல காசு இவருக்கும் கிடைக்கின்றது. பண்டம் வாங்குவதற்குச் சென்று கொடுத்தபோது வணிகர்கள், ''இக்காசு மிகவும் நன்று வேண்டுவனத் தருவோம்'' என்று கூறி உணவுப் பொருள்களை வழங்குகின்றனர். அன்று முதல் பிள்ளையார் திருமடத்திலும் அடியார்கள் உரிய காலத்தில் திருவமுது செய்கின்றனர்.

இங்ஙனம் இருவருடைய திருமடங்களிலும் எண்ணிறந்த சிவனடியார்கள் திருவமுது செய்து மகிழ்ந்துறையும் காலத்தில் எங்கும் மழை பெய்து வேளாண்மை செழிக்கின்றது. நெல் முதலிய தானியங்கள் நிறைய விளைகின்றன. உயிர்களெல்லாம் துன்பம் நீங்கி இன்புறுகின்றன.

நம்பியாரூரர் : சில ஆண்டுகட்குப் பின்னர் - இவர்கள் இருவரும் சிவப்பேறு அடைந்த பிறகு நம்பியாரூரர் இத்தலத் திற்கு வருகின்றார். சீகாழிப்பதியில் உமையம்மையுடன் தோணிமீது வீற்றிருந்தருளும் பெருமானைக் காண விரும்பிய பிள்ளையாரைக் கழுமலநகருக்குப் போக விடாமல் தோணிபுரத் திருக்கோலத்தை வீழிமிழலை விண்ணிலி விமானத்திலேயே காட்டியருளிப் பிள்ளையாரையும் நாவின் வேந்தரையும் வீழிமிழலையிலேயே

தங்கப் பணித்ததும், பஞ்சம் வந்த பொழுது அவ்விரு பெரு மக்களுக்கும் நாடோறும் ஒவ்வொரு படிக்காசு நல்கியருளி சிவனடியார்கட்கு உணவு கிடைக்கச் செய்ததுமான வீழிமிழலை நாதனின் பேரருட் செயலைக் கேட்டு மகிழ்கின்றார். ''வீழிமிழலை நாதனே, நல்லிசை ஞானசம்பந்தரும் நாவினுக்கரையரும் பாடிய தேனொழுகும் தமிழ்ப் பாடல்களைக் கேட்கும் விருப்பால் அவர்கட்குப் படிக் காசு தந்தருளினீர். அவர்கள் பாடியருளிய தமிழ் மாலைகளைச் சொல்லிலேத்தும் தொண்டினை மேற் கொண்டவன் அடியேன். ஆகையால் அடியேனுக்கும் அருளுதல் வேண்டும்'' என்று வேண்டும் முறையில்,

பரந்த பாரிட மூரிடைப் பலிபற்றிப்
பார்த்துணும் சுற்ற மாயினீர்
தெரிந்த நான்மறை யோர்க்கிட
மாய திருமிழலை
இருந்துநீர் தமிழோ டிசைகேட்கும்
இச்சையால் காசுநித்தம் நல்கினீர்
அருந்தண் வீழி கொண்டீர்
அடியோடும் அருளுதிரே.[30]

என்று வீழிமிழலைப் பெருமானைப் பாடிப் போற்றியுள்ளதை நாம் நினைந்து பார்க்கின்றோம்.

(12) மதுரை மாநகர் அற்புதங்கள்: பாண்டி நாட்டு அரசன் கூன்பாண்டின் (நின்றசீர் நெடுமாறன்) சைவ சமயத்தைத் துறந்து சமண சமயத்தைத் தழுவினான். ஆனால் அரசமாதேவியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் தமக்குரிய சிவநெறியை நெகிழ விடாது கனம் பிடித்து வருகின்றனர். இந்த இருவரும் சம்பந்தப் பெருமான் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருப்பதைச் செவியுற்று பிள்ளையாரை வணங்கி வரும்படியும் தம் நாட்டின் சமய

30. சுந்தரர். தேவா. 7:88:8

நிலையைத் தெரிவித்து வரும்படியும் தம் பரிசனங்களை அனுப்பி வைக்கின்றனர். வந்தவர்கள் அவ்வாறே செய்து பாண்டி நாட்டிற்கு எழுந்தருளிச் சிவநெறியைப் பரப்பும் திருநீற்றின் சிறப்பை மக்கள் உணரும்படி செய்யவும் பிள்ளையாரை வேண்டுகின்றனர்.

பிள்ளையார் அப்பர் பெருமானைத் தனிமையில் அழைத்துச் சென்று மதுரைக்குச் செல்லும் தம் பெருவிருப்பத்தைத் தெரிவிக்க அவர் சமணர்கள் இழைக்கும் கொடுமைகளைக் கூறி அங்கு எழுந்தருள்வது தகாது என்று கூறித் தடுத்தருள்கின்றார். தவிர, ஞாயிறு முதலிய கோள் நிலைகளும் அச்சமயம் சரியாக இல்லை என்றும் குறிப்பிடுகின்றார். இதனைச் செவி மடுத்த பிள்ளையார், ''நாம் போற்றுவன கயிலைநாதன் திருவடிகளாதலால் நம்பால் எத்தகைய தீங்கும் நேரிடாது'' என்று வற்புறுத்துமுகமாக[31] **வேயுறு தோளி பங்கன்** (2.85) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் அருளிச் செய்கின்றார்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியா ழன்வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல். ''கோளும் நாளும் தீயவையேனும் இறைவன் அடியார்களுக்கு நன்றாம்'' எனக் கூறியருளுகின்றார். இத்திருப்பதிகம் முழுவதையும் செவி மடுத்து மகிழ்ந்தே அப்பர் பெருமான், மதுரைப் பயணத்திற்கு உடன்படுகின்றார், தாமும் அவருடன் புறப்படத் துணிகின்றார். இதனையுணர்ந்த

31. பெரி.புரா: ஞானசம்பந்த புரா:615,616

சண்பை வேந்தர் அப்பரைச் சோழ நாட்டிலேயே இருக்குமாறு பணிக்க, அவரும் அதற்கிணங்குகின்றார்.

வேயுறு தோளிபங்கன் என்ற இத்தேவாரப் பதிகம்[32] கோள்களாலும் (கிரகங்களாலும்) நாள்களாலும் (நட்சத்திரங்களாலும்) உலகியலில் நேரும் துன்பங்கள் சிவனடியார்களைச் சார்ந்து வருத்த பிள்ளையாரால் அருளிச் செய்யப் பெற்றது என்பதை,

தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வார் ஆணை நமதே. (11)

என வரும் இறுதிப் பாடலின் ஈற்றடிகள் இரண்டாலும் இனிது புலனாகும். இங்ஙனம் உறுதிப் பொருளைத் தம்மேல் ஆணையிட்டு அறிவிக்கும் உரவோர் பிள்ளையார் ஆதலின் இவரை **''ஆணைநம தென்ற பெருமான்''** என்ற பெயரால் நம் முன்னோர் கல்வெட்டுகளிலும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளனர்.

நாவரசர்பால் நன்முறையில் விடை பெற்ற பிள்ளையார் பல தலங்களை அடியார்கள் புடை சூழ சேவித்துக் கொண்டு மதுரை மாநகரின் மருங்கே வந்தணைகின்றார். காழிவேந்தரின் வருகையை அறிந்து மகிழ்வுற்ற அரசமாதேவி மங்கையர்க்கரசியார் பிள்ளையாரை எதிர் கொண்டழைக்கும்படி அமைச்சர் குலச்சிறையாரை அனுப்பி வைக்கின்றார். அமைச்சரும் அவ்வாறே செய்து, பிள்ளையார் அடியார்களுடன் மதுரையை அடைய ஆலவாயானை **'மங்கையர்க்கரசி'** (3.120) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலையால் நிலமிசை வீழ்ந்து சேவிக்கின்றார்

32. நம் வாழ்க்கையில் நாளும் கோளும் நன்னிலையில் இல்லை என்பதை அறிய நேரும்போது இப்பதிகத்தைக் காலையிலும் மாலையிலும் ஓதி உளங் கரைதல் நன்று என்பது என் அநுபவம்.

பிள்ளையார். இப்பதிகம் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகிய இருவரது திருத்தொண்டினையும் ஆலவாய்ப் பெருமானை ஏற்றருளிய திறத்தையும் செப்புகின்றது.

திருக்கோயிலினின்றும் திரும்பி முன்னரே செய்யப் பெற்ற ஏற்பாட்டின்படி பிள்ளையார் அடியார்களுடன் ஒரு திருமடத்தில் தங்குகின்றார். அரசமாதேவியின் ஆணைப்படி குலச்சிறையார் பிள்ளையாருக்கும் அவருடன் போந்த அடியார்கட்கும் நல்விருந்து அளித்து மகிழ்கின்றார்.

(அ) மடத்தில் மடையர் இட்ட தீ மன்னனின் வெப்பு நோயாதல்: சமணர்களும் அரசனும் சூழ்ச்சி செய்து பிள்ளையார் தங்கியிருக்கும் மடத்திற்குத் தீ மூட்டுகின்றனர். ஒரு பகுதி எரிகின்றது. சிவனடியார்கள் விரைந்து சென்று தீயினை அணைத்துப் பிள்ளையாரிடம் செய்தியை தெரிவிக்கின்றனர். இதனை அறிந்த பிள்ளையார் ''மாதவர் துயிலும் பாவிகள் இங்ஙனம் பழுது செய்தல் முறையாகுமா? என்பொருட்டு அவர்கள் இத்தீங்கினைச் செய்யினும், இஃது இறைவன் அடியார்களைப் பற்ற வல்லதோ? இஃது அரசன் முறை செய்து காப்பாற்றாமையால் நேர்ந்ததாகும்'' என்று சிந்திக்கின்றார்.

பிள்ளையார் சிந்தனை முதலில் அச்சத்தைத் தோற்றுவிக்கின்றது; பின்னர் சிறிது சினத்தைத் தோற்றுவிக்கின்றது. ''சிவனடியார்கள் வாழும் மடத்தில் சமணர்கள் இட்டத் தீத்தழல் பையவே சென்று பாண்டியனைச் சார்வதாகுக'' என்று ஏவுங்கருத்துடன் **''செய்யனேதிரு ஆலவாய்''** (3.51). என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடியருளுகின்றார்.

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே (1)

என்பது முதற் பாடல்.

பாண்டிமாதேவியின் மங்கலநாணைப் பாதுகாத்தற் பொருட்டும், அமைச்சர் குலச்சிறையார் மன்னன்பால் வைத்த அன்பினைக் கருதியும், பாண்டியன்பால் அபராதம் உறுதலை எண்ணியும், அவன் திரும்பவும் சிவநெறியில் சேர்தற்குரிய நற் பேற்றினை நினைந்தும் பிள்ளையார் தீப்பிணியைப் ''பையவே செய்க'' எனப் பணிந்தருளினதாகக் கூறுவர். சேக்கிழார் பெருமான்.[33] நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி யாதலாலும், அவர்கள் கருதிய வண்ணம் நன்மையும் தீமையும் தரவல்ல தாதலாலும், மறைமுனிவராகிய பிள்ளையார் ''பையவே சென்று பாண்டியற் காகவே'' என்று திருப்பதிகத்தில் பணித்தவாறு 'விரிந்த வெந்தழல் வெம்மை போய்த்' தென்னனை மெல்லத் தீ வெப்பு நோயாக மாறுகின்றது.

பல்வேறு சிகிச்சைகள்: பொழுது புலர்ந்ததும் சமணர்களால் பல்வேறு சிகிச்சைகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. மருத்து வர்கள் தாம் கற்ற கலைகளால் நோயைத் தணிக்க முயன்றும் பயன் இல்லை. சமணர்கள் கையாண்ட **மந்திர தந்திரம் வாதம்** முறைகளும் பயன்படாதொழிகின்றன. சமணர்களின் சூழ்ச்சியை அறிந்து கொள்ளுகின்றார் அரசன். இரு திறத்தார்களையும் அவரவர் தெய்வச் சார்பினாலே தீர்க்குமாறும், தான் வஞ்சகம் பேசாமல் நடுவு நிலைமை வகிப்பதாகவும் நல்குகின்றான். இது சமணர்களின் அடிவயிற்றைக் கலக்குகின்றது. இந்நிலையில் காழிப் பிள்ளையார் அங்கு எழுந்தருள்கின்றார். தலைப் பக்கமாக இடம் பெற்றிருந்த அரசன் காட்ட அதில் பிள்ளையார் எழுந்தருள் கின்றார். இதனைக் கண்ணுற்ற சமணர்கள் மேலும் அச்சமுறு கின்றனர். சம்பந்தரைக் காணப் பெற்ற நற்பேற்றினால் நோயின் வருத்தம் சிறிது தணியப் பெறுகின்றது. பாண்டியன் பிள்ளையாரை நோக்கி ''நுமது ஊர் யாது?'' என வினவுகின்றான். அதற்குப் பிள்ளையார்,

---

33. பெ.பு. ஞானசம்ப. புரா. 705

பிரமனூர் வேணுபுரம் புகலிவெங்குருப்
பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ்
சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவயம்
உள்ளிட்டங் காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக்
கழுமலம்நாம் பரவுமூரே. (1)

என வரும் **திருப்பதிகம்** (2.70) பாடி ''பிரமபுரம் முதலிய பன்னிரண்டு திருப்பெயர்களையுடைய திருக்கழுமலே நாம் கருதும் ஊர்'' என மறுமொழி கூறுகின்றார். இப்பன்னிரண்டு பெயர்களும் ஒரு வட்டமாக அமையும்படி அப் பெயர்களை மாற்றினமையால் இது **சக்கரமாற்று** என்ற திருப்பெயரைப் பெறுகின்றது.

சமணர்கள் பிள்ளையாரைச் சூழ்ந்து கொண்டு பலவாறு வெருட்ட, அரசமாதேவி அஞ்ச, பிள்ளையார் **'மானினேர் விழி'** (3.39) எனத் திருப்பதிகத்தைப் பாடி அவருடைய அச்சத்தைப் போக்குகின்றார். ஒவ்வொரு பாடலிலும் 'எளியனேன் திருவாலவாய் அரன் நிற்கவே' என்று முடிவதிலிருந்து **'ஆலவாய் அரன்'** பிள்ளையார் உள்ளத்தில் நிலை பெற்றிருப்பதை அறியலாம்.

சமணர்கள் அரசனின் இடப்பாகத்தைப் பொறுப்பேற்று அப்பகுதியை பீலி கொண்டு தடவுகின்றனர். பயன் இல்லை. பிள்ளையார் அவனது வலப்பாகத்தையும் (பின்னர் இடப்பாகத்தையும்) பொறுப்பேற்று **'மந்திரமாவது நீறு'** (2.66) என்ற பதிகம் ஓதுகிறார்.

மந்திர மாவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்தர மாவது நீறு; துதிக்கப் படுவது நீறு;
தந்திர மாவது நீறு; சமயத்தி லுள்ளது நீறு;
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே (1)

என்பது **முதற்** பாடல். பாடலைப் பாடிக்கொண்டே அரசன் மேனி யெங்கும் நீறு கொண்டு பூச வெப்பு நோய் முற்றிலும் நீங்கு கின்றது.[34] அமணர்கள் தோற்று அவமானமடைய, பிள்ளையார் வெற்றி வாகை சூடுகின்றார்.

வெப்பு நீக்க ஆற்றலற்ற அமணர்கள் தருக்க வாதத்தால் வெல்லுதல் அரிது எனத் தெளிந்து நீரிலும் நெருப்பிலும் வெல்வ தாக எண்ணுகின்றனர். ''தருக்கவாதத்தைக் கைவிட்டு காட்சி யளவையால் நிறுவுதல் இயலும், இரு திறத்தாரும் தாம் கண்ட பேருண்மையினை ஏட்டில் எழுதி அதனை நெருப்பிலிட்டால் வேவுறாத ஏட்டினை யுடைய சமயமே மெய்ச் சமயம்'' என்கின் றனர். காழிப்பிள்ளையாரும் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொள் கின்றார்.

(ஆ) அனல் வாதம்: பாண்டியன் தன் பேரவை முன்னர் தீக்குண்டம் அமைக்க ஏற்பாடு செய்கின்றான்; தீ மூட்டப் பெறு கின்றது. பிள்ளையார் தாம் பாடிய திருப்பதிகங்கள் எழுதப்பெற்ற அடங்கன் முறையின்றும் ஒன்றை எடுக்கின்றார். அது **"போகமார்த்த பூண் முலையாள்''** (1.49) என்ற நள்ளாற்றுப்பதிகமாக அமை கின்றது. அதனை எடுத்து ''என்னை ஆளுடைய இறைவனது திருநாமமே என்றும் நிலை பெற்ற மெய்ப் பொருளாகும் என உலகமாந்தர்க்கு அறிவுறுத்தும் நிலையில் இத்திருப்பதிக ஏடு தீயில் வெந்தழியாது நிலைபெறுக'' என்று சொல்லித் **"தளரிள வளரொளி''** (3.87) என்ற இன்னொரு நள்ளாற்றுப் பதிகத்தைப் பாடி முன்னை ஏட்டை யாவரும் காணத் தீயிலிடுகின்றார். இந்த ஏடு எரிந்து சாம்பலாகாது 'பச்சையாய்' விளங்குகின்றது. (ஆகவே **'பச்சைப் பதிகம்'** என்ற திருப்பெயர் பெறுகின்றது). அமணர்கள் இட்ட ஏடு ''பஞ்சு தீயிடைப்பட்டது போல்'' எரிந்து சாம்பலாகின்றது.

---

34. 1978 - செப்டம்பரில் அடியேன் மஞ்சட்காமாலையால் தாக்கப் பெற்றேன் (40 நாட்கள்). எந்தச் சிகிச்சையும் பயன்படவில்லை. இப்பதிகத்தைப் பத்து முறை ஓதி உடலில் வெண்ணீறு பூச நோய் 3 நாட்களில் நீங்கியது.

அப்பொழுது அரசன் சமணர்களை நோக்கி, ''இப்பொழுது நீவிர் தோற்றிலிரோ?'' என்று சொல்லி நகைக்கின்றான். இந் நிலையில், அவர்கள் வேந்தனை நோக்கி மன்னர் பெருமானே, ஒரு வாதினை மும்முறை செய்து உண்மை காணலே முறை யாகும். இருதிறத்தாரும் தத்தம் சமய உண்மைகள் எழுதிய ஏட்டினை ஆற்று வெள்ளத்தில் இட்டால் எவருடைய ஏடு நீரில் எதிரேறிச் செல்கின்றதோ அவ்வேட்டிற்குரியவரே வென்றவ ராவர்'' எனக் கூறுகின்றனர்.

அமைச்சர் குலச்சிறையார் அமணர்களை நோக்கி, ''இனிமேல் செய்யக் கருதும் வாதில் தோற்பவர்கள் தம் தோல்விக்கு அடை யாளமாகப் பெறும் இழப்பு இன்னது என்பதை இப்பொழுதே உறுதி செய்து கொள்ள வேண்டும்'' என்கின்றார். இதனைக் கேட்ட சமணர்கள் செற்றமுற்று ''யாம் இவ்வாதில் தோற்போ மாயின் எங்களை இவ்வரசனே கழுவிலேற்றும் கடமையுடை யவன்'' என்று கூறுகின்றனர். சமணர்களின் சூளுரையைக் கேட்ட பாண்டியன் அவர்களை நோக்கி ''நீவிர் நும் செய்கையை மறந்து செற்றத்தால் வாய் சோர்ந்து பேசிவிட்டீர்கள்? இனி வையை யாற்றில் ஏட்டினை இடப் போதல் முறை'' என்று கூறுகின்றனர்.

(இ) புனல் வாதம்: அரசன் கட்டளைப்படி இருதிறத்தாரும் வைகைக் கரைக்கு வருகின்றனர். முன்னர்த் தோல்வியுற்றவர்கள் பின்னரும் தோல்வியுறார் என்பது சமணர்களின் நம்பிக்கை. பாண்டியன் முன்னிலையில் **'அஸ்தி நாஸ்தி'** என்ற வடமொழித் தொடரை ஏட்டில் எழுதி அதனை வைகை நதியில் இடுகின்றனர். அது வெள்ளத்தை எதிர்த்துச் செல்ல மாட்டாது வெள்ளத்தோடு கடலை நோக்கிச் செல்லுகின்றது. ஏட்டினை நோக்கிக் கரை வழியே ஓடிய சமணர்கள் அதனைத் தொடர்ந்து ஓட மாட்டாது திரும்பி வருகின்றனர். வந்தவர்கள் சம்பந்தரை நோக்கி ''நீவிரும் நுமது சமய உண்மையை ஏட்டில் எழுதி ஆற்று வெள்ளத்தில்

இட்டால் உண்மை காண்போம்'' என்கின்றனர். இந்நிலையில் பாண்டியன் பிள்ளையாரை நோக்குகின்றான். ஞானக்கன்றும் சைவ சமய உண்மைகளைத் தொகுத்து,

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல் லாஅரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் நீங்கவே (1)

என்ற முதற் பாடலையுடைய **'வாழ்க அந்தணர்'** (3.54) என்ற திருப்பதிகத்தை ஏட்டில் எழுதித் தமது அற்புதத் திருக்கரத்தால் வைகையாற்றில் இடுகின்றார்.[35] பிறவி என்னும் பேராற்றை அருந்தவர் உள்ளம் எதிர்தது எதிர் செல்வது போன்று அவ்வேடு வைகை வெள்ளத்தைக் கிழித்து எதிர் ஏகுகின்றது. வெள்ளத்தைக் கிழித்து எதிர் ஏகுகின்றது. குலச்சிறையார் குதிரை மீதிவர்ந்து வைகையாற்றின்கரை வழியாக அதனைத் தொடர்ந்து செல்லுகின்றார். இப்பாசுரத்தின் இரண்டாம் அடியில் ''வேந்தனும் ஓங்குக'' என்று பிள்ளையார் பாடியதனால் முன்னர் கூனனாயிருந்த பாண்டியன் கூன் நீங்கி **'நின்ற சீர் நெடுமாறன்'** ஆகின்றான்.

பிள்ளையார் தம்மால் வைகைக் கரையில் இடப் பெற்ற ஏடு எதிரேறி விரைந்து செல்லக்கண்டவர் **'வன்னியும் அத்தமும்'** (3.32) என்ற திருப்பதிகத்தைப்பாடிப் போற்றுகின்றார்.

வன்னியும் அத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் ஏடகத் தொருவனே (1)

---

35. இப்பாடலின் பொருளைச் சேக்கிழார் பெருமான் சம்பந்தார் புராணத்தின் 822 - 844 பாடல்களில் அற்புதமாக விளக்குவதைப் படித்து இன்புற்று மகிழ வேண்டும்.

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல். இந்த ஏடு வைகையின் வடகரையில் அமைந்துள்ள **ஏடகத்**[36] திருக்கோயிலின் அருகில் தேங்கி நீர் நடுவே வந்து நிற்கின்றது. ஏட்டினைத் தொடர்ந்து சென்ற குலச் சிறையார் குதிரையை விட்டு இறங்கி ஏட்டினை எடுத்துத் தலைமேற் கொண்டு அங்குக்கோயில் கொண்டு எழுந் தருளியுள்ள ஏடகத்திறைவனை இறைஞ்சி விரைந்து மீளுகின் றார். மீண்டவர் பிள்ளையார் பொற்பாதங்களை வணங்கித் தாம் கொணர்ந்த ஏட்டினை நின்ற சீர் நெடுமாறன் முதலிய யாவர்க்கும் காட்டுகின்றார். அங்குள்ளார் அனைவரும் மகிழ்வுற்று இறைவன் திருவருளை வியந்து போற்றுகின்றனர். வைகை யாற்றில் எதிரேறிச் சென்ற ஏடு திருவேடகத் திருக்கோயிலின் பாங்கே ஒதுங்கிய செய்தி மேற் குறிப்பிட்ட **'வன்னியும் அத்தமும்'** என்ற பதிகத்தின் திருக்கடைக் காப்பில் 'ஏடு சென்று அணைதரும் ஏ கத்தொருவனை' என வரும் தொடரால் தெளிவாகப் புலனாதல் கண்டு மகிழலாம்.

முன்னர் ஒப்புக் கொண்டபடி சமணர்கள் கழுவேறுகின்றனர். சேக்கிழார் பெருமானும் ''எண் பெருங்குன்றத்து எண்ணா யிரவரும் ஏறினார்கள்''[37] என்று கூறுவதும் அறியத்தக்கது. பாண்டியனும், பாண்டிமா தேவியும் குலச் சிறையாரும் **நாயனார்** நிலைக்கு உயர்ந்தனர்.[38]

(13) ஆண்பனை பெண்பனையாதல்: நடு நாட்டுத்திருத்தலப் பயணத்தை முடித்துக் கொண்டு தொண்டை

---

36. **ஏடகம் (திருவேடகம்):** திண்டுக்கல் - மதுரை இருப்பூர்தி வழியில் சோழ வந்தான் என்ற நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. ஏடுதங்கிய இடம் 'ஏடகம்' ஆயிற்றுப் போலும். திருக்கோயில் ஆற்றோரத்தில் உள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம். பல ஆண்டுகட்கு முன்னர் பெருந்தவத்திரு சித்பவானந்த அடிகள் இங்கு நிறுவிய கல்லூரி சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது.

37. பெரி.புரா. ஞான சம்பந்த புரா.855

38. பெரியபுராணம் காண்க

நாட்டுக்கு வருகின்றார். முதலில் **திருவோத்தூர்**[39] என்ற தலத்திற்கு வருகின்றார். இத்தலத்து இறைவனை **'பூத்தேர்ந்தாயன'** (1.54) என்ற பதிகம் பாடி இறைவனை வழிபட்டு அவ்வூரில் தங்கியிருந்தபொழுது சிவனடியார் ஒருவர் காழிவேந்தரை வணங்கி நின்று, ''எளியேன் இறைவனுக்கு அடிமைத் தொண்டன். சிவனடியார்க்கெனத் தண்ணீர் இறைத்து வளர்த்த பனைகள் ஒன்றேனும் காய்த்திலது. இதனையறிந்த சமணர்கள் இப்பனைகளைச் சிவனருளால் காய்க்க வைக்க முடியுமா? என வினவி அடியேனை இகழ்கின்றனர்'' என முறையிடுகின்றார். இது கேட்ட பிள்ளையார் திருக்கோயிலினுட் சென்று கீழ்க் குறிப்பிட்ட திருப்பதிகத்தைப் பாடி அதன் திருக்கடைக் காப்பில்,

குரும்பை யாண்பனை யீன்குலையோத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும்புகலி யுள்ஞான சம்பந்தன்சொல்
விரும்பு வார்வினை வீடே (11)

---

39. **திருவோத்தூர் (ஓத்தூர்):** திருவேதிபுரம், திருவத்தூர். காஞ்சியிலிருந்து 19 கல் தொலைவு. கோயிலின் மேற்கில் சேயாறு (செய்யாறு) ஓடுகின்றது. சிவபெருமான் தேவர்கள் முனிவர்கட்கு வேதப் பொருளை ஓதிய தலம் (ஓத்து - வேதம்) சம்பந்தர் அடியார் வேண்டு கோட்கிணங்கி ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கிய அற்புதத் தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் கொண்டது.

நான் திருப்பதியில் பணியாற்றிய போது (1975 என்பதாக நினைவு) செய்யாறு அரசினர் கல்லூரியில் முதல்வராக இருந்த பேராசிரியர் க. பெருமாள் கல்லூரியில் ஒரு சிறப்புச் சொற்பொழிவுக்கு அழைத்திருந்தார். 'அறிவியல் தமிழ்' என்ற தலைப்பில் பேசியதாக நினைவு. ஒருநாள் காலை என்னையும் டாக்டர் ந. சஞ்சீவியையும் (சொற்பொழிவுக்கு வந்தவர்) திருவோத்தூருக்கு அழைத்துச் சென்று வழிபாடு செய்து வைத்தார். ஆண் பனைகளைப் பெண்பனைகளாக்கி அற்புதம் நிகழ்த்திய சம்பந்தப்பெருமானை நினைவு கூரச் செய்தது இன்றும் என் மனத்தில் பசுமையாக உள்ளது.

என்று முடித்த அளவில் அங்கிருந்த ஆண்பனைகளெல்லாம் பெண்பனைகளாக மாறிக் குரும்பை யீன்று காய்க்கின்றன. இத் திருவருள் நிகழ்ச்சியை நேரில் கண்ட சமணர்கள் பலரும் தமது சமயத்தை வெறுத்துச் சிவனெறியைத் தழுவிப் பிள்ளையாரை வணங்கினார்கள் என்பது வரலாறு.[40]

(14) எலும்பை பெண்ணாக்குதல்: தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தின்போது **திருவொற்றியூரில்**[41] சில நாட்கள் தங்குகிறார் பிள்ளையார். பிறகு புற்றிடங்கொண்ட பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு **மயிலை**[42] வர எண்ணியிருக்கின்றார். மயிலையில் வணிகர் மரபில் தோன்றி வாணிகத் தொழிலில் மேம் பட்டுப் பெருஞ் செல்வம் எய்தினார் ஒருவர். சிவபக்தியால் சிறந்து விளங்கி **'சிவநேசர்'** என்னும் பெயர் பெற்று விளங்குகின் றார். இவர் புறச் சமயங்களைத் தமிழ் நாட்டைவிட்டு அகற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இவர் காழிப்பிள்ளை யாரின் பெருமையைக் கேள்வியுற்றிருக்கின்றார். இவருக்குப் பிறந்த **பூம்பாவை** என்ற அழகுடைய நங்கை மணப்பருவம் எய்தியிருக்கின்றாள். இவளையும் தாம் ஈட்டிய பொருளையும் தம்மையும் சிவநேசர் காழி நாடுடையவர்க்குக் கொடுக்க எண்ணி யிருக்கின்றார்.

---

40. பெ.பு: ஞானசம்பந்தர் புரா. 977-983

41. **ஒற்றியூர்:** சென்னை - தங்கசாலைப் பேருந்து நிலையத்திலிருந்து செல்லும் பேருந்தில் சென்று இவ்வூரை அடையலாம். புற்றிடங் கொண்டார், வன்மீக நாதர், படம்பக்க நாதர் என்பன மூலவரின் பெயர்கள். பட்டினத்தடிகள் போற்றிய தலம். அவருடைய முத்தி தலமும் இதுவே. அடிகளாரின் கோயில் தேர் நிலையிலிருந்து அரைக் கல் தொலைவிலுள்ளது.

42. **மயிலை (மயிலாப்பூர்):** சென்னை சென்ட்ரல், எழும்பூர் நிலையங் களிலிருந்து 4 கல் தொலைவு. உமா தேவியார் மயிலுருவில் சிவபெருமானைப் பூசித்து தமது சுய உருவம் பெற்று இறைவனைத் திருமணம் புரிந்து கொண்ட தலம். பிள்ளையார் எலும்பைப் பெண்ணாக்கிய நிகழ்ச்சி இத்திருக்கோயிலில் நடைபெற்றது.

ஒரு நாள் பூம்பாவை கன்னிமாடத்தருகேயுள்ள பூஞ்சோலையில் மலர் கொய்யச் செல்லும் பொழுது மல்லிகைப் பந்தரிலே மறைந்திருந்த பூநாகம் ஒன்று அவளைத் தீண்டுகின்றது. தந்தையார் மருத்துவர் மந்திரவாதிகளைக் கொண்டு மந்திரதந்திரங்களால் சிகிச்சையளித்தும் பயன்படாது விடம் தலைக்கேறி ஆவிசோர்ந்து மரிக்கின்றாள். சிவநேசர் கலக்க முற்றாராயினும் 'இவள் சம்பந்தருக்கு உரியவள்' என்று கூறினமையால் 'இனித் துன்பமுற வேண்டியதில்லை' எனத் தெளிந்து ஒருவாறு துன்பம் நீங்குகின்றார். 'சம்பந்தர் இவண் போதரும்வரையிலும் தகனஞ்செய்த சாம்பரையும் எலும்பினையும் ஒரு கலையத்திலே இட்டு வைப்பேன்' எனத் துணிகின்றார். அக்கலயத்தைப் பூசித்தும் வருகின்றார். இந்நிலையில் சம்பந்தர் திருவொற்றியூரில் அடியார்களுடன் எழுந்தருளியுள்ளார் என்ற செய்திகேட்டு மகிழ்வுற்று அவரை எதிர்கொண்டழைக்கச் செல்லுகின்றார். சம்பந்தரும் மயிலை நாதனை வணங்கும் விருப்புடையராய்த் திருவொற்றியூரிலிருந்து புறப்பட்டு எதிரே வந்தருள்கின்றார். சிவநேசரும் சம்பந்தரின் முத்துப்பல்லக்கின் கீழிருந்து வீழ்ந்து வணங்குகின்றார். ஞான சம்பந்தரும் சிவிகையினின்றும் இறங்கித் தம்மை வணங்கி நிற்கும் சிவ நேசருடைய செயல்களை அடியார்கள் நவிலக் கேட்டு அவருடன் மயிலை வந்து சேர்கின்றார்.

பிள்ளையார் காபாலீச்சரத்திறைவனை வணங்கிப் புறம் போந்து சிவநேசரை நோக்கி, ''அன்பீர், நும் திருமகளாரின் என்பு நிறைந்தகலையத்தினை உலகறியக் கோயிலின் புற வாயிலில் கொணர்வீராக'' எனப் பணிக்கின்றார். உலகோர் காணும் வண்ணம் பிள்ளையாரும் திருக்கோயிலை வந்தடைகின்றார். வந்தவர் இறைவனது திருவருளைச் சிந்தித்து, ''மக்கள் அடைதற்குரிய பயன் சிவனடியார்கட்கு அமுது செய்வித்தலும் இறைவனுடைய திருவுலாப் பொலிவு கண்டு மகிழ்ந்தலுமே என்பது உண்மையானால் பூம்பூவாய் நீ உலகினர்முன் உயிர்பெற்று

வருக'' எனப் பூம்பாவையை அழைக்கும் முகமாக '**மட்டிட்ட புன்னையங்கானல்**' (2.47) என்ற முதற்குறிப்புடைய பதிகத்தைப் பாடுகின்றார்.

மட்டிட்ட புன்னையங்
கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டாள்
கபாலீச் சரம மர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின்
உருத்திர பல்கணத்தார்க்
கட்டிடல் காணாதே
போதாயோ பூம்பாவாய் (1)

என்பது இதன் முதற்பாடல். இப்பாடலைப் பாடியதும் கலையத்தி லுள்ள அங்கத்திலே பொருந்த அவ்வெலும்பனைத்தும் ஓருருவாய் வடிவு நிரம்புகின்றது. இதில் வடிவுபெறும் பூம்பாவை, இப்பதி கத்தின் இரண்டு முதல் ஒன்பது வரையுள்ள எட்டுப் பாடல்களைப் பாடியதும் 12 வயதுடைய அழகிய மங்கையளாகின்றாள். சமணரும் சாக்கியரும் இச் செய்கை இயல்வதன்று என்று கூறுவர் என்னும் கருத்தமைய,

உரிஞ்சாய வாழ்க்கை
அமணுடையைப், போர்க்கும்
இருஞ்சாக் கியர்கள்
எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த
கபாலீச் சரமமாந்தான்
பெருஞ்சாந்தி காணாதே
போதியோ பூம்பாவாய் (10)

என்ற பத்தாம் பாடலைப் பாடிய அளவில் செந்தாமரை விரிய அதனுள்ளிருந்து எழும் திருமகளைப் போன்று கூப்பிய செங்கையுடன் கலையம் உடைய எழுந்து வழிபட்டுத் தோன்ற அழகினுக்கு அணியாய் நிற்கின்றாள்.

இந்த அற்புதம் நிகழ்ந்த பொழுது பிள்ளையாரின் வயது **பதினாறு**. பூம்பாவையைக் கண்ட சிவநேசர் பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றார். பூம்பாவையும் சிவ பெருமானைப் பணிந்து ஞானக்கன்றை வணங்கி நிற்கின்றாள்.

ஞானக்கன்றை வணங்கி நிற்கும் சிவநேசர் ''அடியேன் பெற்றெடுத்த பூம்பாவையைத் தேவரீர் திருமணம் செய்து கொள்ள வேண்டும்'' என வேண்டுகின்றார். இதனைச் செவி மடுத்த பிள்ளையார்,' 'அன்பீர், நீவிர் பெற்றெடுத்த பெண் விடத்தால் மரித்த பின்பு, யாம் மீண்டும் பிறக்கச் செய்தோம். ஆகவே, இவள் எமக்கு மகளாகின்றாள். எனவே இவளை மணத்தல் தகாது'' என்று மறுக்கின்றார். சிவநேசருக்கும் அவர்தம் உறவினருக்கும் **மறைமுறையினை** எடுத்துரைத்து அவர்தம் மயக்கத்தைப் போக்குகின்றார். பிள்ளையார் செப்பிய உரைதக்க தென உணர்ந்த சிவநேசர் பிறருக்கும் மணம் கூட்ட இசைவின்றித் தம் மகளைக் கன்னிமாடத்தே இருக்கச் செய்கின்றார். பூம்பாவை யும் சிவனருளைச் சிந்தித்திருந்து சிவப்பேறு அடைகின்றாள் என்பது வரலாறு.

(15) ஈறில் பெருஞ்சோதியில் கலத்தல்: முதலில் திருமணம் செய்து கொள்ள மறுத்த பெருமான் இறுதியில் 'திரு வருள் இதுவாயிருப்பின் நடைபெறட்டும்' என்று உடன்படு கின்றார். பெரிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. விவரம் வேண்டுவோர் என் நூலில் கண்டு கொள்ளலாம்![43] திருமணம் நடைபெற்ற இடம் 'நல்லூர்ப் பெருமணம்'. காழி வேந்தர் உற வினர்கள் தொண்டர் பெருமக்கள் சூழ பெருமணத் திருக் கோயிலை நோக்கி நடக்கின்றார் தம் துணைவியாருடன்.[43]

43. **'ஞானசம்பந்தர்'** - பக் 30 - 311. பிள்ளையார் திருமணக் கோலங்கொண் டதையும் அவர் சிவிகை மீதமர்ந்து தெருவில் உலாவரும் காட்சியையும் சேக்கிழாரின் தெய்வத் தமிழில் படித்து அநுபவிக்க வேண்டும் (பெரி.புரா. ஞானசம்பந்.புரா 1210 - 1230

திருக்கோயிலை அடைந்தவுடன், பெருமணம் மேவிய பெம்மானை நோக்கி, ''பவமற என்னை முன்னாள் ஆண்ட அப்பண்புகூட, நவமலர் பாதம் கூட்டும்'' என்னும் நல்லுணர்வுடன் தமது திருமணத்தைக் கண்டோரது பிறவிப் பாசத்தை நீக்குதலையே பொருளாகக் கொண்டு **'கல்லூர்ப் பெருமணம்'** (3.125)[44] என்ற முதற்குறிப்பினை யுடைய திருப்பதிகத்தால், ''நாதனே! நல்லூர் மேவும் நம்பனே! நின் திருவடி சேரும் பருவம் இதுவாகும்'' என்று உளமுருகப் போற்றுகின்றார்.

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயகம் பரனே (1)

என்பது இப்பதிகத்தின் **முதற்** பாடல்.

அப்பொழுது பேரருட் கடலாகிய சிவபெருமான் நல்லூர்ப் பெருமணக் கோவில் தன்னுள் ஒடுங்கும்படியாக அதற்கு மேலோங்கிய தூய பெருஞ்சோதிப் பிழம்பாகத் தோன்றி நிற்கின்றார். பிள்ளையாரை நோக்கி ''ஞானசம்பந்தனே, நீயும் பூவையன்னாளாகிய நின் துணைவியும் இங்கு நின்புண்ணிய மணத்தைக் காண வந்தார் அனைவரும் இந்தச் சோதியுள் வந்து சேர்மின்'' என்று திருவாய் மலர்ந்து அச்சோதியுட் புகுதற்கென்று வாயிலொன்றையும் வகுத்துக் காட்டுகின்றார். புகலிமன்னரும்

---

44. **நல்லூர்ப் பெருமணம்:** சிதம்பரத்துக் கருகிலுள்ள கொள்ளிடம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. இதைத் திருமண நல்லூர் என்று சொல்வதும் உண்டு. மக்கள் வழக்கில் 'ஆச்சாள்புரம்' என்று பெயர். சம்பந்தர் திருமணம் நடைபெற்ற தலம். திருமணத்திற்கு வந்த அனைவரும் ஈறில் பெருஞ்சோதியில் கலந்து வீடுபேறு அடைந்தனர். இத்திருமணத்திற்கு சம்பந்தரின் கெழுதகை நண்பர் நாவுக்கரசர் ஏன் வரவில்லை என்பது அறியக் கூட வில்லை. திருநல்லூரில் வாழும் நம் பாண்டாரின் திருமகள் தான் சம்பந்தப் பெருமானின் மணப்பெண்.

அச் சோதியைத் தொழுது நின்று மாயிருஞாலம் உய்ய வழி யினைக் காட்டும் பாங்கில் ''ஞான மெய்ந்நெறிதான் யார்க்கும் நமச் சிவாயச் சொல்லாம்'' என்று **''காதலாகிக்''** (3.49) என்ற முதற்குறிப்புடைய நமச்சிவாயப் பதிகத்தை 'வானமும் நிலமும் கேட்க அருளிச் செய்து[45] இம்மணத்தில் வந்தோர், ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக'' என்று அனைவரையும் அன்பால் அழைத் தருள்கின்றார். இப்பதிகம் முழுவதையும் அடிக்கடி நாம் பாடி அநுபவித்தால் ''பந்தபாசங்களை அறுத்து'' எறியலாம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. (1)

என்பது இதன் முதல் திருப்பாடல்.

பிறவிப் பெருங்கடலில் அல்லல் பட்டுத் தத்தளிக்கும் மக்கள் திருஞானசம்பந்தரின் திருமணத்தைக் கண்டு உடன் சேவித்துச் செல்லும் நற்பேற்றினாலே அங்குத் தோன்றிய பெருஞ் சோதியில் புகுந்து பிறவா நெறியாகிய பேரின்ப வாழ்வைப் பெறுகின்றனர். **திருநீல நக்கநாயனார், முருக நாயனார் சிவபாத விருதயர், நம்பியாண்டார் நம்பி திருநீலகண்டப் பெரும்பாணர்** முதலிய திருத்தொண்டர்கள் தங்கள் இல்லக் கிழத்தியருடனும் உறவினர் களுடனும் சோதியுள் புகுகின்றனர். பிள்ளையாரின் பரிசனங் களும் ஆறுவகைச் சமயத்தினராகிய அருந்தவர்களும், அடியார் களும், முனிவர்களும் முத்துச் சிவிகை சுமந்தவர்கள் உட்படப் பிறரும் இறைவன் காட்டிய பெருஞ்சோதியில் கலந்து இன்புறு கின்றனர். இங்ஙனம் திருமணம் காண வந்த அனைவரும் பெருஞ் சோதியிற் புகுந்த பின்னர் பிள்ளையார் தம் காதலியாரைக் கைப்பிடித்து இறைவனது எழிற் பெருஞ்சோதியை வலம் வந்து சிவபெருமானுடன் ஒன்றி உடனாகின்றார்.

45. இது பொதுப்பதிகம்

இதனைச் சேக்கிழார் பெருமான்

காதலியைக் கைப்பற்றிக்
கொண்டுவலஞ் செய்தருளித்
தீதகற்ற வந்தருளும்
திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி
நண்ணியதன் உட்புகுவார்
போனநிலை முடிந்தவழிப்
புக்கொன்றி உடனானார்[46]

என்று காட்டுவர். உடனே எழில் வளர் சோதி மறைகின்றது. திருக்கோயில் முன்போலவே காட்சியளிக்கின்றது. காலந்தாழ்த்து வந்தவர்கள் சோதியிற் புகும் நட்பேறின்றிக் கலங்கி நிற்கின்றனர். விண்ணவர் முனிவர் முதலியோர் தமது ஏசறவு தீர இறைவனை ஏத்தி மகிழ்கின்றனர். இது வரலாறு.


சைவ சமய வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் **ஓர் ஒப்பற்ற தனிநாயகன் சம்பந்தப் பெருமான்.** மூன்று வயதிலேயே இறையருளால் செந்தமிழ்ப் பாடல்கள் பாடும் ஆற்றல் பெற்றுத் தமிழக வரலாற்றில் ஒரு பெரும் புரட்சி செய்த ஞானக்கன்று காழிப்பிள்ளையார். அருமறை அந்தணர் குலத்தில் பிறந்தவ ராயினும் தாழ்ந்த குலத்தவராகக் கருதப்பெறும் திருநீலகண்ட யாழ்ப்பாணரைப் பாராட்டி அவர்க்குச் செய்த சிறப்பும் மரியாதை யும், திரு நீலநக்கர் இல்லத்தில் பாணருக்கு மிக உயரிய நிலை அளிக்கச் செய்து மறைமுகமாகச் சமூகப் புரட்சி செய்ததும் இக் காலச் சமூகச் சீர்திருத்த வாதிகள் வைத்துப் போற்ற வேண்டியவை யாகும். பழங்காலத்தில் சைவ வைணவ ஆசாரியப் பெருமக்கள் **தாழ்த்தப் பெற்ற**[47] குலத்தார்களையும் வேறுபாடுகாட்டாமல் போற்றியதைப் பிற்காலத்தார் மறந்து விட்டனர். இன்று இப் பிரச்சினை அரசியல் - சமூக இயல் பிரச்சினையாக விசுவரூபங் கொண்டு விட்டதைக் காண்கின்றோம்.

---

46. பெரி.புரா. ஞானசம்பந்.புரா. 1253

47. வைணவர்கள்ஞ இவர்கட்குச் சூட்டிய பெயர் **'திருக்குலத்தார்'** என்பது.

2. திருநாவுக்கரசர்



தேர்ந்தஉளத் திசைமிகவும் தித்தித் தூறும்
செழுந்தேனே சொல்லரசாம் தேவே மெய்ம்மை
சார்ந்துதிகழ் அப்பூதி அடிகட் கின்பம்
தந்தபெருந் தகையேதம் தந்தை யேஉள்
கூரத்தமதி நிறைவேஎன் குருவே எங்கள்
குலதெய்வ மேசைவக் கொழுந்தே துன்பம்
தீர்ந்தபெரு நெறித்துணையே ஒப்பி லாத
செல்வமே அப்பனெனத் திகழ்கின் றோனே

- இராமலிங்கர் (திருஅரு. ஐந்.திருமுறை
ஆளுடைய அரசுகள் அருள்மாலை - 10)

நடு நாட்டில் **திருவாமூர்** என்பது ஒரு சிற்றூர். அவ்வூரில் வேளாண் மரபில் வந்த **புகழனார்** என்பவருக்கும் **மாதினியார்** என்பவருக்கும் பெண் மகவு ஒன்றும் ஆண் மகவு ஒன்றும் பிறக்கின்றன. பெண் மகவுக்குப் பெற்றோர் இட்ட பெயர் **திலகவதியார்**; ஆண் மகவுக்கு இட்ட பெயர் **மருள் நீக்கியார்.** இவரே **திருநாவுக்கரசர்.**

இளமையில் இருவரும் நற்கல்வி பெறுகின்றனர். இளமையில் பெற்றோரை இழக்கின்றனர். திலகவதியாருக்கும் கலிப்பகையார் என்பவருக்கும் திருமணம் நிச்சயிக்கப் பெறுகின்றது. ஆனால் போரின் நிமித்தம் வடநாட்டுக்கு சேனைத் தலைவராகச் சென்ற **கலிப்பகையார்** போரில் இறந்து படுகின்றார். திலகவதியார் தம்பியார் பொருட்டு உயிர் வாழ்கின்றார். திலகவதியார் **அதிகை வீரட்டானச்**[48] சிவன் கோயிலில் திருவலகிடுதல் போன்ற நற்றொண்டில் ஈடுபட்டுத் தம் வாழ்க்கையைத் தவநிலையாக்கிக் கொள்கின்றார். தம்பியாரையும் சிறப்புடன் வளர்த்துச் சிறந்த கல்விமானாக்குகின்றார்.

தீப் பேற்றின் காரணமாக சமணத்துறவிகளின் பிரச்சார வலையில் சிக்கி சமண சமயத்திற்கு மாறுகின்றார் மருள் நீக்கியார். அங்கு **தருமசேனர் என்ற** பெயரைத் தாங்கி அரும் பணியாற்றுகின்றார். இவர் புத்தரில் ஒரு சாராராகிய **தேரரை** வாதில் வென்று அமண் சமயத் தலைமையினில் மேம்படுகின்றார். சமண சமயத்தைச் சார்ந்த அரசன் தான் சார்ந்த சமயத்தைப் பரப்புவதற்கு திறமை மிக்க தருமசேனரை நன்கு பயன்படுத்திக் கொள்ளுகின்றான். கருணாமூர்த்தியான கண்ணுதலப்பனின் அருள் வெள்ளம் தருமசேனர்மீது பாயத் தொடங்குகிறது.

(1) சூலை நோயால் மாற்றம்: சிவபெருமான் திருவருளால் தருமசேனருக்குச் சூலைநோய் ஏற்படுகின்றது. இந்நோய் வடவைப் பெருந்தீயும் ஆலகால விடமும் வச்சிரப் படையும் ஒன்று சேர்ந்து விளைவிக்கும் கொடுமையை விடக் கொடுமையாக வருத்துகிறது. இந்த நோயைத் தாங்க முடியாமல் பாழியறையில் மயங்கி வீழ்கின்றார். தாம் சமண்சமயத்தில் கற்ற மந்திரங்களையெல்லாம் கையாண்டு பார்க்கின்றார்; நோய் தணிந்த பாடில்லை. மாறாக, அம் மந்திரங்களால் நோய் முடுகி வருந்துகின்றது. தருமசேனர் படும்பாட்டைக் கண்ட சமணர்களும் ஒன்று கூடிக் கவலைப்

48. **அதிகைவீரட்டானம்:** (திருவதிகை) பண்ணுருட்டியிலிருந்து 2 கல் தொலைவு. திலகவதியார் சரியைத் தொண்டு செய்த அருமைத் தலம். அட்ட வீரத்தலங்களுள் இது திரிபுரம் எரித்த வீரட்டம் (அப்பர் தேவா.5.53:4). அருகில் கெடில நதி ஓடுகின்றது. இத்தலத்தில் ஆண்டுதோறும் திரிபுரதகன உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

படுகின்றனர். தம் கையிலுள்ள குண்டிகை நீரை மந்திரித்துக் குடிப் பிக்கின்றனர்; மயிற்பீலி கொண்டு காலளவும் தடவுகின்றனர். இத னால் நெய்யிட்ட நெருப்பு மேலும் பெருகி எரிவதுபோல், நோய் பன்மடங்கு அதிகரிக்கின்றது. சோர்வுற்ற சமணர்கள், கலங்கிய உள்ளத்தினராய் தரும சேனரைக் கைவிட்டு அகன்று போகின்றனர்.

ஆழ்ந்து எண்ணிய தரும சேனர் சிவபெருமானின் திருவரு ளும் கூடப் பெறுவதால் இம்மைக்கும் மறுமைக்கும் ஒவ்வாத சமண் சமயத்தைத் துறந்து தம் தமக்கையாரிடம் திரும்ப எண்ணு கின்றார். அங்ஙனமே அப்பெருமாட்டி எழுந்தருளியிருக்கும் திருமடத்திற்கு ஒருவரும் காணாதபடி நள்ளிரவில் வந்து சேர்கின்றார். தமக்கையாரும் கயிலைப் பெருமானின் திருவடி களை நினைந்து **ஐந்தெழுத்தினை ஓதி திருநீற்றினைத்** தந்தருள் கின்றார். அதனைத் தம் திருமேனி யெங்கும் பூசிக் கொண்டு தம் தமக்கையாருடன் திருவதிகைத் திருக்கோயிலுக்குச் செல்லுகின் றார். திருக் கோயிலைத் தொழுது வலங்கொண்டு நில மிசை வீழ்ந்து திருவதிகை வீரட்டானத்து இறைவனை இறைஞ்சு கின்றார். இந்நிலையில் இறைவன் திருவருளால் செந்தமிழ்த் தமிழ் மாலைகளைப் பாடிப் போற்றும் உணர்வு அவருக்கு உண்டாகின் றது. தம் சூலைநோய் நீங்கும் பொருட்டு திருவதிகைப் பெருமானை **'கூற்றாயினவாறு'** (4.1) என்ற முதற் குறிப்பினையுடைய செந்தமிழ்ப் பாமாலையை உள்ளத்தில் பேரன்பு பொங்கப் பாடிப் போற்றுகின்றார்.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரொடு நுடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே (1)

என்பது இத்திருப்பதிகத்தின் முதற் பாடல். நிலைபெற்ற பெரு வாழ்வைத் தரும் இத்திருப்பதிகத்தைப் பாடிய பொழுது அவர்தம்

வயிற்றில் புகுந்து வருத்திய சூலைநோய் விரைவில் நீங்கிவிடுகின்றது. மருள் நீக்கியாரும் இறைவனின் கருணைக் கடலில் மூழ்கித் திளைக்கின்றார்.

இந்நிலையைச் சேக்கிழார் பெருமான் மிக அற்புதமாகக் காட்டுவார்.[49] 'இறைவனது திருவருள் அடியேற்கு உயிருடன் நலத்தையும் அருளியது' என மகிழ்ந்து முதல்வனின் கருணைக் கடலில் மூழ்கி இன்புறுகின்றார். மெய்மயிர் சிலிர்க்க, கண்ணீர் மழையெனப் பொழிய, நிலமிசை வீழ்ந்து புரள்கின்றார்; 'என்றும் வெள்ளம் ஏறாத பெருந்திடர் என அமைந்த எளியேன்பால் இவ்வாறு நின் திருவருள் பெருவெள்ளத்தைப் பெருக்கி விடுதல் தகுமோ?' என இறைவனை உளங் கசிந்து போற்றுகின்றார். 'பொய்ம்மை மிக்க புறச்சமயப் படுகுழியில் வீழ்ந்து எழுமாறு, இதுவென உணராது மயங்கி அவமே செய்து கிடக்கும் எளியேன் மாமலையாள் மணவாளன் திருக்கழல்களை அடைந்து உய்யும் வண்ணம் இத்தகைய நல்வாழ்வைத் தந்த சூலை நோய்க்குச் செய்யத் தக்க கைம்மாறு யாதுள்ளது?' என்று தம்மை நல்வழிப் படுத்துவதற்குக் காரணமாய் அமைந்த சூலை நோய்க்கு நன்றி தெரிவித்து இறைவனைத் தொழுகின்றார்.[50] இந்த நிலையில் ''செந்தமிழ்ப் பதிகம் பாடிய பான்மையினால் நின்பெயர் ''**நாவுக்கரசு**'' என உலகேழினும் நிலை பெற்று வழங்குவதாகுக'' என இறைவனின் திருவருள் வாக்கு யாவரும் கேட்கும் வண்ணம் வானில் எழுகின்றது.

இத் திருவருள் மொழியினைச் செவிமடுத்த **நாவுக்கரசர்** ''இவ்வளவு நெடுங்காலமாக இறைவனை மறந்திருந்த தீவினையாளனாகிய எளியேனால் இத்தகைய பெருவாழ்வு அடைவதற்குரியதோ?'' என வியப்புறுகின்றார். கயிலை மலை அண்ணலின் பேராற்றலை உணராமல் அம் மலையை எடுத்த இராவணனின் பெரும் பிழையைத் திருவுள்ளம் கொள்ளாமல் அவனுக்கு

49. பெரி.புரா. திருநாவுக்கரசு புரா.72, 73

50. இறைவன் திருவருள் துன்பப்படுத்துவதிலும் வந்தடையும் என்பதற்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டு

நீண்டவாணாளையும் வாட்படையையும் வழங்கிய பெருமான் அல்லவா? இப்பெருமானின் பெருங்கருணைத் திறத்தை உணர்ந்து போற்றுவதனையே தமக்குரிய கடமையாகக் கொண்டு அதிகை வீரட்டானத்து இறைவனைத் துதித்துப் போற்றுகின்றார்.

(2) அரசன் ஆணையை மறுத்துப் பேசியது: சமணத் துறவிகள் வேந்தனின் தலைநகரை அடைந்து இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கோள்மூட்டுகின்றனர். ''மன்னர் பெருமானே, எங்கட்குத் தலைவராக இருந்த தருமசேனர் தமக்குச் சூலை நோய் வந்தது எனப் பொய் கூறிச் சைவராக நம் சமயத்தைத் துறந்தார்'' எனச் செப்புகின்றனர். இதனைச் செவிமடுத்த வேந்தன் மிக்க சினங்கொண்டு ''அத்தீயோனை இவன் கொண்டு வாருங்கள்'' என்று அமைச்சர்களிடம் பணிக்கின்றான்.

அரசனது ஆணையினை நிறைவேற்றத்துணிந்த அமைச்சர்கள் சேனை வீரர்களுடன் திருவதிகையை நோக்கி விரைகின்றனர். சிவனடியாரான **திருநாவுக்கரசரை** அடைந்து, ''பெரியீர், நும்மை அழைத்து வரும்படி எம்மை அரசன் ஏவினான்'' என்று உரைக் கின்றனர். இதனைக் கேட்ட நாவுக்கரசர்,

நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;
ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோ மல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை;
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்சே வடியிணையே குறுகி னோமே. (1)

என்ற முதற்பாடலையுடைய திருப்பதிகத்தைப் (6.98) பாடு கின்றார். அரசன் ஆணைக்கு இது மறுமாற்றமாக அமைவதால் இது **'மறுமாற்றத் திருத்தாண்டகம்'** என்னும் திருநாமத்துடன் வழங்குகின்றது.

மேலும் அந்த அமைச்சர்களை நோக்கி, ''நும்மை அனுப்பினவன் தொண்டை நாட்டை ஆளும் பல்லவ வேந்தன். அவனேயன்றி இந்த நாவலந்தீவு முழுவதையும் தன்னடிப் படுத்திய மன்னர் மன்னனே நும்மை என்பால் விடுத்தானாயினும் யாம் அவர்களைப் பொருளாக மதியோம்'' (6) என்றும் கூறுவார்.

(3) நீற்றறையினில் துன்புறா திருத்தல்: நாவுக்கரசரின் வீரமொழிகளைக் கேட்ட அமைச்சர்கள் அவருடைய திருவடிகளை வணங்கி நின்று ''பெருந்தகையீர் யாங்கள் உய்யுமாறு தாங்கள் எம்முடன் எழுந்தருளல் வேண்டும்'' என வேண்டிக் கொண்டனர். நாவுக்கரசரும் அவர்தம் வேண்டுகோட் கிணங்கி ''ஈண்டுவரும் வினைகட்கு எம்பிரான் உளன்'' என்னும் மன உறுதியுடையவராய் அமைச்சர்களுடன் செல்லுகின்றார். அமைச்சர்கள் தாம் திருநாவுக்கரசரை அழைத்து வந்த செய்தியைப் பல்லவ மன்னனுக்குத் தெரிவிக்க, அவனும் தன் அருகிலுள்ள சமணர்களை நோக்கி ''இவனுக்குரிய தண்டனை யாது?'' என வினவுகின்றான். இச்சமயம் சமணர்கள் ''இவரை நீற்றறையிலிடுதலே தக்கது'' எனப் பரிந்துரைக்கின்றனர். மதிகெட்ட மன்னனும் அவ்வாறே ஆணையிடுகின்றான். அவர்களும் நாவுக்கரசரை வெம்மைமிக்க நீற்றறையிலிட்டுத் தாளிட்டுப் பூட்டுகின்றனர். நீற்றரையில் புக்க நாவுக்கரசர் ''ஈண்டு வரும் துயருளவோ? ஈசன் அடியார்க்கு?'' என்று சிவபெருமானைத் தம் மனத்திலிருத்தித் தியானித்து வழிபடுகின்றார். ஆனால் வெம்மைமிக்க அந்நீற்றறை இளவேனிற் காலத்துத் தென்றல் போலவும், தண்கழுநீர்த் தடம் போலவும், யாழ் ஒலியின் இனிமை போலவும், இறைவன் திருவடி நிழலாகிய அருளின் நீர்மையுடையது போலவும் பேரின்பம் தருவதாய் அமைந்து விடுகின்றது. நாவுக்கரசர் நீற்றறையினுள்ளே பிறை சூடிய பிஞ்ஞகனை நினைந்த வண்ணம் அவனுடைய திருவடி நிழலென இன்புற்றிருந்தபொழுது,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. (1)

என்று தொடங்கும் திருக்குறுந்தொகைப் பதிகத்தை (அப்.தே.5.90) அடிகள் அருளினர் என்று பெரியோர் பணிப்பர். ஆனால் இது தனிக்குறுந்தாண்டகமாகத் தொகுப்பில் காணப் பெறுகின்றது.

ஏழு நாட்கள் சென்ற பின்னர் பல்லவ மன்னன் சமணர்களை அழைத்து ''நீற்றறையைத் திறந்து பாருங்கள்'' என்று பணிக்க, அவர்களும் அதனைத் திறந்து பார்க்கின்றனர். என்ன அதிசயம்! திருநாவுக்கரசர் யாதொரு துன்பமுமின்றி இனிதிருத்தலைக் கண்டு வியப்புறுகின்றனர். அவர் இருந்த நிலையைச் சேக்கிழார் பெருமான்,

> **ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி அம்பலவன்**
> **தேனுந்து மலர்ப் பாதத் தமுதுண்டு தெளிவெய்தி**
> **ஊனந்தான் இலராகி உவந்திருந்தார்.**[51]

என்று காட்டுவர்

(4) நஞ்சும் அமுதமாதல்: நாவுக்கரசருக்கு யாதொரு இடர்ப்பாடும் நேரிடாததைக் கண்ட சமணர்கள் அரசனிடம் சென்று, ''மன்னா, அவன் முன்னர் நம் சமயத்திலிருந்து பெற்ற மந்திர வலியாலே, வேவாமல் பிழைத்திருக்கின்றான். இனி அவனுக்கு நஞ்சூட்டுவதே தகும்'' என்று கூறுகின்றனர். மன்னனும் ''அவ்வாறே செய்யுங்கள்'' எனப் பச்சைக் கொடி காட்ட, சமணர்கள் வஞ்சனையால் நஞ்சு கலந்த பாலடிசிலை அமுது செய்யப் பண்ணுகின்றனர். இறைவனது ஐந்தெழுத்து மந்திரத்தை இரவும் பகலும் மறவாது ஓதும் மாண்புடைய நாவரசர் சமணர் களின் வஞ்சனையைத் தெரிந்து கொண்ட நிலையிலும் ''நாதன் அடியார்க்கு நஞ்சும் அமுதாம்'' என்று சொல்லிய வண்ணம், நஞ்சு கலந்த பாலடிசிலை அமுது செய்து, யாதொரு தீங்குமின்றி இனிதே இருக்கின்றார்.

நாவுக்கரசர் இவ்வாறு இருந்த நிலையைச் சேக்கிழார் பெருமானும் வியந்து போற்றுகின்றார்.

---

51. பெரிய புராணம். திருநாவு.புராணம் - 101

பொடியார்க்கும் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்கும் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம் ஆவதுதான் அற்புதமோ?[52]

என்பது அவர்தம் திருவாக்கு. நாவுக்கரசரும் நஞ்சினையும் விரும்பி உண்ணத் தக்க நல்லமிழ்தமாக மாற்றியருளிய இறைவனது அருட்டிறத்தை,

துஞ்சிருள் காலை மாலை
 தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதி நாளும்
 அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனை பாற்சோ றாக்கி
 வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார்
 நனிபள்ளி அடிய னாரே.[53]

எனவரும் **திருநேரிசையில்** தெளிவாகக் குறிப்பிட்டுப் போற்றியுள்ளமையைக் கண்டு மகிழலாம்.

(5) மதயானையின் இடரினின்றும் உய்தல்: நஞ்சினை உண்டு சாகாமல் பிழைத்திருந்த நாவுக்கரசரைக் கண்ட நஞ்சினும் கொடிய சமணர்கள், ''வெவ்விடமும் இவனுக்கு அமுதாயிற்று. இனி, இவன் பிழைப்பானாகில் நமக்கு விநாசமே'' என்று நடுக்கமுறுகின்றனர். அரசனிடம் சென்று, ''வேந்தர் பெருமானே, நாம் நஞ்சு கலந்த உணவை உண்பிக்கவும், நமது சமயத்தில் கற்றுக் கொண்ட மந்திர வன்மையால் நஞ்சு தன்னைக் கொல்லாத படிக் காத்துக் கொண்டான். அவன் மரிக்காதிருப்பானேயாகில் எம்முடைய உயிரும் நும்முடைய ஆட்சியும் அழிவது திண்ணம்''

52. பெரி.புரா. திருநாவுக்.புரா - 105

53. நாவுக். தேவா. 4.70:3

என முறையிடுகின்றனர். இவர்தம் சொற்கேட்டு மதி கெட்ட மன்னனும் ''செற்றவனை இனிக் கடியும் திறம் எவ்வாறு?'' என வினவுகின்றான். ''நுமது பட்டத்து யானையைக் கட்டவிழ்த்து அவனுக்கெதிரே விடுவதே செய்யத் தகுந்தது'' எனச் செப்புகின்றனர் அமணர்கள். அரசனும் அவ்வாறே செய்யப் பணிக்கின்றான். யானையும் கட்டவிழ்த்து விடப் பெறுகின்றது. அஃது ஒரு குன்றம் புறப்படுவதுபோல் திருநாவுக்கரசரை நோக்கி வருகின்றது. அவரோ தம்மை நோக்கிக் கடகளிறு வரக் கண்டும் சிறிதும் அஞ்சாது சிவபெருமானைத் தியானித்துப் பணிந்த வண்ணம் யானையை நோக்கி ''நாம் இறைவனுடைய அடியார்கள். யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டியதில்லை. இனி யாம் அஞ்சும்படி வருவதாகிய இடையூறு எதுவும் இல்லை'' என அறிவுறுத்தும் கருத்துடன் **''சுண்ணவெண் சந்தனச் சாந்து''** (அப்.தே. 4.2) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையைப் பாடுகின்றார்.

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்
வலமே திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நான்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை. (5)

என்பது இப்பதிகத்தின் **ஐந்தாவது பாடல்.** ஒவ்வொரு திருப்பாடலின் இறுதியிலும் ''கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம், அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை'' என்ற அடிகள் திரும்பத் திரும்ப வருமாறு பாடுகின்றார். அங்கு வந்த அந்தக் கொடுமதக் களிறு அன்புறுவாகிய நாவுக்கரசரை வலம் செய்து அவர்க்கெதிரே நிலத்தில் தாழ்ந்து இறைஞ்சி அவ்விடத்தை விட்டு அகன்று போகின்றது.

இங்ஙனம் சமணர்களால் ஏவப் பெற்றுத் தம்மைக் கொல்ல வந்த அந்த மதக் களிறு இறைவனருளால் தம்மைக் கொல்லாது

மீண்ட அநுபவத்தைப் பின்னொரு காலத்து நினைந்து பார்க் கின்றார் நாவுக்கரசர். மக்களனைவரும் இறைவன் திருவருளைத் துணையென நம்பி எத்தகைய இடையூறுகள் நேரிடினும் மனங் கலங்காது அச்சமின்றி வாழ்தல் வேண்டும் என்று உலக மக்களுக்கு அறிவுறுத்துவாராய், ''மக்களே, நும்மீது மலையே வந்து வீழ்ந்தாலும் நீங்கள் சிறிதும் கலங்காமல் நின்ற நிலையில் இருப்பீராக. சிவன் தமரை மதக்களிறும் கொன்றிட வல்லதோ? (கொன்றிட வல்லதன்று) எனத் தம் அநுபவ வாயிலாக வந்த உண்மையினை,

மலையே வந்து வீழினும் மனிதர்காள்!
சிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு நிற்குமே. *(5:91:5)*

என வரும் திருப்பாடலில் காட்டியிருப்பதைக் கண்டு மகிழலாம்.

நாவுக்கரசரை நலியாமல் வணங்கி வந்த பட்டத்து யானை யைப் பாகர்கள் மீண்டும் அங்குசத்தால் குத்தி அவர்மீது செலுத்து கின்றனர். அப்பொழுது அந்த யானை பாகர்களைக் கொன்று வீழ்த்தியும், ஏவுவதற்குக் காரணர்களாக இருந்த சமணர்கள்மீது பாய்ந்து அவர்களில் சிலரை மிதித்து வருத்தியும், நகர மக்கள் யாவருக்கும் தீராத கவலையை உண்டாக்கி விடுகின்றது.

(6) கல்லொடு கட்டிக் கடலில் பாய்ச்சியவர் தப்பியது: யானையின் செயலுக்குத் தப்பியோடிப் பிழைத்த சமணர்கள் மன்னனை நாடிச் சென்று ''வேந்தர் பெருமானே, தருமசேனன் நம் சமயத்திலிருந்து கற்றுக் கொண்ட மந்திர ஆற்றலால் நாம் ஏவிய யானையைக் கொண்டே நம் வலியைக் கெட்டொழித்து நுமது புகழுக்கும் இழிவினைத் தேடினான்'' எனப் புலம்புகின் றனர். அரசன் சினமுற்று, ''இனி அவனுக்குச் செய்தற்குரிய தண்டனையைச் செப்புமின்'' என்று அவர்களைக் கேட்கின்றான்.

இது கேட்ட சமணர்கள் ''அவனைக் கல்லொடு சேர்த்துக் கயிற்றினால் பிணித்துக் கடலில் தள்ளுக'' என்று கூறுகின்றனர். அரசனும் அவ்வாறே ஆணையிடுகின்றான்.[54]

கொலைத் தொழிலாளர்கள் அரசனது ஆணையை மேற்கொண்டு சமணர்கள் தம்மொடு வர திருநாவுக்கரசரை அழைத்துச் சென்று கல்லொடு பிணித்துக் கடலிலேற்றிக் கடல் நடுவே தள்ளி விட்டுத் திரும்புகின்றனர். ஏவலாளர் சென்ற பின்னர் மெய்த் தொண்டராகிய திருநாவுக்கரசர் ''எப்பரிசாயினும் ஏத்துவன் எந்தையை'' என்று கூறி ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுகின்றார்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. *(1)*

எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் (4.11) பாடிப் போற்றுகின்றார். இத்திருப்பதிகத்தைப் பாடிப் போற்றிய பொழுது அவரோடு பிணிக்கப் பெற்றுக் கடலில் தள்ளப் பெற்றக் கருங்கல் கடல்மீது தெப்பம் போல் மிதக்கின்றது. கல்லில் கட்டப் பெற்ற கயிறும் அறுந்தொழிகின்றது. நாவுக்கரசர் பெருமான் அக்கல்லின் மீது மிதக்கின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலின்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?[55]

என்று உளமுருகிப் போற்றுகின்றார்.

---

54. குற்றங்களைச் சுமத்துபவர்கள் இக்காலத்து ஆளுங் கட்சிப் பிரமுகர்கள் போல் செயற்படுகின்றனர்.

55. பெரி.புரா. திருநாவுக்.புரா-129

கடல் தெய்வமாகிய வருணன் அலைகளாகின்ற கைகளால் கல்லே சிவிகையாக வாகீசரைத் தாங்கிக் கொண்டு **திருப்பாதிரிப் புலியூரின்**[56] அருகே கொண்டு வந்து சேர்க்கின்றான். இதனைச் சேக்கிழார் பெருமான்,

அத்திருப் பதியினில் அணைந்த அன்பரை
மெய்த்தவக் குழாமெலாம் மேவி ஆர்த்தெழ
எத்திசை யினும்'அர' என்னும் ஓசை போல்
தத்துநீர்ப் பெருங்கடல் தானும் ஆர்த்ததே.[57]

என்று காட்டும் முறையில் ''இயற்கையே இத்தெய்வ நிகழ்ச்சியில் பங்கு கொள்கின்றது'' என்று குறிப்பிட்டு மகிழ்வர்.

(7) சூலக்குறி இடபக்குறி பொறிக்கப் பெறுதல்: திருவதிகையில் வீரட்டானத்திறைவர்க்குத் தொண்டு புரிந்திருந்த நாவுக்கரசர் சிவபெருமான் எழுந்தருளிய தலங்கள் பலவற்றையும் சேவித்துக் கொண்டு **திருப்பெண்ணாகடத்தை**[58] அடைகின்றார்.

---

56. **திருப்பாதிப் புலியூர்:** கடலூர் இருப்பூர்த்தி நிலையத்திலிருந்து 1/4 கல் தொலைவு. கடற்கரைத் தலம். கெடில நதியின் தென்கரையிலுள்ளது. புலிக்கால் முனிவர் பாதிரிமரத்தின் கீழிருந்து சிவலிங்கத்தைப் பூசித்தமையால் பாதிரிப்புலியூர் என்பது. பழங்காலத்தில் இதன் பெயர் பாடலிபுரம் என்பது. வைணவத் திருத்தலங்களைச் சேவிக்கும் திட்டதில் திருஅயிந்திபுரம் சேவிக்க வந்த பொழுது (1965 என்பதாக நினைவு) இந்த நூலாசிரியர் இதனையும் சேவித்து மகிழ்ந்தார்.

57. மேலது - மேலது - 132.

58. **பெண்ணாகடம்** : விழுப்புரம் - திருச்சி இருப்பூர்தி வழியில் விருத்தாசல நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவு. தலப் பெயர் சுருக்கமாக கடந்தை என்றும் ஆலயப் பெயர் தூங்கானை மாடம் என்றும் வழங்கும். அப்பர் சுவாமிகள் தம்மைச் சிவன் சொத்து என்று உலகம் அறிய சூலக்குறி, இடபக் குறி இரண்டையும் தமது தூல உடலில் பொறித்துக் கொண்ட தலம் 'அச்சுதக் களப்பாளர்' என்ற வேளாளர். திருவெண்காட்டு முக்குள விநாயகரை வழிபட்டு 'மெய்கண்டார்' என்ற புதல்வரைப் பெற்ற தலம். (சிவஞான போதம் அருளியவர் மெய்கண்டார்)

ஆங்குள்ள தூங்கானைமாடம் என்ற திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வழிபட்டுச் சூலம் இடபம் என்ற குறிகளைத் தம் உடலில் பொறிக்குமாறு வேண்டுகின்றார்.

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்
டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென்
மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க்கொழுந்தே.[59]

கடவுந் திகிரி கடவா
தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத்
தாய்பனி மால்வரைபோல்
இடவம் பொறித்தென்னை யேன்றுகொள்
ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுள் தூங்கானை
மாடத்தெந் தத்துவனே.[60]

எனவரும் திருவிருத்தமாகிய திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார். அப்பொழுது இறைவனருளால் ஒரு சிவபூதம் பக்கத்திலுள்ளார் யாரும் அறியாதபடி அங்குத் தோன்றி **ஆளுடைய அரசர்** திருத்தோள்களில் மூவிலைச் சூலமாகிய இலச்சினையை இடப இலச்சினையுடன் பொறித்துச் சென்றது. அதனையுணர்ந்த நாவுக்கரசர் பெருமான் மனமகிழ்ந்து சிவபெருமான் திருவருளை நினைந்து கண்ணீர் சொரிய நிலமிசை வீழ்ந்தெழுந்து ஆர்வம் பெருக **'உய்ந்தேன்'** என மொழிந்து இறைவன் திருவடிகளைப் பரவி இன்புற்றார்.

---

59. அப்பர் தேவா. 4.109:1

60. மேலது 4.109:10 - இப்பதிகத்தின், 3-8 பாடல்கள் காணப் பெறவில்லை.

(8) திருவடி சூட்டப் பெறுதல்: தில்லைச் சிற்றம்பலவனைப் போற்றி மகிழ்ந்த நிலையில் சம்பந்தர் பெருமையைக் கேள்வி யுறுகின்றார் சொல் வேந்தர். உடனே திருநாரையூர் சென்று இறைவனைப் போற்றிய பின்னர் சீகாழி வந்தடைந்து சில நாட்கள் ஆளுடைய பிள்ளையாருடன் அளவளாவி மகிழ்கின்றார். அங்கிருந்து பல தலங்களை வழிபட்டுக் கொண்டு சத்தி முற்றத்தை அடைகின்றார். அங்கு சிவக்கொழுந்தீசனை இறைஞ்சி நின்று 'அடியேன் சிவப்பேறு அடைவதற்கு முன்னர் நின்னுடைய அழகிய திருவடிகளை என் தலை மேல் சூட்டியருள்க' என வேண்டும் முறையில்,

கோவாய் முடுகி யடுதிறற்
கூற்றம் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேல்
பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண்டாய்
முழங்குந் தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்
துறையும் சிவக்கொழுந்தே.[61]

என முதற் பாடலாகத் தொடங்கும் திருப்பதிகத்தைப் (4.96) பாடிப் போற்றினர். இவ்வேண்டுகோளைச் செவிமடுத்த சிவபெருமான் நாவுக்கரசரை நோக்கி **'நல்லூருக்கு வா'** என்று பணித்தருளி னார். அந்த அருள்மொழி கேட்டு அகமகிழ்ந்த அப்பரடிகள் சத்திமுற்றத்து சிவக்கொழுந்தீசரை வணங்கி திருநல்லூரை அடைகின்றார். அப்பொழுது சிவபெருமான் **'உன்னுடைய நினைப்பதனை முடிக்கிறோம்'** என சொல்வேந்தருக்கு உணர்த்தி அவர்தம் சென்னிமிசைத் தம் திருப்பாத மலர் சூட்டியருளினார்.

61. அப்.தேவா. 4.96:1

சொல் வேந்தரும் தமக்கு அருள் புரிந்த இறைவனது பெருங் கருணைத் திறத்தை வியந்து,

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

என வரும் '**திருத்தாண்டக மாலை**' (6.14:1) பாடிப் பரவிப் போற்றினார். இத்திருப்பதிகத்தில் அமைந்த பாடல்களின் இறுதி தோறும் '**திருவடியென தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே**' என்ற அடிகளால் இந்த அற்புத நிகழ்ச்சியை நினைந்துருகிப் போற்றியுள்ளமையைக் கண்டு மகிழலாம்.

(9) விடந்தீர்த்தல்: நல்லூரில் சிவபெருமானால் திருவடி சூடப் பெற்ற நாவுக்கரசர் சில நாட்கள் அத்திருத்தலத்தில் தங்கி யிருக்கிறார்; பின்னர் பல தலங்களைச் சேவித்துக் கொண்டு **திங்களூர்**[62] வழியாகச் செல்லுகின்றார். தண்ணீர் பந்தல் ஒன்று அவர் கண்ணில் படுகின்றது; 'திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல்' என்ற பெயர் அதன்கண் காணப்பெறுகின்றது. இன்னும் பல இடங்களில் '**திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல்**' என்ற பெயர் காணப்பெறுகின்றது. உசாவி அறிந்ததில் திருநாவுக்கரசர் பெயரில் **அப்பூதியடிகள்** என்ற அந்தணச் செம்மல் பல அறங்களைச் செய்து வருகின்றார் என்பதை அறிகின்றார். அவர் இருப் பிடத்தை உசாவி

62. திங்களூர் - அப்பூதியடிகள் வாழும் ஊர்.

அறிந்துகொண்டு அவர்தம் இல்லத்திற்கு வருகின்றார். சிவனடி யார் ஒருவர் வருகையை அறிந்த அப்பூதியடிகள் அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ''என்ன மாதவம் செய்ததோ இச்சிறுகுடில்? அருளுருவாய தாங்கள் அடியேன் குடிலுக்கு எழுந்தருளியது என் முன்னைத் தவப் பயனே'' என மகிழ்ந்து உரைக்கின்றார். ''நாம் திருப்பழனத்திறைவனை வணங்கி வழி பட்டு வரும் பொழுது வழியிலே நீர் நிறுவியுள்ள தண்ணீர்ப் பந்தரைக் கண்டும், பிற அறங்களைப் பற்றி நல்லோர் பலர் மூலம் கேள்வியுற்றும் நும்மைக் காணும் விருப்பத்தால் இவண் போந்தோம்'' எனக் கூறுகின்றார்.

சிறிதுநேரம் உரையாடியபிறகு நாவுக்கரசர், ''சிவனடியார் கள் பொருட்டு நீர் செய்து வரும் அறங்களில் நும் பெயரை எழுதாது வேறொருவர் பெயரை எழுதியதற்குக் காரணம் யாது? அதனைக் கூறுவீராக'' என்று அப்பூதியடிகளை வினவுகின்றார். இவ்வுரை கேட்டு நிறையழிந்த சிந்தையராகின்றார் அப்பூதியடிகள். தம்முன் நிற்கும் சிவனடியாரை நோக்கி, ''நீர் நன்மொழிகளை அருளிச் செய்திலீர். பழி பாவங்கட்கு நாணாத சமணப் பாதகர்கள் செய்த சூழ்ச்சிகளையெல்லாம் தம் திருத் தொண்டின் உறைப் பாலே வென்றருளிய மெய்த்தொண்டராகிய திருநாவுக்கரசரின் திருப்பெயரோ **வேறொருவர்** பெயர்? நம்மை ஆளாகவுடைய சிவபெருமானுடைய திருவடிக்கு விரும்பிப் புரியும் திருத் தொண்டினாலே இப்பிறப்பிலேயே இடர்களை யெல்லாம் வென்று உய்யலாம் என்னும் பேருண்மையை அடியேனைப் போன்ற எளியோர்களும் தெளிந்து உய்யும் வண்ணம் சிவத் தொண்டு புரிந்த திருநாவுக்கரசரது பெயரை அடியேன் எழுத நீர் இக்கொடுமொழியை அடியேன் கேட்கும்படி கூறினீர். பொங்கி எழும் கடுங் கடலிலே கல்லையே தெப்பமாகக் கொண்டு கரை யேறிய அவருடைய பெருமையை அறியாதார் யாருளர்?

மங்கலமாம் திருவேடத்துடன் இம்மொழிய பேசிய நீர் எங்குறைவீர்? நீர்தாம் யார்? இயம்புவீர்!'' என்று வெகுண்டு உரைக் கின்றார்.

இங்ஙனம் அந்தணச் செம்மல் சினமுற்று மொழிந்ததைக் கேட்டு அவரது அன்பின் திறத்தை அறிந்த நாவுக்கரசர் ''புறச் சமயத்தினின்று மீளும் பொருட்டு இறைவன் சூலை நோயினைத் தந்து ஆட்கொள்ள அடைந்து உய்ந்து தெளிந்த உணர்வற்ற சிறுமையேன் அடியேன்'' என்று மறுமொழி தருகின்றார். இவ்வுரை கேட்ட அப்பூதியடிகள் தம்முடைய குல தெய்வமாகிய திருநாவுக்கரசரே இங்கு எழுந்தருளியுள்ளார் எனத் தெளிகின் றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

அரசரிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொழியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரணகம லம்பூண்டார்.[63]

என்று அற்புதமாகக் காட்டுவார். மனைவி மக்கள் முதலிய சுற்றத் தாருடன் திருநாவுக்கரசரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கு கின்றார்.[64] தம் இல்லத்தில் திருவமுது செய்தருள வேண்டும் என்று வேண்டுகின்றார். அப்பர் பெருமானும் அந்தணச் செம்மலின் பேரன்புக்கு இசைந்தருளினார்.

அப்பூதியடிகள் விரும்பிய வண்ணம் அறுசுவை உண்டி தயாராகின்றது. திருவமுது செய்து வைக்க தோட்டத்திற்கு வாழைக்குருத்து அரிந்து வரச் சென்ற **மூத்த திருநாவுக்கரசை** குருத்தின் அடியிலிருந்த அரவு தீண்டி விடுகின்றது. விரைந்தோடி

---

63. பெரி.புரா. அப்பூதியடிகள் - 17

64. மேலது - 20

வீட்டில் குருத்தைச் சேர்த்தபிறகு சிறுவன் இறந்துபடுகின்றான். மகன் நிலையை நோக்கிய பெற்றோர்கள் பெரிதும் கலக்க மடைந்து மரித்த செய்தி புலனாகாதபடி புதல்வன் உடலைப் பாயினுள் மறைத்து வைக்கின்றனர்.

நாவுக்கரசர் அமுது கொள்ள எழுந்தருள்கின்றார். அனை வர்க்கும் திருநீறு அளிக்கும்போது மூத்த திருநாவுக்கரசைக் காணவில்லை. ''அவனை அழையும்'' என்று அரசர் சொல்ல, ''இப்போது இங்கு அவன் உதவான்'' என்று கூறுகிறார் அப்பூதியார். இதனைச் செவிமடுத்த நாவுக்கரசரின் செவ்விய திருவுள்ளத்தில் ஒருவித தடுமாற்றம் உண்டாகின்றது. அப்பூதியாரை நோக்கி, ''என்னுள்ளம் இவ்வுரை கேடகப் பொறாது; ஏதோ வேண்டாதது நிகழ்ந்துள்ளது, நிகழ்ந்ததை மறைக்காது நேர்மையுடன் உரைப்பீ ராக'' என்று பணிக்கின்றார். அந்தணச் செம்மல் மிகவும் நடுக்க முற்று, தன் மைந்தனுக்கு நேர்ந்த துயர் நிலையைத் தெரிவிக் கின்றார்.

இத்துயரச் செய்தியை உணர்ந்த நாவுக்கரசர், ''நீர் செய்தது மிக நன்றாயுளது! இவ்வாறு வேறு யார் செய்வார்?'' என்று கூறி எழுந்து சென்று உயிர் நீத்த மூத்த திருநாவுக்கரசரின் உடலைத் திருக் கோயிலுக்குமுன் கொணரச் செய்து அந்த உடலை நோக்கிச் சிவபெருமான் அருள் புரியும் வண்ணம் **''ஒன்று கொலாமவர்''** (4.18) என்ற முதற்குறிப்பினையுடைய செந்தமிழ்த் திருப்பதிகம் பாடுகின்றார்.

ஒன்று கொலாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்று கொலாமுய ரும்மதி சூடுவர்
ஒன்று கொலாமிடு வெண்டளை கையது
ஒன்று கொலாமவர் ஊர்வது தானே (1)

என்பது **முதற்**பாடல். அருளுருவாகிய சிவபெருமானின் மேனிக்கண் அமைந்த அளப்பரிய தோற்றங்களை **ஒன்று** முதல் **பத்து** ஈறாக வைத்து எண்ணும் நிலையில் பத்துப் பாடல்களைப்

பாடியருள்கிறார். அப்போது உயிர் துறந்த மூத்த மூத்த திருநாவுக்கரசு உறக்கம் நீங்கி எழுபவனைப் போன்று உயிர் பெற்றெழுகின்றான். எழுந்தவன் நாவுக்கரசரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கு கின்றான். சொல் வேந்தரும் அவனுக்கு திருநீற்றமுது வழங்கி யருள்கின்றார். இந்தத் திருப்பதிகமும் **"விடந்தீர்த்த திருப்பதிகம்"** என்று வழங்குகின்றது. இது பொதுப் பதிகம்.

அப்பூதியடிகளும் அவர்தம் இல்லத்தரசியாரும் மைந்தன் உயிர் பெற்றெழுந்தமை கண்டும் மகிழ்ச்சியுறாது அப்பர் பெருமான் அமுது செய்தருளக் காலந்தாழ்ந்ததே எனச் சிந்தை நோகின்றனர். அவர்தம் மனக் கருத்தறிந்து சொல் வேந்தர் அமுது செய்தருள அவரது இல்லத்திற்கு எழுந்தருள்கின்றார். இதனால் மகிழ்ச்சி யுற்ற அப்பூதியடிகள் நாவுக்கரசர் பெருமானுக்கு திருந்திய வாச நன்னீர் ஈந்து திருவமுது செய்தருளுமாறு வேண்டுகின்றார். அப்பொழுது அப்பர் பெருமான் ''புதல்வர்களும் நீரும் இங்கு என்னுடன் இருந்து அமுது செய்வீர்களாக'' எனப் பணித்தருள, அவ் வண்ணமே அப்பூதியடிகளும் அவர்களுடைய புதல்வர் களும் அப்புர் அடிகளின் இருமருங்கும் அமர எல்லோரும் சேர்ந்து அமுது செய்து மகிழ்கின்றனர்.

(10) மறைக்கதவம் திறத்தல்: சொல் வேந்தரும் காழி வேந்தரும் திருப் பேரெயில் ஈசனிடம் விடை பெற்றுக் கொண்டு **மறைக்காட்டுக்கு**[65] எழுந்தருள்கின்றனர். திருக் கோயிலை வலம் வந்து பண்டைநாளில் வேதங்களால் இறைவனை வழிபட்டு அடைத்த திருக்கதவு அமைந்த திருக்கோயிலுக்கு வருகின்றனர்.

---

65. **மறைக்காடு** (வேதாரண்யம்): திருத்துறைப் பூண்டி - கோடிக்கரை இருப்பூர் திவழியிலுள்ள வேதாரண்யம் என்ற நிலையத்திலிருந்து 1/2 கல் தொலைவு. வேதங்கள் பூசித்து மூடி விட்டுச் சென்றிருந்த கதவுகளைப் பதிகம் பாடி அப்பர் திறக்கவும் சம்பந்தர் மூடவும் செய்த அற்புதத்தலம். தமிழ் மொழியி லுள்ள தேவாரம் வடமொழி வேதத்திற்குத் தாழ்ந்ததல்ல என்பதைக் கட்புல னாக உலகுக்கு அறிவித்த அற்புதத் தலம்.

முன்னாளில் மறைகளால் அமைக்கப்பெற்ற திருக்கதவு மறைகளில் வல்ல அன்பர் ஒருவரும் வாராமையால் நெடுநாள் திறக்கப் பெறாதிருந்தது. அதனால் அவ்வூர்ப் பெருமக்கள் வேறொரு வாயில் அமைத்து வேதவனப் பெருமானை வழிபட்டு வரலாயினர். இச் செய்தியை அறிந்த காழிப் பிள்ளையார் நாவுக்கரசரை நோக்கி ''அப்பரே, நாம் எப்படியும் நேர் முகமாகவுள்ள திருவாயிலின் வழியே சென்று மறைக்காட்டிறைவரை வழிபட வேண்டும். ஆதலால் இத் திருக்கதவு திறக்கும்படி பதிகம் பாடுவீராக'' என்று வேண்ட அன்புப் பிள்ளையாரின் விருப்பத் திற் கிசைந்து சொல்வேந்தரும் **''பண்ணினேர் மொழியாளுமை''** (5.10) என்ற திருக்குறுந் தொகைப் பதிகத்தைப் பாடிப் பரவுகின்றார்.

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே (1)

என்ற முதற்பாடலைப் பாடியவுடன் தமிழ்ப்பாடல்களின் சுவை நலங்களைத் துய்ய விரும்பிய மறைக்காட்டீசர், திருக்கதவின் திருக்காப்பு நீக்கக் காலந்தாழ்த்துகின்றார். திருநாவுக்கரசரும் பதிகம் முழுவதும் பாடி முடிக்கும் நிலையில் தம் வேண்டு கோட்கிணங்கி இறைவன் திருக்கதவு திறந்தருளாமை கண்டு வருத்தமுறுகின்றார். இந்நிலையில் இராவணனை விரலால் அடர்த்திட்ட நீவிர் ஒருசிறிதும் இரக்கமுடையவர் அல்லீர்'' என இறைவனை நோக்கிப் பிணங்கிப் பேசும் முறையில்,

அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றி லீர்எம் பெருமானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே (11)

என்ற இறுதிப் பாடல் அமைகின்றது. இந்நிலையில் பன்னெடு நாட்களாக அமைக்கப் பெற்றிருந்த திருக்கதவு இறைவனருளால் திறக்கப் பெறுகின்றது.

அப்பொழுது பிள்ளையாரும் அரசரும் நிலமிசை வீழ்ந் திறைஞ்சி நேர்முக வாயில் வழியே திருக்கோயிலுட் புகுந்து மறைக்காட்டீசரை வணங்கி வண்தமிழ் மாலைகள் பாடிப் போற்று கின்றனர். அப்பொழுது நாவுக்கரசர் காழிப் பிள்ளையாரை நோக்கி, ''இறைவன் திருவருளால் இத் திருக்கதவு நாடோறும் திறக்கவும் அடைக்கவும் பெறும் நிலையில் இந்நிறைக்கதவம் அடைத்திடும்படி பாடியருள்க'' என வேண்ட, பிள்ளையாரும் ''**சதுரம் மறை**'' (சம்பந்.தே. 2.37) என்பதை முதற்குறிப்பாகக் கொண்ட பதிகத்தின்,

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க வெனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே (1)

என்ற முதற் பாடலைப் பாடியவுடன் இறையருளால் திருக்கதவம் விரைவில் அடைக்கப்பெறுகின்றது. அதுகண்டு இருவரும் பெரு மகிழ்ச்சி அடைந்து மறைக்காட்டீசரைப் போற்றுகின்றனர். பிள்ளையார் தாம் எடுத்த திருப்பதிகத்தின் ஏனைய திருப்பாடல்களையும் பாடித்திருக்கடைக்காப்புச் சாத்தியருள்கின்றார். அன்று முதல் அத்திருக்கத்வு திறத்தலும் சாத்தலுமான வழக்கத்தைப் பெறுகின்றது.

இந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்டு அடியார் கூட்டம் அடைந்த மகிழ்ச்சீயைச் சேக்கிழார் பெருமான்,

அங்கு நிகழ்ந்த அச்செயல்கண்
டடியார் எல்லாம் அதிசயித்துப்
பொங்கு புளகம் எய்திடமெய்
பொழியும் கண்ணீர் பரந்திழிய
எங்கும் நிகரொன் றில்லாத
இருவர் பாதம் இறைஞ்சினார்
நாங்கள் புகலிப் பெருந்தகையும்
அரசும் மடத்தில் நண்ணியபின்[66]

66. பெரி.புரா. திருநாவு.புரா. 274

என்று போற்றி மகிழ்வர். இவ்வாறு வேதகளால் வழிபடப் பெற்று அடைக்கப்பெற்ற திருக்கதவு அவ் வேதங்களில் வல்ல எவரும் வாராமையினால் நெடுங்காலம் திறக்கப் பெறாதிருந்து பின்பு நாவுக்கரசரின் திருவாய்மொழியால் திறக்கப் பெற்றதாகிய இந்த அற்புத நிகழ்ச்சி, பண்டை நான்மறைக்கும் தேவாரத் திருமுறை கட்கும் சிறிதும் வேற்றுமை இல்லை என்பதனைத் தெளிவாக வலியுறுத்தலைக் காண்கின்றோம். திருநாவுக்கரசரின் செந்தமிழ் மறைகளாகிய திருமுறைகளின் பெருமையினை,

மணியினை மாமறை காட்டு
மருந்தினை வன்மொழியால்
திணியன நீள்கதவம் திறப்பித்
தனதெண் கடலிற்
பிணியன கனமிதப் பித்தன்
சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர்
பிரான்தன் அருந்தமிழே.[67]

என்று நம்பியாண்டார் நம்பியும் விரித்துரைத்துப் போற்றுவர்.

(11) வாய் மூரடிகள் அருளிய காட்சி: திருமறைக்காட்டு ஈசரின் திருவருள் பெற்ற சண்பை வேந்தரும் சொல் வேந்தரும் திருமறைக்காட்டிலுள்ள திருமடம் ஒன்றில் அடியார்களுடன் வந்து அமர்கின்றனர். தாம் அரிதில் திறக்கப்பாடிய தன்மையும், காழிப் பிள்ளையார் விரைவில் அடைக்கப் பாடிய எளிமையும் நாவுக்கரசரைச் சிந்திக்க வைக்கின்றன. ''திருக்கதவு திறக்கத் தாழ்ந்ததன் காரணம் இறைவனது திருக்குறிப்பினை யான் உணராது அயர்ந்தமையே'' எனக் கவலையுற்ற மனத்தினராய் அத்திரு மடத்தில் ஒருபால் துயில் கொள்ளுகின்றார் 'வாய்மை திறும்பா வாகீசர்'.

---

67. திருத்தொண்டர் திருவந்தாதி - 20

திருமறைக்காட்டு மாமணியின் பாதங்களை மனத்திடையே வைத்து எண்ணித் துயிலுகையில் அம்மையப்பர் பொன் மேனியில் வெண்ணீறு பூசிய வேடத்தினராய் அவர் கனவில் தோன்றுகின்றார். தோன்றியவர், ''அன்பனே, வாய்மூரில் இருப்போம்; எம்மைத் தொடர்ந்து வருக'' என்று கூறி முன்னே செல்லுகின்றார். இந்நிலையில் மெய்யுணர்வு பெற்று விழித்தெழுகின்றார் நாவுக்கரசர். ''யான் இருக்கும் இடத்தில் என்னைத் தேடிக் கொண்டு வந்து தம்மைத் **திருவாய்மூர்த்**[68] தலைவர் என்ற அடையாளங்களுடன் சொல்லி **'அங்கேவா'** என்று சொல்லிப் போயினர். அஃதென்கொல்?'' என ஐயமுற்று,

எங்கே என்னை இருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார தென்கொலோ? *(5.50:1)*

மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி உன்னி உறங்குகின் றேனுக்கு
தன்னை வாய்மூர்த் தலைவனா மாசொல்லி
என்னை வாவென்று போனார தென்கொலோ? *(5.50:2)*

என்ற குறுந்தொகைப் பதிகம் பாடிக்கொண்டு ''இஃது எம்பெருமான் அருளாகில் யானும் ஏகுவேன்'' என எழுந்து செல்லத் தொடங்குகின்றார். இறைவனும் அப்பரடிகட்குக் கனவில் தோன்றிய திருக்கோலத்துடன் விரைந்து நடந்தருள்கின்றார். இங்ஙனமே நெடும் பொழுது விரைந்து நடந்தும் தமக்கு முன் செல்லும் வாய்மூர் அடிகளை அணுக முடியவில்லை. இந்நிலையில் இறைவன் அணிமையில் காட்சி நல்குபவர் போலப் பொன்

---

68. **வாய்மூர்** (திருவாய்மூர்): மயிலாடுதுறை - காரைக்குடி இருப்பூர்தி வழியில் திருநெல்லிக்காவல் என்ற நிலையத்திலிருந்து 8 கல் தொலைவு. அப்பருக்கு வருமாறு இறைவன் கட்டளையிட அவர் சென்று தரிசித்ததை 5.50:1, 2 என்றபாடல்கள் பகரும்.

மயமான திருக்கோயிலை எதிரே காட்டி அதனுள்ளே புகுந்து மறைந்தருள்கின்றார். நாவுக்கரசருக்கு இம்மறைவு மனக்கலக்கத்தை உண்டாக்குகின்றது.

இந்நிலையில் ஆளுடைய பிள்ளையார் அடியார்கள் மூலம் நாவுக்கரசர் திருவாய்மூருக்குச் சென்றதைக் கேள்வியுற்று அவனைப் பின் தொடர்கின்றார்; தம்பால் வைத்த பேரன்பினால் தம்மைத் தேடிவருகின்ற சம்பந்தப் பிள்ளையாரைச் சேய்மையில் காண்கின்றார் நாவுக்கரசர். பிள்ளையார் தம்மை அணுகிய நிலையில் ''இறைவனின் திருக்குறிப்பறியாது இக் கதவைத் திறக்கப் பாடிய என்னைக் காட்டிலும், செந்தமிழ்ப் பதிகத்தால் அடைப்பித்த ஞானசம்பந்தப் பிள்ளையார் இதோ வந்து நிற்கின்றார். எளியனேற்கே அல்லாது இப்பெருமானுக்கும் தம்மை மறைக்கும் வன்மையுடையவரோ வாய்மூரடிகள்?'' என வினவும் குறிப்புடன்,

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தா ருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே *(5.50:8)*

என்ற திருப்பாடலைப் பாடுகின்றார். வாய்மூர் இறைவனும் பிள்ளையார் காண நேரே தோன்றி ஆடல் காட்டி அருள் புரிகின்றார். அந்த அழகிய தெய்வக் காட்சியைக் கண்ட காழிப் பிள்ளையார் "**தளரிள வளரென வுமைபாட**" (சம்ப.2.111) என்ற திருப்பதிகத்தினைப் பாடிப் போற்றித் தாம் கண்ட தெய்வக் காட்சியினைத் தம் கெழுதகை நண்பர் ஆளுடைய அடிகட்கும் காட்டி மகிழ்கின்றார். இப்பதிகத்தின் முதற் பாடல்,

தளரிள வளரென வுமைபாடத்
தாளம் மிடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியா வரையார்த்
தாடும் வேடக் கிறிமையார்
விளரிள முலையவர்க் கருள்நல்கி
வெண்ணீ ரணிந்தோர் சென்னியின்மேல்

வளரிள மதியமொ டிவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே (1)

என்பது, இந்நிகழச்சியைச் சேக்கிழார் பெருமான்,

மாட நீடு திருப்புகலி
மன்னர் அவர்க்கு மாலயனும்
நேடி இன்னங் காணாதார்
நேரே காட்சி கொடுத்தருள
ஆடல் கண்டு பணிந்தேந்தி
அரசுங் காணக் காட்டுதலும்
'பாட அடியார்' என்றெடுத்துப்
பரமர் தம்மைப் பாடினார்.[69]

என்று கூறுவர். ''இப்பாடலில் 'அரசர் காணக் காட்டுதலும்' என்ற தொடரில் 'காட்டுதல்' என்கின்ற வினை இறைவனுக்குரியது. 'காணுதல்' இருவர்க்கும் பொதுவான தொழில். ஈண்டு இது போலப் பொருள் கொள்ளாமல் ஞானசம்பந்தர்க்கு நேரே காட்சி கொடுத்ததாகவும், பின்பு அவர் அப்பருக்குக் காட்டுவதாகவும் பொருள் கொள்ளுதல் சேக்கிழாரைச் சரியாகப் புரிந்து கொள்ளாததாக முடிந்து விடும்''[70]

வாய்மூர் அடிகள் தமக்கும் நேரே காட்டிய ஆடலைக் கண்டு மகிழும் அப்பர் பெருமான் **"பாட அடியார்"** (6.77) என்ற திருத் தாண்டகப் பதிகத்தில் தம் மகிழ்ச்சியைப் புலப்படுத்துகின்றார்.

பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர் கணங்கண்டேன்; மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்;
அங்கை அனல்கண்டேன்; கங்கை யானைக்

---

69. பெரி.புரா. திருநாவுக்.புரா. 281

70. **'அப்பர் பெருமான் - வாழ்வும் வாக்கும்'** பக் 442. (பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி வெளியீடு, மேலையூர் - 609107 (மே - 1980).

கோட லரவார் சடையிற் கண்டேன்;
கொக்கி னிதழ்கண்டேன்; கொன்றை கண்டேன்;
வாடல் தலையொன்று கையில் கண்டேன்;
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல். பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், **'வாய்மூ ரடிகளை நான் கண்ட வாறே'** என்று தாம் கண்ட தெய்வக் காட்சியை வியந்துரைத்துப் போற்றி மகிழ்தலை நாமும் கண்டு மகிழலாம். இங்கு **நான் கண்ட வாறே** என்பதால் 'பொய் யடையாத' அப்பர் பெருமானின் உள்ளம் புலப்படுகின்றது. திருஞானசம்பந்தர் காட்டவே தாம் கண்டிருப் பாரானால் **'காட்டக் கண்டேன்'** என்பது போலவே பாடியருளி யிருப்பார் என்பது ஈண்டு மேலும் சிந்திக்கத்தக்கது.

(12) உலவாக் கிழிபற்றிய குறிப்பு: பாண்டி நாட்டுத் திருத்தலப் பயணத்தில் மறைக்காட்டீசரை வழிபட்டபின் நாகைக் காரோணம் முதலிய பதிகளைப் பணிந்தேத்தி திருவீழிமிழலையை அடைகின்றார். விண்ணிழி விமானத்தில் வீற்றிருந்தருளும் பெரு மானைப் போற்றி திருவாவடுதுறை யணைந்து மாசிலாமணியீசர் மலரடிகளை வணங்கி,

மாயிரு ஞாலமெல்லாம் மலரடி
வணங்கும் போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை
வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமலவூரர்க் கம்போலும்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறையனாரே (4.56:1)

என் வரும் திருநேரிசை பாடிக் கழுமலப் பிள்ளையாராகிய ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஆயிரம் பொன் நிறைந்த **உலவாக் கழியினைக்** கொடுத்தருளிய அருட்செயலை நினைந்து உள்ளம் உருகிப் போற்றி மகிழ்கின்றார்.

(13) பொதிசோறு பெற்றுப் பசி தீர்தல்: காவிரியின் இருகரைகளிலும் திருக்கோயில் கொண்டிருக்கும் பெருமான் களை வழிபட எண்ணிய சொல்வேந்தர் பழையாறையிலிருந்து புறப்பட்டுத் திருஆனைக்கா, திருவெறும்பியூர், திருச்சிராப்பள்ளி, திருப்பராய்த் துறை ஆகிய தலங்களில் எழுந்தருளியிருக்கும் பெருமான்களைப் பணிந்து போற்றிப் **பைஞ்ஞிலியை**[71] வழிபடச் செல்லுகின்றார். வருகின்றவர் வழியில் பசியினாலும் நீர்வேட்கை யினாலும் மிகவும் இளைப்புறுகின்றார். அவரது பசி வருத்தத் தைப் போக்கத் திருவுள்ளங்கொண்ட கயிலை நாதன் வழியிலே ஒரு சோலையையும் குளத்தையும் உண்டாக்கி வழிப் பயணம் செய்யும் அந்தணராக வடிவம் கொண்டு கையில் பொதி சோறுடன் அங்குத் தங்கியிருக்கின்றார். நாவுக்கரசர் அவரை அணுகிய போது அந்தணர் அவரை நோக்கி, ''நீர் நீண்ட தூரம் வழி நடந்து வந்தமையால் மிகவும் சோர்வுற்றிருக்கின்றீர். யான் கொடுக்கும் பொதி சோற்றை உண்டு இங்குள்ள தடாகத்தில் தண்ணீர் பருகி இளைப்பாறிச் செல்வீர்'' என்கின்றார். மறையவர் கூறிய இன் னுரையைக் கேட்ட நாவுக்கரசர் 'இறைவன் திருவருள் இது போலும்!' எனக் கருதி அவர் தந்த பொதி சோற்றினை அருந்திப் பசி தீர்ந்து தண்ணீர் பருகித் தளர்வு நீங்கியிருக்கின்றார். அப்பொழுது அந்தண வடிவங் கொண்டு வந்த ஈசன் அப்பரை நோக்கி ''நீர் எங்கே ஏதுகின்றீர்?'' என வினவ, சொல் வேந்தரும் திருப் பைஞ்ஞீலிக்குப் போகின்றேன் என்கின்றார். அது கேட்ட அந்தணர் ''நானும் அங்கேதான் போகின்றேன்'' என்று கூறி இருவரும் திருப் பைஞ்ஞீலியை நோக்கி நடக்கின்றனர்.

திருப்பைஞ்ஞீலியை நெருங்கியவுடன் அந்தணர் மறைந் தருளுகின்றார். இது கண்டு வியப்புற்ற அப்பர் பெருமான் ''ஆடல் புரிந்த பெருமான் அடியேனைப் பொருளாகக் கொண்டு

---

71. **பைஞ்ஞீலி:** விருத்தாசலம் - திருச்சி இருப்பூர்தி வழியில் பிட்சாண்டார் கோயில் நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. அப்பர் சுவாமிகட்கு இறைவன் கட்டமுது தந்த அற்புதத் தலம்.

அருள்புரிந்த கருணைத்திறம் இதுவோ?'' என நெஞ்சம் நெக்குருகுகின்றார். கண்ணீர் சொரிகின்றார். நிலமிசை நீடு வீழ்ந்திறைஞ்சுகின்றார். திருக்கோயிலினுள் சென்று **'உடையார் கோவணம்'** (5.41) எனத் தொடங்கும் திருக்குறுந்தொகைப் பதிகம் பாடி மீண்டும் இறைவனை வழுத்துகின்றார்.

விழுது சூலத்தன் வெண்மழு வாட்படைக்
கழுது துஞ்சிருள் காட்டகத் தாடலான்
பழுதொன் றின்றிப்பைஞ் ஞிலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே (3)

என்பது இதன் **மூன்றாம்** பாடல். சில நாட்கள் இத்திருத் தலத்தி லேயே தங்கியிருந்து கைத் தொண்டு புரிந்து வருகின்றார்.

(14) கயிலாயத் திருப்பயணம்: கயிலைக் கோலம் காண விரும்பிய நாவுக்கரசர் **காளத்திப்**[72] பெருமானை வணங்கிப் போற்றித் தம் வடதிசைப் பயணத்தைத் தொடங்குகின்றார். மலை, காடு, ஆறு, நாடு முதலியவற்றைக் கடந்து **திருப்பருப்பதம்**[73]

---

72. **காளத்தி:** (ஸ்ரீ காள ஹஸ்தி): காட்டுப்பாடி - ரேணிகுண்டா - கூடூர் இருப் பூர்தி வழியில் உள்ளது; காளத்தி நிலையத்திலிருந்து ஒருகல் தொலைவு (திருப்பதியில் பணியாற்றிய பொழுது 1960 - 77) பலமுறை சேவிக்கும் பேறு பெற்றவன் அடியேன் சென்னையிலிருந்து திருப்பதி செல்லும் விரைவுப் பேருந்துகள் இவ்வூர் வழியாகச் செல்லுகின்றன. இவற்றில் செல்லுவதே எளிது. சிலந்தி - (=ஸ்ரீ), பாம்பு (= காளம்), யானை (= ஹஸ்தி) ஆகிய மூன்றும் வழிபட்டு முக்தி அடைந்த திருத்தலம். பஞ்சபூத தலங்களுள் இது வாயு தலம். சுயம்பு லிங்கம். கருவறையின் வாயிலில் கண்ணப்பர் காட்சி தருகின்றார் இங்கு சிவராத்திரி விழா புகழ் பெற்றது. தென் கயிலாயம்' எனக் கூறப் பெறும் தலங்களுள் இத்தலமும் ஒன்று.

73. **திருப்பருப்பதம்** (ஸ்ரீ சைலம்): சென்னை - குண்டக்கல் - இருப்பூர்தி வழியில் குண்டக்கல் மும்பை செல்ல வேண்டும். அங்கு வண்டி பெஜவாடா - நந்தியால் - குண்டக்கல் இருப்பூர்தி வழியில் நந்தியாலை அடைதல் வேண்டும். அங்கிருந்து காட்டுவழியாக 20 கல் மகிழ்வுந்து அல்லது மாட்டு வண்டியில் செல்ல வேண்டும். பெத்த செருவு என்ற ஏரிக் கரைசேர்ந்து

அடைகின்றார். அங்குள்ள பெருமானை **'கன்றினார்'** (4.58) என்ற திருப்பதிகத்தால் பருபதத்திறைவனை வழிபடுகின்றார். தெலுங்கு நாட்டில் பாடின பதிகம் இது.

பருப்பதத்தினின்றும் பயணம் செய்து கயிலையை மனத்தில் நிறுத்தி இருபக்கங்களிலும் அடியவர்கள் தொடர்ந்து வர தெலுங்கு நாட்டினைக் கடந்து கன்னட நாட்டினை அடைகின்றார். கன்னட நாட்டில் **கோகரணம்**[74] (கோகரண்) என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். ஒரு பதிகத்தால் கோகரணம் மன்னிய பெருமானை வழிபடுகின்றார். இப்பதிகம் **'சந்திரனும் தண்புனலும்'** (6.49) என்ற முதற்குறிப்புடைய தாண்டகமாகும். இது கன்னட நாட்டில் பாடிய பதிகமாகும்.

அங்கிருந்து 10 கல் தொலைவு மலை ஏறிச் சென்றால் இத்தலத்தை அடையலாம். இப்பொழுது திருப்பதியிலிருந்து சிறப்புப் பேருந்து விடப்படுகின்றது. அதில் செல்வது எளிது 'மலையின் உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 1563 அடி, சம்பந்தரும் சுந்தரரும் காளத்தியிலிருந்தே பதிகம் அருளினர். அப்பர் அடிகள் நேரில் சென்று சேவித்தார்.

74. **கோகரணம்:** துளு நாட்டிலுள்ள தலம். ஹூப்ளி என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 90 கல் தொலைவிலுள்ளது. பேருந்து வசதி உண்டு. வழிநெடுகத் தேக்கு மரக்காடுகளும் மலைச்சரிவுகளும், இயற்கை வனப்பு மிக்க சோலைகளும் உள்ளன. தலம் மேற்குக் கடற்கரையிலுள்ளது. கர்நாடக மாநிலம் வடகன்னட மாவட்டத்திலுள்ளது. கயிலையிலிருந்து இராவணன் ஒரு சிவலிங்கம் கொண்டு வந்தான். மாலைக்கடன் முடித்தற் பொருட்டுத் தரையில் வைக்கக் கூடாதென்று நினைத்தபோது விநாயகர் ஒரு சிறுவன் போல் வெளிவந்து தமது கையில் சிவ லிங்கத்தை ஏற்று, மீண்டும் விரைவில் பெற்றுக் கொள்ளாவிடில் தரையில் வைத்து விடுவதாகச் சொன்னார். சிறிது நேரமானதும் தரையில் வைத்து விட்டார். மாலைக் கடன் முடித்ததும் இராவணன் எடுக்க முயன்றான். பெயர்க்க முடியவில்லை. இஃது இன்று ஒரு பசுவின் காது நுனியளவே தெரிகின்றபடியால் தலப்பெயர் கோகரணம் ஆயிற்று. நாமே இலிங்கத்தைத் தொட்டு வழிபடலாம். விநாயகர் திருவுருவம் நின்ற கோலமாக அழகு நிரம்பியுள்ளது. மகா சிவராத்திரியன்று திருத்தேர். பெருங்கூட்டம். இலட்சக் கணக்கான மக்கள் சேவிக்கின்றனர்.

பின்னர் கன்னட நாட்டின் எல்லையைக் கடந்து இடையிலுள்ள காடுகள், நதித் துறைகள்,[75] நீண்ட மலை வழிகள், தலம் நிறைந்த காடுகள், ஆகியவற்றையெல்லாம் கடந்து கதிரவன் தவழ்கின்ற சோலைகளையுடைய மாளவ நாட்டை அடைகின்றார். இவ்வாறு சென்றவர் அரிய பாலை நிலையங்களைக் கடந்து சென்று இலாடம், மத்திம பைதிரம் (மத்திய பிரதேசம்) ஆகிய காடுகளைக் கடந்து கங்கையாறு வளம் சுரக்கும் வாரணாசி (காசி)யை அடைகின்றார். வாரணாசி விசுவநாதரை வழிபட்டு[76] தம்முடன் வந்த அடியார்களை அங்கேயே தங்கும் படிப் பணித்துத் தாம் மட்டிலும் கல் நிறைந்த கொடிய மலைக்காடுகளைக் கடந்து செல்லுகின்றார். மக்கள் நடமாட்டம் இல்லாத வானுறவோங்கிய காடுகளிலும் இலை, கிழங்கு, கனி முதலியவற்றை உட்கொள்வதையும் தவிர்த்து இரவு பகலாக இடைவிடாது நடந்து செல்கின்றார்.

இவ்வாறு காரிருளில் கடந்து செல்லுகின்ற அப்பர் பெருமானிடம் கொடிய விலங்குகள் தமது தீச்செயல்களைப் புரிய அஞ்சுகின்றன;[77] நஞ்சினை உமிழும் நாகப் பாம்புகள் அவற்றின்

---

75. **கிருஷ்ணை, கோதாவரி, மகாநதிகளும்** அவற்றின் துறைகளும்
76. **1966-இல் திருப்பதியில் பணியாற்றிய போது** (25 நாட்கள்) தங்கி பல்வேறு இடங்களைச் சுற்றிப் பார்த்த இடம். எங்களுடன் மு.வ. துரையரங்க சாமி வந்தார். மாநாடு முடிந்ததும் அவர்கள் திரும்பி விட்டனர். என் மனைவி உடல் நிலை கெட்டதால் தங்கி விட்டேன் நகரத்தார் விடுதியில். நாளொன்றுக்கு தலா 4.50 கட்டணம். காலை உணவு, பகலுணவு, இரவுணவு. மடத்து வாடகை இருவருக்கும் முதல் முறை 7.50 அடுத்த முறை வருங்கால் இதில் பாதி (தங்கும் நாள் கணக்கில் இல்லை)
77. **இராம லட்சுமணர்கள் காடுறை** வாழ்க்கையில் நடந்து செல்லும்போது கொடிய விலங்குகள் ஒதுங்கிச் சாதுவாகப் போவதைக் காட்டும் கம்பனை நினைவு கூரலாம். பத்து ஆண்டுகட்கு முன்னர் அடியேன் நடமாடும்போது அதிகாலையில் (4 மணி) அண்ணாநகரில் குரைத்த தெரு நாயகள் பத்து ஆண்டுகட்குப் பிறகு இப்போது அவை குரைப்பது இல்லை. சாதுவாக ஒதுங்கிப் போகின்றன.

படங்களிலுள்ள மணிகளை ஏந்தி விளக்கொளி செய்கின்றன. தேவர்களும் தனியே வருவதற்கு அஞ்சும் படியான கொடிய பாலை நிலத்தில் நடந்து செல்லுகின்றார் அப்பர் பெருமான். தசை ஒழியக் கால் தேயத் தாண்டக வேந்தர் இரவு பகல் எல்லாம் நடக்கின்றார்; தாமரைப் பாதத்தின் தசைகள் எல்லாம் தேய்ந்த நிலையிலும் ''சொற்றுனை வேதியனை, சோதி வானவனை' மறக்கவில்லை; வெள்ளி மால்வரை விரிசடையப்பனை மறக்காத சிந்தனையுடன் செல்கின்றார். கால்கள் தேய்ந்தாலும் கயிலை பெருமானைக் காண வேண்டும் என்னும் பேரார்வத்தால் தமது இரண்டு கைகளையும் ஆதரவாகக் கொண்டு தாவித்தாவி ஊர் கின்றார். மேலும் ஆர்வம் மிகுதலால் பருக்கைக் கற்கள் நிரம்பிய அவ் வழியில் மார்பினால் நகர்ந்து செல்லுகின்றார். வழியில் பரற்கற்களில் கனலின் வெப்பம் தீப் போலச் சுடுகின்றது. கயிலை வேட்கை அப்பர் பெருமானை மார்பினால் உந்தச் செய்கின்றது.[78]

மார்புத் தசைகளும் உந்தி உந்திக் கெட்டு விடுகின்றன; அடைதற்கரிய குறிக்கோள் ஊறிப் பதிந்துள்ள உறுதி மிக்க நாவுக் கரசரின் நெஞ்சகத்தில் நேசம் மட்டிலும் குறையவில்லை. ஊன் கெட்டு உடல் கெட்டுப் போயினும் உயிர் செலுத்துகின்ற ஆர்வம் மிகுதியால் அந்த அடவிகளில் புரண்டு புரண்டு செல்லுகின்றார். செம்மை நெறியில் உயர்ந்த நாவேந்தர்.[79]

அங்கமும் உடலும், அழிந்து தேய்ந்தாலும் மன உறுதி சொற் கோவிடம வலுத்துள்ளது. சிவனது சேவடி நினைந்த சிந்தனை மட்டிலுமே கயிலை நாதன்பால் செலுத்த முடிகின்றது. 'வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும்' மட்டிலும் இப்போது வாகீசரிடம் காணமுடிகின்றது.[80]

---

78. பெரி.புரா. திருநாவுக.புரா - 355-58
79. மேலது - 359
80. மேலது - 360

மன உறுதி இருந்தாலும் உடல் வன்மை செயற்படவில்லை. மெல்ல நகர்வதற்கு முயன்றும் அது கூடாமையால் சொல்வேந்தர் அவ் வழியிலேயே செயலற்றுத் தங்குகின்றார். அடியார்களின் ஆசையை நிறைவேற்றுவதற்குத் தயங்காத கயிலை நாதன் நாவேந்தர் செல்லும் வழியில் ஒரு தடாகத்தை உண்டாக்கித் தாமும் வற்கலை யாடையும் சடை முடியும் உடைய ஒரு முனிவர் வடிவத்துடன் அவர்க்கு முன் வந்து நிற்கின்றார். நின்றவர் நீர் எங்குச் செல்கின்றீர்?' என்று கேட்கின்றார்.[81]

முனிவரின் தெய்வத்திருக்கோலமே முதலில் சொல் வேந்தரைக் கவர்ந்து விடுகின்றது. மாசில்லாத உண்மைத் தவக் கோலத்துடன் நின்ற அம் மறையவரைப் பார்த்த அளவிலேயே அவரிடம் பேசும்படியான ஒரு தெய்விக உணர்வைப் பெறுகின் றார். பேசுகின்றார் ''முனிவர் பெருமானே வடகயிலையில் கயிலை நாதன் மலை மகளுடன் எழுந்தருளி யிருக்கும் திருக் கோலத்தை அவர்தம் அடியவனான யான் கண்ணாரக் கண்டு வணங்க வேண்டுமென்ற விருப்பம் உந்தப் பெற்று வந்தேன்' என்கின்றார்.[82]

இது கேட்ட அந்தத் தெய்வ முனிவர் ''திருக்கயிலை மலை தேவர்களாலும் அணுகுதற்குரியது. நிலவுலகில் வாழும் மனிதர் களில் அடைவதற்குரிய எளிமையுடைத்தன்று. நீர் வெம்மை மிக்க இக் கடுஞ்சுரத்தில் வந்து என்ன காரியம் செய்தீர்! அங்கம் கரைய இங்கு வந்தடைந்தது உம் அறியாமை தானா? இங்கிருந்து மீண்டு போதலே நீவீர் செய்யத்தக்கது'' என்கின்றார். இங்ஙனம் முனிவர் கோலத்துடன் வந்த இறைவன் மொழியக் கேட்ட நாவரசர், ''என்னையாளும் ஈசனின் கயிலை கண்டல்லது நான் மீளேன்; மாளும் இவ்வுடல் ஈண்டே மரித்தாலும் கவலை கொள்ளேன்!'' என மறுத்துரைக்கின்றார்.[83]

81. மேலது - 361-62
82. மேலது - 363-364
83. மேலது - 365-366

இந்நிலையில் தெய்வ முனிவர் நாவேந்தரின் உள்ளத்தின் உறுதியை அறிந்து விண்ணிலே மறைகின்றார். விண்ணில் விடையவனின் குரல் கேட்கிறது அசரீரியாக ''ஓங்கு நாவுக்கரசனே, எழுந்திரு'' என்பது அக்குரல். அப்பர் பெருமானின் அழிந்த உடலுறுப்பெல்லாம் முன் போல் நிரம்பப் பெற்று எழில் பெற்ற திருமேனியுடன் எழுந்து நிற்கின்றார். 'என்னை ஆண்டு கொண்டருளிய அண்ணலே, விண்ணிலே மறைந்தருளிய வேதநாயகனே, கயிலையில் எழுந்தருளியிருக்கும் நின் திருக்கோலத்தை நான் கண்ணினால் கண்டு சேவிப்பதற்கு நயந்தருள் புரிவாயாக'' என நிலமிசை வீழ்ந்து இறைஞ்சுகின்றார். அப்பொழுது மீண்டும் அசரீரியாக ''நீ இந்தப் பொய்கையில் மூழ்கி, நாம் கயிலையில் இருக்கின்ற கோலத்தைப் பழுதில் சீர் திருவையாற்றில் கண்டு மகிழ்வாயாக'' எனப் பணித்தருளுகின்றார்.[84]

ஐயாற்றில் கண்ட கயிலைக் காட்சி: கயிலை நாதனின் அருள்வாக்கினைத் தலைமேற் கொண்டு நாவேந்தர் இறைவன் காட்டிய பொய்கையில் திருவைந்தெழுத்தோதி மூழ்குகின்றார். திருவையாற்றிலுள்ள ஓர் தடாகத்தில் தோன்றிக் கரையேறுகின்றார்.

எம்பெருமானின் கருணை இதுவென உணர்ந்த திருநாவுக்கரசரின் கண்களில் அன்பு நீர் சொரிய இறைவனை வணங்கச் செல்லுகின்றார். திருவையாற்றில் உள்ள நிற்பன நடப்பன ஆகிய எல்லா உயிர்களும் ஆணும் பெண்ணுமாய்த் துணையோடும் திகழ்தலைக் காண்கின்றார். அவற்றைச் சக்தியும் சிவனுமாகிய தன்மையால் பணிந்து திருக்கோயிலுக்கு முன் செல்லுகின்றார். அப்பொழுது திருக்கோயில் கயிலை மால்வரையாகத் தோற்றுகின்றது.[85] அங்கே திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள்

84. மேலது - 367-369

85. இது பார்த்தனுக்குப் பரந்தாமன் காட்டிய விசுவரூப தரிசனம் போன்றது என்று கருதலாம்.

அன்பினால் இறைவனைப் போற்றிசைக்கும் தோத்திர ஒலியும் மறை முழக்கமும் எம் மருங்கும் முழங்குகின்றன. தேவர், தானவர், சித்தர், வித்தியாதரர், இயக்கர் முதலிய கணங்களும் தவ முனிவர்களும் எவ்விடத்தும் நெருங்கிப் போற்றுகின்றனர். அரம்பையர் முதலியோர் இசைபாடுகின்றனர். இறைவனது திருமுன்னர் அவருடைய வாகனமாகிய செங்கண்மால் விடை எதிர் நிற்கின்றது. பெரிய தேவராகிய நந்தி யெம்பெருமான் பிரம்பினைக் கையிலேந்தி இறைவனது திருமுன்னிலையில் பணி செய்து உதவுகின்றார். வெள்ளி மலையின் மேல் பவளமலை யொன்று மரகதக் கொடியுடன் விளங்குவது போன்று திருக் கயிலாயத்தில் ''செம்மேனி எம்மானாகிய சிவபெருமான் நீல மேனி நேரிழையாகிய உமையம்மையுடன் வீற்றிருந்தருளுகின்றார்.

இந்த அழகிய தெய்வக் காட்சியைக் கண்டு மகிழும் நாவேந்தர் தலைமிசைக் கைகுவித்து நிலமிசை வீழ்ந்து பணி கின்றார்.[86] **'வேறாகி விண்ணாகி'** (6:55) என்பது இவர் பணிந்து போற்றிய திருத்தாண்டகம்.

வேறாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே ஒலித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (1)

என்பது இதன் முதற் பாடல். இப் பதிகத்தின் பதினொரு பாடல் களையும் சேவித்து அப்பர் பெருமான் கயிலைக் காட்சியைக் கண்டு மகிழ்கின்றார்.

86. பெரி.புரா. திருநாவு. புரா. 373-381

இங்ஙனம் தூய தொண்டராகிய நாவேந்தர் கயிலைத் திருக்கோலத்தைக் கண்டு மகிழும் நிலையில் கயிலை நாதன் தாம் காட்டிய கயிலைக் காட்சியை மாற்றித் திருவையாற் றமைந்த பழைய நிலையினைப் புலப்படுத்தியருளுகின்றார். இந்நிலையில் அப்பர் பெரிதும் வருந்தி ஒருவாறு தெளிவு பெறுகின்றார். கயிலை நாதன் அருளால் தாம் கண்ட கயிலைக் காட்சியை உலக மக்கள் உணர்ந்து மகிழும் வண்ணம் **'மாதர் பிறைக் கண்ணி யானை'** (4.3) என்ற பதிகத்தைப் பாடுகின்றார்.

மாதர்பிறைக் கண்ணி யானை
மலையான் மகளோடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின்பு புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன். (1)

என்பது இப்பதிகத்தின் **முதற்** பாடல். கயிலைக் கோலங்காட்டிய ஐயாற்றிறைவனைத் தொழுது திருத்தாண்டகம், திருக்குறுந் தொகை, திருநேரிசை, திருவிருத்தம் முதலிய சொன் மாலைகளைப் பாடித் திருத்தொண்டு செய்து அங்கு அமர்ந்திருக்கின்றார்.

இந்த இரண்டு காட்சிகளிலும் தத்துவம் ஒன்று அமைந் துள்ளது. கண்ணால் காணும் உலகின் 'பன்மையோனிகளில்' இறைவன் **உடனாகி** நின்ற காட்சி **முதற்காட்சி**; இறைவன் காணப்பெறும் உலகினொடு உடனாகி நிற்பதேயல்லாமல் தனித்து **வேறாகியும்** நிற்பான்; இந்தக் காட்சியே இரண்டாவது காட்சி. இரண்டாவதாகக் காணப்பெறும் இக் கோயிற் காட்சியே **'கயிலைக் கோலம்'** பற்றியதாகும்.

(15) அண்ணலார் சேவடியில் சேர்தல்: திருநாவுக்கரசரது உள்ளத்துறுதியை உலகத்தார்க்குத் தெளிவாகப் புலப்படுத்தக் கருதுகின்றார் கயிலை நாதன். அப்பர் பெருமான் உழவாரத் தொண்டு புரியுங்கால் அவ்வுழவாரம் நுழைந்த இடங்களிலெல்லாம் பொன்னும் நவமணிகளும், விளங்கித் தோன்றும்படி செய்தனன். 'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும்' உரவோராகிய அப்பர் பெருமான் பொன்னும் மணியுமாகிய அவற்றைப் பருக்கைக் கற்களோடு ஒப்பக் கருதி உழவாரத்தில் ஏந்தி அருகிலுள்ள தாமரைத் தடாகத்தில் வீசியெறிந்தார்.

அழகிற் சிறந்த அரம்பை ஊர்வசி முதலிய தேவமாதர்கள் மின்னற் கொடிபோல் வானுலகத்தினின்றும் இறங்கிவந்து சொல்வேந்தர் திருமுன் நின்று இன்னிசைப் பொருந்தப் பாடியும் இன்பச் சுவையினைப் புலப்படுத்தும் ஆடல்களை இயற்றியும் அடிகள்மேல் மலர்களைத் தூவி அவரை அணைபவர் போன்று அணுகியும் கூந்தல் அவிழ இடை நுடங்க ஓடியும் மீண்டும் அவரை நெருங்கியும் பல்வேறு சாகசங்களைக் கையாண்டு அவரை மயங்குவதற்குப் பெரிதும் முயன்றனர். எனினும் அப்பெருமான் இறைவன் திருவடிகளை மறவாது, தம் ஒருமை நிலையில் சிறிதும் தவறாது, தாம் செய்யும் திருப்பணியில் உறைப் புடையராய் விளங்கினார். 'யான் திருவாரூர் அம்மானுக்கு ஆட் பட் டேன். நும்மால் அலைக்கழிக்கப்படும் எளிமையுடை யேன் அல்லேன். நீவீர் என்னைத் துன்புறுத்தாதீர்'' என்று கூறும் போக்கில்,

பொய்ம்மாயப் பெருங்கடலில் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான், யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்றன் அடித்தொடர்வான் உழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே.

எனவரும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தை (6.27) அருளிச் செய் தார். அடிகளது உறுதிப்பாட்டினை யுணர்ந்த அரம்பையர்கள் தங்களாற் செய்யத்தக்கது எதுவுமில்லை எனத் தெளிந்து அடிகளை வணங்கிச் சென்றார்கள்.[87]

திருப்புகலூர்ச் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு மகிழும் வாகீசர் தம் அந்தக் கரணங்கள் புறத்தே செல்லாது உள்ளே ஒடுங் கப்பெற்றுத் திருவடியைத் தலைப்படும் செவ்வியினை எய்து கின்றார். இம் முன்னுணர்வு மூளப்பெற்ற நிலையில் புகலூர்ப் பெருமானை நோக்கி 'உன்னுடைய திருவடிக்கு எளியேன் வருகின்றேன்' என்று நெஞ்சம் கசிந்துருகும் நிலையில்,

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுகேன் ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே (1)

என வரும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தைப் (6.99) பாடிப் போற்றி நண்ணரிய சிவானந்த வடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் ஐக்கியமாகி இன்புற்றார். (இது அடிகளாரின் 81-ஆம் அகவையில்).[88]

---

87. பெரிபுரா.திருநாவு.புரா. 416-427

88. அதற்குமேல் 7 ஆண்டுகள் கடந்த அடியேன் அப்பர் பெருமான் அடைந்த நிலை வரும் நாளை எதிர்பார்த்த நிலையில் உள்ளேன்.

3. சுந்தரமூர்த்தி அடிகள்



பேரூரும் பரவைமணப்
பிணக்கறாளம் பெருமானை
ஊரூரும் பலபுகல
ஓரிரவில் தூதன்எனத்
தேரூரும் திருவாரூர்த்
தெருவுதொறும் நடப்பித்தாய்
ஆரூரா! நின்பெருமை
அயன்மாலும் அளப்பரிதே.

இராமலிங்கர் (திருவருட்.ஐந்.திருமுறை ஆளுடைய நம்பிகள் அருள்மாலை - 10)

நடுநாட்டின் தலைநகர் **திருநாவலூர்**[89] அவ்வூரில் ஆதி சைவ மறையவர் மரபில் தோன்றியவர் **சடையனார்**; அவர் துணைவியார் **இசைஞானியார்.** இருவருக்கும் மகனாகப் பிறந்தவர் நம்பியாரூரர்.

89. நாவலூர் (திருநாமநல்லூர்) : விழுப்புரம் - விருத்தாசலம் இருப்பூர்தி வழியில் பரிக்கல் என்ற நிலையத்திலிருந்து 2 கல் தொலைவில் உள்ளது; பண்ணுருட்டிக்குச் செல்லும் வழியிலுள்ளது.

'நம்பியாரூரர்' என்பது திருவாரூரில் திருக்கோயில் கொண்டுள்ள சிவபெருமானின் திருநாமம் ஆகும். நடு நாட்டை ஆண்ட **நரசிங்க முனையர்** என்பவர் குழந்தையின் அறிவொளியால் ஈர்க்கப் பெற்று நட்பின் மிகுதியால் **சடையனாரிடம்** அக்குழந்தையை வேண்டிப் பெறுகின்றார். **'இளவரசன்'** என்ற முறையில் அன்பி னால் வளர்த்து வருகின்றார். அரசர் மனையில் வளர்க்கப் பெற்ற போதிலும் அந்தணர் மரபிற்கேற்ப முப்புரி நூலணிந்து நான்மறை களையும் ஆறங்கங்களும் (7.2:11) முதலாகவுள்ள சாத்திர நூல்கள், கலை நூல்கள் முதலியவற்றை யெல்லாம் கற்றுத்துறை போக வித்தகராகின்றார். மணப் பருவம் வருகின்றது. தங்கள் குடும்பத்தோடு ஒத்த குடும்பத்தினராய் **புத்தூரில்**[90] வாழும் சடங்கவி சிவாச்சாரியாரின் திருமகளை மணமகளாக உறுதி செய்கின்றனர். திருமண நாளன்று தடுத்தாட் கொள்வதற்காக சிவபெருமான் ஒரு முதியவர் வேடந்தாங்கி வந்து 'வழிவழி வந்த அடியவன்' என்று கூறித் திருமணத்தை நிறுத்தி விடுகின் றார். நம்பியாரூரரும் அவையத்தாரும் தம்மைப் பின் தொடர்ந்து வர திருவெண்ணெயம்பதியிலுள்ள **அருட்டுறை**[91] என்னும் திருக்கோயிலில் புகுந்து மறைகின்றார். அனைவரும் செயலொன் றறியாது திகைத்து நிற்கின்றனர்.

தடுத்தாட்கொண்டருளிய அருட்டுறை ஈசன் உமையம்மை யாருடன் விடை மீதமர்ந்து விசும்பில் தோன்றி நாவலூராருக்குக் காட்சி தந்தருள்கின்றார். நம்பியாரூரரை நோக்கிப் **'பித்தா'** என்று தொடங்கிப் பாடிப் போற்றுமாறு பணிக்கின்றார். தம்முடன் வன்மொழிகளைப் பேசினமையால் **'வன்றொண்டன்'** என்ற பெயரையும் தந்து அருளுகின்றார்.[92] நாவலூராரை நன்மணம் புரிந்து கொள்ள விரும்பிய நங்கை நம்பியாரூரரை வழிபடு

---

90. இந்த ஊர் முன்பு 'மணம் வந்த புத்தூர்' என வழங்கி வந்தது. இது திரிந்து 'மணம் தவிர்ந்த புத்தூர்' என மாறியது. இப்போது அப் பகுதி மக்கள் 'மணமந்த புத்தூர்' என்று வழங்குகின்றனர்.

91. உமாதேவியின் அருள் பெற்றமையால் 'அருட்டுறை' ஆயிற்று.

92. பெரி. புரா. தடுத்தாட் கொண்ட-77

தெய்வமாகத் தம் உள்ளத்தில் நிறுத்தித் தியானிக்கும் மெய்யறிவுடையராய்ச் சில காலம் வாழ்ந்து இவ்வுலக வாழ்வை நீத்து உயர்ந்த சிவலோக வாழ்வாகிய பேரின்பம் கைவரப் பெறுங் கைலைநாதன் கழலிணையடிகளைச் சேர்கின்றார்.

1. தடுத்தாட் கொள்ளப் பெறுதல்: இது குறித்த பதிகம் (7.1)[93]

பித்தாபிறை சூடீபெரு
மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல். இந்நிகழ்ச்சிகளை எல்லாம் ஆரூரன் வாய்மொழிகளாக, அவருடைய திருப் பாடல்களாலேயே அறிந்து கொள்ளலாம்.[94]

2. சிவபெருமான் திருவடி சூட்டப் பெறுதல்: திருத்துறையூர்[95] இறைவனை தவநெறி வேண்டி **'மலையார் அருவி'** (7.13) என்று பாடி அவ்விறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு பல தலங்களை வழிபட்டுக் கொண்டு பொன்னம்பலத்தை நினைந்த வண்ணம் வருங்கால் மாலைப் பொழுது கண்ணும் பொழுது **திருவதிகையை** அடைகின்றார். அப்பர் பெருமானுக்குச் சூலை நோய் 'அருளி' நோய் நீக்கி **'நாவுக்கரசு'** என்ற பட்டம் தந்த வீரட்டானத்திறைவர் எழுந்தருளிய ஊரைக் காலால் மிதித்தற்கும் அஞ்சி அப்பதியின் புறத்தே அமைந்த **சித்தவட**

93. ஏழாம் திருமுறையில் முதற் பதிகமாக அமைந்துள்ளது.

94. சுந். தேவா. 7.17:1,2,3,8,10; 7.18:7; 7.63:5; 7.68:6,8 முதலியவை காண்க.

95. **திருத்துறையூர்:** சென்னை எழும்பூர் - விழுப்புரம் இருப்பூர்தி வழியில் திருத்துறையூர் என்ற நிலையத்திலிருந்து ஒன்றரைக் கல் தொலைவு. இது சிவஞான சித்தியார், அருளிய **'அருணந்தி சிவாச்சாரியார்'** அவதரித்த தலம்.

மடத்தில்[96] அடியார்களுடன் தங்குகின்றார். இங்கிருந்தபடியே வீரட்டானத்திறைவனின் திருவடிகளைச் சிந்தித்த வண்ணம் திருமடத்தில் துயில் கொள்ளுகின்றார். இந்நிலையில் அதிகை வீரட்டானத்திறைவன் தளர்ந்த ஒரு முதியவர் வேடங் கொண்டு அம் மடத்தில் புகுகின்றார்; வன்றொண்டர் அருகில் படுத்துறங்கும் பாவனையில் அவர்தம் திருமுடிமீது தம் திருவடிகள் பொருந்து மாறு படுக்கின்றார். விழித்துணர்ந்த வன்றொண்டர் மறையவரை நோக்கி ''பெரியோய், உம் திருவடியை என் சென்னிமீது வைத் தனையே'' என்று கூற, முதியவரும் ''இவ்வாறு திசையறியா வண்ணம் செய்தது என் தளர்ந்த முதுமை நிலையே'' என்று மறுமொழி தருகின்றார். வன்றொண்டர் வேறொரு பக்கம் தலை வைத்துத் துயில் கொள்ளத் தொடங்க, அங்கும் தம் திருவடியை நீட்டுகின்றார் முதுமறையவர். இதனையுணர்ந்த நம்பியாரூரர் ''இங்ஙனம் பலகால் என்னை மிதிக்கும் நீர் யார்?'' என்று வினவ, மறையவரும் ''நீர் என்னை அறிந்திலையோ?'' என்று சொல்லிய வண்ணம் மறைகின்றார்.

இந்நிலையில் தம் சென்னியின்மீது திருவடி சூட்டி மறைந்த மறையவர் திருவதிகை வீரட்டானப் பெருமானே எனத் தெளி கின்றார். **'நம்மானையறியாத'** (7.38) என்று தொடங்கும் திருப் பதிகம் பாடி திருவீரட்டானத்து இறைவனைப் போற்றுகின்றார்.

தம்மானை அறியாத சாதியார் உளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டி லாடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்து
எம்மான்றன் அடிகொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்து
உறைவானை யிறைபோதும் இகழ்வன்போ லியானே. (1)

என்பது இப்பதிகத்தின் **முதற்** பாடல். 'எம் தலைவனாகிய சிவபெருமான் எப்பொழுதாவது தம் திருவடிகளை என்

96. இந்த மடம் திருக்கோயிலின் தெற்கு வீதியிலுள்ளது. இஃது ஓர் வைப்புத்தலம்.

முடிமேல் சூட்டி அருள் புரிவான் என்னும் ஆசையால் வாழ்கின்ற நாயேன், அப்பெருமானே எளிவந்து என் சென்னியில் திருவடி சூட்டியருளிய இந்நிலையில் அவரையறியாது இருமாந்து இகழ்ந் தேனே' என்று இத்திருப்பதிகத்தின் இந்த முதற் பாடலில் நம்பியாரூரர் கவன்று உரைப்பதைக் கண்டு மகிழலாம். **'திருவடி தீட்சை'** திருவிளையாடல் நிகழ்ந்த நிலையில் இப்பதிகம் தோன்றியது என்ற வரலாறு தெரிகின்றது.

(3) தம்பிரான் தோழனாதல்: சீகாழிப் பகுதியில் இறைவனது திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்த நம்பியாரூரர் திருக்கோலக்கா, திருப்புன்கூர் முதலிய பல தலங்களை வழிபட்டுக் கொண்டு இறுதியில் திருவாரூருக்கே வந்து சேர்கின்றார். அத்திருத்தலத் தில் கோயில் கொண்ட பெருமான் ஆரூரில் வாழும் அடியார் கட்குமுன் தோன்றி ''நம் ஆரூரனாகிய வன்றொண்டன் நாம் அழைக்க இங்கு வருகின்றான். நீங்கள் மகிழ்ந்து அவனை எதிர் கொண்டு அழைப்பீராக'' என அருளிச் செய்து மறைந்தருளினார்.

இறைவனது திருவருள் இஃதென உணர்ந்த அடியார்களும் நகர மாந்தரும் திருவாரூரைச் சிறப்புற அலங்கரித்து மங்கல வாத்திய ஒலிகள் முழங்க ஆரூர்த் திருமதிவாயில் புறத்துச் சென்று நம்பியாரூரரை எதிர் கொண்டு வணங்கினார்கள். திருநாவலூராரும் அடியார்களைக் கை தொழுது ''எந்தையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பெருஞ்சிறப்புடைய திருப்பதியும் இத்திருவாரூரே. இங்கெழுந்தருளிய இறைவன் எளியேனையும் ஆட்கொண்டருளும் இசைவுடையாரோ என்பதனை அன்பு கூர்ந்து அவர்பால் தெரிவிப்பீராக'' என வினவி வேண்டு கின்றார். இக்குறிப்புடைய பதிகம் **''கரையும் கடலும்''** (7.73) என்பது இதன் முதற்பாடல்.

கரையும் கடலும் மலையும்
காலையும் மாலையும் எல்லாம்
உரையில் விரவி வருவான்
ஒருவன் உருத்திர லோகன்

வரையின் மடமகள் கேள்வன்
வானவர் தானவர்க் கெல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர்அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். (1)

என்பது. இந்தத் திருப்பதிகத்தைப் பாடிக் கொண்டு திருக்கோயில் வாயிலை அணுகினார். சிவனடியார்கள் வீற்றிருக்கும் தேவாசிரிய மண்டபத்தைக் கைகூப்பித் தொழுதார். புற்றிடம் கொண்ட பெருமான் எழுந்தருளிய திருமூலட்டானத்தைச் சூழ்ந்த திருவாயிலை இறைஞ்சி உள்ளே புகுந்தார். செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளார் மலர் தூவி வழிபாடு செய்யத் திருவருள் புரிந்த பூங்கோயில் அமர்ந்த பெருமான் சேவடிகளை உளங் குளிர இறைஞ்சியதனால் உண்டாகின்ற இன்ப வெள்ளத்திலே மூழ்கி நின்று இன்னிசைத் தமிழ் மாலையினைப் பாடிப் போற்றினார்.

அப்பொழுது அனைவரும் கேட்கும்படி வானில், ''நம்பியாரூரனே, தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம். நீ **எம்மால் தடுத்தாட் கொள்ளப் பெற்ற அந்நாளில் நீ கொண்ட திருமணக் கோலத்தையே எப்பொழுதும் மேற்கொண்டு இந்நில உலகில் இன்புற்று வாழ்வாயாக''** என்றதோர் அருள்மொழி எழுந்தது. அவ்வருள் மொழியைக் கேட்ட சுந்தரர், ''அடியேனைத் தடுத்தாட்கொள்ள வந்த மறையவனே, ஆரூரமர்ந்த அருமணியே, நாயினும் கடையேனாகிய எளியேனையும் பொருளாகக் கொண்டு நின் திருவடித் தாமரையினைத் தந்தருளியது, நின் பெருங்கருணைத் திறமல்லவா?'' என்று கூறிப் புற்றிடங் கொண்ட பெருமானைப் பல முறையும் வணங்கிப் போற்றினார். வீதிவிடங்கப் பெருமானாகிய தியாகேசர் திருமுன்பு சென்று தொழுது திருமாளிகையை வலஞ் செய்து போந்தார். அன்று முதல் அடியார்களெல்லாம் அவரைத் **'தம்பிரான் தோழர்'** என அன்பினால் வழங்கிப் போற்றுவாராயினர். இறைவன் பணித்த வண்ணம் நம்பியாரூரர் **'திருமணக் கோலப் பெருமாள்'** என்று போற்றும் வண்ணம் சுந்தர வேடங்களையுடைய தவ வேடராய்ப் பூங்கோயிலமர்ந்த பெருமானை நாடோறும் வழிபட்டு இன்னிசைப் பாமாலையைப் பாடி மகிழ்ந்திருந்தார்.

4. பரவையாரை[97] நம்பியாரூரரின் வாழ்க்கைத் துணை யாக்கல்: பரவையார் **உருத்திர கணிகையர்** குலத்தில் பிறந்தவர். முற்பிறப்பின் உணர்வு தூண்டுதலால் பரவையார் பூங்கோயில் அமர்ந்த பெருமானை நாடோறும் வழிபட்டு வருபவர். பேரழகு மிக்கவர். ஒருநாள் இறைவனது திருவருளால் நம்பியாரூரர் பரவையாரைக் காண நேரிடுகின்றது. பரவையாரும் அவ்வாறே 'பாலது ஆணையால்' நம்பியாரூரரைக் காண நேரிடுகின்றது. இருவரும் ஒருவர் மேல் மற்றொருவர் காதல் மிக்கவராகின்றனர்.

இவ்வாறு இருவரும் ஒருவர் மேல் மற்றவர் கொண்ட பெருங் காதலால் உறக்கமின்றி நள்ளிரவில் வருந்துதலைக் கண்ட புற்றிடங்கொண்ட பெருமான் அன்றிரவே சிவனடியார்க்ள் முன் தோன்றிப் பரவையாரை நம்பியாரூரர்க்குத் திருமணம் செய்து வைக்குமாறு பணித்தருளுகின்றார். அடுத்து நம்பியாரூரரை அடைந்து ''நங்கை பரவையை நினக்கு வாழ்க்கைத் துணையாகத் தந்தோம். நம் அடியார்கட்கும் இதனைத் தெரிவித்தோம்'' என்று அருளிச் செய்தவர், பரவையார் முன்னிலையில் தோன்றி ''நினக் கும் நம்பியாரூரனுக்கும் நாளை திருமணம் நிகழும்'' என்று கூறி மறைந்தருளுகின்றார்.

மறுநாள் வைகறையில் பூங்கோயிலமர்ந்த பெருமான் ஆணையிட்டபடி சிவனடியார்கள் அனைவரும் ஒருங்கு கூடி இறைவனது திருவருட்டிறத்தை வியந்து போற்றுகின்றனர். தம்பிரான் தோழர்க்கும் நம்பி பரவையார்க்கும் விதிப்படி திருமணத்தை நிகழ்விக்கின்றனர். இவ்வாறு இறையருளால் பரவையாரை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ற தம்பிரான் தோழர் அம்மெல்லியலாருடன் அன்புடன் கலந்து மகிழும் நிலை யிலேயே சிவனருட் கடலிலும் மூழ்கித் திளைக்கின்றார். இதே இன்பப் பெருக்கில் செந்தமிழ்ப் பாமாலைகள் பாடிச் சிவபெரு மானைப் போற்றுகின்றார். நங்கை பரவையாரை வாழ்க்கைத் துணைவியாகத் தந்தருளிய திருவருட் செயலை,

---

97. திருக்கயிலாயத்தில் உமையம்மையாரின் சேடியரில் ஒருத்தி கமலினியார். இவர்தான் ஆலால சுந்தரரால் காதலிக்கப் பெற்றவர். இவர்கள்தாம் பரவையாராகவும் நம்பியாரூரராகவும் பிறந்தவர்கள்.

ஏழிசையாய் யிசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந்து
ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. *(7.51:10)*

என்று நாவலூர்அண்ணல் உளங்கசிந்து பரவிப் போற்றி யுள்ளமையைக் கண்டு மகிழலாம்.

5. திருத்தொண்டத் தொகை பாட அருளுதல்: நம்பி யாரூரர் பரவையாருடன் இல்லறம் நடத்தி இறைவனை வழிபட்டு வரும் நாட்களில் ஒருநாள் தேவாசிரிய மண்டபத்தில் ஒருங்கு கூடியுள்ள சிவனடியார்களைக் கண்டு ''இவர்கட்கு அடியனாகும் நாள் எந்நாளோ?'' என்னும் நினைவுடையவராய் வழி பாட்டிற்காகத் திருக்கோயிலினுட் செல்லுகின்றார். இந்நிலையில் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும் சிவனடியார்களில் ஒருவராகிய **விறன்மிண்டர்** வன்றொண்டர் அடியார் திருக் கூட்டத்தைப் பணியாது நேரே திருக்கோயிலினுட் செல்லுகின் றார் என்று கருதி ''சிவனடியார் கூட்டம் தம்மைப் பேணாது செல்லும் நம்பியாரூரனுக்கும் புறம்பு; அவனுக்குப் பிரானாகிய சிவபெருமானுக்கும் புறம்பு'' என்று வெகுண்டுரைக்கின்றார்.[98]

இந்நிலையில் **''அடியவர்க்கு அடியேன்''** என்னும் ஆர்வத் துடன் திருக்கோயிலுக்குள் செல்லும் வன்றொண்டர் முன் ஆரூர் இறைவன் தோன்றிக் காட்சி நல்குகின்றார். வன்றொண்டரும் தமக்கு எளிவந்து அருளிய இறைவனின் பெருங்கருணைத் திறத்தை வியந்து போற்றுகின்றார். தொண்டர்க்குத் தொண்ட னாகும் நற்பேற்றினை ஆரூரருக்கு அளித்தருளத் திருவுள்ளங் கொள்ளுகின்றார். அவருக்கு அடியார்களின் திருத்தொண்டின்

98. இன்றைய கட்சி அரசியல் போலவும், கட்சித் தொண்டர்கள் நடந்து கொள்வதைப் போலவும் சிவனடியார் கூட்டத்தில் புரட்சி வெடிக்கிறது.

திறத்தையும் சால்பினையும் அறிவுறுத்தி அருளுகின்றார். அவரை நோக்கி "நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்து நீ நிறை சொன்ன மாலை பாடிப் போற்றுவாயாக" என பணிக்கின்றார். அப்பணியினை ஏற்றுக் கொண்ட வன்றொண்டர் இறைவனை இறைஞ்சி நின்று "பிரானே, மெய்யடியார்களின் வரலாறு அறியேன்; அவர்தம் பெருந்தன்மையையும் உணரேன். இந்நிலையில் எங்ஙனம் பாடுவேன்?" என்று விண்ணப்பிக்க, அம்மையப்பரும்,

தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கு அடியேன் *(7.39)*

என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளுகின்றார்.

நம்பியாரூரரும் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும் அடியார்களை நெடுந் தொலைவிலே கண்டு தாழ்ந்து இறைஞ்சுகின்றார்; அவர்தம் திருப்பெயரை முறையே எடுத்தோதுகின்றார். அவர்கள் எல்லார்க்கும் தனித்தனியே 'அடியேன்' எனப் பணிமொழி பகர்ந்து,

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்;
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்;
இல்லையே என்னாத இயற்பகைக்கு அடியேன்;
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்;
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்;
விரிபொழில்சூழ் குன்றையார் விறல்மிண்டர்க்கு அடியேன்;
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்;
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு அடியேன். (1)

என்பது முதற் பாடலாக வருவது. இதில் பதினொரு பாடல்கள் உள்ளன. இத்திருப்பதிகத்தினைப் (7.39) போற்றித் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த சிவனடியார் உள்ளம் மகிழ அவர்களின் நடுவே சென்று சேர்கின்றார். இப்பதிகத்தினைச் சற்று விரித்து **நம்பியாண்டார் நம்பி 'திருத்தொண்டர் திருவந்தாதி'** என்ற நூலை (100 பாடல்கள்) அருளுகின்றார். இதனை மேலும் விரித்து **'திருத்தொண்டர் புராணம்'** என்ற **பெரிய புராணத்தைச்** சேக்கிழார் பெருமான் அருளிச் செய்கின்றார்.

(6) இறையருளால் பொற்கட்டிகளைப் பெறுதல்: நம்பியாரூரர் திருவாரூரில் தங்கியிருந்த பொழுது திருவாரூரில் பங்குனி உத்திரத் திருவிழா நெருங்குகிறது. இதனை அறிந்த தம்பிரான் தோழர் திருவிழாவில் பரவையாரின் செலவுக்குப் பொன்னைக் கொண்டு வரும் பொருட்டுத் **திருபுகலூரை**[99] அடைகின்றார். திருக்கோயிலுள்ள இறைவனைப் பணிந்து போற்றுகின்றார். அண்மையிலுள்ள திருமடத்திற்குச் சென்று ஓய்வு கொள்ளத் திருவுள்ளங் கொண்டு கோயில் வாசலில் அடியார்களுடன் இளைப்பாறுகின்றார். இந்நிலையில் இறைவன் திருவருளால் இவருக்கு உறக்கம் வரத் தொடங்குகின்றது. அருகில் திருக்கோயிலின் திருப்பணிக்காக அடுக்கி வைக்கப் பெற்றிருந்த செங்கல்களில் சிலவற்றைக் கொணரச் செய்து அவற்றைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு அவற்றின்மீது தம் மேலாடையை விரித்துத் துயில் கொள்ளுகின்றார். துயிலுணர்ந்தெழுந்தபோது தலையணையாக வைத்திருந்த செங்கற்கள் பொற்கட்டிகளாக மாறியிருக்கக் கண்டு வியப்பெய்துகின்றார். உடனே திருக்கோயிலினுட் சென்று திருப்புகலூர் இறைவனின் திருவருளை நினைந்து வணங்கி,

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே. (11) (1)

என்ற முதற் பாடலையுடைய திருப்பதிகம் (7:34) பாடிப் போற்றுகின்றார்.

திருபுகலூர் இறைவன் அளித்த பொற்கட்டிகளை எடுத்துக் கொண்டு அடியார்களுடன் அங்கிருந்து புறப்பட்டுப் பல

---

99. **திருப்புகலூர்:** அப்பர் சுவாமிகள் முக்தி பெற்ற தலம். நன்னிலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து நான்கு கல் தொலைவில் உள்ளது.

தலங்களைச் சேவித்துக் கொண்டு திருவாரூரை அடைகின்றார். அங்குக் கோயில் கொண்டிருக்கும் இறைவனை நாளும் பணிந்து பரவையாருடன் இனிது மகிழ்ந்து வாழ்க்கை நடத்துகின்றார்.

(7) குண்டையூர்க் கிழவர்க்கு நெற்குவியலை அருளியது: நம்பியாரூரர் குடும்பத்திற்குத் தேவையான செந்நெல், பருப்பு முதலிய உணவுப் பொருள்களைக் **குண்டையூர்க் கிழவர்** என்னும் வேளாளர் அன்புடன் அனுப்பிக் கொண்டிருக்கின்றார். இப்பணி இடையறாது நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. ஒரு சமயம் வான் பொய்த்தமையால் நாட்டில் வற்கடம் உண்டாகின் றது. இப்பஞ்சம் குண்டையூர்க் கிழவரையும் தாக்குகின்றது. நாவலூராருக்கு நெல் அனுப்ப முடியவில்லையே என்று பெருங் கவலை கொள்கின்றார். அன்று உண்ணா நோன்பினை மேற் கொண்டு அயர்ந்து துயில்கின்றார். சிவபெருமான் அவரது கனவில் தோன்றி ''நம்பியாரூரர் பொருட்டு நுமக்கு நெல்லைத் தந்தோம்!'' என்று உரைத்துக் குபேரனை ஏவுகின்றார். அவன் குண்டையூர் முழுவதும் நெல் மலை மலையாகக் குவித்திடச் செய்கின்றான். வைகறையில் விழித்தெழுந்த குண்டையூர்க் கிழவர் மலை போலும் நெற் குவியலைக் கண்டு வியப்புற்று இறைவன் கருணைத் திறத்தை போற்றுகின்றார். இந்நெற்குவியலை வன்றொண்டரிடம் சேர்ப்பிக்கும் வழி காண்பான் வேண்டி திருவாரூரை நோக்கி நடக்கின்றார். தம் பொருட்டுக் குண்டையூர்க் கிழவருக்கு நெல் அளித்த செய்தியை இறைவனால் அறிந்த நம்பியாரூரர் குண்டை யூரை நோக்கி நடக்கின்றார். வழியில் இருவரின் சந்திப்பும் நேரிடுகின்றது. இருவரும் குண்டையூர் வந்து சேர்கின்றனர்.

''விண்ணினை அளக்கும் நெல்லின் வெற்பினைக்'' கண்ட தம்பிரான் தோழர் இறைவன் திருவருளை எண்ணி வியக்கின்றார். இதனைத் திருவாரூரில் சேர்ப்பிக்க சிவபெருமான் ஆட்களைத் தந்தாலன்றித் தம்மால் இயலாது என நினைத்து அண்மையி லுள்ள **திருக்கோளிலித்**[100] திருக்கோயிலை அடைந்து இறைவன்

100. **திருக்கோளிலி** (திருக்குவளை) : மயிலாடுதுறை - காரைக்குடி இருப்பூர்தி வழியில் திருநெல்லிக்கா நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு. சப்தவிடகங்கள் இங்குள்ளவர் அவனி விடங்கர். நடனம் பிருங்க நடனம்.

திருமுன் நின்று "**நீள நினைந்து**" (7.20) என்ற திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

நீளநினைந்து அடியேன்உமை
நித்தலும் கைதொழுவேன்
வாளனகண் மடவாள்அவள்
வாடி வருந்தாமே
கோளிலிஎம் பெருமான்
குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான்
அவையட்டித் தரப்பணியே. (1)

என்பது **முதல்** பாடல். இதில் ஒரு முறைக்கு ஒன்பது முறை 'அவையட்டித் தரப் பணியே' என்று கோளிலி எம்பெருமானை வேண்டிக் கொள்வதைக் காணலாம்.

சிவபெருமான் அருளால் "இன்று பகற் பொழுது கழிந்ததும் நம்முடைய பூத கணங்கள் பரவையார் வீடு மாத்திரமின்றித் திருவாரூர் முழுவதிலும் நெல்லைக் கொண்டு வந்து குவித்து விடும்" என்றதோர் அருள் வாக்கு வானிடை எழுந்தது. இச் செய்தி கேட்டு மகிழ்ந்த தம்பிரான் தோழர் திருவாரூர் திரும்பி நிகழ்ந்தவற்றைப் பரவையாருக்குத் தெரிவித்துச் சிவ சிந்தனை யோடு இருக்கின்றார். அன்றிரவே பூத கணங்கள் குண்டையூரி லிருந்த நெற் குவியலைப் பரவையார் இல்லத்திலும் திருவாரூர்த் தெருக்களிலும் நிரப்பி விடுகின்றன; மறுநாள் துயில் உணர்ந் தெழுந்த பரவையார் நெற்குவியலைக் கண்டு வியப்புறுகின்றார். ஆரூர் மக்கள் அவரவர் மனை எல்லைக்குட்பட்டுக் கிடக்கும் நெற்குவியலை அவரவர் வாரிக் கொள்ளலாம் என்று வென்றி முரசறைவிக்கின்றார் பரவையார்.[101]

சுந்தரர் பதிகம் பாடி சிவபெருமான் ஏவலால் பூத கணங்கள் குண்டையூரில் பெற்ற நெல்லைத் திருவாருருக்கு எடுத்துச் சென்று சேர்த்த அற்புதத் தலம். குண்டையூர் இங்கிருந்து 3/4 கல் தொலைவிலுள்ளது. குண்டையூரிலிருந்து திருவாரூர் 16 கல் தொலைவு. கலைஞர் கருணாநிதி பிறந்த ஊர்.

101. பெரி. புரா. ஏயர்கோன் - 28

(8) பொதிசோறு அளித்த நிகழ்ச்சி: பல தலங்களை வழிபட்டுக் கொண்டு சீகாழிப் பதிக்கு வருகின்றார் தம்பிரான் தோழர். அப்பதியைப் புறத்தே வலம் வந்து வணங்கி அத் திருப்பதியில் திருவவதாரம் செய்தருளின முத்தமிழ் விரகராகிய காழிப் பிள்ளையார்த் திருவடிகளைப் போற்றி **குருகாவூர்**[102] திருப்பதியை நோக்கி வருகிறார். வருகிறவர் பசியாலும் நீர் வேட்கையாலும் வருந்துவதை அறிந்த சிவபெருமான் வழி யிடையே ஓர் அந்தணர் வடிவங் கொண்டு தண்ணீரும் பொதி சோறும் கொண்டு வந்து வெயில் வெப்பம் நீங்க நிழல் தரும் பந்தரையும் உண்டாக்கி தம்பிரான் தோழரை எதிர் நோக்கி இருக்கிறார். அப்போது நாவலூர் வேந்தர் அடியார் திருக்கூட்டத் துடன் அவ்விடத்தே போந்து பந்தரின் கீழே போய் அங்குள்ள மறையவர் பக்கலிலே **சிவாயநம** என்று ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டே அமர்கின்றார். வேதியராய் வந்து எழுந்தருளியுள்ள சிவபெருமான் அவரை நோக்கி ''நீவிர் பசிக்குள்ளவராகக் காணப்படுகின்றீர்; நான் கொண்டு வந்த பொதி சோற்றையுண்டு தண்ணீர் பருகி பசியைத் தணித்துக் கொண்டு இளைப்பாறுவீர் களாக'' என்று அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றார். தம்பிரான் தோழரும் அதற்கிசைந்து அவர் அன்புடன் நல்கிய பொதி சோற்றை வாங்கி அடியார்களுடன் அமுது செய்கின்றார்; உடன் வந்த பரிசனங்களையும் உண்ணும்படி செய்கின்றார். பொதி சோறும் யாவர்க்கும் போதுமான அளவு பெருகி வளர்கின்றது. அறவாழி அந்தணர் அளிக்கும் சோறு அல்லவா? உரிய நேரத் தில் உணவளித்த மறையவரைப் பாராட்டி அடியார்களுடன் துயிலிலமர்கின்றார் தம்பிரான் தோழர்.

இந்நிலையில் மறையவராய் வந்த இறைவன் பந்தருடன் மறைந்தருளுகின்றார். துயில் உணர்ந்தெழுந்த நாவலூரார்

---

102. **குருகாவூர்** (திருக்கடவூர்) : சீகாழியிலிருந்து 3 $^{1}/_{2}$ கல் தொலைவில் உள்ளது. இறைவன் சுந்தரருக்குக் கட்டமுது தந்ததைப் பதிகப் பாசுரம் பகர்கின்றது.

மறையவரைக் காணாமல் வியப்பெய்துகின்றார். இவ்வாறு வந்து அருள் புரிந்தவர் ஆலநிழற் கீழிருக்கும் குருகாவூர்ப் பெருமானே என்று தெளிகின்றார். "**இத்தனை யாமாற்றை அறிந்திலேன்**" (7.29) என்று தொடங்கும் செந்தமிழ்ப் பாமாலையைப் பாடிக் கொண்டே திருக்கோயிலை அடைகின்றார். இப்பதிகத்தின்,

> **பாடுவார் பசிதீர்ப்பாய்**
> **பரவுவார் பிணிகளைவாய்**
> **ஓடுநன் கலனாக**
> **உண்பலிக் குழல்வானே**
> **காடுநல் விடமாகக்**
> **கடுவிருள் நடமாடும்**
> **வேடனே குருகாவூர்**
> **வெள்ளடை நீயன்றே.** (3)

என்ற **மூன்றாவது** பாடல் பொதி சோறு நல்கிய வரலாற்றைக் குறிப்பிடுகின்றது. பாடல்களால் பரமனைத் தொழுது உளங் குளிர்கின்றார் தம்பிரான் தோழர்.

(9) சங்கிலியாரையும் தம்பிரான் தோழருடன் பிணைத்து மற்றொரு துணைவியாக்கல்: திருக்கயிலாயத்தில் உமையம்மையாரின் சேடியருள் மற்றொருவர் **அநிந்தையார்.** இவர் தொண்டை நாட்டில் **ஞாயிறு** என்னும் ஊரில் **ஞாயிறு கிழவர்** என்ற வேளாளருக்கு அருமைத் திருமகளாகப் பிறந்தவர். பெற்றோர் இட்ட பெயர் **சங்கிலியார்.** இவர்தம் பெதும்பைப் பருவத்தில் பெற்றோர் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கின்றனர். சங்கிலியார் இதனைக் கேள்வியுற்று ஈசன் திருவருள் பெற்றார் ஒருவருக்கே துணைவியாக நினைத்திருக்கும் தம் கருத்துக்கு மாறாக இருப்பதால் மனம் கலங்கி மூர்ச்சித்து நிலமிசை வீழ்கின்றார். மூர்ச்சை தெளிவித்து அவளைக் காரணம் கேட்க, அவர்தம் உளக் கருத்தைத் தெரிவிக்கின்றார். திருவொற்றியூரை அடைந்து சிவனார் அருளிற் செல்வதாகவும் குறிப்பிடுகின்றார்.

பெற்றோர் துணுக்குற்று அச்சமும் வியப்பும் எய்தி தம் மகள் சொன்னதை உலகோர் அறியாமல் மறைத்து விடுகின்றனர்.

இந்நிலையில் ஞாயிறு கிழவரின் குலத்தான் ஒருவன் சங்கிலியாரின் தகுதியை உணராமல் மணம் செய்து கொள்ள விரும்புகிறான். மணம் பேசி வருவதற்குச் சிலரை அனுப்புகிறான். ஞாயிற்றுக் கிழவர் தம் மகளது மனக் கருத்தினை வெளியிடுதல் தகுதியன்றெனக் கருதி வேறொரு வகையால் சமாதானம் கூறி அனுப்பி விடுகின்றார். இவர்கள் திரும்பிச் செல்வதற்கு முன்னர் மணம் பேச அனுப்பியவன் அங்கு வந்து சால்பு மிக்க சங்கிலியாரை இகழ்ந்துரைக்கின்றான். இவனது அடாத செயலைக் கண்டு வெறுப்புற்ற பெரியோர்கள் 'இவன் இறந்தவனை ஒத்தான்' என எண்ணி அவனை அவ்விடத்தை விட்டு அகற்றுகின்றனர்; அங்ஙனம் சென்ற அவன் விரைவில் இறந்தொழிகின்றான்; இச்செய்தி ஞாயிறு கிழவரை எட்டுகிறது. உடனே அவர் சுற்றத்தார்களைக் கூட்டி தம் மகள் கருத்தை உள்ளபடி எடுத்துரைக்கின்றார். மிகவும் அச்சமுடையவராய் ''இனி சங்கிலியார் கருதிய வண்ணம் திருவொற்றியூரில் சிவத்தொண்டு புரிய ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று துணிகின்றனர். சுற்றத்தாருடன் சங்கிலியாரைத் திருவொற்றியூருக்கு இட்டுச் சென்று, திருவொற்றியூர் இறைவனை வழிபடுகின்றனர். அவ்வூர் மக்கள் இசைவு பெற்று திருக்கோயிலின் அருகே **கன்னி மாடம்** ஒன்று அமைக்கின்றனர். அதில் தம் அருமைப் புதல்வியை இருக்கச் செய்து, ''நாங்கள் நினக்கு வேண்டிய பணிகளைச் செய்கிறோம்; நீ கன்னி மாடத்தில் தங்கி சிவபெருமானுக்கு உரிய திருத்தொண்டுகளைச் செய்வாயாக'' என்று கூறி தம் ஊர் திரும்புகின்றார் ஞாயிறு கிழவர்.

கன்னி மாடத்தில் உறையும் சங்கிலியார் நாள்தோறும் மூன்று காலங்களிலும் ஒற்றியூர் இறைவனைப் பணிந்து திருக்கோயிலில் திருமாலை தொடுக்கும் மண்டபத்தில் திரையிட்டிருக்கும் இடத்தில்

அமர்ந்து அன்பு நாராக, அஞ்செழுத்தும் நெஞ்சு தொடுக்க, நறுமலர் மாலை தொடுத்து இறைவனுக்கு எழில் பெறச் சாற்றும் படி மலர்த் தொண்டு புரிந்து வருகின்றார். இது பண்டு கயிலைத் திருமலையில் புரிந்து வந்த 'பூர்வ வாசனையினால்' ஏற்பட்ட தென்று நாம் கருதலாம்.

ஊழ் செயற்படத் தொடங்குதல்: ஒற்றியூர்ப் பெருமானை வழிபட்டு மகிழ்ந்திருக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மலர் மாலை தொடுக்கும் திருமண்டபத்தை அணுக நேரிடுகின்றது. அப்பொழுது இறைவனுக்குச் சாத்தும்படி தாம் தொடுத்த மலர் மாலைகளைக் கொடுத்து விட்டு மின்னற் கொடி போல் திரையினுள்ளே மறை யும் சங்கிலியாரை இறைவனருள் கூட்டிய நல்விதியால் கண்ணு கின்றார்; காதல் அரும்பத் தொடங்குகின்றது. அவரை விசாரித்து இன்னார் என்பதை அறிகின்றார் தம்பிரான் தோழர். அவர் மனம் சிந்திக்கத் தொடங்குகிறது. பூர்வ ஞானம் தட்டுப்படுகின்றது. ''மகளிர் இருவர் காரணமாக இப்பிறவியைக் கயிலை நாதர் எனக்கு எய்துவித்தருளினார். அவ்விருவருள் ஒருத்தி பரவையார் என்பது தெளிவாயிற்று. மற்றையவள் சங்கிலியாகிய இந்நங்கை யாக இருக்குமோ'' என்று ஐயுறுகின்றார். ஒற்றியூர் இறைவன் பால் வேண்டி இவளைப் பெறுவேன் என்று துணிகின்றார்.

ஒற்றியூர் இறைவன் சந்நிதியை அடைந்து அவரைக் குறையிரந்து வேண்டுகின்றார். ''நீர் மட்டும் இருவரை மணந்து கொண்டுள்ளீர். நும் அடியனான நான் மட்டும் இருவரை மணந்து கொள்ளலாகாதா?'' என்று வேண்டுகின்றார்.

திருக்கோயிலை விட்டு வெளியில் வந்தவர் துயில் கொள்ளு கின்றார். இரவில் ஒற்றியூர் இறைவன் அவர்பால் வந்து ''இருந்த வத்துக் கொம்பை உனக்குத் தருகின்றோம்; நீ கொண்ட கவலையை ஒழிக'' என்கின்றார். தம்பிரான் தோழர் ஒற்றியூர் இறை வனின் திருவடிகளை நினைந்து இறைஞ்சிப் போற்றுகின்றார்.

தம்பிரான் தோழருக்கு அருள் புரிந்த ஒற்றியூர் இறைவன் சங்கிலியாரின் கனவில் தோன்றுகின்றார். ''வெண்ணெய் நல்லூர் தம்பிரான் தோழன் உன்னைத் தருமாறு என்னை இரந்தான்; நீ அவனை மணந்து இன்புறுக'' என்று பணிந்தருள்கின்றார்.

சிவபெருமானின் அருள்மொழியைக் கேட்ட சங்கிலியார் அப்பெருமானிடம் ''நும்மால் அருள் செய்யப் பெற்றார்க்கு உரியேன் அடியேன். ஆனால் அவர் திருவாரூரில் தங்கியிருக்கும் விருப்பமுடையவராயிற்றே'' என்று நாணி உரைக்க, வன்றொண்டரின் இந்த நிலையை உணர்ந்து ''அந்த வன்றொண்டன் 'நின்னை' விட்டுப் பிரியேன் என்று உனக்குச் சூளுரை செய்து தருவான்'' என்று அருளிச் செய்கின்றார்.

பின்னர் இறைவன் தம்பிரான் தோழர்பால் சென்று, ''நின் விருப்பத்தை சங்கிலியாரிடம் தெரிவித்தோம். அவர் ஒருவாறு ஒப்புக் கொண்டார். நீ இன்றிரவே அவள்பாற் சென்று ''நின்னை விட்டுப் பிரியேன்'' என்று சூளுரைத்துத் தருதல் வேண்டும். இனி, இந்த ஏற்பாட்டில் செய்யத் தக்கது உண்டாயின் அதையும் தெரிவிக்க'' எனப் பணித்தருள்கின்றார்.

சங்கிலியாரிடம் தம் மனத்தைப் பறி கொடுத்த வன்றொண்டர் ''பல தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபடும் அடியேனுக்கு இவ்வாறு சூளுரைத்துத் தருதல் பெருந் துன்பமாக முடியும்'' என்ற நினைவுடையவராய், இறைவனை நோக்கி ''நான் அவளிடம் திருக்கோயிலில் நும் திருமுன்னர் 'நின்னைப் பிரியேன்' என்று சூளுரைக்க வருங்கால், தேவரீர் அவ்விடத்தை விட்டு ஆலயத்திலுள்ள மகிழ மரத்தடியின்கீழ் எழுந்தருளியிருத்தல் வேண்டும்'' என வேண்டுகின்றார். இறைவனும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருள்கின்றார். நம்பியாரூரரும் இறைவனை ஏத்தி மகிழ்கின்றார்.

சிவபெருமானும் முன்போல் சங்கிலியாரின் கனவில் தோன்றி, ''நங்காய், வன்றொண்டன் சூளுரைத்துத் தருதற்கு இசைந்து

விட்டான். அவன் திருக்கோயிலில் நம்முன் சூளுரைக்க வந்தால், நீ அதற்கு உடன்படாது மகிழ மரத்தடியில் செய்து தருமாறு வற்புறுத்துக'' என்று கூறி மறைந்தருளினார். இவற்றால் ஒற்றியூர் இறைவனின் திருவுள்ளக் குறிப்பை நம்மால் அறிந்து கொள்ள இயலவில்லை.

இந்த நிலையில் சங்கிலியார் உறக்கத்தினின்றும் விழித் தெழுந்து இறைவனின் திருவுள்ளக் குறிப்பை அறிய முடியாமல் வியப்புறுகின்றார். தம்முடைய சேடியார்களைத் துயிலெழச் செய்து தமக்குச் சிவபெருமான் கனவில் தோன்றி அருள் செய்த அனைத்தையும் ஒன்று விடாமல் அவர்கட்கு எடுத்துரைக்கின் றார். இவற்றைக் கேட்ட பாங்கியர் அச்சம், அதிசயம், பெரு மகிழ்ச்சி இவை கலந்த உணர்ச்சியுடையவர்களாகிச் சங்கிலியாரை வணங்கி மகிழ்கின்றனர்.

இந்நிலையில் இறைவனுக்குத் திருப்பள்ளி எழுச்சியில் திருமாலை தொடுத்தற்குரிய வைகறைப் பொழுதும் வந்தெய்து கின்றது. சங்கிலியார் தம் தோழிமாருடன் ஒற்றியூர்த் திருக்கோயி லுக்குச் செல்லுகின்றார். சங்கிலியார் செல்வதற்கு முன்பாகவே அவருக்குச் சூளுரைத்துத் தரும் பொருட்டு அவரது வருகையை எதிர் நோக்கியுள்ளார் நம்பியாரூரர். சேடியருடன் வரும் சங்கிலியாரருகில் சென்று தமக்கு இறைவன் அருளிச் செய்த வற்றை எடுத்துரைக்கின்றார்.

இதனைச் செவியுற்ற சங்கிலியார் பெரு நாணமுற்று மறு மொழி கூறமாட்டாது ஒரு புறத்தே ஒதுங்கித் திருக்கோயிலினுட் செல்லுகின்றார். 'ஆசை வெட்கமறியாது' என்பது காதல் விஷயத் தில் ஆண்களுக்குப் பொதுவாகப் பொருந்துமாதலால் அவரைப் பின்தொடர்ந்து தம்பிரான் தோழர் சென்று ''ஆயிழையீர், இங்கு நான் 'உம்மைப் பிரியேன்' என்று சூளுரைத்தற் பொருட்டு திங்கள் சடைமுடியான் திருமுன் போதுவீர்'' என அழைக்கின் றார். சங்கிலியார் கனவில் நிகழ்ந்தவற்றைக் கேட்ட சேடியர்கள் ''எம்பெருமானே, தேவரீர் இதற்காக இமையவர்தம் பெருமான்

திருமுன்பு சாற்றுதலாகாது'' என்று செப்புகின்றனர். இந்நிலையில் இறைவனது திருக்குறிப்பை அறியாது ''சேயிழையீர், யான் வேறு எவ்விடத்தில் சூளுரைத்துத் தருதல் வேண்டும்?'' என்று வினவுகின்றார். சேடியர்கள் ''இங்குள்ள மகிழ மரத்தடியில் சூளுரைத்தால் போதும்'' என அவர்கள் மறுமொழி தருகின்றனர்.

நம்பியாரூரர் இதனைச் செவிமடுத்து மருட்சி அடைகின்றார். சேடியர் சொல்லுக்கு மறுத்தால் பழம் நழுவிப் போகும்; திருமணம் நடைபெறாமல் போகலாம் என்று அதற்கு உடன்படுகின்றார். உடனே மகிழ மரத்தை மூன்று முறை வலம் வந்து சங்கிலியாரை நோக்கி 'இங்கு நின்னை விட்டுப் பிரியேன்' என்று சூளுரைத்துத் தருகின்றார். சங்கிலியார் சூளுறவில் வழுவினால் நேரிடும் ஏதத்தை நினைத்துக் கலங்குகின்றார். ''தீவினை யாட்டியேன் தம்பிரான் பணியில் இச்செயலையும் காண நேர்ந்ததே''[103] என்று எண்ணியவராய் ஒரு மருங்கு மறைந்து நிற்கின்றார். 'தம்பிரான் தோழரும் சூளுறவு முடிந்தபின்னர் திருக்கோயிலினுட் புகுந்து தம்பிரானைப் பணிந்து, 'நாளும் அருள் தரும் தாங்கள் இன்று செய்த இச்செயல் மிகவும் அழகுடையது!' என்று கூறிப் போற்றி மகிழ்ந்த வண்ணம் திருக்கோயிலை விட்டு அகல்கின்றார். சங்கிலியாரும் மலர் தொடுத்துப் பணியாற்றும் செயலை முற்றுவித்துக் கன்னி மாடத்தை எய்துகின்றார்.

திருமணம் நிகழ்தல்: இங்ஙனம் இது நடைபெற்றிருக்க, இதற்கு முன்னரே ஒற்றியூர் இறைவன் சிவனடியாரின் கனவில் தோன்றி, ''நம்முடைய அடியவனான வன்றொண்டனுக்கு நங்கை சங்கிலியாரை உலகோர் அறியத் திருமணம் செய்துவித்தருள்வீர்களாக'' என்று அருளிச் செய்து மறைந்தருள்கின்றார். திருமணமும் நடந்தேறுகின்றது. மணமக்கள் வள்ளுவர் காட்டிய வழியில்

---

103. குலமகளுக்கு இவ்வுணர்ச்சி ஏற்படுவது சங்க இலக்கியத்தின் நெறி என்பது. சங்க இலக்கியங்களில் பயிற்சியுடையார்க்கு நினைவிற்கு வராமற் போகாது.

'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பத்தை நுகரும் நிலையில்' நாளும் ஒற்றியூர் இறைவனையும் தவறாது வழிபட்டுப் பேரின்பத்தையும் நுகர்வாராயினர். இச் செய்தி,

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்
ளேநின்ற ஒண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்றுதிரு
வொற்றி யூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி
மென்றோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர்
ஐயன் அருளதே *(7.45:4)*

என்ற சுந்தரர் வாய்மொழியால் அறியலாம்.

(10) கண்களை இழந்து வருந்துதல்: நம்பியாரூரர் சங்கிலியாருடன் திருவொற்றியூர் மகிழ்ந்துறையும் நாளில் இளவேனிற் பருவம் எய்துகின்றது. அக்காலத்தில் வீதி விடங்கப் பெருமானுக்குத் திருவாரூரில் நடைபெறும் வசந்த விழாவையும் அத்திருவிழாவில் நடைபெறும் பரவையாரின் ஆடல் பாடல் களையும் கண்டு கேட்டு மகிழ்ந்த நிலை நினைவிற்கு வர, அதனால் ஏசற்ற உள்ளத்தராகின்றார். இத்தனை நாள் பிரிந்திருந்த நிலையினை எண்ணி, நைந்த சிந்தையினராய்,

பத்திமையும் அடிமையையும்
கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோய் அதுவிதனைப்
பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னைப்
வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. *(7.51:1)*

ஏழிசையாய் இசைப்பயனாய்
இனைமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. *(7.51:10)*

என வரும் திருப்பதிகப் பாடல்களைப் பாடிப் போற்றுகின்றார். இவை திருவொற்றியூரிலிருந்து கொண்டே திருவாரூர் ஈசனைப் போற்றியவை.

மற்றொரு நாள் திருவாரூர் நினைவு மூளப் பெற்று ஒற்றியூர்ப் பெருமானை இறைஞ்சி அவரிடம் விடை பெற்றுக் கொண்டு திருவாரூர் புறப்படுகிறார். சங்கிலியாருக்குத் தந்த சூளுரைக்கு மாறாக அவரைப் பிரிந்து ஒற்றியூர் எல்லையைக் கடந்தபொழுது அவருடைய இரண்டு கண்களும் ஒளி இழந்தன. வழி தெரிந்து நடக்க முடியாமல் மூர்ச்சை அடைகின்றார். செய்வதறியாது திகைப்புறுகின்றார். ''சங்கிலிபால் செய்த சூளுரை தவறினமையால் தமக்குண்டாகிய பழிக்கும் நாணி ''இக்கொடுந் துயரம் நீங்க எம் பெருமானைப் பாடிப் போற்றுவேன்'' என நினைந்து,

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்றுநா னறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. *(7.54:1)*

என்ற முதற் பாடலையுடைய திருப்பதிகத்தைப் பாடித் தமது பிழையினைப் பொறுத்தருளுமாறு ஒற்றியூர்ப் பெருமானைப் பரவிப் போற்றுகின்றார். பாடல்கள் 4, 5, 9களில் உள்ள உரையாடல்கள்

இரண்டு கண்களையும் இழந்தமையால் அவரடைந்த பெருந் துயரத்தை நன்கு புலப்படுத்துவனவாய்ப் படிப்போரை உருக்குவன வாக உள்ளன.

இங்ஙனம் வருந்தும் நிலையிலும் ஒற்றியூர் இறைவன் அவருக்கு விரைந்து அருள் புரிந்திலர். உடன் வரும் தொண்டர்கள் வழிகாட்டிக் கொண்டு முன்னே செல்ல வடதிருமுல்லை வாயிலை அடைகின்றார். அத்திருப்பதிப் பெருமானை இறைஞ்சிக் கண் பார்வையின்றித் தான் படும் துன்பத்தைக் களைந்தருள வேண்டி **"திருவும் மெய்ப்பொருளும்"** (7.69) என்ற திருப்பதிகத்தைப் பாடிப் போற்றுகின்றார். "சங்கிலியின் பொருட்டு என் கண்களைக் கவர்ந்து கொண்ட பெருமானே, கண்ணிழந்து வருந்தும் அடியேனது பெருந் துயரத்தைக் களைந்தருள்வாயாக" என்று வேண்டும் போக்கில்,

விண்பணிந் தேத்தும் வேதியாமாதர்
வெருவிட வேழமன் றுரித்தாய்
செண்பகச் சோலைசூழ் திருமுல்லை
வாயிலாய் தேவர்தம் அரசே
தண்பொழில் ஒற்றி மாநகர்
உடையாய் சங்கிலிக்காவென் கண்கொண்ட
பண்ப! நின் அடியேன் படுதுயர்
களையாய் பாசுபதா பரஞ்சுடரே. (3)

என்ற இப்பதிகப் பாடலில் திருமுல்லைவாயில் இறைவனைப் பரவிப் போற்றுதல் ஈண்டு நினைக்கத் தகுவதாகும்.

(11) ஊன்று கோல் பெற்று உதவப் பெறுதல்: திருமுல்லை வாயிலிலிருந்து **வெண்பாக்கத்திற்கு**[104] வருகிறார் நம்பியாரூரர். **'பிழையுளன பொறுத்திடுவாய்'** (7.89) என்ற பதிகம் பாடிப் போற்றுகின்றார் இறைவனை.

---

104. **வெண்பாக்கம்** (திருவளம்புதூர்): சென்னை - அரக்கோணம் இருப்பூர்தி வழியில் உள்ள திருவள்ளூரிலிருந்து 7 கல் தொலைவு. பூண்டி நீர்த் தேக்கத்துள் மூழ்கி விட்டது. கோயிலிலிருந்த மூர்த்திகள் இத்தேக்கத்தின் கரையில் ஓர் அறையில் புகலிடம் பெற்றுள்ளன. நம்பியாரூரர் இத்தலத்தில் ஊன்றுகோல் பெற்றனர்.

மான்றிகழும் சங்கிலியைத்
தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றஅருள் செய்தளித்தாய்
என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில்
இங்குஇருந் தாயோஎன்ன
ஊன்றுவதோர் கோலருளி
'உளோம்போகீர்' என்றானே. (10)

என்பது இதன் **பத்தாம்** பாடல். இறைவன் கோயிலினுள் இருந்து கொண்டே இணக்கமில்லாத மொழியால் 'உளோம் போகீர்' என்று மறுமொழி கூறி 'ஊன்றுகோல்' ஒன்றைக் கொடுத்தருள்கின்றார்.

(12) இடக்கண் பெறுதல்: பல தலங்களை வழிபட்டுக் கொண்டு காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலை அடைகின்றார். எம்பெருமான் திருமுன்பு நின்று ''கடையனான அடியேன் செய்த பெரும் பிழையை பொறுத்து மறைந்த கண்களைத் தந்து அருள்புரிவாயாக'' என்று வேண்டி நிலமிசை நீடு வீழ்ந்து வணங்குகின்றார். கச்சி ஏகம்ப நாதர் பொங்கிய பேரன்பால் போற்றிய வன்றொண்டருக்கு மறைந்த இடக்கண்ணைக் கொடுத்தருளி மலைமகளார் வழிபட்ட தமது திருக்கோலத்தைக் காட்டியருள்கின்றார். வன்றொண்டரும் **'ஆலந்தான் உகந்த'** (7.61) என்ற முதற் குறிப்பையுடைய பதிகம் பாடித் தம் எக்களிப்பைப் புலப்படுத்துகின்றார்.

ஆலந்தான் உகந்தமுது செய்தானை
ஆதியை அமரர்தொழு தேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தை யுளானை
ஏலவார்குழ லாளுமை நங்கை
என்றும்ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே. (1)

என்பது இதன் முதற்பாடல். இத்திருப்பதிகத்தைப் போற்றிப் பாடி உடன் வந்த சிவனடியார்களுடன் கச்சி நகரிலேயே தங்குகின்றார்.

(13) உடற்பிணி நீக்கப் பெறுதல்: பல தலங்களை வழிபட்டுக் கொண்டு **திருத்துருத்தியை**[105] அடைகின்றார். அத் திருத்தல இறைவனைப் பணிந்து தம்முடம்பிற் பொருந்திய நோயினை ஒழித்தருளுமாறு வேண்டுகின்றார். அடியார்கள் அன்பினால் சொல்லிய குறைகளை நீக்க வல்ல திருத்துருத்தி இறைவன் வன்றொண்டரை நோக்கி, ''நீ இத்திருத்தலத்தின் வடபால் உள்ள திருக்குளத்தில் தீர்த்தமாடுவாயாக'' என்று பணித்தருள்கின்றார். அந்த அருள்மொழியைச் செவிமடுத்த வன்றொண்டர் இறைவனை **'மின்னுமா மேகங்கள்'** (7.74) என்னும் பதிகம் பாடித் தொழுது சென்று அக்குளத்தில் மூழ்கி நோய் நீங்கி எழுந்து ஒளி திகழும் திருமேனியுடன் கண்டவர்கள் அதிசயிப்பக் கரையேறுகின்றார்.

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திறைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி யகன்கரை உறைவார்
அடியிணைத் தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
என்னு டம்படும் பிணியிடர் கொடுத்தானை (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்.

(14) வலக்கண் பெறுதல்: திருந்துருத்திப் பெருமான் **'சொன்னவார் அறிவார்'** திருவருளால் உடல்நலம் பெற்று உய்ந்த

105. **துருத்தி** (திருத்துருத்தி - குற்றாலம்): மயிலாடுதுறை - தஞ்சை இருப்பூர்தி வழியில் உள்ள குத்தாலத்திலிருந்து அரைகல் தொலைவிலுள்ளது. இறைவன் சொன்னவாறறிவார்.

தம்பிரான் தோழர் தம் அடியார்களுடன் பல தலங்களையும் சேவித்துக் கொண்டு ஒரு நாள் மாலைப் பொழுதில் திருவாரூரை அணுகுகின்றார். அங்கு **'ஆரூர்ப் பரவையுண் மண்டலி'** என்னும் திருக்கோயிலையடைந்து **'தூவாயா'** (7.96) என்னும் திருப் பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார்.

விண்டானே மேலையார்
மேலையார் மேலாய
எண்டானே எழுத்தோடு
சொற்பொருள் எல்லாமுன்
கண்டானே கண்தனைக்
கொண்டிட்டுக் காட்டாயே
அண்டானே பரவையுண்
மண்டலி அம்மானே. (7)

என்ற **ஏழாம்**[106] பாடலில் தமக்குக் கண்ணைத் தந்தருளும்படி வேண்டுகின்றார். பின்னர்ப் புறம்போந்து ஓரிடத்தில் தங்கியிருக் கிறார். அர்த்த யாமத்திலே அடியார்களுடன் திருமூலட்டானத்து இறைவனை வழிபடச் செல்லுகின்றார்.[17] எதிர் வந்த அன்பர் களை நோக்கி ஆரூர்ப் பெருமானோடு தமக்குள் **அயன்மை** வருந்திக் கூறும் நிலையில் **'குருகுபாய்'** (7.37) எனக் **கைக்கிளைத் திணை**[107] அமைந்த செந்தமிழ் மாலையைப் பாடுகின்றார்.

---

106. பெரி.புரா. ஏயர்கோன் - 304

107. **கைக்கிளை** - ஒருதலைக் காமம். அகத்திணையில் சிறிய திணை. இதற்கு ஒரே துறைதான் உண்டு. 'கை' என்பது சிறியதைக் காட்டும். கைக்குடை, கையேடு, கைவாள், கைவண்டி, கைத்தடி, கைக்குழந்தை, கைம்மாற்று, கையடக்கம், கைக்கடிகாரம், கைத்துப்பாக்கி என்ற தொடர்களுடன் வைத்தெண்ணினால் இது தெளிவாகும். சங்க இலக்கியம் முழுவதும் துருவி ஆராயின் நான்கு பாடல்களே இத்துறை பற்றியனவாக உள்ளன. இந்நான்கும் கலித்தொகையில்தான் உள்ளன. (56, 57, 58, 100) இவற்றுள் மூன்று கபிலர் பாடியவை; ஒன்று நல்லுத்திரனார் பாடியது.

குருகுபா யக்கொழுங் கரும்புகள் நெரிந்தசாறு
அருகுபா யும்வயல் அந்தண்ஆ ரூரரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றும்நினைந்(து)
உருகுமா றும்மிவை யுணர்ந்தவல் லீர்களே. (1)

என்பது இத்திருப்பதிகத்தின் முதற் பாடல்.

அடுத்து தேவாசிரிய மண்டபத்தை இறைஞ்சிக் கோபுரத்தைக் கை கூப்பித் தொழுது உள்ளே புகுகின்றார். புற்றிடங் கொண்ட பெருமான் திருமுன் வீழ்ந்தெழுகின்றார். பூங்கோயில மர்ந்த பெருமான் திருமேனியைக் காணத் தமக்கு ஒரு கண் போதாமையால் மிகவும் வருந்துகின்றார். **'மீளா அடிமை'** (7.95) என்ற செந்தமிழ்ப் பதிகம் பாடி ''அடியேனைத் துன்பக் கடலி னின்றும் கரையேற்றி மற்றைக் கண்ணாகிய வலக் கண்ணையும் தந்தருள்வீராக'' என வேண்டுகின்றார்.

மீளா அடிமை உமக்கே
ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே
கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார்
தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா
ரூரீர் வாழ்த்து போதீரே. (1)

விற்றுக் கொள்வீர் ஒற்றி
யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்த
தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண்
கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா
தொழிந்தால் வாழ்ந்து போதீரே. (2)

என்று வரும் திருப்பாடல்களில் (1,2) இறைவனுடன் தமக்குள்ள தோழமைத் திறம் விளங்கும்படியும் கண்ணைத் தரும்படியும் போற்றி இறைஞ்சுதலைக் காணலாம்.

உள்ளத்தை உருக்க வல்ல இத்திருப்பதிகத்தைக் கேட்டருளிய திருவாரூர்ப் பெருமான் திருவுள்ளமிரங்கித் தம்பிரான் தோழருக்கு வலக்கண்ணையும் கொடுத்தருள்கின்றார். இரு கண்களையும் ஒருங்கே பெற்ற நம்பியாரூரர் பூங்கோயிலமர்ந்த பெருமானின் திருமேனியைப் - பருகா இன்னமுதத்தைக் - கண்களால் பருகு கின்றார். ஆடிப் பாடித் துதித்துப் பேரின்ப வெள்ளத்தில் திளைத்து மகிழ்கின்றார். பின்பு தேவாசிரிய மண்டபத்திற்குப் போந்து அடியார்களுடன் அங்குத் தங்கியிருக்கின்றார்.

(15) ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குற்ற பிணி தவிர்த்தல்: ஏயர்கோன் கலிக்காமர் காவிரியின் வடகரைக்கும் கீழ்பால் **திருப்பெருமங்கலம்** என்னும் பதியில் வளவர் சேனாபதிக் குடியாகிய 'ஏயர்கோன்' குடியில் தோன்றியவர். சிவபிரானுக்கு வழி வழித் தொண்டர். சிவனடியார்களுடனும் ஆராக் காதல் கொண்டு அவர்களின் பணியையும் போற்றுபவர். இப்பெரிய சிவத்தொண்டர் தம்பிரான் தோழர் பரவையாரின் ஊடல் தீர்த்தற் பொருட்டு சிவபிரானை இருமுறை தூதனுப்பிய செய்தியைக் கேள்வியுற்று உளம் வெதும்பி வருந்துகின்றார். அருள் காரணமாக இறைவன் தூது செல்ல இசைந்தாயினும், அடியான் ஒருவன் அவரை அங்ஙனம் ஏவுதல் முறையன்று என்பது இவர் கருத்து.

சிவனடியாராகிய ஏயர்கோன் கலிக்காமர் தம்மிடத்துச் சினம் கொண்டிருத்தலை அறிகின்றார் நம்பியாரூரர். தாம் செய்தது பெரும் பிழை என்பதை உணர்கின்றார். கலிக்காமர் தம் மீது கொண்டிருக்கும் செற்றத்தைப் போக்கியருளுமாறு சிவபெருமானைப் பலமுறை வேண்டுகின்றார். அன்பினால் அவ்விருவரையும்

ஒற்றுமைப்படுத்தத் திருவுளங் கொள்ளுகின்றார் அண்டர் நாயகன். கலிக்காமருக்குச் சூலை நோயை ஏவுகின்றார்.

இந்நோய் அவரை அதிகமாக வருத்துகின்றது. கலிக்காமர் இறைவனை வேண்டுகின்றார். இறைவன் அவர்முன் தோன்றி "உன்னை வருத்தும் சூலை நோய் வன்றொண்டர் வந்து தீர்த்தாலன்றித் தீராது" என்று கூறியருள, கலிக்காமர், "வழி வழி என் முன்னோர்க்கெல்லாம் தொழு குலமாய் விளங்கும் முழுமுதற் கடவுள் என்று வழிபட்டு வரும் எனது நோயினை நும்மால் **வலிந்து** ஆட்கொள்ளப் பெற்ற **புதியவனாகிய** வன்றொண்டரால் தீர்க்கப்படுதலை விடத் தீராமல் வருந்துதலே நன்றாகும்" என்று மறு மாற்றம் தருகின்றார். இறைவனும் மறைந்தருளுகின்றார்.

இந்நிலையில் கங்கைவார் சடையான் வன்றொண்டரை அணுகுகின்றார். "நீர் நம் ஏவலால் ஏயர்கோன் கலிக்காமரை அடைந்து அவனை வருத்துகின்ற சூலை நோயைத் தீர்ப்பாயாக" எனப் பணித்தருளுகின்றார். இந்த அருளுரையைக் கேட்ட நாவலூரார் அகமகிழ்கின்றார். தம் வருகையை ஆள் மூலம் சொல்லியனுப்புகின்றார். வன்றொண்டர் தம்மை நோக்கிச் சூலை நோயைத் தீர்க்கும் எண்ணத்துடன் வருகின்றார் என்பதை உணர்ந்த கலிக்காமர், "இறைவனைத் தூதனாக ஏவல் கொண்ட கொடியன் வன்றொண்டன் போதருவதற்கு முன்னே என்னை வருத்தும் இக்கொடிய நோயினை வயிற்றோடும் கிழித்துப் போக்குவேன்" என்று துணிந்து உடை வாளினால் தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு உயிரைப் போக்கிச் சூலை நோயினையும் தீர்த்துக் கொள்ளுகின்றார்.

இத்துன்ப நிகழ்ச்சியைப் பொறுக்கலாற்றாது மனம் துளங்கிய கலிக்காமரின் தேவியார் தம் கணவரது பிரிவுக்காற்றாது உயிர் விடத் துணிகின்றார். இந்த நிலையில் நம்பியாரூரர் இங்கு எழுந்தருளும் செய்தியை அறிகின்றார். 'ஒருவரும் அழக் கூடாது' என்று இல்லறத்தாருக்குப் பணித்து கணவர் உயிர் துறந்த

செய்தியை ஒருவரும் அறியாதவாறு மறைத்து விட்டு தம்மை நன்கு அலங்கரித்துக் கொண்டு நம்பியாரூரரை வரவேற்கின்றார். தாம் அவருக்குள்ள சூலை நோயைத் தீர்த்து அவருடன் அளவளாவு வதற்கு விரைகிறது தம் மனம் என்று கூறி அவரைப் பார்க்க வற்புறுத்துகின்றார் நம்பியாரூரர்.

நம்பியாரூரரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு வேறு வழியின்றி அவரைத் தம் கணவரின் உடல் இருந்த இடத்திற்கு இட்டுச் செல்கின்றார். கலிக்காமரின் உடல் நிலையைக் கண்டு வருந்தும் நம்பியாரூரர் ''நானும் இவர் முன்பு என் ஆவியைத் துறப்பேன்'' என்று துணிந்து கலிக்காமரின் வயிற்றில் செருகப் பெற்றிருந்த வாளினைப் பற்றிக் கொண்டு அவ்வாளினாலேயே தம்முயிரைப் போக்கிக் கொள்ள முயல்கின்றார்.

இந்நிலையில் சிவபெருமான் அருளால் கலிக்காமர் உயிர் பெற்று எழுகின்றார். நம்பியாரூரரின் கையிலிருந்த வாளினைப் பறித்து அவர் செயலைத் தடுக்கின்றார். கலிக்காமர் உயிர் பெற்றெழுந்தமையைக் கண்ட வன்றொண்டர் மிக்க மகிழ்ச்சி யுற்று கலிக்காமரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றார். கலிக்காமரும் தம் கையிலிருந்த வாளினை நிலத்தில் வீசியெறிந்து விட்டுத் தம்பிரான் தோழரின் திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சு கின்றார். இருவரும் எழுந்து நின்று ஒருவரையொருவர் அன்பினால் அணைத்துக் கொண்டு கெழுதகை நண்பர்களாகின்றனர். இறைவ னுடைய திருவருள் திறத்தை விரைந்து போற்றுகின்றனர்.

இதன்பின்னர் தம்பிரான் தோழர் கலிக்காமருடன் **திருப்புன் கூரை** அடைந்து இறைவனது திருக்கோயிலை வலம் வந்து வணங்கி **அந்தணாள னுன்ன டைக்கலம் புகுத** (7.55) என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடிப் பரவுகின்றார். தம் அன்புடைத் தோழராகிய ஏயர்கோன் கலிக்காம நாயனாரைப் பற்றிய சூலை நோயாகிய கடும் பிணியைத் தீர்த்தருளிய திருப்புன் கூர்ப் பெருமானின் திருவருட் செயலை,

ஏத நன்னிலம் ஈரறுவேலி ஏயர்கோன்
உற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்கோல்
வெண்மணற் சிவன்றன் மேற்சென்ற
தாதை தாளற எளிந்த சண்டிக்குன்
சடைமிசை மலரருள் செயக்கண்டு
பூத வாளிநின் பொன்னடி அடைந்தேன்
பூம்பொழில் திருப்புன்கூர் உளானே. (3)

என்ற **மூன்றாம்** பாடலில் நம்பியாரூரர் குறிப்பிட்டுப் போற்றி யுள்ளமை கண்டு மகிழத் தக்கது.

ஏயர்கோன் கலிக்காமரை அருமை நண்பராகக் கொண்ட தம்பிரான் தோழர் அவருடன் திருவாரூர் திரும்புகின்றார். இரு வரும் பூங்கோயிலமர்ந்த பெருமானைச் சேவித்து மகிழ்கின்றனர். சில நாட்கள் நம்பியாரூரருடன் அளவளாவி மகிழ்ந்த கலிக்காமர் அவரிடம் விடை பெற்றுத் தம்மூர் திரும்புகின்றார்.

(16) பொன்னும் நவமணிகளும் பெறுதல்: ஏயர்கோன் கலிக்காமர் தம்மிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு அவரூர் திரும்பிய பிறகு சுந்தரர் திருவாரூரினின்றும் புறப்பட்டு **நாகைக் காரோணத்துக்கு**[108] சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனை இறைஞ்சி நின்று தமக்கு விலையுயர்ந்த அணிகலன் களும் வேண்டும் என்ற குறிப்புடன் **'புத்தூர் புக்கிரந் துண்டு'** (7.46) என்ற முதற் குறிப்புடன் தொடங்கும் திருப் பதிகம் பாடுகின்றார்.

---

108. **நாகைக்காரோணம் (நாகப்பட்டினம்):** நாகப்பட்டினம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து அரைக்கல் தொலைவு. ஒரு முனிவரைக் காயத்துடன் வானுலகிற்கு ஆரோஹணம் செய்யும்படி இறைவன் அருளியதால் காயாரோஹணம் என்பது மருவி காரோணம் என்று தலப் பெயருடன் சேர்ந்தது.

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசி படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோண மேயிருந் தீரே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல். தம்பிரான் தோழருக்கு இசைந்தருளிய இறைவன் அவருக்குப் பொன்னும் நவமணிகளும் நறுமணப் பொருள்களும் பட்டாடைகளும் கடுகிச் செல்லும் குதிரையும் ஆகியவற்றைப் பரிசாகக் கொடுத்தருள்கின்றார். விலை மதிக்கவொண்ணா அப்பொருள்களைப் பெற்று மகிழ்ந்த வன்றொண்டர் திருநாகையிலிருந்து புறப்பட்டு நடுவிலுள்ள தலங்களையெல்லாம் சேவித்துக் கொண்டு திருவாரூருக்குத் திரும்புகின்றார். பூங்கோயிலமர்ந்த பெருமானைப் போற்றி மகிழ்ந்து இருக்கின்றார்.

(17) முதலையுண்ட பாலனை மீட்டுத் தந்தருளுதல்: புற்றிடங் கொண்ட பெருமானைப் போற்றி மகிழ்ந்திருந்த நம்பியாரூரர் ஒரு நாள் தம் நண்பராகிய சேரமான் பெருமாளை நினைக்கின்றார். ஒரு நன்னாளில் சோழ நாட்டைக் கடந்து கொங்கு நாட்டை அடைகின்றார். **திருப்புக்கொளியூர் அவினாசி**[109]

109. **அவிநாசி:** திருப்பூரிலிருந்து 8 கல் தொலைவு. பேருந்து வழி. சுவாமியின் பெயரே தலத்திற்கும் பெயராயிற்று. முதலையுண்ட பாலனை உயிர்ப் பித்துக் கொடுத்த அற்புதம் நிகழ்ந்த தலம். முதலை இழுத்த மடு இப்பொழுது 'தாமரைக் குளம்' என்ற பெயருடன் திகழ்கின்றது. சிறுவன் முதலை வாயினுட்புக்கு ஒளிந்த ஊர் புக்கொளியூர். இப்பொழுந்து இந்த இசைத் துறைக்கு மேல் தளத்தில் இயங்கும் 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' கண்ட முன்னாள் கல்வி அமைச்சர் திரு. அவினாசிலிங்கம் செட்டியார் இத்தலத்துப் பெருமான் பெயரை வைத்துக் கொண்டவர். இந்த நிறுவனத்தில் அடியேன் 1979-80இல் 15 திங்கள் பணியாற்றினேன்.

என்னும் திருத்தலத்தை அணுகி வேதியர் தெரு வழியாகச் செல்லும்போது ஓர் இல்லத்தில் மங்கல ஒலியும் அதற்கு எதிர்ப் புறமாக உள்ள மற்றொரு வீட்டில் அழுகை ஒலியும் எழுகின்றன. நம்பியாரூரர் மாறுபட்ட ஒலிகள் நிகழ்தற்குரிய காரணத்தை அங்குள்ளாரை நோக்கி வினவுகின்றார்.

அங்கிருந்தவர் கூறியது: ஒரு வேதியனுக்கு இரண்டு ஆண் மக்கள். ஒத்த பருவத்தராய் ஐந்து வயது நிரம்பப் பெற்ற அச் சிறுவர்கள் ஒரு மடுவில் நீராடின பொழுது அவ்விருவருள் ஒருவனை முதலை விழுங்கிற்று; மற்றொரு சிறுவன் பிழைத்துக் கொண்டான். பிழைத்த சிறுவனுக்கு இப்பொழுது உபநயனம் நடைபெறுகின்றது. இம்மங்கல ஒலிக்கு இது காரணம். இது மரித்த சிறுவனை நினைப்பித்தமையால் வருந்திய பெற்றோர் தம் அழுகையொலி எதிர் இல்லத்தில் கேட்கக் காரணமாயிற்று. இத்துயர்ச் செய்தி கேட்ட தம்பிரான் தோழர் சிந்தை கலங்கி நிற்கின்றார்.

இந்நிலையில் மைந்தன் இறந்ததை நினைந்து வருந்தும் பெற்றோர்கள் சுந்தரர் போந்த செய்தியறிந்து அழுகையை நீக்கிக் கொண்டு முகமலர்ச்சியுடன் அங்கு விரைந்து வந்து அடிகளை வணங்குகின்றனர். அவர்களைக் கூர்ந்து நோக்கி ''நீவிரோ புதல் வனை இழந்தவர்கள்?'' என்று பரிவுடன் வினவுகின்றார். அவர்கள் மீண்டும் அடிகளை வணங்கி, ''பெரியீர், அது முன்னர் நடந்தது. அது கிடக்க. தங்களை நெடுங் காலமாகக் கண்டு வணங்கக் கருதியிருந்த எங்கள் அன்பு வீணாகாமல் தாங்கள் ஈண்டு எழுந்தருளியது எமது தவப்பேறு'' என்று மகிழ்ந்துரைக்கின்றனர். தம்மை அடைந்தாரின் இடரைக் களைந்தருளவல்ல சேரமான் தோழர் இந்த வேதியரும் அவர்தம் துணைவியாரும் மகனை இழந்த துன்பத்தையும் மறந்து யான் இங்கு வருகை தந்தமைக்கு மகிழ்கின்றனர். இவர்தம் அன்பு மகனை முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்த பின்னரே அவினாசி இறைவனை இறைஞ்சு தல் வேண்டும்'' என்று அருளிச் செய்கின்றார்.

பெற்றோர்களுடன் தம்பிரான் தோழர் மடுவின் கரைக்கு வருகின்றார். அவிநாசியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை நினைந்து **'எற்றான் மறக்கேன்'** (7.92) என்ற திருப்பதிகத்தினைப் பாடத் தொடங்குகின்றார். இப்பதிகத்தின்,

உரைப்பார் உரையுகந்து
உள்கவல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்காடரவா ஆதியும்
அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப்
புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையைப்
பிள்ளைதரச் சொல்லு காலனையே. (4)

என்ற **நான்காம்** திருப்பாடலைப் பாடும் பொழுது அற்புத நிகழ்ச்சி நடைபெறுகின்றது. காலனாகிய இயமன் மடுவிலிருந்த முதலை வயிற்றில் முன் விழுங்கப் பெற்றிருந்தவனது உடம்பைச் சென்ற ஆண்டுகளின் வளர்ச்சியை உடையதாகச் செய்கின்றான். அவ்வுடம்பினுள்ளே மரித்த புதல்வனது உயிரைக் கொண்டு வந்து புகுத்துகின்றான். உடனே மடுவிலிருந்த முதலை வெளிப்பட்டுக் கரைக்கு வருகின்றது. முன்பு தான் விழுங்கிய புதல்வனை உமிழ்கின்றது.

முதலை வாயினின்றும் வெளிபட்டு உய்ந்த மறைச் சிறுவனை நம்பியாரூர் அவினாசி கோயிலுக்கு அழைத்துச் சென்று அருளாளனாகிய அவினாசிப் பெருமானைத் தொழுகின்றார். பின்னர் அவனைப் பிறந்த இல்லத்திற்கு அழைத்துச் சென்று மங்கல வாத்தியம் முழங்க அச்சிறுவனுக்கு உபநயனமும் செய்வித் தருளுகின்றார். இதன்பின்னர் தம்பிரான் தோழர் மலை நாட்டுக்கு எழுந்தருள்கின்றார். இந்த இரண்டாவது **மலை நாட்டுப் பயணம்** கயிலைப் பயணமுமாக முடிந்து மீளா உலகை அடைகின்றார் தம் உயிர் அனைய நண்பர் சேரமான் பெருமாளுடன்.

இரண்டாம் பொழிவு நாள் 26-08-2003
பிற்பகல் 2.30

2. பண்சுமந்த - தேவாரப் பாடல்கள்

தேவார ஆசிரியர் மூவருள் இயல் இசைத் தமிழாகிய திருப்பதிகங்களை அடைவு படுத்திய முறை: சம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் **முதல் மூன்று திருமுறைகளாகவும்,** நாவுக்கரசர் அருளியவை **நான்கு, ஐந்து, ஆறு-ஆம் திருமுறைகளாகவும்,** காலத்தால் பிற்பட்டுத் தோன்றிய நம்பியாரூரர் அருளியவை **ஏழாம் திருமுறை**யாகவும் **முறைப்படுத்**தப் பெற்றமையை நாம் அறிவோம். மூவராலும் அருளிச் செய்யப் பெற்ற திருப்பதிகங்கள் முழுவதும் **'பண்முறை'** எனவும், **'தல முறை'** எனவும் இருவேறு முறையில் வரிசைப்படுத்தப் பெற்று நடைமுறையில் இருப்பதை அனைவரும் அறிவர்.

'பண்முறையே' பழைய முறையாகும். இம் முறை அமைப்பே பழைய ஏட்டுச் சுவடிகளில் இடம் பெற்றுள்ளது. ஏழு திருமுறைகளாகப் பகுத்து வழங்கும் திருமுறைப் பகுப்புக்கு அடிப்படையாய் அமைந்தது. இப் பண்முறை அமைப்பே எனக் கருதுதல் பொருந்தும்.

(1) முதல் திருமுறை

ஆளுடைய பிள்ளையார் முதன் முதல் அருளியது **'தோடுடைய செவியன்'** (1.1) என்னும் முதற்குறிப்புடைய பிரமபுரத் திருப்பதிகமாகும். எல்லையிலா மறைகளுக்கெல்லாம் முதலாக அமைந்தது 'ஓம்' எனும் எழுத்தாகிய **பிரணவம்** ஆகும். 'ஓம்' என்பதிலுள்ள ஓகாரத்தினை **'தமிழ்'** என்பதன் முதல் எழுத்தாக அமைந்த தகர மெய்யுடன் இணைத்துத் தோன்றிய சிறப்பு 'தோடுடைய செவியன்' என்ற இத்திருப்பதிகத்துக்கு

உண்மையால் முதல்திரு முறையில் முதல் திருப்பதிகமாக முறைப்படுத்தப் பெற்றது.

இத்திருமுறையில்

நட்டபாடை	**தக்கேசி**
தக்க ராகம்	**குறிஞ்சி**
பழந்தக்கராகம்	**வியாழக்குறிஞ்சி**

யாழ்முரி

என ஏழு பண்களில் அடங்கிய **நூற்று முப்பத்தாறு** பதிகங்கள் முறைப்படுத்தப் பெற்றுள்ளன.

இத் திருப்பதிகத்திற்குரிய பண் **நைவளம்** என்பதாகும். இதனை இக் காலத்தார் **நட்டபாடை** என வழங்குவர். முதன் முதலில் பாடியருளிய திருப்பதிகத்தில் அமைந்த பண் **நட்டபாடை** யாதலின், பிள்ளையார் நட்டபாடைப் பண்ணில் பாடியருளிய திருப்பதிகங்கள் யாவும் 'தோடுடைய செவியன்' என்ற திருப்பதிகத்தை யொட்டி முதல் திருமுறையில் முதற்கண் வைக்கப் பெற்றன.

அடுத்து நிகழ்ந்த அற்புதச் செயல் **கோலக்காவில்** பிள்ளையார் பெருமானால் அளிக்கப் பெற்ற **பொற்றாளம்** ஆகும். இந் நிலையில் பாடிய திருப்பதிகம் **'மடையில் வாளை பாய'** (1.29) என்பது. இது **தக்கராகம்** என்று பாடப் பெற்றதாதலின், தக்கராகப் பண்ணமைந்த திருப்பதிகங்கள் யாவும் இதனைச் சார வைக்கப் பெற்றன.

தக்கராகப் பண்ணுடன் பெயரால் ஒற்றுமையுடையது **பழந் தக்க ராகம்** என்ற பண்ணாகும். எனவே பழந்தக்கராகப் பண் ணமைந்த பதிகங்கள் **தக்க ராகப்** பதிகங்களை அடுத்து வைக்கப் பெற்றன.

'தக்க கைசிகம்' என்ற பெயரே **தக்கேசி** எனத் திரிந்தது என்பர்.[2] இப்பெயர் ஒற்றுமை கருதி **தக்கேசிப்** பண்ணமைந்த

---

2. யாழ்நூல் - பக் 285

பதிகங்கள் பழந்தக்கராகப் பண்ணமைந்த பதிகங்களை அடுத்து வைக்கப்பெற்றன.

இனி, பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் நானிலத்து ஐந்திணை யொழுக்கங்களுக்குச் சிறப்புடையனவாகப் பகுத்துரைத்த பழைய தமிழ்ப் பண்களுள் **குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகங்கள்** தக்கேசிப் பண்அமைந்த பதிகங்களைச் சார வைக்கப்பெற்றன.

குறிஞ்சியொடு பெயர் ஒற்றுமையுடைய பண்கள் **வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி** என்பனவாகும். இவ்விரு பண்களிலும் அமைந்த பதிகங்கள் குறிஞ்சிப் பண்ணுக்குரிய பதிகங்களை **அடுத்து முறைப்படுத்தப் பெற்றன.**

எடுத்த இயலும் இசையும் இடையே முரிந்து மாறுபடும் இயல்புடையதாய் அமைந்த இசைப்பாடல் **முரி** எனப்படும்.[3] இத்தகைய முரிப்பாடல்களாக அமைந்தது **'மாதர் மடப்பிடி'** (1.136) என்னும் முதற் குறிப்புடைய பதிகமாகும். இயல் இசைத் திறத்தில் வேறுபாடுடைமையால் யாழில் இசைத்தற்கு அடங்காத நிலையில் **யாழ்முரி** எனப்பெற்ற இத்திருப்பதிகம் முதல் திருமுறையில் இறுதித் திருப்பதிகமாக வைக்கப்பெற்றது. எனவே, முதல் திருமுறையாகிய இதன்கண்

நட்டபாடை	**தக்கேசி**
தக்க ராகம்	**குறிஞ்சி**
பழந்தக்கராகம்	**வியாழக் குறிஞ்சி**

யாழ்முரி

என்னும் ஏழு பண்களில் அடங்கிய நூற்று முப்பத்தைந்து திருப்பதிகங்களும் யாழ்முரி என்ற திருப்பதிகம் ஒன்றும் ஆக நூற்று முப்பத்தாறு திருப்பதிகங்கள் இடம் பெற்றிருத்தல் காணலாம்.

3. ''எடுத்த இயலும் இசையும் தம்மின் முரித்துப் பாடுதல் முரியெனப்படுமே'' என்பது சிலப். கானல் வரி அரும் பதவுரை மேற்கோள்.

(2) இரண்டாந்திருமுறை

சம்பந்தப் பெருமான் அருளிய இத்திருமுறையில்

இந்தளம்	**பியந்தைக் காந்தாரம்**
சீகாமரம்	**நட்ட ராகம்**
காந்தாரம்	**செவ்வழி**

என்னும் **ஆறு** பண்களில் அடங்கிய **நூற்றிருபத்திரண்டு** திருப் பதிகங்கள் முறைப்படுத்தப் பெற்றுள்ளன. ஒவ்வொரு **பண்களிலும்** அவற்றுக்குரிய பல **கட்டளைகளிலும்** பிள்ளையார் அவதரித்த **சீகாழிப்பதிக்குரிய** திருப்பதிகங்களே முதலிடம் பெற்றிருத்தல் காணலாம். **மருதப் பண்ணின் 'வடுகு'** என்னும் நிறத்தின் அக நிலையாகிய **இந்தளப் பண்** இத்திருமுறையில் முதலிடம் பெற் றுள்ளது. இதனை ஊன்றி நோக்குங்கால் தெய்வப் பாடல்கட்குச் சிறப்புரிமையுடைய பண்களுள் **இந்தளமும்** ஒன்றாகும் என்பது புலனாகும்.

பாலை நெய்தல் பாடிய **'காரைகள் கூகை முல்லை'** (1.84) எனவரும் **நனிபள்ளித்** திருப்பதிகமும், திருநெல் வாயில் அரத் துறை ஈசர் தந்தருளிய முத்துச் சிவிகை, குடை, சின்னம் முதலிய வற்றைப் பிள்ளையார் பெற்றபோது இறைவனது திருவருளை வியந்து போற்றிய **'எந்தையீசன்'** (2.90) என்னும் திருப்பதிகமும், **திருமருகல்** என்னும் தலத்தில், அரவு தீண்டி இறந்த வணிகன் ஒருவனை உயிர் பெற்றெழச் செய்தல் வேண்டி பிள்ளையார் பாடியருளிய **'சடையெனும் மால்'** (2.18) என்னும் விடந்தீர்த்த பதிகமும், **திருமறைக்காட்டில்** கதவம் அடைக்கப் பாடிய **'சதுரம் மறை'** (2.37) என்ற பதிகமும், திருமறைக் காட்டிலிருந்து மதுரைக்குப் புறப்பட்டபொழுது நாளும் கோளும் பற்றிய அப்பரடிகட்கு அமைதி கூறிய **வேயுறு தோளி பங்கன்** (2.85) எனவரும் **கோளறு** திருப்பதிகமும், மதுரையில் கூன் பாண்டியனின் வெப்பு நோய் நீங்கப்பாடிய **'மந்திரமாவது நீறு** (2.66) என்னும் **திருநீற்றுப் பதிகமும்,** மயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கிய

'மட்டிட்ட புன்னையங் கானல்' (2.47) என்னும் **பூம்பாவைத்** திருப்பதிகமும், இந்த இரண்டாம் திருமுறையில் அமைந்த அற்புதத் திருப்பதிகங்களாகும்.

'செந்நெல்கழனி' (2.1:1) எனத் தொடங்கும் உலக மக்களுக்குரிய செந்நெல் உணவினையும் நறுமலரினையும் குறிப்பிட்டு இறைவன் திருவருட் குறிப்பறிந்து உயிர்கள் தம்முட் பகையின்றி வாழவேண்டிய நுட்பத்தினையும் அறிவுறுத்தும் திருப்பாடலை முதலாக் கொண்டு தொடங்கிய இரண்டாந் திருமுறை **'எய்த வொண்ணா இறைவன்'** (2.122:1) என்ற பாடலைக் கொண்டு நிறைவு பெற்றிருத்தலை நுணுகி நோக்குங் கால் இறைவனது திருவருள் வழி நின்று எல்லா உயிர்க்கும் அன்பாயொழுகும் மெய்யடியார்கள் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப்படும்' (குறள் 50) என்னும் தமிழ் மறைக்கு இலக்கியமாகச் சிவலோகத்தில் எய்தி இமையோர்கள் போற்ற இன்புற்றிருப்பார்கள் என இறைவன் வழிபாட்டினால் எய்தும் இருமைப் பயன்களையும் அறிவுறுத்தும் முறையில் இத்திருமுறை அமைந்திருத்தல் இனிது புலனாகும்.

(3) மூன்றாம் திருமுறை

இந்தப் பிள்ளையாரின் திருமுறையில்

காந்தாரப் பஞ்சமம்	**பஞ்சமம்**
கொல்லி	**சாதாரி**
கொல்லிக் கௌவாணம்	**பழம் பஞ்சரம்**
கௌசிகம்	**புறநீர்மை**

அந்தாளிக் குறிஞ்சி

என்னும் **ஒன்பது** பண்களுக்குரிய **நூற்றிருபத்தைந்து** பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. சிவத்தலங்களுள் சிறந்தது சைவர்களால் **'கோயில்'** என்று போற்றப்பெறும் தில்லை (சிதம்பரம்). ஆகவே.

அத்தலத்துக்குரியதும் **காந்தாரப் பஞ்சமம் பண்** அமைத்தது மாகிய '**ஆடினாய் நறு நெய்யொடு** பால் **தயிர்** (3.1) என்ற திருப்பதிகம் இத்திரு முறையின் **முதற்கண் வைக்கப் பெற்றது.**

இதனையடுத்துக் **காந்தாரப் பஞ்சமம்** என்னும் இப் பண்ணுக் குரிய '**பந்து சேர் விரலாள்**' (3.2) என்னும் **திருப்பூந்த**ராய் (சீகாழி)த் திருப்பதிகம் அமைந்துள்ளது. இவ்வாறே **முதல் திருமுறையில்** குறிஞ்சிப் பண்ணின் **இரண்டாம் கட்டளையாக** அமைந்த திருப்பதிகங்களில் '**கற்றாங் கெரியோம்பி**' (1.80) என்னும் தில்லைப் பதிகம் **முன்னும், 'நல்லார் தீமேவும்'** (1.81) என்னும் 'சீகாழித் திருப்பதிகம்' **பின்னும்** அமைந்திருத்தலைக் காணலாம். ஆளுடையார் பிள்ளையார் திருப்பதிகங்களில் முற் குறித்த இரண்டடிகளைத் தவிர ஏனைய எல்லாப் பண்களிலும் கட்டளைகளிலும் சீகாழிப் பதிக்குரிய திருப்பதிகங்களே **முதலிடம்** பெற்றிருத்தல் ஈண்டு அறியத் தக்கதாகும். ஆளுடைய பிள்ளையார் **திருநல்லூர்ப் பெருமணத்தில்** தம் திருமணம் காண வந்தோர் அனைவரையும் உடன் அழைத்துக் கொண்டு திருப் பெருமணத் திருக்கோயிலில் தோன்றிய ஈறில் பெருஞ்சோதியினுள்ளே புகும் பொழுது பாடியருளிய திருப்பதிகம் '**நல்லூர்ப்பெருமணம் வேண்டா**' (3.125) என்னும் பதிகமாதலின் அதனை மூன்றாம் திருமுறையின் இறுதித் திருப்பதிகமாகவும் அப்பதிகத்திற்குரிய **அந்தாளிக் குறிஞ்சி** என்ற பண்ணினை அத்திரு முறையின் **இறுதிப் பண்ணாகவும்** முன்னுள்ள சான்றோர் முறைப்படுத்தியுள்ளனர்.

சம்பந்தப் பெருமான் தமக்கு உபநயனச் சடங்கு நிகழ்ந்த போது 'மறைநான்கும் தந்தோம்' என்று மந்திரங்கள் மொழிந்த அந்தணர்க்கு '**அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே**' (3.22:1) என்று அறிவுறுத்தும் முறையில் அமைந்த **பஞ்சாக்கரத்** திருப் பதிகமும் (3.22), உலவாக்கிழி பெறும் நிலையில் பாடியருளிய '**இடரினும் தளரினும்**' (3.4) என்ற திருப் பதிகமும், மதுரையில் அடியார்களுடன் தங்கியிருந்த திரு மடத்தில் சமணர் தீயிலிட்ட போது பாடிய '**செய்யனே திருஆல்வாய்**' (3.51) என்ற திருப்

பதிகமும், தீயிட்ட கொடுஞ் செயல்களையுடைய சமணரோடு தாம் வாது செய்வதற்கு ஆலவாய்ப் பெருமானின் திருக் குறிப்பை அறியப் பாடிய **'காட்டுமாவது'** (3.8) **'வேதவேள்வியை'** (3.108) என்ற திருப்பதிகங்களும், சமணர்களுடன் தாம் வாது செய்தபோது தாம் தீயில் இட்ட ஏடு வேவா வண்ணம் நள்ளாற் றிறைவனைப் பரவிப் போற்றிய **'தளரிளவளர் என உமைபாட** (2.111) என்ற திருப்பதிகமும், புனல் வாதத்தில் வையையில் இட்ட ஏடு எதிரேறிச் செல்லுமாறு பாடிய **'வாழ்க அந்தணர்'** (3.54) என்னும் பதிகமும், **கொள்ளம்பூதூர்**[4]. பெருமானை வழிபட விரும்பி முள்ளியாற்று வெள்ளத்தில் 'நாவலமே கோலாக ஓடம் உய்க்கும் நிலையில் பாடிய **'கொட்டமே கமழும்'** (3.6) என்ற திருப்பதிகமும், தம் திருமணம் காண வந்தோர் அனை வரும் 'ஈனமாம் பிறவி தீர இறைவன் தோற்றுவித்த ஈறில் பெருஞ்சோதியில் புகுக' என வழி வகுத்துக் காட்டும் கருத்துடன் அருளிச் செய்த **'காதலாகி'** (3.49) என்னும் நமச்சிவாய திருப்பதிகமும், தம்மைச் சார்ந்தவர்களது தீதுறு பிறவிப் பாசம் தீர்த்தல் செம் பொருளாகக் கொண்டு 'நாதனே நல்லூர் மேவும் பெருமண நம்பனே நின் பாத மெய்ந்நிழல் சேரும் பருவம் ஈது' என வேண்டி ஈறில் பெருஞ்சோதியினுள் புகும் நிலையில் பாடிய **'கல்லூர்ப் பெருமணம்'** (3.125) என்னும் திருப்பதிகமும் இம் மூன்றாம் திருமுறையில் அமைந்துள்ள அற்புதத் திருப்பதிகங்க ளாகும்.

---

4 '**கொள்ளம்பூதூர்** (திருக்களப்பூர்): தஞ்சாவூர் நீடாமங்கலம்... நாகூர் இருப்பூர்தி வழியில் கொரடாச் சேரியிலிருந்து 4 மைல். கோயிலருகில் ஓடுவது முள்ளியாறு. இதன் எதிர்க் கரையில் சம்பந்தர் வந்தபோது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஓடம் கோல் நிலைக்காமையால் ஓடத்தைக் கரையிலுள்ள மரத்தில் கட்டி விட்டு ஓடக்காரன் வீட்டிலிருந் தான். சம்பந்தர் ஓடத்தை அவிழ்த்துவிட்டு ஏறிக் கொண்டு 'கொட்டாமே' ( ) என்னும் பதிகம் பாட 'நாவலமே கோலாக' ஓடம் கோவிலருகே சேர்ந்தது.

(4) நான்காம் திருமுறை

நாவுக்கரசர் பெருமான் அருளிய திருப்பதிகங்களில்

கொல்லி	**பழந்தக்கராகம்**
காந்தாரம்	**பழம் பஞ்சுரம்**
பியந்தைக் காந்தாரம்	**இந்தளம்**
சாதாரி	**சீகாமரம்**
காந்தாரப் பஞ்சமம்	**குறிஞ்சி**

என்னும் **பத்துப்** பண்களும் திரு **நேரிசை, திருவிருத்தம்** என்னும் யாப்பியல் விகற்பமும் அமைந்த திருப்பதிகங்கள் இந் நாலாந்திருமுறையில் முறையே தொகுக்கப் பெற்றன. இவற்றுள் திரு நேரிசை, திரு விருத்தம் என்பவற்றை முறையே **நேரிசைக் கொல்லி** எனவும், **விருத்தக் கொல்லி** எனவும் கொல்லிப் பண்ணில் அடக்குதல் மரபு.

திருநேரிசை என்பது, **கூவிளம் புளிமா தேமா கூவிளம் புளிமா தேமா** எனவரும் கட்டளை வடிவினையுடைய செய்யுளாகும். இக்கட்டளையில் முதன் சீரும் நான்காஞ் சீரும் ஒரோ வழிக் **கருவிளம்** ஆதலும் இரண்டாஞ் சீரும் ஐந்தாஞ் சீரும் **தேமா** ஆதலும் உண்டெனவும், மூன்றாஞ் சீரும் ஆறாஞ் சீரும் எப்பொழுதும் **தேமா**வாகவே நிற்பன எனவும் இதன் யாப்பமைதியினை விளக்குவர் யாழ் நூலாசிரியர்[5]. நேரிசை என்னும் இப்பெயர், கீழ்கரக் குறித்த அறுசீர்க் கட்டளையால் அமைந்த யாப்பினைக் குறிப்பதுடன் அமைந்த யாப்பினைக் குறிப்பதுடன் அதனைப் பாடுதற்கமைந்த சுத்தாங்கமாகிய இசையமைப்பினையும் புலப் படுத்தும் முறையில் அமைந்திருத்தல் காணலாம்.

நேரிசையாக அறுப்பதம்
முரன்று *(1.75:3)*

எனவும்,

---

5. யாழ் நூல் - பக்.217

நீணமார் முருகுண்டு வண்டினம்
நீலமாமலர் கவ்வி நேரிசை
பாணில் யாழ்முரலும் புறவார்
பனங்காட்டூர் *(2.53:10)*

எனவும் சண்பை வேந்தா் திருப்பாடல்களில் **நேரிசை** என்றும் இவ்விசையமைப்பு குறிக்கப் பெற்றிருத்தல் காணலாம். இக் குறிப்புகளை ஊன்றி நோக்குங்கால், வண்டுகள் நறுமலர்களில் மகரந்தப் பொடியையும் தேனையும் மாத்திரம் அம் மலர்களில் படிந்து இடையீடின்றி முரல்வது போலும், நேரிய இசையமைந்த திருப்பாடல்கள் **நேரிசை** என்ற பெயர் பெறுவன என்னும் நுட்பம் இனிது புலனாகும். சிவபெருமானுக்கு உவப்பை விளை விக்கும் பண்களுள் **கொல்லிப்பண்ணும்** ஒன்று என்பதனை,

கொல்லியார் பண்ணுகந்தார்
குறுக்கைவீ ரட்டனாரே *(4.49:6)*

என நாவுக்குஅரசர் **திருக்குறுக்கைத் திருநேரிசையில்** குறித்துள் ளார். தெய்வ வழிபாட்டிற்குரிய இக் **கொல்லிப்** பண்ணில் திரு நேரிசைப் பதிகங்களைப் பாடும் வழக்கம் உண்டென்பது 'நந்தாத நேரிசையாம் கொல்லியிக்கு' என வரும் திருமுறைகண்ட புராணக் குறிப்பால் உணரப்படும். தேவாரத்தில் வரும் இத்திரு நேரிசை யாப்பும் திவ்வியப் பிரபந்தத்தில் வரும் **திருக்குறுத் தாண்டக**[6] யாப்பும் ஒன்றே என்று இவ்விரு பனுவல்களிலும் அமைந்த திருப் பாசுரங்களை ஒப்பு நோக்குவார்க்கு இனிது தெளிவாகும்.

அப்பர் பெருமான் அருளிய **திருவிருத்தம்** என்பது இக் காலத்தில் **கட்டளைக் கலித்துறை** என்ற பெயரால் வழங்கப் பெறும் யாப்பாகும்.[7] ஐஞ்சீரடி நான்காய் அடிதோறும் முதல் சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் நிற்க, ஐந்தாம் சீராகிய

---

6. திருமங்கையாழ்வார் அருளிய பிரபந்தங்களில் ஒன்று (பெரிய திருமொழி காண்க)

இறுதிச்சீர் **கூவிளங்காய், கருவிளங்காய்** என்னும் சீர்களுள் ஒன்றாகப் பெற்று, முதல் சீரின் முதல் அசை நேரிசையாயின் ஓரடிக்கு **எழுத்துப் பதினாறும்,** நிரையசையாயின் **பதினே லெழுத்தும்** உடையதாய் வரும் செய்யுள் கட்டளைக் கலித்துறை எனப்படும். இவண் குறித்த வண்ணம் எழுத்தெண்ணி வகுக்கப் பெற்ற கட்டளைத் துறைகளால் இயன்ற செய்யுளாதலின் இது 'கட்டளைக் கலித்துறை' என்னும் பெயர் பெற்றது. பிற்காலத்தா ரால் 'கட்டளைக் கலித்துறை' என்ற பெயரால் வழங்கப் பெறும் இச் செய்யுள் தொல்காப்பியர் செய்யுளியலில் விரித்துரைக்கப் பெற்றுள்ள பழைய யாப்பிலக்கணத்தின்படி ஐஞ்சீர் நான்கடியால் வந்த **தரவு கொச்சகம்** எனப்படும்.

இதிலுள்ள அற்புதத் திருப்பதிகங்களைக் காட்டுவேன். சமண் சமயத்தைச் சார்ந்த **மருள் நீக்கியார்** அச் சமயத்தைத் துறந்து திருவதிகையை அடைந்து தம் தமக்கையர் (திலகவதியார்) அளித்த திருநீற்றினைப் பூசி அதிவீரட்டானத்து எழுந்தருளிய பெருமானைப் பணிந்து உரைத்த தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு பெற்று முதன் முதலாகப் பாடியருளிய **'கூற்றாகினவாறு விலக்ககிலீர்'** (4.1) என்னும் திருப்பதிகமும், சமணர்கள் தம் மன்னன் துணை கொண்டு இடறச் செய்தபொழுது சிறிதும் கலங்காது இறைவன் திருவருளை நினைந்து போற்றிய **'சுண்ண வெண் சந்தனச் சாந்து'** (4.2) என்ற திருப்பதிகமும், சமணர்கள் பெருமானைக் கல்லுடன் கட்டிக் கடலில் தள்ளிய பொழுது அக்கல்லே தெப்பமாக மிதக்கும்படிபாடிய **'சொற்றுணை வேதியன்'** (4.1) என்ற நமச்சிவாயத் திருப்பதிகமும், தம்மை உய்வித் தருளிய திருப்பாதிரிப் புலியூர் பெருமானைப் பரவிப் போற்றிய **'ஈன்றாளுமாய்'** (4.94) என்னும் திருப்பதிகமும், தம்

---

7. நம்மாழ்வார் அருளிய 'திருவிருத்தம்' என்பது அவர் அருளிய முதல் பிரபந்தம் (100 பாசுரங்களைக் கொண்ட அகத்துறைப் பிரபந்தம்)

திரு மேனியில் இடபக்குறி சூலக்குறி என்பவற்றைப் பொறித்து அருளுமாறு பெண்ணாகடத்துத் திருத்தூங்கானை மாடத்துப் பெருமானை வேண்டிப் போற்றிய **'பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்** (4.109) என்னும் திருப்பதிகமும், அப்பூதியடிகள் திருமாளிகையில் அரவு தீண்டி மரித்த மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்றெழும்படிப் பாடியருளிய **'ஒன்று கொலாம்'** (4.18) என்ற திருப்பதிகமும், கயிலை நோக்கிச் சென்ற வாகீசரை இடைவழியில் ஒரு முனிவராய்த் தோன்றி அவர் பணித்தவண்ணம் ஒரு குளத்தில் மூழ்கி திருவையாற்றில் வந்தெழுந்து சக்தியும் சிவமுமாய்த் தோன்றிய தெய்வக் காட்சியைக் கண்டு மகிழ்ந்து பாடிய **'மாதர் பிறைக் கண்ணியானை'** (4.3) என்ற திருப்பதிகமும் நான்காம் திரு முறையிலுள்ள அற்புதத் திருப்பதிகங்களாம், இத்திருமுறையில் **நூற்றுப்பதின் மூன்று** திருப்பதிகங்கள் அடக்கம்.

(5) ஐந்தாம் திருமுறை

'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' (5.1) என வரும் கோயில் திருக்குறுந் தொகை முதலாக **'வேத நாயகன்'** (5.100) என்ற ஆதிபுராணத் திருக்குறுந்தொகை ஈறாகவுள்ள நூறு திருப்பதிகங்களின் தொகுதி **ஐந்தாம் திருமுறை** என வழங்கப்பெறுவது. இத் திருமுறையிலுள்ள பதிகங்கள் யாவும் **'குறுந்தொகை'** என்னும் ஒரே யாப்பில் அமைந்த திருப் பாடல்களால் இயன்றனவாதலின் யாப்பமைதி கருதி இவற்றை ஒரே திருமுறையாக நம் முன்னோர் முறைப்படுத்தினார்கள். **குறுந்தொகை யாப்பு** என்பது **நாற்சீர் நாலடியாய** அடிதோறும் **தேமா, புளிமா** என்னும் **மாச் சீர்களுள்** ஒன்று முதற் சீராகவும், **கருவிளம், கூவிளம்** என்னும் **விளச்சீர்களுள்** ஒன்று நான்காம் சீராகவும் இடையிலுள்ள இரண்டு மூன்றாம் சீர்கள் பெரும்பாலும் **விளச்சீர்களாகவும்** அமைய வரும் செய்யுள் விகற்பமாகும்.

சிலப்பதிகாரத்தில் **வேட்டு வரியில்** வரிப்பாடல்கள்.[8] இக் குறுந்தொகை யாப்புக்குரிய பழைய இலக்கியங்களாகக் கொள்ளத் தக்கனவாகும். இவண் குறிப்பிட்ட **அன்னம் பாலிக்கும்** (5.1) பாடலையும் இவண் குறிப்பிட்ட வேட்டுவ வரிப்பாடல்களையும் ஒப்பு நோக்குவார்க்கு அப்பர் பெருமான் அருளிய இக்குறுந் தொகை யாப்பு **இளங்கோவடிகள்** வாழ்ந்த காலப்பகுதியாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே நாட்டில் பரவி வழங்கிய தொன்மையுடையது என்பது நன்கு புலனாகும்.

(ஒரு) மா கூவிளம் கூவிளம் கூவிளம் என்பது திருக்குறுந் தொகை என்னும் செய்யுளின் கட்டளையாகும். முதல் சீர் **தேமா** வாயின் அடியின் எழுத்துத் தொகை ஒற்று நீக்கிப் **பதினொன்றாம்; புளிமா** வாயின் **பன்னிரண்டாம்.** ஓரடிக்குள் அமைந்த **தளைகளுள்** முதல் தளை **நேரொன்றாசிரியத்தளை;** இரண்டும் மூன்றும் ''**வெண்டளைகள்**. இவண் குறித்த எழுத்துக் கணக்கும் தளை யமைதியும் வேறுபடாது நிற்கச் சீர்கள் வேறுபட்டு வரலாம்'' என இக்குறுந்தொகை யாப்பின் அமைப்பினை விளக்குவர் யாழ் நூலாசிரியர்.[9] பத்தெழுத்து முதல் பதினான் கெழுத்தளவும் பெற்று வரும் அளவடியாகிய நாற்சீரடியுள் பதினொன்றும் பன்னிரண்டு மாகக் குறைந்த எழுத்துக்களைப் பெற்று வருவன இப்பாடல் களாதலின் இவை **'குறுந்தொகை'** எனப் பெற்றன.[10]

சிவபெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலங்களையெல்லாம் கண்டிறைஞ்சி கைத்திருத்தொண்டு செய்யும் கடமையினை மேற்கொண்ட அப்பர் பெருமான் இறைவ னது பேரருளை நினைந்து ஒரு தலத்திலிருந்து மற்றொரு

---

8. சிலப்.மதுரை.காடுகாண்-வேட்டுவ வரி காண்க.

9. யாழ் நூல் - பக் 210

10. 'அளவடி நான்கின கலி விருத்தம்மே' (யாப்பருங்கலம் செய்யுளி நூற்.89) என்னும் பிற்கால யாப்பிலக் கணவிதியை யொட்டி இக்குறுந்தொகையைக் 'கலி விருத்தம்' என்ற பாவினத்துள் அடக்குவாரும் உளர்.

தலத்திற்கு நடந்து செல்லும் பொழுதும்[11] அவ்வத் தலங்களிலுள்ள திருக் கோயில்களை அடைந்து உழவாரத் தொண்டு முதலிய திருப்பணிகளைச் செய்யும் போதும்[12], தம் பெருமானாகிய இறைவனை முன்னிலையாக்கிப் போற்றும் நிலையிலும்[13], அவ் விறைவனது பொருள் சேர் புகழை உலக மக்களுக்கு எடுத் துரைக்கும் நிலையிலும்[14] பாடிப் பரவுதற்கேற்ற சந்தமாக இக் குறுந்தொகை யாப்பு அமைந்திருத்தல் காணலாம்.

ஆழ்வார்கள் அருளிச் செயலாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கை யாழ்வார் அருளிச் செய்த திருப்பாசுரங் களுள் **திருக் குறுந் தாண்டகம்** என்னும் பனுவல் இடம் பெற்றுள்ளது. (பெரிய திருமொழியில் இது அடக்கம்)

(6) ஆறாந்திருமுறை

தனக்குவமை இல்லாத தலைவனாகிய முழுமுதற் பொருளின் எண்ணிறந்த திருக் குணங்கள் எல்லாவற்றையும் அப்பெருமான் திருமுன்னரும் தம் முன் உள்ள அன்பர்கட்கும் பிறர்க்கும் தமது நெஞ்சிற்கும் விரித்துரைத்தற் கேற்ற யாப்பமைதி பெற்று விளங்குவன திருத்தாண்டகத் திருப்பதிகங்களாகும். ஆறாம் திருமுறையாகிய இப்பகுதியில் **'அரியானை அந்தணர் தம் சிந்தையானை'** (6.1) எனத் தொடங்கும் கோயில் - பெரிய திருத்தாண்டகம் **முதலாக 'எண்ணுகேன் எனச் சொல்லி எண்ணுகேனோ?** (6.99) எனத் தொடங்கும் **திருப்புகலூர்த் திருத் தாண்டகம் ஈறாகத் தொண்ணூற்றொன்பது** திருப் பதிகங்கள் அடக்கம்.

---

11. பெரி.புரா.திருநாவு.புரா.174
12. மேலது - மேலது - 171
13. மேலது - மேலது - 269
14. 'தொழற் பாலதே' என்னும் திருக்குறுந்தொகை முதலிய திருப்பதிகங் களின் பாடல் அமைதியை நோக்கி உணர்க.

(7) ஏழாம் திருமுறை

'ஏழாந்திருமுறை' என்பது சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகங்கள் அனைத்தையும் கொண்ட ஒரு தொகுதி. இத் திருமுறையில் **'பித்தா பிறைசூடி'** (7.1) என்னும் திருப்பதிகம் முதலாக, **'தானெனை முன் படைத்தான்'** (7.100) என்னும் திருப்பதிகம் **ஈறாக நூறு** திருப்பதிகங்கள் உள்ளன. பாடல்களின் தொகை **ஆயிரத்திருப்பத்தாறாகும்.** இத்திரு முறையில்,

இந்தளம்	**பியந்தைக் காந்தாரம்**
தக்கராகம்	**காந்தாரப் பஞ்சமம்**
நட்டராகம்	**நட்டபாடை**
கொல்லி	**புறநீர்மை**
கொல்லிக் கௌவாணம்	**சீகாமரம்**
பழம் பஞ்சுரம்	**குறிஞ்சி**
தக்கேசி	**செந்துருத்தி**
காந்தாரம்	**கவுசிகம்**

பஞ்சமம்

எனப் **பதினேழு** பண்களுக்குரிய திருப் பதிகங்கள் முறையே தொகுக்கப் பெற்றுள்ளன.

நம்பியாரூரர்க்குத் திருமணம் நிகழவிருக்கும் பொழுதிலே சிவபெருமான் வழக்குரைத்து வென்று, அங்குள்ளார் யாவரும் காண திருவெண்ணெய் நல்லூர் **அருட்டுறை** கோயிலில் புகுந்து மறைந்தருளினார். அப்போது அப்பெருமான் பணித்தருளிய வண்ணம் **'பித்தா பிறைசூடி'** (7.1) எனப் பாடிய பதிகம் ஆதலின் இஃது இந்த ஏழாம் திருமுறையில் **முதற்கண்** வைக்கப் பெறுவதாயிற்று. இத்திருப்பதிகத்துக்குரிய பண் **இந்தளம்.** ஆதலின் இப்பண்ணில் அமைந்த பதிகங்கள் இதனைச் சார வைக்கப்பெற்றன.

தம்பிரான் தோழராகிய சுந்தரர் பல தலங்களையும் சேவித்து **திருவஞ்சைக்களம்**[15] பெருமானை இறைஞ்சிப் போற்றும் நிலையில் கயிலைப் பெருமான் ஆணையின் வண்ணம் தேவர் முனிவர் களுடன் அங்கு வந்த வெள்ளையானையின் மீது அமர்ந்து திருக் கயிலாயம் சென்றார் என்பது வரலாறு. அப்போது பாடிய திருப் பதிகம் **'தானெனை முன் படைத்தான்'** (7.100) என்பது. இஃது இவ்வேழாந்திருமுறையின் **இறுதிக் கண்** வைக்கப்பெற்றது.

திருவெண்ணெய் நல்லூரில் அருட்டுறைப் பெருமானால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற நம்பியாரூரர் அப் பெருமானது திருவருள் இன்பத்தில் திளைத்துப் போற்றிய 'பித்தா பிறைசூடி, பெருமானே அருளாளா' என்ற திருப்பதிகத்தினை முதலாகக் கொண்டு தொடங்கிய இத்திருமுறை சேரமான் தோழராகிய சுந்தரர் இறைவனது அருளிப் பாட்டின் வண்ணம் திருவஞ்சைக் களத்திலிருந்து வெள்ளானை மீதமர்ந்து **திரு நொடித்தான்**[16] மலையாகிய திருக்கயிலாயத்தை அடைந்து தாம் பெற்ற திருவருள் இன்பத்தை நிலவுலகத்தார்க்குப் புலப்படுத்தும் நிலையில் ஆழி

---

15. **திருவஞ்சைக்களம்:** (திருவஞ்சிக் குளம்) இது திருச்சூரிலிருந்து (கேரளம்) 30 கல் தொலைவிலுள்ளது. திருச்சூரிலிருந்து கொடுங்கோளூர் (Granganore) செல்லும் பேருந்தில் கொடுங்கோளூருக்கு எதிர்க்கரையில் இறங்கி உப்பங்கழி வழியே (Backwaters) வஞ்சி (சிறு படகு) அமர்த்திக் கொண்டு அம்பலம் (கோயில்) போகலாம். சேர நாட்டு வழக்கப்படி நீராடி ஈர ஆடையுடன் செல்ல வேண்டும். பட்டுடுத்தியும் செல்லலாம். அஞ்சைக் களத்தப்பர் தரை மட்டத்திற்கு மேல் சில அங்குல உயரமே உள்ளார். தலைக்குத் தலை (7.4) இரண்டாவது திருப்பாடல் கூறுவதைத் திருமேனியின் சிரசில் சேவிக்கலாம். முதல் சுற்றின் ஒரு சிறு அறையில் சேரமானும் தம்பிரான் தோழரும் செப்புத் திருமேனிகளாகக் காட்சி தருகின்றனர். ஆடி சுவாதியன்று தமிழ் நாட்டு மக்கள் திரளாகச் சென்று வழிபடுகின்றனர்.

16. நொடித்தான் சிவபெருமான்; நொடித்தல் - அழித்தல்' இறைவன் எழுந்தருளிய மலை கைலை; அது நொடித்தான் மலை.

கடலரையனாகிய வருணனை நோக்கித் திருவஞ்சைக் களத்தப் பருக்கு அறிவிக்கும்படி பணித்த திருப் பாடலுடன் நிறைவு பெற்றிருத்தல் அறிந்து மகிழத் தக்கதாகும்.

நூறு திருப்பதிகங்களால் இயன்ற இத் திருமுறையில் **'தென்றமிழ்ப் பயனாய் வந்த திருத்தொண்டத்தொகை'** (7.39) முப்பத்தொன்பதாம் பதிகமாகவும், திருவைந்தெழுத்தின் சிறப்பினை உணர்த்தும் **நமச்சிவாயத் திருப்பதிகம்** (7.48) நாற்பத்தெட்டாம் பதிகமாகவும், அமைந்திருத்தல் காணலாம். சிந்தையின் தெளி வினைப் புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது பஞ்சமம் என்ற பண்ணாகும். சிந்தையில் தெளிவுடையோர் **'பஞ்சமம்'** என்னும் இப்பண்ணில் பரமனைப் பாடி மகிழ்வர். 'பஞ்சமம் பாடியாகும் தெள்ளியார்கள்ளந்தீர்ப்பார்' (4.29:3) என்பது திருநாவுக்கரசரின் திருவாக்கு. திருவஞ்சைக் களத்துப் பெருமானைப் பாடிப் போற்றும் நிலையில் 'வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட் டொழித்தேன்' என்ற தெளிவுடைய சிந்தையினராகிய நம்பியாரூரர் அஞ்சைக் களத்து இறைவன் பால் விடை பெற்றுத் திருநொடித் தான் மலையை நோக்கிச் செல்லும் பொழுது 'சிந்தையும் தெளிவு மாகித் தெளிவினும் சிவமுமாகி' (4.48:5) என்றவாறு சிவபரம் பொருளைத் தியானிக்கும் நிலையில் பாடிய **'தான் எனைமுன் படைத்தான்'** (7.100) என்ற பதிகம் பஞ்சமம் என்ற பண்ணில் அமைந்திருத்தல் மிகவும் பொருத்தமுடையதாகும்.

வடமொழி யாப்பிலக்கண மரபு

வடநூல் வழித் தமிழறிஞர் சிலர் தமிழ்ச் செய்யுள் வகை களுக்கு **வடமொழி யாப்பிலக்கண மர**பை அடியொற்றி **லகு குரு** என்னும் எழுத்தமைப்பினைக் கொண்டு புதிய இலக்கணங் களைக் கற்பித்துக் கூறியுள்ளனர். தமிழில் பிற்காலத்தவர் ஏற்றி யுரைத்த இவ்விருத்த இலக்கணம் வடமொழி நூல்களில்

விரிவாகக் கூறப் பெற்றுள்ளது; **வீர சோழிய** ஆசிரியர் தமிழில் ஓரளவு சுருங்கக் கூறியுள்ளார்.

தனிக் குற்றெழுத்தாய் வருவது **லகு**. குற்றொற்று, நெடில், நெட்டொற்று ஆக வருவது **குரு**. குற்றெழுத்து ஈற்றில் நின்ற நிலையிலும் விட்டிசைத்த நிலையிலும் குருவாதலும் உண்டு. **லகுவுக்கு** ஓரலகும் **குருவுக்கு** இரண்டலகும் கொள்வர். எனவே **இரண்டு லகு** கூடி **ஒருகுருவாக** மதிக்கப்படும் நிலையை அடைவதும் உண்டு. **லகு, குரு** என்னும் இவ் விரண்டினையும் வைத்து உறழ்தலினால் **விருத்த பேதங்களைத்** தோற்றுவிக்கலாம்.

வடமொழி விதிகளை அடியொற்றி எழுத்தெண்ணி வகுக்கப் படும் செய்யுட்களைத் தமிழில் முறைப்படி சீர் வகையால் பகுத்து நோக்குமிடத்து அவற்றின் ஓசையும் சந்தமும் மேலும் வேறுபடுதல் காணலாம். இசைத்தமிழ் உருக்களாகிய தேவாரத்திருப் பாடல் களை அவற்றின் கட்டளை ஓசை வேறுபடாது வகைப்படுத்த வேண்டுமாயின், இசைத்தமிழில் **ஆளத்தி** செய்தற்குரிய அசைச் சொற்களாகிய

தென்னா, தெனா, தென்னா, தெனா

என்பவற்றின் திரிபுகளாக இக் காலத்து வழங்கும்

தானா, தனா, தான, தன,

தனன, தானன, தனனா, தானனா,

தனான, தானான, தனானா, தானானா

எனவரும் சந்தக் குழிப்புகளாளாகிய சீர் நிலைகளைக் கொண்டு அடி வகுத்தல் அமைவுடைய தாகும்.

தன - இரு **லகு** கொண்டது

தானா - இரு **குரு** கொண்டது

தனா - ஒரு **லகுவும்** ஒரு **குருவும்** கொண்டது

தான - ஒரு **குருவும்** ஒரு **லகுவும்** கொண்டது

இவை **நான்கும்** ஈரெழுத்துகளால் இயன்றன.

தனன - மூன்று **லகு** கொண்டது.

தானானா - மூன்று **குரு** கொண்டது

தனானா	
தானனா	
தனனா	இவை **லகுவும் குருவும்**
தானான	விரவி வந்த மூவெழுத்துச் சீர்கள்
தானான	
தனான	
தானன	

இவை எட்டும் மூன்றெழுத்துகளால் வரும் விருத்த அடிகள் என்பர்.

வே	ரம்	போய்
மா	ரன்	சீர்
சே	ருங்	கால்
நேர்	வன்	யான்

இவ்விருத்தம் **மூன்று குருவாலாகிய** அடிகளால் வந்தது. மேற் குறித்த மூவெழுத்தடிகள் **எட்டின்** ஈற்றிலும் ஒரு **லகுவையும் ஒரு குருவையும்** தனித்தனியே சேர்த்தால் நான்கெழுத்துகளால் வரக் கூடிய விருத்த அடிகளின் உருவம் வந்து எய்தும்.

தனதன, தனாதன, தனதனா, தனாதனா,
தனதான, தனாதான, தனதானா, தனாதானா,

தானதன, தானாதன, தானதனா, தானாதனா,
தானதான, தானாதான, தானதானா, தானாதானா

இவை பதினாறும் நான்கெழுத்தால் வரும் விருத்த அடிகளாம்! இவ்வாறே ஐந்து முதலிய எழுத்துகளால் வரும் அடிகளையும் இங்ஙனம் சந்தக்குழிப்பில் வைத்துப் பெருக்கிக் காணலாம்.

கல்லால் நீழல்
அல்லாத் தேவை
நல்லார் பேணார்
அல்லோ நாமே *(3.40:1)*

இத்திருப்பாடல் '**தானா தானா**' என்னும் நான் கெழுத்தாலாகிய அடிகளால் இயன்றதாகும்.

கருவார் கச்சித்
திருவே கம்பத்
தொருவா வெனை
மருவா வினையே *(3.41:1)*

இது '**தனனா தானா**' என்னும் ஐந்தெழுத்தாலாகிய அடிகளால் அமைந்ததாகும். இதன் ஈற்றடி 'தனனா தனனா' என ஆறெழுத் தால் வந்தமை காண்க.

அரனை யுள்குவீர்
பிரம னூருளெம்
பாளை யேமனம்
பரவி யுய்ம்மினே *(1.90:1)*

இது '**தனன தானனா**' என ஆறெழுத்தால் அமைந்த அடிகளை யுடையதாகும்.

மணியா முதுகுன்றைப்
பணிவா ரவர்கண்டீர்
பிணியா யினகெட்டுத்
தணிவா ருலகிலே *(1.92:5)*

இது **'தனனா தனதானா'** எனும் ஏழெழுத்தாலாகிய அடிகளை யுடையதாகும். திருஞானசம்பந்தர் அருளிய இத் திருப்பாடல்கள் **'இருக்கு'** எனப் போற்றப்பெறும் வேத மந்திரங்களைப் போன்று இறைவனைப் போற்றும் மறை மொழிகளாகிய மந்திரங்களாய் அமைந்தமையால் பொருளமைதி பற்றி **'இருக்கு'** என்ற பெயரும், இருசீரடியாகிய குறளடிகளால் இயன்றமையால் யாப்பமைதி பற்றிக் **'குறள்'** என்ற பெயரும் பெறத்தக்கனவாதலின் இரு பெயர்களும் ஒருங்கியையப் பெற்றுத் **'திரு இருக்குக் குறள்'** என வழங்கப் பெறுவனவாயின.

இனி எழுத்தின் மாத்திரையேயன்றி அவற்றின் வன்னம், மென்மை இடைமையாகிய ஓசையமைதியினைக் குறிக்கும் முறையில் **தத்த, தந்த, தய்ய** என முறையே வல்லொற்று, மெல்லொற்று, இடையொற்றுப் பெற்று இவ்வாறு மூவேறு வாய் பாடுகளாக வழங்கும் வண்ணச் சொற்களும் உள. வண்ணப் பாடல்களில் வழங்கும் **தத்த, தந்த, தய்ய** என்னும் இவை மூன்றும், சந்தப் பாக்களில் வரும் **'தான'** என்பதும், ஒரே மாத்திரையளவினவாம். **ஒரு குரு** நின்ற இடத்தில் **இரண்டு லகு** நிற்றலும் சந்தப் பாடல்கட்குப் பொருந்தும். அஃதாவது **'தான'** என்னும் சந்தக் குழிப்பு ஒரோ வழி **'தனன'** என வருதலும் சந்தப் பாவுக்கு ஏற்கும் என்பதாம்.

கீழ்க்காட்டிய சந்த விகற்பங்களுக்கும் வண்ண விகற்பங் களுக்கும் ஏற்ற சந்தக் குழிப்பு வாய்பாடுகள் பல தேவார காலத்திற்கு முன்பிருந்தே வழங்கி வந்துள்ளன.

'தென்ன வென்று
வரிவண்டிசைசெய் திருவாஞ்சியம்' *(2.7:1)*

'தென்னென வண்டினங்கள்
செறியார் பொழில்' *(1.106:10)*

'தென்னென இசைமுரல்
சரிதையர்' *(3.85:6)*

'தெத்தென இசைமுரல்
சரிதையர்' *(3.85:3)*

'தும்பி தெத்தே யெனமுரல' *(2.72:5)*

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத் தொடர்களும்,

'தேத்தெத்தா வென்னக் கேட்டார்' *(4.32:10)*

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரத் தொடரும்,

'தென்னாத் தெனாத் தெத்தெனா வென்றுபாடி' *(7.2:6)*

எனவரும் சுந்தரர் தேவாரத் தொடரும் முறையே **தென்ன, தென்னென, தெத்தென, தெத்தே, தேத்தெத்தா, தென்னாதெனா, தெத்தெனா** என்னும் இசைக்குரிய அசைச் சொற்களை எடுத்து ஆண்டுள்ளன. இவ்வாறே,

'தந்த நித்தந் தடமென்
றருவித்திரள் பாய்ந்து போய்' *(2.5:4)*

எனவும்,

'தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடும்'

எனவும் வருந்தொடர்களில் **தந்த, திந்த, தேம், தாம்** என ஆடற்குரிய சதிச் சொற்கள் சிலவற்றை ஆளுடைய பிள்ளையார் குறித்துள்ளார். பிள்ளையார் அருளிய **'பந்தத்தால்'** (1.126:1) எனத் தொடங்கும் **திருத்தாளச் சதி திருப்பதிகம்,** இசையுடன் பாடும் அளவிலன்றி, நாடக மகளிர் ஆடரங்குகளில் பாடியாடுதற் கேற்ற பொருள் பொதிந்த தாளச் சொற்கட்டுகளாக அமைந் திருத்தல் அறிந்து மகிழத்தக்கதாகும்.

கட்டளை

இயலிசைத் தமிழாகிய, தேவாரத்திருமுறைகளில் ஒவ்வொரு பண்ணிலும் அமைந்த திருப்பதிகங்களின் யாப்பு வகையினைக் **'கட்டளை'** என வழங்குதல் மரபு. **'கட்டளை'** என்பது மாத்திரை யளவும் எழுத்தியல் நிலையும் பற்றிச் செய்யுட்களில் அமைந்த ஓசைக் கூறுபாடாகும். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை உரையில் 'ஆடல் பாடல் இசையே தமிழே' எனவரும் தொடருக்கு 'தமிழ்' என்பதற்கு 'வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தாலே கட்டப்பட்ட **ஓசைக் கட்டளைக் கூறுபாடுகளும்'** என **அரும்பத வுரையாசிரியர்** விளக்கவுரை கூறுவர். இதனைக் கூர்ந்து நோக்குங் கால் இசைத் தமிழில் வழங்கும் **'கட்டளை'** என்ற சொல், செய்யுட்களில் அமைந்த ஓசைக் கூறுபாட்டினையே குறிப்பதென்பது நன்கு துணியப்படும். ஓசைவகையாகிய இக் கட்டளையமைப் பினை அடியொற்றியே இசைப்பாடல்களின் **தாளம்** முதலிய பண்ணீர்மை அமைதல் இயல்பு. இந் நுட்பம் 'கட்டளைய கீதக் குறிப்பும்'[17] என வரும் பழம் பாடல் தொடரால் நன்கு புலனால் கண்டு மகிழலாம்.

ஆசிரியர் தொல்காப்பியனார், பாக்களில் பயிலும் அடிகளை அவற்றில் அமைந்த சீர்வகை பற்றியும், எழுத்தெண்ணியறிதற்குரிய **கட்டளை யோசை பற்றியும்** பகுத்துக் கூறியுள்ளார். இருசீரடி குறலடி, முச்சீரடி சிந்தடி, நாற்சீரடி நேரடி, ஐஞ்சீரடி நெடிலடி, அறுசீர் முதலாக வரும் அடிகள் கழிநெடிலடி எனப்படும்.

இங்ஙனமே சீர்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்த அடிகள் சீர்வகையடிகளாகும். இனி நாற்சீர்களால் வரும் அளவடி களையே ஒற்றும் குற்றிய லிகரமும் குற்றியலிகரமும் நீக்கி

---

17. வட்டணையுந் தூசியும் மண்டலமும் பண்ணமைய
எட்டுடன் ஈரிரண்டாண் டெய்தியபின் - கட்டளைய
கீதக் குறிப்பும் அலங்கார முங்கிளரச்
சோதித் தரங்கேறச் சூழ்

(சிலப்.அரங்கேற்று. அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்)

நாலெழுத்து முதல் ஆறெழுத்து வரையமைந்த அடிகள் **குறளடி** எனவும், ஏழெழுத்து முதல் ஒன்பது எழுத்துகள் அளவும் அமைந்த அடிகள் **சிந்தடி** எனவும், பத்தெழுத்து முதல் பதினான் கெழுத்தளவும் அமைந்த அடிகள் **நேரடி** எனவும், பதினைந்து முதல் பதினேழெழுத்தளவும் அமைந்த அடிகள் **நெடிலடி** எனவும், பதினெட்டு முதல் இருபத்தெழுத்தளவும் அமைந்த அடிகள் **கழிநெடிலடி** எனவும் தொல்காப்பியனார் **ஐவகையடி** களாகப் பகுத்துரைத்துள்ளார்.

இங்ஙனம் எழுத்தெண்ணி வகுக்கப்பெற்ற ஐவகை அடிகளை யும் **'கட்டளையடிகள்'** என வழங்குதல் மரபு. ஒற்று நீக்கி எண்ணுங்கால் எல்லா அடிகளும் 'எழுத்தொத்து வரும் **கலிப்பா வினைக் 'கட்டளைக் கலிப்பா'** எனவும், நெடிலடி நான்கினால் எழுத்தொத்து வரும் **கலித்துறையினைக் 'கட்டளைக் கலித்துறை'** எனவும், இவ்வாறே கட்டளையாசிரியம், கட்டளை வஞ்சி எனவும் வழங்கும் பாவகைகள் எழுத்தளவாகிய கட்டளை யோசை பற்றிப் பகுத்துரைத்தனவேயாகும்.

இயற்றமிழில் சீர்வகை பற்றிச் செய்யுட்களின் அமைப்பினைப் பகுத்துணர்தல் எளிது. இசைத் தமிழில் ஓர் எழுத்துமிகினும் குறையினும் இசையமைப்புக்குரிய **தாளம்** முதலியன மாறுபடும்.[18] ஆதலால் நெடில் குறில் ஆகிய எழுத்தளவு பற்றி இசைப்பாக் களின் அமைப்பினைப் பகுத்துணர்தல் வேண்டும். இங்ஙனம் இசைப்பாக்களின் சந்த அமைப்பினை அறிதற்குரிய கருவியாக **தான, தன, தானா, தனா** முதலாகவுள்ள அசைச் சொற்கள் இசைத் தமிழ்ப் பாடல்களுக்குரிய சந்தக் குழிப்புச் சொற்களாக இசை யாசிரியர்களால் எடுத்தாளப் பெற்றுள்ளன.

---

18. சைவ, வைணவ அருளிச் செயல்களில் பாடல்களின் இறுதிச் சீர் யாப்புப் படி சரியாக அமைவதில்லை. சுமார் இருபது விழுக்காடு யாப்புக் குறைவு தென்படும். என் அருமை நண்பர் புதுச்சேரி டாக்டர் இளமுருகனார் (இவர் ஒரு சிறந்த இயல், இசைத் தமிழ் புலவர்) அருளிச் செயல்கள் யாவும் இசைத் தமிழேயாதலால் இறுதிச்சீரை இசையுடன் நீட்டிப்படித்தால் எல்லாம் சரியாகிவிடும் என்பார்.

12

முருகப் பெருமானது பொருள் சேர் புகழைச் சந்தமலிந்த செந்தமிழ்ப் பாடல்களால் பரவிப் போற்றிய **அருணகிரி நாதர்** தாம் பாடிய **திருப்புகழ்ப் பாடல்களின்** இயலமைப்பினையும் இசையமைப்பினையும் பின்னுள்ளோர் எளிதில் உணர்ந்து பாடு தற்கு ஏற்ற வண்ணம் **தான, தன, தானா, தனா** முதலிய இசைக் குரிய அசைச் சொற்களைத் தம் பாடல்களில் இயைத்துப் பாடியுள் ளார். அவ்வாசிரியர்க்கு இசைநெறி காட்டிய மூல இலக்கியங்கள் **மூவர் முதலிகள்** திருவாய்மலர்ந்துள்ள தேவாரத் திருப்பதிகங் களாகும். எனவே தேவாரப் பதிகங்களுக்குரிய யாப்பமைதி யினையும் நெடில் குறில் என அமைந்த எழுத்துக்களின் மாத்திரையளவினையும் கருத்தில் கொண்டுதான் **தான, தன, தானா, தனா** முதலியவற்றை வாய்பாடுகளாக வைத்து எழுத் தெண்ணி அடிவகுக்கு முகமாக அவற்றின் **கட்டளைகளைப்** பிரித்தறிதல் இயல்வதாகும்.

திருமுறை வகுத்த **நம்பியாண்டார் நம்பி** திருவெருக்கத்தம் புலியூரில் **திருநீலகண்ட யாழ்ப்பாணர்** மரபில் பிறந்த இசைச் செல்வியராகிய **பாடினியார்** ஒருவரைக் கொண்டு மூவர் தேவாரப் பதிகங்களுக்கும் இசையமைத்தார் என்பதும் அவ்வாறு அமைத்த இசை முறையில் இன்ன இன்ன பண்களுக்குரிய பதிகங்கள் இத்தனை இத்தனை கட்டளைகளையுடையன என்பதும் திருமுறை கண்ட புராணத்தில் தெளிவாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. திருமுறை கண்ட புராணம் கூறும் முறையில் இன்னின்ன பண்களில் அமைந்த திருப்பதிகங்களின் கட்டளைகள் இத்துணையன என்பதனை **விபுலானந்த அடிகளார்**[19] தாம் இயற்றிய யாழ் நூலில் **'தேவார இயல்'** என்ற பகுதியில் விரிவாகப் பகுத்துக் காட்டியுள்ளார்கள். அந்நூலில் கூறப் பெற்றுள்ள பகுப்பு முறை யினை அடியொற்றித் தேவாரத்தில் ஒவ்வொரு பண்களிலும்

19. யாழ்பாணத்தைச் சேர்ந்தவர்; யாழ்நூல் ஆசிரியர்; சில ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

அமைந்த திருப்பதிகங்களின் கட்டளைப் பகுப்பினைக் தெளி வாகத் தெரிந்து கொள்ளலாம்.

முதலாந் திருமுறை

சம்பந்தர் திருப்பதிகங்களின் கட்டளை வகைகளை முறையே காண்போம். முதல் திருமுறையில் முதற் பண்ணாக அமைந்தது **நைவளம்** என்னும் நட்டபாடையாகும். **'தோடுடைய செவியன்'** (1.1) என்பது முதல் **'சிலைதான நடுவிடை'** (1.22) என்பது ஈறாக 22 திருப்பதிகங்கள் நட்டபாடை பண்ணில் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பதிகங்களில் அமைந்த **கட்டளைகள் எட்டு** என்பது 'சொல் நட்டபாடைக்குத் தொகை எட்டுங் கட்டளை யாம்' என்னும் திருமுறை கண்ட புராணத் தொடரால் புலனாகும். **நட்டபாடைப்** பதிகங்களில் அமைந்த எட்டுக் கட்டளைகளையும் ஆடியிற் கண்டவாறு ஒவ்வோரடியில் வைத்துப் பகுத்துக் காணலாம்.

நட்டபாடை

கட்டளை - 1

தோடு டையசெவி யன்விடை
தான தானதன தானன
யேறியோர் தூவெண் மதிசூடி (1.1:1)
தானன தானா தனதானா

கட்டளை - 2

தாணுதல் செய்நிறை காணிய
தானன தானன தானன
மாலொடு தண்டா வரையாறும் (1.1:9)
தானன தானா தனதானா

கட்டளை - 3

மைம்மரு பூங்கழற் கற்றையதுற்ற
வாணுதல் மான்விழி மங்கை யொடுங் (1.4:1)
தானன தானன தானதான
தானன தானன தானதானா

கட்டளை - 4

தோலுடையான் - வண்ணப் - போர்வையினான்
சுண்ணவெண் ணீறுது தைத்தி லங்கு (1.5:4)
தானதனா - தன - தானதானா
தானன தானன தான தானா

கட்டளை - 5

வண்டார்குழ லரிவையொடு
பிரியாவகை பாகம் (1.9:1)
தானாதன தனனாதன
தனனாதன தானா

கட்டளை - 6

குரவங் கமழ்நறுமென்
குழலரிவை யவள்வெருவப் (1.13:1)
தனனா தனதனனா
தனதனனா தனதனனா

கட்டளை - 7

பிறையணி படர்சடை முடியிடை
பெருகிய புனலுடை பவனிறை (1.19:1)
தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன

கட்டளை - 8

பிறையணிபடர் சடைமுடியிடை
பெருகியபுன லுடையவனிறை (1.19:1)

தனதனதன தனதனதன
தனதனதன தனதனதன

குறிப்பு: கட்டளை - 7இன் மாற்று வடிவமே கட்டளை - 8இன் வடிவம்.

இவண் குறித்த வண்ணம் கட்டளை யோசைகளைப் பகுத்துக் காணுமிடத்துத் '**தானன தானன**' என்புழி முன்னுள்ள '**தானன**' என்பதன் ஈற்றெழுத்து அடுத்த சீரினை அவாவித் '**தானதனாதன**' எனப் பிரித்திசைத்தலும் '**தானன**' என்பதன் முதலிலுள்ள நெடில் இரு குறிலாகித் '**தனதன**' என வருதலும், சில இடங்களில் குறில் விட்டிசைத்து, நெடிலாதலும், இம்முறையே '**தான**' '**தனன**' ஆதலும், **தனன**, '**தான**' ஆதலும், '**தானா**' '**தனனா**' ஆதலும், '**தனனா தானா**' ஆதலும் '**தானாதன**' என்ற சீரின் விகற்பங் களாய்த், **தன்னாதன, தனதந்தன, தானந்தன, தத்தந்தன, தத்தாதன, தந்தாதன** என வருதலும் கட்டளை யோசைக்கு ஏற்ற வண்ணம் ஒத்தவாய்பாடுகளாகக் கொள்ளத்தக்கனவாம். **நட்ட பாடைப் பதிகங்களில்** வெளிப்படையாகத் தோன்றும் யாப்பு விகற்பங்கள் நான்காம். அவை முறையே 1-3, 4-8, 9-18, 19-22ஆம் பதிகங்களின் யாப்பாகும். இவை ஒவ்வொன்றும் சீர்களின் எழுத்துகள் பிரிந்து இசைத் திறத்தால் இருவகையாகி எட்டுக்கட்டளைகளாயினவாறு காணலாம்.

இனி, இத்திருமுறையில் **நட்டபாடையினை** அடுத்து அமைந்த பண் **தக்கராகம்.** இப்பண்ணில் 23-ஆம் பதிகம் முதல் 46-ஆம் பதிகம் வரை **இருபத்து நான்கு** பதிகங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இவற்றில் காணப்படும் **கட்டளை விகற்பங்கள் ஏழாகும்.** 'இன்னிசையால் தகுந்தக்க ராகத்து ஏழ் கட்டளையாம்' என்பது திருமுறை கண்ட புராணம்.

தக்கராகம்

கட்டளை - 1

மடையில் வாளை பாய மாதரார் (2.23:1)
தனனா தானா தானா தானானா

கட்டளை - 2

விதியாய்விளை வாய்வினை
வின்பய னகித் (1.30:1)
தனனாதன தானன
தானன தானா

கட்டளை - 3

அடலே றமருங் கொடியண்ணல் (1.34:1)
தனனா தனனா தனதான்ா

கட்டளை - 4

அந்தமு மாதியு மாகிய அண்ணல்
ஆரழ லங்கைய மர்ந்திலங்க (1.39:1)
தானன தானன தானன தான
தானன தானன தானதந்த

(முதலடியும்
மூன்றாமடியும்)

மந்தமு ழவமி யம்ப மலைமகள்
காணநின் றாடிச்
தானன தானன தான தானன
தானன தான

(இரண்டாமடி)

கட்டளை - 5

சீரணி திகழ்தரு மார்பில்வெண் ணூலர்
திரிபுர மெரிசெய்த செல்வர் (1.41:1)
தானன தானன தானன தான
தனதன தனதன தான

என வரும்.

பைம்மா நாகம் பன்மலர் கொன்றை
பன்றிவெண் கொம்பொன்று பூண்டு (1.42:1)
தானா தானா தானன தானா
தானன தானன தானா

எனவருவதும் இக்கட்டளையில் அடங்குதல் கண்டு மகிழலாம்.

கட்டளை - 6

வடந்திகழ் மென்முலை யாளைப்
பாகம தாக மதித்து (1.43:1)
தானன தானன தானா
தானன தான தனனா

கட்டளை - 7

குண்டைக் குறட்பூதங் குழும வனலேந்தி (1.46:1)
தானா தனதானா தானன தனதானா

என வரும்.

விண்ட கொடையலான் - ஆடும் -
வீரட் டானத்தே
தான தனதானா - தானா -
தானா தானானா

என இப்பாடலின் நான்காம் அடியின் இடையிலே 'ஆடும்' என்ற ஒருசொல் மிக்கு வந்தமை காணலாம்.

தக்க ராகப் பண்ணுக்குரியனவாக இவண் குறித்த **கட்டளைகள் ஏழும்** 23-30; 31-33; 34-38; 39-40; 41-42-43; 44; 46-ஆம் பதிகங்களில் முறையே அமைந்திருத்தல் காணலாம். இவற்றிடையே 45-ஆம் பதிகமாகவுள்ள **'துஞ்ச வருவார்'** என்னும் முதற்குறிப்புடைய பதிகம் **பழம்பஞ்சுரம்** என்ற பண்ணுக்கு உரியதென்பதும், இப்பதிகம் **தக்கராகப் பண்ணில்** சேர்க்கப் பெற்றிருப்பது பிற்காலத்தில் ஏடெழுதுவோர்களால் நேர்ந்த பிழை என்பதும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கனவாகும். இவ்வுண்மை,

'துஞ்ச வருவார்' (பெரி.புரா.திருஞான - 1010) எனத் தொடங்கும் சேக்கிழார் பெருமான் பாடலால் நன்கு தெளியப் படும்.

பழந்தக்கராகப் பண்ணுக்கு உரியனவாக இத்திருமுறையில் 47 முதல் 62 வகை **பதினாறு** பதிகங்கள் உள்ளன. இப்பதிகங் களில் அமைந்த கட்டளை விகற்பம் **மூன்று** எனத் திருமுறை கண்ட புராணம் கூறும். ஆயினும் இவற்றை யாப்பியல்பு ஒன்றையே நோக்கி வகைப்படுத்துங்கால் இவை **ஆறு** வகையாக அமைந் திருத்தல் காணலாம்.

பழந்தக்கராகம்

1. பல்லடைந்த வெண்டலையிற்
   பலிகொள்வ தன்றியும்போய் (1.47:1)

   தானதான தானதான
   தனதன தானதான

(47 முதல் 51 வரை உள்ள பதிகங்கள் ஒரே நீர்மையன)

2. மறையுடையாய் தோலுடையாய்
   வார்சடையே வளரும் (1.52:1)

   தனதனனா தனதனனா
   தானதனா தனனா

(52-ஆம் பதிகம்)

3. தேவாயும் அசுரராயும் சித்தர்செழு மறைசேர் (1.53:1)
தானதான தனனதான தானாதன தனனா

(53-ஆம் பதிகம்)

4. பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால் (1.54:1)
தானா தானன தானன தானன
தானா தானன தானானா

என முன்னுள்ள இரண்டடிகளைப் போலவே பின்னிரண்டடிகளும் வந்து முடிவன 54-58ஆம் பதிகங்கள்.

5. ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம் (3.59:1)
தனனா தனதனன தானாதனா
தனதான தான தனனாதன

(59-ஆம் பதிகம்)

6. வண்டரங்கப் புனற்கமல
மதுமாந்திப் பெடையினொடும் (1.60:1)
தானதன தனதனன
தனதான தனதனன

(60-62ஆம் பதிகங்கள்)

இவண் காட்டியவற்றுள் 47 முதல் 53 முடியவுள்ள பதிகங்களில் காணப்படும் முதல் மூன்று யாப்பு விகற்பங்களும் 60 முதல் 62 வரையுள்ள பதிகங்களில் காணப்படும் **ஆறாவது** யாப்பு விகற்பமும் நாற்சீரடியால் இயன்ற **கொச்சகக் கலிப்பாக்களாய்** இசைவகையால் ஒரே தன்மையினவாக அமைந்துள்ளன. எனவே இந் நால்வகை யாப்பையும் ஒரே கட்டளையாகக் கொள்ளுதல் ஏற்புடையதாகும். இனி நான்காவதாகக் குறிக்கப்பட்ட யாப்பும் ஐந்தாவதாகக் குறிக்கப்பட்ட யாப்பும் **இரு வேறுபட்ட** கட்டளைகளாகும். 'பண்ணு பழந்தக்கராகப் பண்ணின் மூன்றுளவாம்' என

வரும் திருமுறை கண்ட புராணத் தொடரைக் கருத்திற் கொண்டு இவண் குறித்த யாப்பு வகை **ஆறையும்** கூர்ந்து நோக்கின் அவையனைத்தும் முன் குறித்தபடி **மூன்று கட்டளைகளுள்** அடங்குதல் புலன் ஆகும்.

இத்திருமுறையில் 63 முதல் 74 வரையுள்ள **பன்னிரண்டு** பதிகங்களும் **தக்கேசிப்** பண்ணுக்கு உரியன. இப்பதிகங்களில் அமைந்த கட்டளைகள் **இரண்டாகும்.**

தக்கேசி

கட்டளை - 1

எரியார் மழுவொன் றேந்தி
யங்கை யிடுதலை யேகலனா (1.63:1)
தனனா தனனா தானா
தானா தனதன தானதனா

(63-65 ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.)

கட்டளை - 2

பூவார் மலர்கொண் டடியார்
தொழுவார் புகழ்வார் வானோர்கள் (1.69:1)
தானா தனனா தனனா
தனனா தனனா தானானா

என வரும்.

(66 முதல் 74 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின)

'உன்னரிய தக்கேசிக்கு ஓரிரண்டு வருவித்தார்' என்றபடி **தக்கேசிக்கு இரண்டு கட்டளையும்** வந்தன.

தக்கேசியை அடுத்துள்ளது குறிஞ்சிப் **பண்.** இப் பண்ணுக்கு உரியனவாக 75 முதல் 103 முடிய **இருபத்தொன்பது** பதிகங்கள்

உள்ளன. 'மேவு குறிஞ்சிக்கு ஐந்து' என்பதனால் இப்பதிகங்களில் வந்த கட்டளைகள் **ஐந்து** என்பது புலனாம்.

குறிஞ்சி

கட்டளை - 1

காலைநன் மாமலர் கொண்டடி பொருந்திக்
கைதொழு மாணியைக் கறுதவெங் காலன் (1.75:1)
தானன தானன தானன தனனா
தானன தானன தனதன தானா

(75-76ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின)

கட்டளை - 2

பொன்றிரண் டன்ன புரிசடை புரள
பொருகடற் பவளமொ டளனிறம் புரையக் (1.77:1)
தானன தான தனதன தனனா
தனதன தனதன தனதன தனனா

(77-79ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.)

கட்டளை - 3

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே (1.80:1)
தானா தனதானா தனனா தானானா

(80-89ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின)

கட்டளை - 4

அரனை யுள்குவீர் (1.90:1)
தனன் தானனா

என இருசீரடியாகிய குறளடி நான்கினால் இயன்ற பாவாதலின் இதனைத் **'திருவிருக்குக் குறள்'** எனப் பெயரிட்டு வழங்குவர்.

தனனா என்பது 'தானா' எனவும், **தானனா** என்பது **தனதானா** எனவும் வரும். 92 முதல் 96 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின் பாற்படும்.

கட்டளை - 5

எய்யா வென்றித் தானவ ரூர்மூன் றெரிசெய்த (1.97:1)
தானா தானா தானன தானா தனதானா

இதன்கண் அடி முதற் சீராகிய **தானா** என்பது '**தனனா**' எனவும் '**தானனா**' எனவும் '**தனதன**' எனவும் வரும். 97 முதல் 102 வரையுள்ள பதிகங்களைப் பார்க்க. 103ஆம் பதிகத்தின் முதற் பாடலை,

தோடுடை யானொரு காதிற்
றூய குழைதாழ
ஏ(எ) டுடையான் தலைகல
னாக இரந்துண்ணும்
நா(அ) டுடையான் நள்ளிரு
ளேம நடமாடும்
கா(அ) டுடையான் காதல்செய்
கோயில் கழுக்குன்றே *(1.103:1)*

எனப் பிரித்து வேண்டுமிடங்களில் அளபெடைதந்து மேற்குறித்த கட்டளையுள் அடக்குதல் வேண்டும். இவ்வாறே **ஓசை வேறு படும் இடங்களில்** விட்டிசைக்கும் குறிலை நெடிலாக்கியும் அளபெடை தந்தும் வேண்டும் செய்கை செய்து கட்டளைப் பாற்படுத்தல் வேண்டும்.

இனி, **வியாழக் குறிஞ்சி** என்னும் பண்ணில் 104 முதல் 108 வரை **இருபத்தைந்து** பதிகங்கள் உள்ளன. '**வியாழக் குறிஞ்சிக்கு ஆறு**' எனத் திருமுறை கண்ட புராணம் கூறுதலால் இப்பதிகங்களில் அமைந்த கட்டளை விகற்பங்களில் **ஆறு** என்பது புலனாம்.

வியாழக் குறிஞ்சி

கட்டளை - 1

ஆடல் அரவசைத்தான் - அரு - மாமறை
தான்விரித்தான - கொன்றை
சூடிய செஞ்சடையான் - சுடு -
காஅ டமர்ந்தபிரான்
ஏடவிழ் மாமலையான் - ஒரு - பாக
மமர்ந்தடியார் - ஏத்த
ஆடிய எம்மிறையூர்
புகலிப் பதியாமே *(1.104:1)*

தான தனதனனா தன - தானன
தானதனா - தான
தானன தானதனா - தன - தான
தன தனனா
தானன தானதனா - தன - தான
தனதனனா - தான
தானன தானதனா
தனனா தனதானா

தான, தனதனனா, தான தனதானா, தானன தானதனா என வரும் இரு சீர்க் கட்டளைப் பகுதிகளுள் ஒன்று முன்னும் பின்னும் அமைய அவற்றிடையே '**தன**' என்னும் அசைச் சீர் நிற்க, முதலடியிறுதியிலும் மூன்றாமடி இறுதியிலும் '**தான**' என ஓரசைச் சீர் பிரிந்து நிற்க, இவ்வாறு முதல் மூன்றடிகளும் வந்து, நான்காம் அடியில் முற்குறித்த இரு சீர்க் கட்டளைப் பகுதியுள், ஒன்றும் அதனையடுத்துத் '**தனனா தன தானா, தானா தனதானா**', '**தானன தான தனா**' என வரும் இரு சீர்க் கட்டளைப்பகுதியுள் ஒன்றும் வந்து முடிவது இதன் கட்டளையாகும். பாடல்தோறும் நான்காம் அடியில் பின்வந்த 'புகலிப் பதியாமே' என்பது போலும் இருசீரினையும் மீண்டும் மடித்துச் சொல்ல அவ்வடியின்

ஓசை நிறைந்து நிற்குமாறு காணலாம். 104 முதல் 108 வரை அமைந்த பதிகங்கள் ஒரே கட்டளையுட்பட்டு அடங்குவன.

கட்டளை - 2

வாருறு வனமுலை மங்கைபங்கன் (1.109:1)
தானன தனதன தானதனா

(109 முதல் 115 வரையுள்ள பதிகங்கள் இதனுள் அடங்கும்)

கட்டளை - 3

அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லு மஃதறிவீர் (1.116:1)
கூவிளம் கூவிளம் தேமாங்காய்
தேமா கருவிளங்காய்

(116, 117ஆம் பதிகங்கள் கட்டளைக் கலித்துறை யாப்பின் பாற்படுவன. 116-ஆம் பதிகத்தின் முதற்பத்துப் பாடல்களும் ஈற்றில் ஏகாரவீறு பெறவில்லை.)

கட்டளை - 4

சுடுமணி யுமிழ்நாகம்
சூழ்தர வரைக்கசைத்தான் (1.118:1)
கருவிளம் புளிமாங்காய்
கூவிளம் கருவிளங்காய்

118-ஆம் பதிகமாகிய இது 'விளம் காய் விளம் காய்' என நாற்சீரடியால் வந்த **கொச்சக ஒருபோகு**[20] ஆகும்.

---

20. **கொச்சக ஒருபோகு:** 'ஒருபோகு' என்ற தொடர் ஓர் உறுப்பு போகியது என்று பொருள்படும். கொச்சகம் ஒருவழி வாராதது கொச்சக ஒரு போகு ஆகும். கொச்சக உடை போலப் பெரும்பான்மையும் திரண்டு வருவது கொச்சகம் எனப்படும்.

கட்டளை - 5

முள்ளின்மேல் முதுகூகை
　　முரலும் சோலை (1.119:1)
தேமாங்காய் புளிமாங்காய்
　　புளிமா தேமா

119-ஆம் பதிகமாகிய இது ''காய் காய் மா மா'' என நாற் சீரடியால் வந்த கொச்சக ஒருபோகு. இதன்கண் 'ஆட-லான்', 'பாட-லான்', ஓட-லாற், காட-லாற், 'பாடெ-லாம்', என இரண்டாம் எழுத்தாகிய குற்றெழுத்து விட்டிசைத்து நெட்டெழுத்தின் நீர்மை வாய் நிற்றல் காணலாம்.

கட்டளை - 6

பணிந்தவ ரருவினை
　　பற்றறுத் தருள்செய்த (120:1)
தனதன தனதன
　　தனதன தனதன

ஈற்றடி இறுதிச்சீர் **'தனனா'** என நிற்கும். ஒரு சில பாடல் களில் இரண்டாம் அடி ஈற்றுச் சீரும் **'தனனா'** என நிற்றல் உண்டு. நெகிழ்ந்த ஓசைய வாகிய நெட்டெழுத்துகள் விரவாது குற்றெழுத்து களால் இயன்று இடையறவுபடாது பாடல் முழுவதும் தொடர்ந்து முடியும் நிலையில் முடுகிய ஓசையுடையதாய் வரும் பாடல் **அராகம்** எனப்படும். இங்ஙனம் முடுகியலாய் வரும் பாவின் ஓசையமைப்பினை 'உருட்டு வண்ணம்' என்பர் தொல்காப்பியர்.[21] 120 முதல் 125 வரையுள்ள பதிகங்கள் முடுகியலாய் அராகமாய் வருதலின் 'திருவராகம்' எனப் பெயர் பெற்றன.[22] **திருவராகம்**

---

21. 'உருட்டுவண்ணம் அராகந் தொடுக்கும்' - தொல்.செய்யுள் - 232.
22. 'மேன்மை நடையின் முடுகுவராகம்' (பெரி.புரா.ஞானசம் 277) எனச் சேக்கிழார் கூறுதலை நோக்குங்கால் முடுகிய நடையினையுடைமை பற்றியே இப்பெயர் எய்திய தென்பது நன்கு தெளியப்படும்.

என்ற பெயர் பிற்காலத்தில் '**திருவிராகம்**' எனத் திரிந்து வழங்குவதாயிற்று.

திருத்தாளச் சதி (126-ஆம் பதிகம்)

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின் றவும்பரப்
பாலே சேர்வா யேனேற்கா முனிவர்களும் (1.126:1)
தத்தத்தா தந்தத்தா தனந்தனந்த தந்தனத்
தானா தானா தானானா தனதன தனனதனா

'செற்றிட்டே வெற்றிசேர்' என வல்லொற்றுப் பயின்று வரும் இடங்களில் '**தந்தத்தா**' என்பது '**தத்தத்தா**' என அமையும். ஆடரங்குகளில் மகளிர் பரடிக்கொண்டு நடித்தற்குப் பொருந்திய தாளச் சொற்கட்டுகளாக இப்பதிகம் அமைந்தமையால் இது '**திருத்தாளச் சதி**' என்னும் பெயரித்தாயிற்று.

திருஏகபாதம் (127-ஆம் பதிகம்) ஏகம் - ஒன்று. பாதம் - அடி. ஏகபாதம் - ஓரடி. ஓரடியே பொருள் வேறுபட நான்குமுறை மடித்து வந்து ஒரு பாடலாக அமைதலின் 'ஏகபாதம்' என்னும் பெயர்த்தாயிற்று.

'பிரம புரத்துறை பெம்மா னெம்மான்'

என்ற ஓரடியே நான்குமுறை மடித்து வந்து ஒரு பாடலாக அமைந் தமை காணலாம்.

'ஏகபாதம்' என்னும் சித்திரகவிக்கு மூல இலக்கியமாக விளங்கும் இத்திருப்பதிகத்துள் 1 முதல் 10 வரையுள்ள பாடல் களும் 12-ஆம் பாடலும் நாற்சீரடிகளாலும், 11-ஆம் பாடல் ஐஞ்சீரடிகளாலும் இயன்று சீர்கள் வேறுபட்டு வருதலின் இதனை **வியாழக்குறிஞ்சி**க்குரிய கட்டளைகளுள் சேர்த்தெண்ணாது சித்திரகவி என்னும் சிறப்பு நோக்கித் தனிப்பட எண்ணுதல் முன்னோர் முறையாகும்.

திருஎழுக் கூற்றிருக்கை (128-ஆக பதிகம்) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவில்லை. 129 முதல் 135 வரை அமைந்த ஏழு திருப்பதிகங்களும் மேகராகக் குறிஞ்சி பண்ணில்

அமைந்தவை. இப்பதிகங்களில் காணப்படும் யாப்பு விகற்பங்கள் நான்காகும்.

மேகராகக் குறிஞ்சி

சேவுயருந் திண்கொடியான் திருவடியே
சரணென்று சிறந்த அன்பால் (1.129:1)
கூவிளங்காய் கூவிளங்காய் கருவிளங்காய்
புளிமாங்காய் புளிமா தேமா

(என முதற்கண் காய்ச்சீர் நான்கும் அடுத்து மாச்சீர் இரண்டும் பெற்று அறுசீரடி நான்கினால் வரும் யாப்பு. 129 முதல் 132 வரை அமைந்த திருப்பதிகங்களை நோக்கி அறியலாம்.)

2. வெந்த வெண்பொடிப் பூசுமார்
பின்விரி நூலொரு பால்பொருந்த (1.133:1)
தான தானன தானன
தானன தானன தானதனா

3. கருத்தன் கடவுள் கனலேந்தி யாடும்
தனனா தனனா தனதான தானா (1.134:1)

4. நீறு சேர்வதொர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதொர் கோலமாய் (1.135:1)
தான தானன தானன தானன
தான தானன தானனா

என முதலடி மூன்றாமடி நாற்சீரினவாகவும் இரண்டாமடி நான்காமடிகள் முச்சீரினவாகவும் வருவன.

'பாவு புகழ் மேகராகக் குறிஞ்சிப் பாலிரண்டு' எனத் திருமுறைகண்ட புராணம் கூறுதலால் இப்பதிகங்களுக்குரிய கட்டளைகள் **இரண்டு** என்பது பெறப்படும். இவண் குறிப்பிட்ட யாப்பு வகைகள் நான்கினையும் கூர்ந்து நோக்குங்கால் அவற்றுள் முதலிரண்டும் ஓரோசையாகவும் பின்னிரண்டும் மற்றோர் ஓசை

 யாகவும் ஓசை வகையால் ஒத்து நிற்றல் புலனாகும். எனவே

முதலிரண்டு யாப்பு விகற்பங்களையும் ஒரு கட்டளையாகவும், பின்னிரண்டு யாப்பு விகற்பங்களையும் மற்றொரு கட்டளை யாகவும் அமைத்துக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

யாழ்முரி (136-ஆம் பதிகம்)

முதல் திருமுறையின் ஈற்றில் அமைந்துள்ள இத்திருப்பதிகம் இன்ன பண்ணிற்கு உரிய தெனத் தெளிவாகக் குறிக்கப் பெற வில்லை. இது

மாதர் மடப்பிடியும் - மட - அன்னமு மன்னதோர்
நடை யுடைம் - மலை - மகள் துணை யென மகிழ்வர்
தான தனத்தனனா - தன - தானன தானனா
தனா - தனா - தனா - தனா தனதன தனனா

என அடிமுதற்கண் தொடங்கிய இயலும் இசையும் அவ் வடிக்குள்ளேயே முரிந்து மாறுபடும்படி அமைந்தமையால் **'முரி'** என்னும் இசைப்பாவின் பாற்படும் என்பதை நாம் அறிவோம்.

ஆளுடைய பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களின் இசை அளவுபடா நீர்மையது என்பதைத் தம் சுற்றத்தார்க்கு அறிவுறுத்த விரும்பிய திரு நீலகண்ட யாழ்ப்பாணர் பிள்ளையாரை ஒரு திருப்பதிகம் பாடியருளும்படி வேண்டிய நிலையில், பிள்ளையா ரால் **முரிவரியாக** அருளிச் செய்யப்பெற்றது இத்திருப்பதிகம். ஆதலால் இது **யாழ்முரி** என்ற பெயர் பெற்றது. தாம் வேண்டிய படி யாழில் அடங்கா வண்ணம் இப்பதிகம் பாடப்பெறுவது என்பதனை மறந்த திருநீல கண்டப் பெரும்பாணர், முன்போல் பயிற்சி வயத்தால் இதனையும் யாழில் இட்டு வாசிக்கத் தொடங்கி, பின் இயலாமை உணர்ந்து, ''இவ்வாறு யான் வாசிப்பேன் என முந்துதற்குக் காரணமாக இருந்தது இவ் யாழ்க் கருவியன்றோ?'' என மனம் நடுங்கி அக் கருவியை முரிக்க முயன்றார் என்பது வரலாறு. ஆதலின் இக் குறிப்பு நோக்கி இப் பதிகம் **யாழ்முரி** எனப் பெயர் எய்தியது எனக் கூறுதலும் உண்டு. எடுத்த இயலும் இசையும் இடையே, முரிந்து வேறுபடும் இயல்பு அமைந்த **'முரி'**

என்னும் இசைப்பா, யாழ், வீணை முதலிய நரம்புக் கருவிகளில் வைத்து எழுத்தெழுத்தாக வாசிக்க ஒண்ணாததாய்ப் பாடலர்கள் வாயினால் மட்டும் பாடுதற்கு உரிய அருமை உடையதாகும் இந்நுட்பத்தினை,

''மோந்தை முழாக்குழல் தாளமோர் வீணை
முதிரவோர் வாய்முரி பாடி'' *(1.44:5)*

எனவரும் தொடரில் வாய்முரி. என்னும் சொற்குறிப்பினால் ஆளுடைய பிள்ளையார் உய்த்துணர வைத்த திறம் உணரத்தக்க தாகும்.

இரண்டாந் திருமுறை

இதன்கண்

இந்தளம்	**பியந்தைக்காந்தாரம்**
சீகாமரம்	**நட்டராகம்**
காந்தாரம்	**செவ்வழி**

என்னும் **ஆறு** பண்களுக்குரிய 122 திருப்பதிகங்கள் முறையே தொகுக்கப்பெற்றுள்ளன.

இவற்றுள் முறையே 1 முதல் 39 முடிய அமைந்த திருப் பதிகங்கள் **இந்தளப்** பண்ணுக்கு உரியவையாகும். ''தேவு வந்த இந்தளத்தின் செய்திக்கு நான்கு'' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலால், இப்பதிகங்களில் அமைந்த கட்டளை விகற்பங்கள் **நான்கு** என்பது பெறப்படும். இவற்றிலுள்ள யாப்பு விகற்பங் களை முறையே காட்டுவேன்.

இந்தளம்

யாப்பு - 1

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும் (2.1:1)
தான தானன தானன தானன தானனா

இதன்கண் முதற்சீராகிய '**தான**' என்பது **தனன, தந்த** என ஆதலும், அடுத்த சீரின் முதலிலுள்ள நெட்டெழுத்துடன் இணைந்த '**தானனா**' ஆதலும், இரண்டாஞ்சீர் **தனன** ஆதலும், **தந்ததன, தானதன** என ஓரெழுத்து மிக்கு நிற்றலும் அமையும். 1முதல் 10வரை அமைந்துள்ள பதிகங்களின் பாடலமைப்பினை நோக்கி இவற்றினை உணரலாம்.

யாப்பு - 2

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம் (2.11:1)
தேமாங்காய் கூவிளம் கூவிளம் தேமாங்காய்

இவ்வாறு முதற் சீரும் நான்காம் சீரும் காய்ச்சீர்களாகவும் இரண்டாஞ்சீரும் மூன்றாஞ்சீரும் விளச்சீர்களாகவும், சிறு பான்மை மாச்சீர்களாகவும் அமைய இங்ஙனம் நாற் சீரடியால் வருவன 11 முதல் 16 வரை உள்ள திருப்பதிகங்களாகும்.

யாப்பு - 3

நிலவும் புனலும் நிறைவா ளரவும் (2.17:1)
தனனா தனனா தனனா தனனா

என வரும். சில இடங்களில் **தனனா** என்பது '**தானா**' என அமைதலும் உண்டு. 17 முதல் 24 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின.

இறுமென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்
அறுவை யொளித்தான் அயர வயரும்
நறுமென் சாயல் முகமென் கோயாம்

எனச் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில்[23] வரும் வரிப் பாடல் இக்கட்டளைக்குரிய தொன்மை இலக்கியமாக அமைந்தமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

---

23. சிலப்.ஆய்ச்சியர் குரவை - 23

யாப்பு - 4

உகலி யாழ்கட லோங்கு பாருளீர் (2.25:1)

தனன தானன தான தானனா

(25 முதல் 28 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின)

யாப்பு - 5

முன்னிய கலைப்பொருளும் மூவுலகில் வாழ்வும் (2.29:1)

தந்தன தனத்தனன தானதன தானா

எனவரும். இதன் முதலிலுள்ள **'தந்தன'** என்பது வல்லெழுத்துப் பெற்றவிடத்து **'தத்தன'** எனவும், நெடில் முதலாய வழி **'தானன'** எனவும், குறிலிணையாய் வந்து மெல்லெழுத்துப் பெற்றுத் **'தனந்தனன'** எனவும், வல்லெழுத்தும் பெற்று **தனத்தன** எனவும் வரும். அடுத்துள்ள **தனத் தனன** என்பது நெடில் முதலாய் நின்று **'தானதன'** எனவும் வரும். **'தானதன'** என்பது குறில் முதலாய் நின்று **'தனாதனன'** எனவும், வல்லெழுத்துப் பெற்றுத் - **'தத்த தனன'** எனவும், மெல்லெழுத்துப் பெற்றுத் **'தனந்தனன'** எனவும் வரும். **'தானா'** என்பது **'தனனா'** எனவும், அமையும். 29 முதல் 34 வரை அமைந்த திருப்பதிகங்கள் குற்றெழுத்துகளே மிகப் பயின்று **முடுகியலாக** அமைந்தமையால் இவை முன் **வியாழக் குறிஞ்சி**க்குரிய **திருவிராகம்** என்ற கட்டளை போன்று **இந்தளப்** பண்ணிற்குரிய **திருவிராகம்** என ஒரு கட்டளையாகக் கொள்ளப் பெற்றன.

யாப்பு - 6

பரவக்கெடும் வல்வினை பாரிடஞ் சூழ (2.35:1)

தனனாதன தானன தானன தான

எனவரும். **'தனனாதன'**, என்பது **'தானாதன'** என்றாதலும் ஈற்றிலுள்ள **தான** என்பது **'தனனா'** என்றாதலும் உண்டு. 35 முதல் 37 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின் பாற்படும்.

யாப்பு - 7

நித்த லுந்நிய மஞ்செய்து நீர்மலர் தூவி (2.38:1)
தான தானன தானன தானன தானா

யாப்பு - 8

ஆரூந்தில்லை யம்பலம் வல்லம் நல்லம்
வடகச்சியு மச்சிறு பாக்கம் நல்ல (2.39:1)
தானாதன தானன தானா தானா
தன்னாதன தானன தானா தான

கீழ்க் கூறிய 6, 7 ஆம் யாப்பு விகற்பங்களை இருமுறை மடித்துச் சொல்ல அமைவது **எட்டாம்** யாப்பு விகற்பம்.

இவற்றுள் 1, 6, 7, 8-ஆம் யாப்பு விகற்பங்கள் (1-10, 35-39-ஆம் பதிகங்கள்) ஒத்த ஓசை வகையால் ஒரு கட்டளை யாகவும், 2-ஆம் யாப்பு விகற்பம் (11-16ஆம் பதிகங்கள்) ஒரு கட்டளையாகவும் 3, 4-ஆம் யாப்பு விகற்பங்கள் (17-28-ஆம் பதிகங்கள்) ஒரு கட்டளையாகவும், திருவிராகப்பதிகங்கள் (29-34-ஆம் பதிகங்கள்) ஒரு கட்டளையாகவும் கொள்ள, **இந்தளப் பதிகங்களின்** கட்டளைகள் நான்காதல் காணலாம்.

சீகாமரம் என்ற பண்ணமைந்தன 40 முதல் 53 வரையுள்ள பதிகங்களாகும். 'தாவில் புகழ்க்காமரத்தின் தன்மை தனக் கிரண் டமைத்தார்' எனத் திருமுறை கண்ட புராணம் கூறுவதால் இப் பதி கங்களில் அமைந்த கட்டளைகள் இரண்டு என்பது பெறப்படும்.

சீகாமரம்

கட்டளை - 1

எம்பிரான் எனக்கமுத மாவானுந் தன்னடைந்தார்
தம்பிரா னாவானும் தழலேந்து கையானும்
கம்பமா கரியுரித்த காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம புரத்துறையும் வானவனே.[24]

24. சம்பந்.தேவா.2.40:1

என இவ்வாறு **தரவு கொச்சகக் கலிப்பாவாக**[25] அமைந்தது சீகாமரப் பதிகங்களின் முதற்கட்டளையாகும். 40 முதல் 48 வரையமைந்த பதிகங்கள் இதன்பாற் படுவன.

கட்டளை - 2

பண்ணி னேர்மொழி மங்கை மார்பலர்
 பாடி யாடிய வோசை நாடொறும்
கண்ணினே ரயலே பொலியும் கடற்காழி (2.49:1)
தான தானன தான தானன
 தான தானன தான தானனா
தானனா தனனா தனனா தனதானா

என முன்னிரண்டடிகளைப் போன்று பின்னிரண்டடிகளும் அமைவது சீகாமரப் பண்களின் இரண்டாங் கட்டளையாகும். இதன் இரண்டாம் அடியினை,

கண்ணி னேரயலே - பொலி - யுங்க டற்காழி
 தான - தனதனா - தன - தான - தானானா

எனப் பிரிந்திசைத்தலும் ஏற்புடையதாகும். இதன்கண் முதலடியும் மூன்றாம் அடியும் எண்சீர்களாகப் பிரிந்திசைக்க இரண்டாமடியும் நான்காமடியும் சீர்கள் குறைந்து வருதலால் அவற்றின் பிற் பாதியாகவுள்ள 'பொலியுங் கடற்காழி', 'அருளாலும் குறைவிலரே' என்றாற் போலும் தொடர்களை மீண்டும் ஒருமுறை மடித்துக் கூற, அவ்வடிகள் ஓசையால் நிறைவு பெறுதல் காணலாம்.

தனதானா என்பது **'தானானா'** எனவும், **'தனதனனா'** எனவும், **'தானதனா'** எனவும் வரும். 49 முதல் 53 வரையுள்ள பதிகங் கள் சீகாமரப் பண்ணின் இரண்டாங் கட்டளையின் பாற்படுவன.

இத்திருமுறையில் 54 முதல் 82 வரையுள்ள பதிகங்கள் **காந்தாரப் பண்ணுக்கு** உரியன்வாகவும், 83 முதல் 96 வரையுள்ள

25. 'தரவுக் கொச்சகக் கலிப்பா - தரவு என்பது கலிப்பாவில் முதலில் வரும் உறுப்பு. ஓராடையில் ஒரு வழியடக்கியது போல், ஒரு செய்யுளில் பல குறள் அடுக்கப்படுவது. இங்ஙனம் வரும் கலிப்பா.

பதிகங்கள் **பியந்தைக் காந்தாரப் பண்ணுக்கு** உரியனவாகவும் அமைந்துள்ளன. 'காந்தாரமாகிய பியந்தையாங் கட்டளைக்கு வாய்ந்த வகை மூன்றாக்கி' எனத் திருமுறை கண்ட புராணம் கூறுதலால் காந்தாரப் பதிகங்களும் பியந்தைக் காந்தாரப் பதிகங் களும் **மும்மூன்று** கட்டளைகள் பெறுவன எனக் கொள்வர் **யாழ்நூலாசிரியர்.** காந்தாரப் பதிகங்களில் **பத்து** யாப்பு விகற்பங் கள் **காணப்படு**கின்றன.

காந்தாரம்

யாப்பு - 1

உருவார்ந்த மெல்லியலோர் பாக
முடையீர் அடைந்தோர்க்குக் (2.54:1)
தனதான தானதனா தான
தனனா தனதானா

என வரும். **தனதான 'தானான' ஆதலும், தானதனா 'தானானா'** ஆதலும் அமையும். 54 முதல் 58 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 2

நலங்கொள் முத்து மணியு
மணியுந் திரளோதம் (2.59:1)
தனனா தானா தனன
தனனா தனதானா

தனனா 'தானா' ஆதலும், **தானா 'தனனா'** ஆதலும், **தனதானா 'தானானா'** ஆதலும் உண்டு. 59 முதல் 64 வரையுள்ள **பதிகங்கள்** ஒரே யாப்பின.

யாப்பு - 3

கறையணி வேலிலர் போலும்
கபாலந் தரித்திலர் போலும் (2.65:1)

தனதன தானன தானா
தனான தனதன தானா

தனதன் 'தானன' ஆதலும், **'தான'** ஆதலும், **தானன 'தனதன'** ஆதலும், **தானா 'தனனா'** ஆதலும் **தனான 'தானன'** ஆதலும் உண்டு. 65 முதல் 69 முடியவுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின. திருநாவுக்கரசர் தேவாரம் 4-ஆம் திருமுறையில் 2, 4 -ஆம் எண்ணுள்ள **காந்தாரப்** பதிகங்கள் இவண் குறித்த யாப்பின்பாற் படுவன.

யாப்பு - 4

பிரமனூர் வேணுபுரம் புகலி
வெங்குருப் பெருநீர்த் தோணி (2.70:1)
கருவிளம் கூவிளங்காய் புளிமா
கூவிளம் புளிமா தேமா

என முதற்சீரும் மூன்றாம் சீரும் **விளச்சீர், மாச்சீர்** களாகவும் இரண்டாம் சீரும் நான்காம் சீரும் பெரும்பாலும் **காய்ச்சீர்** களாகவும் சிறுபான்மை **விளச்சீர்**களாகவும், ஐந்தாம் சீரும் ஆறாம் சீரும் **மாச்சீர்**களாகவும் இவ்வாறு ஆறு சீர்களால் இயன்றது. இவ்யாப்பு விகற்பமாகும். (விகற்பம் - வேறுபாடு)

தீங்கதிர் வாண்முகத்தான் செவ்வாய்
மணிமுறுவல் ஒவ்வா வேனும்
வாங்குநீர் முத்தென்று வைகலு
வான்மகன்போல் வருதிர் ஐய
வீங்கோதந் தந்து விளங்கொளிய
வெண்முத்தம் விரைசூழ் கானற்
பூங்கோதை கொண்டு விளைஞர்போன்
மீளும் புகாரே எம்மூர்[26].

---

26. சிலப். கடலாடு காதை - கானல்வரி சார்த்து வரி - 28

எனச் சிலப்பதிகாரக் கானல் வரியில் வந்துள்ள சார்த்து வரிப் பாடலை யொத்து அமைந்தது, இவண் காட்டிய பிரமபுரத் திருப் பதிகமாகும். சார்த்து வரியாவது, பாட்டுடைத் தலைவன் ஊராகிய பதியொடும் அவனுக்கு அமைந்த பெயரோடும் சார்த்திப் பாடப் பெறும் இசைப் பாட்டாகும்.

"பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடும்
சார்த்திப் பாடிற் சார்த்தெனப் படுமே"

என **அரும்பத உரையாசிரியர்** காட்டிய மேற்கோள் நூற்பா இவ் வரிப்பாட்டின் இயல்பினை விளக்குவதாகும். இவண் காட்டிய **தீங்கதிர் வான் முகத்தான்'** என்ற கானல் வரிப் பாடலில் பாட்டுடைத் தலைவன் **சோழன்.** அவன் ஊர் **புகார்.** அவ்வூரின் வனப்புரைப்பதாக இவ்வரிப்பாடல் அமைந்திருத்தல் காணலாம்.

மதுரையில் கூன் பாண்டியன் காழிப்பிள்ளையாரை அவர் தம் ஊர் பற்றி வினவும் போது அதற்கு மறுமொழியாக பிள்ளையார் 'பிரம்புரம், வேணுபுரம்' (2.70) என்ற பதிகம் அருளியதாக வரலாறு. இத் திருப்பதிகம் பாட்டுடைத் தலை வனாகிய சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள **கழுமலம்** என்னும் **சீகாழிப்** பதியின் சிறப்பினை விளக்கும் முறையில் அமைத்திருத்தல் காணலாம். இதனைத் தொடர்ந்து 71 முதல் 74 வரையுள்ள பதிகங்களும் சிலப்பதிகாரம் கானல் வரி யிலுள்ள சார்த்து வரிப்பாடல்களின் அமைப்பினைப் பொருளாலும் யாப்பாலும் அடியொட்டி அமைந்துள்ளன. நாற்சீரடியாகிய கலியடியின் மேல் **மாச்சீர்** இரண்டு பெற்று வருதல் இப்பதிகங் களின் யாப்பு விகற்பமாகும்.

யாப்பு - 5

விண்ணி யங்குமதிக் கண்ணியான் - விரி - யுஞ்சடைப்
பெண்ண யங்கொள்திரு மேனியான் - பெரு - மானனற்
கண்ண யங்கள்திரு நெற்றியான் - கலிக் - காழியுள்
பண்ண யங்கொள்மறை யாளரேத்து - மலர்ப் - பாதனே
(2.75:1)

தானன தானன தான தான தனந்தன

எனவரும். இது

வாடிய வெண்டலை மாலை சூடி மயங்கிருள் (2.76:1)
தானன தானன தான தான தனந்தன

எனவும்,

காய்ந்த துவும் அன்று காமனை - நெற்றிக் - கண்ணினால் (2.76:4)
தான தந்த தந்த தானன - தந்த - தந்தனா

எனவும் வருவதுண்டு. 75, 76 - ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 6

பீடினாற்பெரி யோர்களும் பேதைமைகெடத் தீதிலா (2.77:1)
தானனாதன தானனா தானனாதன தானதானா

77, 78-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 7

பவளமாய்ச் சோடையாய் நாவெழாப்
பஞ்சுதோய்ச் சட்ட வுண்டு (2.79:1)
தனதனா தானனா தானனா
தானனா தானனா தானதானா

யாப்பு - 8

வரிய மறையார் பிறையார்
மலையோர் சிலையா வணக்கி (2.80:1)
தனன தனனா தனனா
தனனா தனனா தனனா

இப்பதிகம்.

தனன '**தானா**' ஆதலும் **தனனா** '**தான**' ஆதலும் உண்டு

யாப்பு - 9

பூதத்தின் படையினீர் பூங்கொன்றைத் தாரினீர் (2.81:1)

இப்பதிகம் நான்கு காய்ச்சீர்களால் இயன்ற தரவு கொச்சகக் கலிப்பா. ஒரோ வழி விளச்சீரும் பெற்றது.

யாப்பு - 10

பண்ணி லாவிய மொழியுமை
பங்கனெம் பெருமான் (2.82:1)
தான தானன தனதன
தானன தனனா

தான '**தனன**' ஆதலும், **தனதன** '**தானன**' ஆதலும், தனனா 'தானா' ஆதலும் அமையும் இப்பதிகம்.

இவண் குறித்தவற்றுள் 1, 4, 7, 9-ஆம் யாப்பு விகற்பங்கள் ஓசைத் திறத்தால் ஒரு கட்டளையாகவும், 2, 5-ஆம் யாப்பு விகற்பங்கள் ஒரு கட்டளையாகவும், 3, 6, 8, 10-ஆம் யாப்பு விகற்பங்கள் ஒரு கட்டளையாகவும் கொண்டு **காந்தாரப்** பதிகங் களை இவ்வாறு மூன்று கட்டளையாக அடக்குதல் ஏற்புடைய தாகும்.

இனி, பியந்தைக் காந்தாரப் பதிகங்களின் கட்டளைகளை அடியிற் கண்டவாறு குறிப்பிடலாம்.

பியந்தைக் காந்தாரம்

கட்டளை - 1

நீலநன் மாமிடற்ற னிறைவன் சினத்த
நெடுமா வுரித்த நிகரில் (2.83:1)
தானன தானதந்த தனதந் தனத்த
தனனா தனத்த தனனா

தானன '**தனதன**' ஆதலும், **தத்த** '**தந்த**' '**தான**' ஆதலும், **தனத்த தனனா தானா** ஆதலும் அமையும். 83-முதல் 87 வரையுள்ள பதிகங்கள் ஒரேயாப்பின. திருநாவுக்கரசர் தேவாரம் நாலாந்திருமுறையில் '**சிவனெனும் ஓசை**' (4.8:1) என்ற முதற் குறிப்புடைய **பியந்தைக் காந்தாரப் பதிகம்** இக்கட்டளையில் அடங்குதல் காணலாம்.

கட்டளை - 2

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன்
நடமன்னு துன்னு சுடரோன் (2.88:1)
தனதந்த தந்த தனதந்த தந்த
தனதந்த தந்த தனனா

எனவரும். **தனன** '**தான**' ஆதலும் **தான** '**தனன**' ஆதலும், **தானன** '**தனதன**' ஆதலும் பொருந்தும். 89 முதல் 96 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின.

97 முதல் 112 வரை அமைந்த பதிகங்கள் நட்டராகப் பண்ணுக்கு உரியன. நட்டராகப் பதிகங்களில் **நான்கு** யாப்பு விகற்பங்கள் உள்ளன.

நட்டராகம்

யாப்பு - 1

நம்பொ ருள்நம் மக்க ளென்று
நச்சி யிச்சை செய்துநீர் (2.97:1)
தந்த தந்த தந்த தந்த
தந்த தந்த தந்தனா

தந்த என்பது '**தான**' எனவும் '**தனன**' எனவும், '**தத்த**' எனவும், '**தய்ய**' எனவும் வருதல் பொருந்தும். 97 முதல் 101 வரை உள்ள பதிகங்கள் ஒரே யாப்பின. 99, 100, 101-**ஆம் பதிகங்களில்**,

இன்று நன்று நாளைநன்
றென்று நின்ற விச்சையால் *(2.99:1)*
தந்த தந்த தானனா
தந்த தந்த தத்தனா

என்றாங்கு வரும் அடிகள் இவண் குறித்த யாப்பின் பட்டனவே யாகும்.

யாப்பு - 2

அன்ன மென்னடை யரிவையொ
டினிதுறை யமரர்தம் பெருமானார் *(2.102:1)*
தந்த தந்தன தனதன
தனதன தனதன தனதானா

தந்த என்பது **'தான' 'தனன'** எனவும், **தந்தன** என்பது **'தானன' 'தனதன'** எனவும், **தனதன** என்பது **'தானன'** எனவும் வருதல் அமையும். 102 முதல் 110 வரை அமைந்த பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 3

தளரிள வளரென வுமைபாடத்
தாளம் மிடவோர் கழல்வீசி *(2.111:1)*
தனதன தனதன தனதானா
தானா தனனா தனதானா

இப்பதிகம். **தானா - தனனா** என்னும் சீர்கள் தம்மொடு மாத்திரை யளவொத்த **'தனதன - தனதன'** என வருதலும் இவண் குறித்த ஓசை யமைதிக்கேற்பப் பிறவாறு வருதலும் அமையும்.

யாப்பு - 4

மாதோர் கூறுகந் தேற தேறிய -
ஆதி யானுறை யாடானை (2.112:1)
தான தானன தான தானன -
தான தானன தனாதனா

என முன்னீரடிகள் போன்று பின்னீரடிகளும் வரும். இப்பதிகத்தில்.

'வன்னட்ட ராகத்திற் தேய்ந்தவகை யிரண்டாக்கி'

எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலால் நட்டராகப் பதிகங்கள் இரண்டே கட்டளைகளுள் அடக்கப் பெற்றன என்பது நன்கு புலனாம். இவண் காட்டிய **நான்கு** யாப்பு விகற்பங்களுள் முதலாவது ஒரு கட்டளையாகவும் ஏனைய மூன்றும் ஓசை யொப்புமை கருதி மற்றொரு கட்டளையாகவும் அடக்குதல் பொருந்தும்.

செவ்வழி

இதன்கண் 113 முதல் 122 வரையுள்ள திருப்பதிகங்கள் **செவ்வழிப்** பண்ணுக்கு உரியனவாகும். இவற்றின் கட்டளைகள்

பொடியிலங்குந் - திரு - மேனியா ளர்புலி யதலினர்
(2.113:1)

தனனதானா - தன - தானனா தானன தனதனா

என வருவன. **தனன 'தான'** ஆதலும், **தானனா 'தனதனா'** ஆதலும், **தனதனா 'தானனா'** ஆதலும் அமையும். இக்கட்டளை யடியினை,

பொடியிலங் குந்திரு மேனியா ளர்புலி யதளினர் *(2.113:1)*
தனதன தானன தானனா தானன தனதனா

என ஐஞ்சீரடியாகப் பிரித்துப் பாடுதலும் உண்டு. **'செவ்வழி யொன்றாக்கி'** எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலால் இப்பதிகங்கள் **பத்தும்** ஒரே கட்டளையின் பாற்படுவன என்பது நன்கு தெளியப்படும். எனினும் 121-ஆம் பதிகப்பாடல்களில் சில அடிகள் எழுத்துக் குறையுள்ளன. அவை சீர் வகையால் ஒத்த ஓசையாக அமைதலின் இவண் குறித்த வண்ணம் ஒரே கட்டளை யுள் அடக்குதல் பொருந்தும்.

மூன்றாந் திருமுறை

இத்திருமுறையில் முதற் பண்ணாக அமைந்தது **காந்தார பஞ்சமம்** என்பதாகும். 1 முதல் 23 வரையுள்ள பதிகங்கள் இப் பண்ணுக்கு உரியன. இப்பதிகங்களில் காணப் பெறும் யாப்பு விகற்பங்கள் ஐந்தாகும்.

ஆடினாய் - நறு - நெய்யொடு பால்தயிர்
அந்தணர் - பிரி - யாதசிற் றம்பலம்
நாடினாய் இடமா - நறுங் - கொன்றை நயந்தவனே.
(3.1:1)

தானன - தன - தானன தானனா
தானனா - தன - தானன தானனா
தானனா தனனா - தன - தான தனனா

என முன்னிரண்டிடிகளைப் போலப் பின்னிரண்டடிகளும் வரும். இதனை,

ஆடினாய் நறு நெய்யொடு பால்தயிர்
அந்த ணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடி - னாயிடமா நறுங் - கொன்றை நயந்தவனே!

தான தானன தானன தானன
தான தானன தானன தானன
தான தானதனா - தன - தானன தான்தனா

எனப் பிரித்துப் பாடுதலும் உண்டு. 1, 2ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின. இதன்கண் இரண்டாந் திருமுறையில் 49-ஆம் எண்ணுள்ள **சீகாமரப்** பதிகம் போன்று முதலடியும் மூன்றாமடியும் நீண்டு நிற்க இரண்டாம் அடியும் நான்காம் அடியும் சீர்கள் குறைந்து வருதலால் அவ்வடிகளின் ஈற்றிலுள்ள, 'நறுங் கொன்றை நயந்தவனே' 'சுருங்க எமதொல் வினையே' என்றாற் போலும் தொடர்களை மீண்டும் ஒருமுறை மடித்துக் கூற அவ்வடிகள் ஓசையால் நிறைவு பெறுதல் காணலாம்.

யாப்பு - 2

இயலிசை யெனும்பொரு ளின்றிறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலன வரிநடுங் கண்ணியொடும்
அயலுல கடிதொழ அமர்ந்தவனே

கலனாவது வெண்டலை
கடிபொழில் கச்சிதன்னுள்
நிலனா டொறு பின்புற
நிறைமதி யருளினனே *(3.3:1)*

இப்பதிகம்

'தனதன தனதன தானதனா'

எனமுச்சீரடி நான்கினால் இயன்ற செய்யுளாய் அதன் மேல்

தன்னாதன தானன தனதன தானதனா

என நாற்சீர்களால் இயன்ற அடியிரண்டினை வைப்பாகப் பெற்று வந்தமையால் 'நாலடி மேல் வைப்பு' என்னும் பெயர்த்தாயிற்று. நான்கடிகளால் ஆகிய பாடலின் மேலாக இரண்டடியாக வைக்கப் பெற்ற இவ்வுறுப்பு முன்னுள்ள பாடலின் பொருளை முடித்துக் கூறுவதாகும். இவ்வுறுப்பு நாலடிச் செய்யுளின்மேல் வரின் 'நாலடிமேல் வைப்பு' எனவும், ஈரடிச் செய்யுளின்மேல் வரின் 'ஈரடிமேல் வைப்பு' எனவும் வழங்கப் பெறும். இத்திருமுறையில் 3, 4, 108-ஆம் பதிகங்கள் நாலடிமேல் வைப்பாகவும், 5, 6-ஆம் பதிகங்கள் ஈரடிமேல் வைப்பாகவும் அமைந்துள்ளன.

ஒத்தாழிசைக் கலிப்பாவின் முடிவில் அதன் பொருளை முடித்துக் கூறும் முறையில் அமைந்த **'சுரிதகம்'**[25] போன்று முன்னுள்ள பாடலின் பொருளை முடித்துக் கூறும் நிலையில்

---

25 கலிப்பாவின் முடிவுப் பகுதி. பாட்டின் கருத்தை முடித்துக் கூறும் உறுப்பு.

அச் செய்யுளின் மேல் வைக்கப் பெற்றது. ஆதலின் 'வைப்பு' என வழங்கப் பெறுவதாயிற்று.[26]

யாப்பு - 3

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே *(3.5:1)*

இப்பதிகம்

தான தான தனதனா தானனா
தான தான தனனா தனதனா

என இரண்டிச் செய்யுளாய், அதன் மேல்,

தான தானன தான தானன
தான தானன தானா தானா

என 'ஈரடி வைப்பாய்' வருதலின் 'ஈரடி மேல் வைப்பு' என்னும் பெயர்த்தாயிற்று.

ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்த ணார்பிரி யாதசிற் றம்பலம்

தான தானன தானன தானன
தான தானன தானன தானன

என முற்காட்டிய முதல் யாப்பின் கட்டளையடியினை இரண்டாகத் துணித்த நிலையில் அமைவது இம்மூன்றாம் யாப்பாதல் காண்க. 'கொட்டமே கமழும்' (3.6) என்னும் முதற் குறிப்பினை யுடைய **ஆறாம்** பதிகத்தின் ஈரடிமேல் வைப்பாகிய உறுப்பு,

---

26. போக்கியல வகையாகிய சுரிதம், 'வைப்பு' எனவும் வழங்கப்பெறும். அது தரவோடு ஒத்த அளவினதாகியும் அதனில் குறைந்த அளவினதாகியும் குற்றத் தீர்ந்த பாட்டின் இறுதி நிலையை உரைத்து வரும் என்பர் தொல்காப்பியர் (தொல்.பொருள் - செய்யுள் நூற் 135, 137).

செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே

என ஈற்றடி முச்சீராய் வந்தமை காண்க.

யாப்பு - 4

கண்ணுத லானும்வெண் ணீற்றின
  னுங்கழல் லார்க்கவே. (3.7:1)

தானன தானானா தானனா
  தானன தானனா

என வரும். இதனை,

கண்ணுத லானும்வெண் ணீற்றி
  னானுங் - கழ - லார்க்கவே

எனப் பிரித்திசைத்தலும் பொருந்தும். இப்பாடலில் நான்கு அடிகளிலும் முறையே 'கழ' 'பரஞ்' 'புக' 'பெரு' என்பன மோனை ஒன்றிய அசைச் சொற்களாய்ப் பிரிந்திசைத்தல் உணரத் தக்க தாகும். 7 முதல் 12 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 5

மின்னன எயிறுடை விரவ லோர்கள்தந் *(3.13:1)*

தானன தனதன தனன தானனா

என வரும். 13 முதல் 23 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின. விளம் விளம் மா விளம் என்றும் சீர்களைப் பெற்று வருவது இவ் யாப்பு விகற்பமாகும். இது திருநாவுக்கரசர் **'முளைக் கதிரிளம் பிறை'** (4.10) **'சொற்றுணை வேதியன்'** (4.11) என்னும் முதற் குறிப்பையுடைய காந்தாரப் பஞ்சமப் பதிகங்களில் அமைந்திருத் தல் அறியத் தக்கதாகும். ஆளுடைய பிள்ளையார் அருளிய **காந்தாரப் பஞ்சமப்** பதிகங்களுக்கு உரியனவாக இவண் எடுத்துக் காட்டிய யாப்பு விகற்பங்கள் ஐந்தனுள் முதல் மூன்று யாப்பு

வகைகளும் ஒத்த ஓசையின ஆதல்பற்றி ஒரு கட்டளையாகவும், நான்காம் யாப்பு ஒரு கட்டளையாகவும், ஐந்தாம் யாப்பு ஒரு கட்டளையாகவும் கொள்ளத் தக்கன. ''காந்தார பஞ்சமத்தினை கட்டளை மூன்றாக்கினார்'' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிட்டிருப்பதைக் கூர்ந்து நோக்குங்கால் காந்தாரப் பஞ்சமப் பதிகங்களை இவண் குறித்த வண்ணம் மூன்று கட்டளைகளாகக் கொள்ளுதலே முன்னோர் கருத்துக்கு ஏற்புடைத்தாதல் நன்கு நன்கு புலனாம்.

கொல்லி

கட்டளை - 1

மண்ணினல் வண்ணம் வாழலாம் வைகலும் *(3.24:1)*

தானனா தானனா தானனா தானனா

என வரும். **தானனா 'தனதானா'** ஆதலும் பொருந்தும். 24 முதல் 36 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின. (**ஏழாம்** திருமுறையில் 37-ஆம் பதிகம் **கொல்லிப்** பண்ணின் முதல் கட்டளையைச் சார்ந்தாகும்).

கட்டளை - 2

கரமு னம்மல ராற்பு னல்மலர்
தூவி யேகலந் தேத்துமின் *(3.37:1)*

தனன தானன தான தானன
தான தானன தானனா

என வரும். தனன 'தான' ஆதலும், தானன 'தனதன' ஆதலும் அமையும். 37 முதல் 39 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின.

கட்டளை - 3

இவண் குறித்த வண்ணம் ஏழு சீர்களாகப் பிரிந்திசைக்கும் யாப்பினையே,

கரமுனம் மலராற்புனல் மலர்தூவியே கலந்தேத்துமின்

தனதனா தனதானனா தனதானனா தனதானனா

என நாற் சீரடியாகப் பகுத்திசைத்தலும் பொருந்தும். ஆதலின் இப்பகுப்பினைக் கொல்லிப் பண்ணின் மூன்றாவது கட்டளையாகக் கொள்வர் யாழ் நூலாசிரியர்.[27]

சுந்தரர் அருளிய **ஏழாந்** திருமுறையில் 33 முதல் 36 வரை அமைந்த **கொல்லிப்** பதிகங்கள் இங்கே எடுத்துக் காட்டிய **கொல்லிப்** பண்ணின் இரண்டு மூன்றாம் கட்டளைகளின் அமைப்பினைத் தழுவியன ஆகும்.

கட்டளை - 4

கல்லால் நீழல் (3.40)
தானா தானா

என இருசீர்க் குறளடி நான்கினால் வரும். தானா தானா என்பது 'தனனா தானா' எனவும், 'தானா தன்னா' எனவும், 'தனனா தனனா' எனவும் வருதல் பொருந்தும். 40, 41-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின. இருசீர்க் குறளடி நான்கினால் இயன்ற திருப் பாடல்களையுடைய இப்பதிகங்கள் **'திரு இருக்குக் குறள்'** என வழங்கும் பெயர்க் காரணம் முன்னர் விளக்கப் பெற்றதை ஈண்டு நினைவு கூர்தல் பாலது.

கொல்லிக் கௌவாணம்

மூன்றாம் திருமுறையில் 42-ஆம் பதிகம் **கொல்லிக் கௌவாணம்** என்ற பண்ணுக்கு உரியதாகும். இது,

நிறைவெண் டிங்கள் வாண்முக
மாதர் பாச நீள்சடை. *(3.42:1)*

தனன தான தானன
தான தான தானன

27 யாழ் நூல் - பக். 242

என வரும் கட்டளையடியினால் இயன்றது. **தனன 'தான'** ஆதலும் அமையும். திருமுறைகண்ட புராணத்தில் 'கொல்லிக்கு நாலாக்கி' எனக் குறிப்பிட்டதன்றிக் **கொல்லிக் கௌவாணமாகிய** பதிகம் தனியே ஒரு கட்டளை பெறுமெனக் குறிப்பிடாமையால், இக் **கௌவாணப்** பதிகத்தையும் **கொல்லிப்** பண்ணின் கட்டளை யாகக் கொண்டு, 24 முதல் 36 வரையுள்ள பதிகங்கள் கொல்லி யின் முதல் கட்டளை, 37 முதல் 39 வரையுள்ளவை இரண்டாங் கட்டளை, 40, 41-ஆம் பதிகங்கள் மூன்றாங் கட்டளை, **கொல்லிக் கௌவாணப்** பதிகம் நான்காம் கட்டளை எனக் கருதுதற்கும் இடமுண்டு. எனினும் **கொல்லி** என்பது **மருதப் பெரும் பண்ணின்** 'தவிர்' என்னும் திறத்தின் புறநிலையாய்ப் பண்ணிசையில் 70 என்ற எண் பெற்றும், **கௌவாணம்** என்பது **குறிஞ்சிப் பெரும் பண்ணின்** அகநிலையாய்ப் பண்ணிசையில் 49 என்ற எண் பெற்றும் நின்ற இருவேறு பண்களாதலானும், இவ்விரு பண்களையும் ஒன்றெனக் கொள்ளின் பண்களின் தொகை **நூற்றிரண்டு** எனப்பட்டு பண்கள் **நூற்று மூன்று** என்னும் பழங் கொள்கை வழுப்படுமாதலானும் **கொல்லியும் கௌவாணமும்** இரு வேறு பண்கள் எனக் கொண்டு கட்டளை வகுப்பதே ஏற்புடையதென்பது யாழ் நூலாசிரியரின் துணிபாகும்.[28]

கௌசிகம்

43 முதல் 54 வரையுள்ள பதிகங்கள் **கௌசிகப்** பண்ணுக்கு உரியன. 'கௌசிகத்துக்குக் கூறும் வகை கொல்லிரண்டாக்கி' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலால் இப்பதிகங்கள் **இருகட்டளை** பெறும் என அறிகின்றோம்.

கட்டளை - 1

சந்த மார்முலை யாள்தன கூறனார் *(3.43:1)*
தான தானன தானன தானனா

28 யாழ் நூல் - 243

என வரும். 43 முதல் 51 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின. இவண் குறித்த கட்டளையின் இரண்டாஞ் சீராகிய தானன என்பது 'தானதன' என வருதலும் உண்டு. 46-ஆம் பதிகம்,

முத்தி லங்கு வல்லுமை யஞ்சலே *(3.46:1)*
தான தானதன தானன தானனா

என வந்தமை காண்க. திருநாவுக்கரசர் அருளிய **திருக் குறுந் தொகைப்** பதிகங்கள் யாவும் இவண் குறித்த **கௌசிகப் பண்ணின்** முதற் **கட்டளையின்பாற்** படுவனவாகும்.

கட்டளை - 2

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நினகழல் *(3.52:1)*
தானதான தானனா தன்னதான தானனா

என வரும் **தானதான** என்பது **'தனன தான'** ஆதலும், **தானனா 'தனதனா'** ஆதலும் **தனன தான 'தான தான'** ஆதலும் அமையும். 52, 53-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின. 54-ஆம் பதிகமாகிய திருப்பாசுரத்தில் நாற்சீரடிகளால் இயன்ற பாடல்களும் ஐஞ்சீரடி களால் இயன்ற பாடல்களும் விரவியுள்ளன. எனினும் ஓசை யொப்புமை நோக்கி இப்பதிகப் பாடல்களைக் **கௌசிகப் பண்ணின்** முதல் கட்டளையில் அடக்குதல் பொருந்தும்.

'விரையார் கொன்றையினாய்' (3.55) என்ற முதற் குறிப் புடைய பதிகம் திருமுறை ஏடுகளிலும் வெளிவந்த அடங்கன் முறைப் பதிப்புகளிலும் **கௌசிகப்** பண்ணுக்குரிய கடைசிப் பதிகமாகப் **பஞ்சமம்** என்ற பண்ணமைந்த பதிகங்களின் முன்னர் வைக்கப் பெற்றுள்ளது. எனினும் இப் பதிகத்தின் இயலிசை அமைப்பினைக் கூர்ந்து நோக்குங்கால் இப்பதிகம் பின்வரும் **பஞ்சமம்** என்ற பண்ணுக்குரிய இயலமைப்புடையதாகவே தோற்றுதல் புலனாகும் எனவே இது (3.58) முதல் 3.66 வரை யுள்ள பதிகங்கள் **பஞ்சமம்** என்னும் பண்ணுக்கு உரியன எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும். இப்பதிகங்களில் மூன்று யாப்பு விகற்பங்கள் காணப்படுகின்றன.

பஞ்சமம்

யாப்பு - 1

விரையார் கொன்றையினால் - விட -
முண்ட மிடற்றினனே *(3.55:1)*

தனனா தானதனா - தன -
தான தன்தனனா.

என வருவது.

இவண் காட்டிய யாப்பில் **தனனா** என்பது **'தனதன'** எனவும், **'தானன'** எனவும் ஓரெழுத்து மிக்கும். இரண்டாஞ் சீராகிய **தானதனா** என்பது **'தான தானா'** என ஒரு மாத்திரை மிக்கும். நான்காஞ்சீராகிய **தான** என்பது **'தானன'** என ஓரெழுத்து மிக்கும். ஐஞ்சீராகிய **தனதனனா** என்பது **'தானதானா'** எனவும் வருவது **பஞ்சமப்** பதிகத்தின் இரண்டாம் யாப்பாகும்.

யாப்பு - 2

இறையவன் ஈசனெந்தை - இமை -
யோர்தொழு தேத்தநின்ற *(3.56:1)*
தனதன தானதானா - தன -
தானன தானதானா

என வரும். 56 முதல் 62 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின. சுந்தரர் அருளிய ஏழாந் திருமுறையில் 97 முதல் 100 வரையுள்ள **பஞ்சமப்** பதிகங்கள் ஆளுடைய பிள்ளையார் அருளிய இப் **பஞ்சமப்** பதிகங்களின் யாப்பினை அடியொற்றி அமைந்திருத் தல் காணலாம். இயல்வகை யொன்றேபற்றி நோக்குமிடத்து இப்பதிகங்கள் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்திருத்தல் அறியத் தக்கதாகும்.

யாப்பு - 3

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகள் பயப்பூரச்
(3.63:1)

தேமாங்காய் புளிமாங்காய் புளிமாங்காய் புளிமாங்காய்

எனக் காய்ச்சீர் நான்கு பெற்று வந்த தரவுக் கொச்சகக் கலிப்பா, 63 - 66ஆம் பதிகங்கள் ஒரே நீர்மைய 'தூங்கிசை சேர் பஞ்சமதத் திற்கு ஒல்லையினில் ஒன்றாக்கி' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலின் பஞ்சமத்திற்குரியனவாக இவண் காட்டிய மூவகை யாப்பினையும் ஓசையொப்புமை நோக்கி ஒரு கட்டளை யாக அடக்குதல் முறையாகும்.

சாதாரி

67 முதல் 99 வரையுள்ள பதிகங்கள் **சாதாரிப்** பண்ணுக்கு உரியன. இப் பதிகங்களில் உள்ள யாப்பு விகற்பங்கள் **ஐந்தாகும்.**

யாப்பு - 1

சுரருலகு தார்கள்பயில் தரணிதல
முரணழிய ஆரணமதில் மூப் *(3.67:1)*

தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன்னா

என வரும். இப்பதிகப் பாடல்கள் குற்றெழுத்துப் பயின்று முடுகியலாய் அடிமுதற்சீரின் இரண்டாமெழுத்து சீர்தோறும் ஒன்றி வழியெதுகையாய் வந்தமையால் 67-ஆம் பதிகமாகிய இது **'வழிமெழித் திருவிராகம்'** என்னும் பெயர்த்தாயிற்று. இதன் திருக்கடைக் காப்பில், 'கழுமல நகர், பழுதிலிறை யெழுது மொழி தமிழ் விரகன் **வழிமொழிகள்'** எனக் குறிக்கப் பெறுதலால், இப்பதிகம் வழியெதுகை யாதல் பற்றி, **'வழி மொழி'** என்னும் பெயர் பெற்றமை இனிது புலனாம். இவ்வாறே இதனை அடுத்துள்ள

68-ஆம் பதிகமும் 'வாளவரி கோள்புலி கீளதுரி தாளின் மிசை நாளு மகிழ்வர்' என்றாங்கு வழியெதுகை பெற்றிருத்தல் காண லாம். வழியெதுகை பெற்று வண்ணத்தின் இயல்புடையனவாக அமைந்த இப்பதிகங்களில் 'தனன தன' என்பது **தானதன தந்ததன, தத்ததன, தனத்தன, தனத்தன, தனாதன** என வருதலும் அமையும். 69 முதல் 80 வரை உள்ள பதிங்கள் இவண் குறித்த 67, 68-ஆம் பதிகங்களைப் போன்ற யாப்பினவேனும் அவ்விரு பதிகங்களைப் போன்று சீர்தோறும் வழியெதுகை பெறாமல் முடுகியலனவாய் வருதலின் **'திருவிராகம்'** என வழங்கப் பெறுவனவாயின.

யாப்பு - 2

இவண் குறித்த கட்டளையடி போன்று முதல் நான்கு சீரும் அமைய ஐந்தாஞ் சீராகிய ஈற்றுச் சீர் மட்டும் **'தானா'** என வருவது **சாதாரிப்** பண்ணின் **இரண்டாம்** யாப்பாகும்.

சங்கமரு முன்கைமட மங்கையொரு
 பாலுடன் விரும்பி (3.81:1)

தந்ததன தந்ததன தந்ததன
 தானதன தானா

என வரும். 81 முதல் 83 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 3

பெண்ணிய லுருவினர் பெருகிய
 புனல்விர வியபிறை (3.84:1)

தந்தன தனதன தனதன
 தனதன தனதன

என வரும். **தந்தன 'தனதன'** ஆதலும், **தனதன 'தானன'** ஆதலும் பொருந்தும். முதல் திருமுறையில் வியாழக் குறிஞ்சிக்குரிய கட்டளைகளுள்,

பணிந்தவ ரருவினை பற்றறுத் தருள்செய்த (1.120:1)
தனதன தனதன தானன தனதன

என நாற் சீரடியாக வந்த **திருவிராக** யாப்பின்மேல் **தனதன** என்னும் ஒரு சீர் சேர்ந்து ஐஞ்சீரடியாக அமைந்தது சாதாரிக்குரிய இத் **திருவிராக** யாப்பாகும். 84 முதல் 88 வரையுள்ள பதிகங்கள் இந்த யாப்புக்குரியனவாம்.

யாப்பு - 4

திருந்துமா களிற்றிள மருப்பொடு
திரண்மணிச் சந்தமுந்தி *(3.89:1)*

தனதனா தனதனா தனதனா
தனதனா தந்ததானா

என வரும். 'தனதனா' என்பது தானனா, தத்தனா, தந்தனா ஆதலும், 'தந்ததானா' என்பது தன்னதானா, தானதானா, தானதானா தந்த தானா ஆதலும் பொருந்தும். 89 முதல் 93 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 5

விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே. *(3.94:1)*

தானன தனதன தானன தானன
தானன தனதன தானா

என முன்னிரண்டடிகளைப் போன்று பின்னிரண்டடிகளும் வரும். **தானன 'தனதன'** ஆதலும், தனதன 'தானன' ஆதலும், தானா 'தனனா' ஆதலும் அமையும். 94 முதல் 99 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பினவாகும். இப்பதிகங்களின் பாடல்கள், முதலடியும் மூன்றாமடியும் நாற்சீர் கொண்ட அளவடியாக அமைய, இரண்டாமடியும் நான்காமடியும் முச்சீர் கொண்ட சிந்தடியாகிய முக்காலடியால் முடிந்தமையின் **'திருமுக்கால்'** என வழங்கப் பெறுவனவாயின.

இங்ஙனம் அளவடியும் சிந்தடியும் உறழ்ந்து இடைமடக்காய் வந்த இச்செய்யுள் வகையினை **ஆசிரியத்துறை** என வழங்குவர், பிற்கால யாப்பிலக்கண ஆசிரியர்.[29]

இத்திருமுறையில் 100 முதல் 116 வரையுள்ள பதிகங்கள் **பழம் சுரம்** என்ற பண்ணுக்கு உரியன. திருமுறைகண்ட புராணத்தில் ஆளுடைய பிள்ளையார் அருளிய பதிகங்களுக்கு அமைந்தனவாகக் கூறப்பெற்ற பண்களில் **சாதாரி** என்ற பண்ணையடுத்துப் **புறநீர்மை** என்ற பண் குறிக்கப் பெற்றுள்ளது. எனினும் தேவாரத் திருமுறை ஏடுகளிலும் இதுகாறும் வெளி வந்த பதிப்புகளிலும் **சாதாரிக்கும் புறநீர்மைக்கும்** இடையே **பழம் பஞ்சுரம்** என்ற பண்ணமைந்த பதிகங்கள் பதினேழும், **கௌசிகம்** என்ற பண்ணுக்குரியதாகக் குறிப்பிடப் பெற்ற '**மாலை மாற்று**' என்ற பதிகம் ஒன்றும் இடம் பெற்றுள்ளன. ஞானசம்பந்தர் அருளிய பதிகங்களில் **பழம் பஞ்சுரம்** என்ற பண் அமைந்திருப்பது பற்றியும் அப்பதிகங்களுக்குரிய கட்டளை வகை பற்றியும் திருமுறை கண்ட புராண ஆசிரியர் தெளிவாகக் குறிப்பிடவில்லை. எனினும் ஆளுடைப் பிள்ளையார் திருவாலங்காட்டின் உள்ளே செல்லாது அவ்வூரெல்லையில் தங்கிய பொழுது பாடிய "**துஞ்ச வருவார்**" (1.45) என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தினைக் குறிப்பிடக் கருதிய சேக்கிழார் அடிகள்,

> **"துஞ்ச வருவார்" என்றே எடுத்த ஓசை**
> **சுருதிமுறை வழுவாமல் தொடுத்தபாடல்**
> ....
> **பஞ்சுரமாம் பழையதிறம் கிழமைகொண்டு**
> **பாடினார்**[30]

என்ற அப்பதிகம் **பழம் பஞ்சுரம்** பண்ணில் பாடப் பெற்ற செய்தியைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே, சம்பந்தப்

---

29. வீரசோழியம் - யாப்புப் படலம் - 16 உரை நோக்கி அறிக.

30. பெரி.புரா. திருஞானசம்ப.புரா. 1010

பெருமான் பாடிய பதிகங்களில் **பழம் பஞ்சுரம்** என்ற பண்ணமைந்த பதிகங்கள் உள என்பது நன்கு துணியப்படும். **'துஞ்ச வருவார்'** (1.45) என்ற பதிகத்திற்குரிய **பழம் பஞ்சுரம்** என்ற பெயரை ஒருவர் சொல்ல மற்றவர் கேட்டு விரைவாக எழுதும் நிலையில் பெயரொப்புமையால் அது **பழந்தக்கராகம்** என எழுதப்பட்டும் பின் அப்பதிகம் தக்கராகப் பண்ணுடன் இணைந்து **முதல் திருமுறையில்** முறை மாறிக் கோக்கப் பெற்றிருத்தல் வேண்டும் எனவும், இவ்வாறு பழம் பஞ்சுரப் பதிகங்கள் முறை மாறிக் கோக்கப் பெற்ற நிலையில் மூன்றாம் திருமுறையில் அமைந்த **பழம் பஞ்சுரப் பதிகங்**களின் கட்டளை விகற்பம் திருமுறை கண்ட புராணத்தில் இடம் பெறாது விடுபட்டிருத்தல் வேண்டும் எனவும் கருத வேண்டியிருந்தது. இனி, **பழம் பஞ்சுரப்** பதிகங்களின் வகையினைக் காண்போம்.

பழம் பஞ்சுரம்

யாப்பு - 1

கரும்பமர் வில்லியைக் காய்ந்து
    காதற் காரிகை மாட்டருளி *(3.100:1)*

தனதன தானன தான
    தான தானன தானதன

என வரும். **தனதன 'தானன'** ஆதலும், **தான 'தனனா'** ஆதலும், ஈற்றிலுள்ள **தானன தானதன** என வரும் இரு சீர்களும் **'தனனா தனதானா'** எனவும், **'தனதன தான தனா'** எனவும், **'தனனா தனதனனா'** எனவும் வருதலும் அமையும். 100 முதல் 107 பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 2

வேத வேள்வியை நிந்தனை செய்துழல் *(3.108:1)*

தான தானன தானன தானனா

என வரும் 108-ஆம் பதிகம் நான்கடிப் பாடலாய் அதன் மேல் ஈரடிகள் வைப்பாகப் பெற்று வந்தமையால் 'நாலடிமேல் வைப்பு' என வழங்கப் பெறுகின்றது. இதன்கண் **தான 'தனன'** ஆதலும், **தானன 'தனதன'** ஆதலும் பொருந்தும். நாவுக்கரசர் அருளிய 'திருக்குறுந்தொகை' இதே யாப்பினதென்பதையும் இதற்கு மூல இலக்கியமாக அமைந்தன சிலப்பதிகாரத்தில்,

'நாக நாறு நரந்தை நிரந்தன'[31]

என்பது முதலாக வரும் வேட்டு வரிப் பாடல்கள் என்பதையும் நாம் அறிவோம்.

யாப்பு - 3

மண்ணது வுண்டரி மலரோன் காணா *(3.109:1)*
தானன தானன தனனா தானா

என வருவது 109ஆம் பதிகம். இதன்கண் **தானன** என்பது **'தனதன'** ஆதலும், ஒரோவழித் **தானான 'தானனா'** ஆதலும், **தனனா தானா** என்பது **'தானதானா'** ஆதலும் பொருந்தும்.

யாப்பு - 4

வாம தேகொளா வுரம தேசெயும்
புரமெ ரித்தவன் பிரம நற்புரத்
தான னாமமே பரவு வார்கள் சீர்
விரவு நீள்புவியே. *(3.110:1)*

என்பது,

தானன தானனா தனன தானனா
தனன தானனா தனன தானனா
தனன தானனா தனன தானனா
தனன தானதனா.

31 சிலப் - மதுரை - காடுகாண் - வேட்டுவ வரி - (முன்றிலின் சிறப்பு)

என ஈரடியாய் வரும். முதலடியில் **தனன தானனா** என்பது **நான்கு** முறையும், இரண்டாம் அடியில் **இரண்டு** முறையும், அதன்பின் **'தனன தானதனா'** என முடிவது இவ் யாப்பு விகற்ப மாகும். இதன்கண் **தனன** என்பது **'தான'** ஆதலும் பொருந்தும். 110, 111ஆம் பதிகங்கள் ஒரே நீர்மைய. இவண் காட்டிய யாப்பினின்றும் இரண்டாம் அடி சிறிது வேறுபட்டு வருவது,

> பரசு பாணியர் பாடல் வீணையர்
> பட்டி னத்துறை பல்லவ னீச்சரத்
> தரசு பேணி நின்றார் - இவர்
> தன்மை அறிவரார். *(3.112:1)*

என்பது 112-ஆம் பதிகமாகும். இதன் ஈற்றடி,

> **அரசு பேணி நின்றார் - இவர் -**
> **தன்மை அறிவாரார்.**

என வரும்.

> **'இவர் - தன்மை அறிவாரார்'**

என்பதனை மீண்டும் ஒரு முறை இசைத்துப் பாடலின் இசை நல மும் பொருள் நலமும் சிறந்து விளங்குதல் காணலாம். பாடல் தோறும் இச் சொற்றொடரால் இறுதியடி இறுவதையும் காணலாம்.

யாப்பு - 5 (திரு இயமகப் பதிகங்கள்)

113 முதல் 116 வரையுள்ள பதிகங்கள் **யமகம்** என்னும் சொல்லணி அமைந்தன. **யமகம்** என்பது, ஓரடியில் முன்வந்த சொல்லோ தொடரோ வேறொரு பொருள்பட மீண்டும் அதே அடியில் மடக்கி வருவது. இதனை 'மடக்கு' எனவும் வழங்குதல் உண்டு. **யமகம்** என்பது வடசொல். அதன் முதல் எழுத்தாகிய 'யகரம்' தமிழியல் முறைப்படி மொழிக்கு முதலில் வராது; **'யவ்விற்கு இய்யும்'** (நன்.பதவியல்.நூற்.21) என்றபடி இகரத்தை முதலில் பெற்று **'இயமகம்'** என வழங்கப் பெறும். ஈண்டு அது

திரு' என்னும் சிறப்புடை அடைமொழி பெற்றுத் **'திருஇயமகம்'** என வழங்கப் பெற்றது.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே. *(3:113:1)*

தானன தானன தானதனா
தனதன தானன தானதனா

என ஆறு சீரடியால் இயன்றது 113-ஆம் பதிகம்.

பாயு மால்விடை மேலொரு பாகனே
பாவை தன்னுரு மேலொரு பாகனே. *(3.114:1)*

தான தானன தானன தானனா
தான தானன தானன தானனா

எனவும்,

ஆழ நீழ லுகந்த திருக்கையே
யான பாட லுகந்த திருக்கையே. *(3.115:1)*

தான தான தனன தனதனா
தான தான தனன தனதனா

எனவும் எண் சீரடிகளால் இயன்றன. 114, 115ஆம் பதிகங்கள்

துன்று கொன்றைநஞ் சடையதே
தூய கண்டநஞ் சடையதே. *(3.116:1)*

தான தானனா தனதனா
தான தானனா தனதனா

என ஆறு சீரடியில் இயன்றது 116-ஆம் பதிகம்.

சீர் வகையால் வேறுபட்ட இப்பதிகங்கள் நான்கும் இசை பற்றிய ஓசைத் திறத்தால் ஒத்திருத்தல் பற்றி ஒரே கட்டளையாகக் கொள்ளத் தக்கனவாகும். இவற்றின் முதலடிகளாக மேற்காட்டிய அடிகளில் 'மெய்யினையே', 'பாகனே', 'இருக்கையே', 'நஞ்சடையதே' என வரும் சொற்கள், முறையே மடக்கி வந்தமை

காணலாம். அவற்றுள் 'மெய்' என்பது உடம்பு - உண்மைத் தன்மை எனவும், 'பாகன்' என்பது ஊர்தியாகக் கொண்டு நடத்துபவன் ஒருபாகத்திற் கொண்டவன் எனவும், 'இருக்கை' என்பது இருத்தல் இருக்கு என்னும் வேதத்தினை எனவும், 'நஞ்சடையதே' என்பது நல்ல சடையின் கண்ணது, நஞ்சு அமையப் பெற்றது எனவும் இரு வேறு பொருள்களிற் பயின்றுள்ளமை உணர்தற் குரியதாகும். இவ்வாறே இப் பதிகங்களில் உள்ள பாடல்களின் அடிதோறும் ஒரு சொல்லோ தொடரோ மடக்கி வந்து 'இயைபு' என்னும் தொடை நயம் பொருந்த 'யமகம்' என்னும் சொல் லணிக்கு உரிய மூல இலக்கியமாய் அமைந்தமையால் இத்திருப் பதிகங்கள் 'திரு இயமகம்' எனப் பெயர் பெறுவன ஆயின. இவற்றுக்குத் 'திரு இயமகம்' என்ற இப்பெயர் சேக்கிழார் அடிகள் காலத்திற்கு முற்பட்டு வழங்கிய தொன்மையுடைய தாகும்.

இனி, இவண் குறித்த **பழம் பஞ்சுரம்** என்ற பண் திருமுறை கண்ட புராணத்தில் ஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்களுக்கு உரியதாகக் கூறப் பெறாமையால் இப்பண்ணுக்குரிய 100 முதல் 106 வரையுள்ள பதிகங்களையும் முன்னுள்ள 67 முதல் 99 வரை யமைந்த பதிகங்களுடன் சேர்த்துச் **சாதாரிப்** பண்ணுக்கு உரியன வாகக் கொண்டு 'சாதாரிக்கு ஒன்பதா' எனத் திருமுறை கண்ட புராணம் கூறியபடி அடியிற் கண்டவாறு ஒன்பது கட்டளைகளாக அடக்குவர் **யாழ் நூலாசிரியர்.**[32]

I (67-89)	V (100-107)
II (84-88)	VI (108)
III (89-93)	VII (109)
IV (94-99)	VIII (110-112)

IX (113-116)

15

32 யாழ் நூல் - பக். 245-47

என்பன சாதாரிப் பண்ணுக்கு அமைந்த **ஒன்பது** கட்டளை களாகும்.

மாலை மாற்று

(சித்திர கவி)

117-ஆம் பதிகம் 'மாலை மாற்று' என்னும் சித்திரக் கவிக்குரிய மூல இலக்கியமாக அமைந்துள்ளது. ஒரு மாலைக்கு அமைந்த இரு தலைப்புகளுள் எதனை முதலாகக் கொண்டு நோக்கினாலும் அம்மாலை ஒரே தன்மையதாகத் தோன்றுமாறு போல, ஒரு செய்யுளை முதலிலிருந்து வாசித்தாலும் அன்றி இறுதி தொடங்கி வாசித்தாலும் அதே செய்யுளாக அமையும்படி ஒத்த கருத்துகளை நிரலே பெற்றிருப்பது **'மாலை மாற்று'** என்ற செய்யுளாகும்.

யாமா மாநீ யாமாமா
யாழீ காமா காணாகா
காணா காமா காழீயா
மாமா யாநீ மாமாயா (3.117:1)

என்பது **மாலை மாற்றுத்** திருப்பதிகத்தின் முதற் பாடலாகும். ஈரடிகளாக அமைந்த இப்பாடலில் முதலடியை இறுதி தொடங்கி வாசித்தால் அஃது இரண்டாமடியாக அமைதலும், இரண்டாம் அடியை இறுதி தொடங்கி வாசித்தால் அது முதலடியாக அமைதலும், இவ்விரண்டடிகளையுமே முதலிலிருந்து வாசித் தாலும், இறுதியிலிருந்து வாசித்தாலும் ஒரே பாடலாக அமை தலும் காணலாம். **கௌசிகப் பண்ணுக்கு** உரியதெனக் குறிக்கப் பெற்ற இப்பதிகம் முன் கௌசிகத்திற்கு உரியதென எடுத்துக் காட்டப் பெற்ற **'வீடலால வாயிலாய்'** (3.52) என்ற பதிகத்தினை ஓசை வகையால் ஒத்திருத்தல் உணரத் தக்கதாகும். இப்பதிகத் தினைப் பண்ணடைவுபற்றிக் **கௌசிகப் பதிகங்களோடு** சார வைத்தல் முறையாயினும் பண்டையமைதியினை மட்டிலும் நோக்காது சித்திரகவி என்னும் சிறப்பொன்றே கருதி **மாலை**

மாற்றுத் திருப்பதிகமாகிய இது **திருவியகமப் பதிகங்களின்** பின் வைக்கப் பெற்றது.

புறநீர்மை

118 முதல் 123 வரையுள்ள பதிகங்கள் **'புறநீர்மை'** என்ற பண் அமைந்தன. 'புல்லும் இசைப்புற நீர்மைக்கு ஒனறாகப் போற்றி னார்' எனத் திருமுறைக் கண்ட புராணம் கூறுதலால் இவை **ஆறும்** ஒரே கட்டளையின்பாற்படும் என்பது நன்கு விளங்கும்.

மடல்மலி கொன்றை துன்றுவா ளெருக்கும்
வள்ளியும் மத்தமும் சடைமேல் *(3.118:1)*

தனதன தானா தானனா தனனா
தானனா தானனா தனனா

என வரும். **விளம் மா விளம் மா விளம் விளம் மா** என எழுசீர்க் கழிநெடிலடிகளால் இயன்றது இதன் கட்டளையமைப்பாகும்.

அந்தாளிக் குறிஞ்சி

124, 125-ஆம் பதிகங்கள் **அந்தாளிக் குறிஞ்சி** என்ற பண்ணுக்கு உரியன. 'அந்தாளிக்கு ஒன்றாக்கி' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலால் இவ்விரு பதிகங்களும் ஒரே கட்டளையமைப்புடையன என்பது புலனாகும்.

சுண்ணவெண் ணீறணி மார்பிற் றோல்புனைந் *(3.124:1)*

தானனா தானன தானா தானனா

என வரும். **தானன 'தானா'** ஆதலும், **'தனதன'** ஆதலும், **தானா 'தானன'** ஆதலும் அமையும். இவண் குறித்த பதிகங்கள் இரண்டில் **'கல்லூர்ப் பெரு மணம்'** (3.125) என்ற பதிகம் ஆளுடைய பிள்ளையார் திருநல்லூர்ப் பெருமணத்தில் தம் திருமணம் காண வந்த அன்பர்கள் எல்லோரையும் உடன் அழைத்துக் கொண்டு

அங்கே தோன்றிய ஈறில் பெருஞ் சோதியினுள்ளே புகும் பொழுது அருளிச் செய்யப் பெற்றது ஆதலின், அவர் பாடியருளிய பதிகங்களின் முடிவில் வைக்கப் பெற்றது.

இனி, திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்களில் திருமுறை ஏடுகளில் இன்னத் 'திருவிடைவாசல்' கல்வெட்டி லிருந்து வெளி வந்துள்ள

மறியார்கரந் தெந்தையம் மாதுமை யோடும்
பிறியாதபெம் மானுறை யும்மிட மென்பர்
பொறிவாய்வரி வண்டுதன் பூம்பெடை புல்கி
வெறியார்மல ரிற்றுயி லும்விடை வாயே.

என வரும் திருப்பதிகம் (கல்வெட்டில் கண்டது)

தனனாதன தானன தானன தானா

என்னும் கட்டளை யமைப்புடையதாய், முதல் திருமுறையில் 30 முதல் 33 வரையுள்ள தக்கராகப் பதிகங்களையும், இரண்டாம் திருமுறையில் 35முதல் 37வரையுள்ள இந்தளப் பதிகங்களையும் ஒத்திருத்தலால் அவ்விரு பண்களில் ஏதேனும் ஒன்றில் பாடுதற் கேற்ற இசையமைப்புடையதாகக் கொள்ளுதல் பொருந்தும்.

நான்காந் திருமுறை

நாவுக்கரசர் பெருமான் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் **நான்கு, ஐந்து, ஆறாம்** திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளதை நாம் அறிவோம்.

நான்காம் திருமுறையில் 113 திருப்பதிகங்கள் உள்ளன. 'வாகீசர் அருந்தமிழின் முந்தாய பல தமிழுக்கு ஒன்றொன்றா மொழிவித்து' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப் பிடும். இதனைக் கூர்ந்து நோக்குங்கால், திருநாவுக்கரசர்

அருளிய தேவாரத்துள் பலபண்கள் ஒவ்வொரு கட்டளையே பெற்றிருத்தலும் ஒருசில பண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டளை களைப் பெற்றிருத்தலும் ஒருவாறு உய்த்துணரப் பெறும்.

நான்காம் திருமுறையில், முதற்பதிகமாக விளங்குவது **'கூற்றாயினவாறு விலக்ககிலீர்'** (4.1) என்பது முதற்குறிப்புடைய **கொல்லிப்** பண்ணாகும்.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன் (4.1:1)

தானாதன தான தனத்தனனா
தனனாதன தானன தானதனா

என அறுசீரடியால் வருவது இதன் கட்டளையமைப்பாகும்.

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்

தானா தனனா தனனா தனனா
தனனா தனனா தனனா தனனா

என இதனையே எண்சீரடியாகப் பகுத்திசைத்தலும் உண்டு.

காந்தாரம்

இத்திருமுறையில் 2 முதல் 7 வரையுள்ள பதிகங்கள் **காந்தாரப்** பண்ணுக்கு உரியவை. இப்பதிகங்களில் அமைந்த யாப்பு விகற்பங்கள் **மூன்றாகும்.**

யாப்பு - 1

சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளா மணியும் (4.2:1)

தானன தானன தானா

தனதானா தானா தனனா

என வரும் **'தானன'** என்பது **தனதன, தனான** ஆதலும், **'தானா'** என்பது **தனனா** ஆதலும், **'தனனா' தானா** ஆதலும் அமையும். 2 முதல் 4 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின. 2 - ஆம் பதிகத்தில்

அஞ்ச தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை

என்ற அடியும், 3-ஆம் பதிகத்தில்

கண்டே னவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

என்ற அடியும் பாடல் தோறும் 'நாலடிமேல் ஓரடி வைப்பாக' அமைந்துள்ளன.

யாப்பு - 2

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே (5.1)

தானனா தானான தானான
தானான தானா தானா

என வரும். **தானனா** என்பது **'தானான, தனதான, தனதனன'** என ஆதலும், **தானா 'தனனா'** ஆதலும் அமையும். **காய்ச்சீர்** நான்கு பெற்ற **தரவு கொச்சகக் கலிப்பாவின்** பின் அடிதோறும் இரண்டு **மாச்சீர்** பெற்று வருவது இவ் யாப்பாகும். 5, 6-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 3

கரவாடும் வன்நெஞ்சர்க் கரியானைக் கரவார்பால் (4.7:1)

எனக் **காய்ச்சீர்** நான்கு பெற்று வரும் **தரவு கொச்சகம்** இம் மூவகை யாப்பும் ஓசைத்திறத்தால் ஒரே கட்டளையாக அடங்கும்.

பியந்தைக் காந்தாரம்

இதன்கண் எட்டாவது பதிகம் **பியந்தைக் காந்தார**மாகும்.

சிவனெனு மோசையல்ல தறையோ உலகில்
திருநின்ற செம்மை யுளதே (4.8:1)

தனதன தானதான தனனா தனனா
தனதான தான தனனா

என வரும். இப்பதிகம் **ஆளுடைய பிள்ளையார்** அருளிய இரண்டாம் திருமுறையில் 84 முதல் 86 வரையுள்ள **பியந்தைக் காந்தாரப்** பதிகங்களுக்குரிய கட்டளையமைப்பினை யுடையதாகும். **தனதன 'தானன'** எனவும் **தான 'தனன'** எனவும், **தனனா தனனா 'தனதான தான'** எனவும் வருதல் உண்டு.

திருஅங்கமாலை

ஒன்பதாம் பதிகம் **சாதாரிப்** பண்ணுக்கு உரியதாகும்.

தலையே நீவணங்காய் - தலை -
மாலை தலைக் கணிந்து
தலையா லேபலி தேருந்
தலைவனைத், தலையே நீவணங்காய் (4:9:1)
தனனா தானதானா - தன -
தான தனா தனனா
தனனா தானன தான
தனாதனா - தனனா தானதானா

என வரும். ஈரடியாக வரும். இப்பதிகப் பாடல்கள் மூன்றாந் திருமுறையில் 56 முதல் 62 வரையுள்ள **பஞ்சமப்** பதிகங்களின் யாப்பினை முதலடிக்குரிய யாப்பாகவும், முதல் திருமுறையில் **'பூந்தேர்ந்தாயன கொண்டு நின் பொன்னடி'** (1.54) என்பது முதலாக வரும் **பழந்தக்கராகப்** பதிகங்களின் முதலாம் மூன்றாம்

அடிகளின் அமைப்பினை இரண்டாமடியின் முற்பாதியாகவும், முதலடியின் முற்பாதியாகவுள்ள தொடரையே இரண்டாம் அடியின் பிற்பாதியாகவும் பெற்றன. சிறுவர்களும் எளிதில் பொருளுணர்ந்து இசையுடன் பாடி மகிழும் நிலையில் அமைந்திருத்தல் இப் பதிகத்தின் தனிச் சிறப்பாகும். எண்வகைப்பட்ட குணங்களையுடைய இறைவனது திருவடியினை வணங்காத தலைகள், தத்தமக்கு உரிய புலனுணர்வினைக் கொள்ளும் ஆற்றலை இழந்த ஐம்பொறிகள் போலச் சிறிதும் பயனில்லாதன என்பார்.

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை (9)

என்பது **பொய்யா மொழி.** காணாத கண் கேளாத செவி முதலியன போல இறைவனை வணங்காத் தலைகளும் பயனில என்பதாம். இவ்வாறு சிறப்புடைய அங்கமாகிய தலைமேல் வைத்துக் கூறினாரேனும், உடலுறுப்புகள் என்ற இனம்பற்றி இறைவனை வாழ்த்தாத நா, அவனது பொருள்சேர் புகழ்களைக் கேளாத செவிகள், முதலிய ஏனைய அங்கங்களும் அவ்வாறே பயனில என்பதும் குறிப்பினால் கொள்ள வைத்தார். இக் குறிப்பினை நன்குணர்ந்த மக்கள் எல்லோரும் தம்முடைய தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கைகள் யாக்கை, கால்கள் ஆகிய அங்கங்கள் யாவும் இறை வழிபாட்டில் எளிதில் ஈடுபட்டு இன்புறும் இயல்பினவாகத் திருந்திப் பொறிவாயில் ஐந்தவித்தான் அருளிய ஒழுக்க நெறியில் ஒழுகும் வண்ணம் திருநாவுக்கரசரால் அருளிச் செய்யப்பெற்றது **'திரு அங்கமாலை'** என்னும் இத்திருப்பதிகமாகும். கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதற்கேற்ற தகுதி பெற்றமையால் திருத்தகவினவாக விளங்கும் தலை, கண் முதலிய அங்கங்களின் சிறப்பியல்பினை முதன்முதல் அடிவரை வரிசையாக விரித்துரைத்தல்பற்றி இப்பதிகம் **'திரு அங்கமாலை'** என்னும் பெயர் பெற்றது. அங்கம் - உறுப்பு; மாலை - இயல்பு, வரிசை.

காந்தார பஞ்சமம்

இத்திருமுறையில் 10, 11 என்னும் எண்ணுள்ள பதிகங்கள் **காந்தார பஞ்சமம்** என்ற பண்ணில் அமைந்தன.

முளைக்கதிர் இளம்பிறை மூழ்க வெள்ளநீர் (4.10:1)
தனதன தனதன தான தானனா

என இவ்வாறு **விளம், விளம் மா, விளம்** என்ற நாற்சீரடிகளால் நடப்பது இக்கட்டளையாகும். 10, 11ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.

பழந்தக்க ராகம்

12, 13-ஆம் பதிகங்கள் பழந்தக்க ராகம் என்ற பண்ணுக்கு உரியன.

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
(4.12:1)

தானான தனதானா தனதனனா தானானா

எனக் **காய்ச்சீர்** நான்கு கொண்ட அடிகளால் ஆகிய தரவு கொச்சகமாக அமைந்தன இத்திருப்பதிகங்கள். இவற்றின் கட்டளை யடியினைக் கீழ்க்குறித்த வண்ணம் பதினைந்தெழுத்தால் இயன்றன வாகக் கொள்வர் யாழ்நூலார்.

14, 15-ஆம் பதிகங்கள் **பழம் பஞ்சுரம்** என்ற பண்ணுக்கு உரியன. இப்பண்ணமைந்த பதிகங்களில் **இரண்டு யாப்பு** வடிவங் கள் உள்ளன.

பழம்பஞ்சுரம்

யாப்பு - 1

பருவரை யொன்று சுற்றி யாவங்கை விட்ட
இமையோ ரிநிந்து பயமாய் (4.14:1)

தனதன தான தான தனதான தான
தனனா தனன தனனா

என வரும். இத்திருமுறையில் முன் வந்த **'சிவனெனு மோசை'** (4:8:1) என்ற பியந்தைக் காந்தாரப் பதிகத்தின் யாப்பினை ஒத்தமைந்தது இத்திருப்பதிகத்தின் யாப்பாகும். 14-ஆம் பதிக மாகிய இது இவனது அநாதி முறைமையான பழைய வரலாறுகள் பத்தினையும் விரித்துரைத்துப் போற்றுவதாதலின் **'தசபுராணம்'** என்னும் பெயருடையதாயிற்று.

யாப்பு - 2

பற்றற் றார்சேர் பழம்பதியைப்
பாசூர் நிலாய பவளத்தை *(4:15:1)*

தானா தானா தனதனனா
தானா தனான தனதானா

என வரும். இது மூன்றாம் திருமுறையில் 42-ஆம் எண்ணுள்ள **'நிறைவெண்டிங்கள்'** (3.42) என்னும் **கொல்லிக கௌவாணப்** பதிக யாப்பினைப் பெரிதும் ஒத்திருத்தல் காணலாம். 15-ஆம் பதிகம் இறைவனது திருவருட் பெருமையினை யெண்ணி நெஞ்சம் நெக்குருகிப் போற்றி வழிபடும் மெய்யன்பர்களது பண்டைப் பிறப்பின் தீவினையாகிய பாவம் நீங்குதலைக் குறிக் கொண்டு பாடப்பெற்றதாதலின் **'பாவ நாசத் திருப்பதிகம்'** என்னும் பெயருடையதாயிற்று. இதன் இறுதித் திருப்பாடலில் 'எந்தை பெருமான் என்னெம்மான் என்பார் பாவம் நாசமே' (4.15:11) என இத்திருப்பதிக வழிநின்று இறைவனைப் பரவிப் போற்றுவோர் அடையும் பயன் அறிவுறுத்தப் பெற்றிருத்தல் காணலாம்.

இந்தளம்

16 முதல் 18 வரையுள்ள பதிகங்கள் மூன்றும் **இந்தளம்** பண்ணில் அமைந்தன.

செய்யர்வெண் ணூலர் கருமான் மறிதுள்ளும் *(4.16:1)*

தேமாங்காய் தேமா புளிமா புளிமாங்காய்

என வெண்டளை பிழையாது பன்னிரண்டெழுத்துகளாலாய நாற்சீரடியாக வருதல் இப்பதிகச் செய்யுளின் கட்டளையாகும். பாடலின் ஈற்றடி நேரிசை முதலாகத் தொடங்கியுள்ளது.

‘ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே’

என ஒரெழுத்துக் குறைந்து பதினோரெழுத்துகளாலும், நிரை யசையாகத் தொடங்கின்,

‘இரண்டுகொ லாமவர் எய்தன தாமே’

எனப் பன்னிரண்டெழுத்துகளாலும் வரும். இவண் குறித்த எழுத் தளவும் வெண்டளையும் பிழையாது நிற்க, **மாச்சீர் விளச்சீர் காய்ச்சீர்கள்** விரவி வருதல் இவ் யாப்பின் அமைப்பாகும். 16-ஆம் பதிகத்தின் மூன்றாம் அடியினை,

மெய்யர்மெய்ந் நின்றவர்க் கல்லா தவர்க்கென்றும் *(4.16:1)*
தேமாங்காய் கூவிளம் தேமா புளிமாங்காய்

எனப் பிரித்திசைத்து வெண்டளை பிழையாமை கண்டு கொள்ளலாம்.

எத்தீ புகினும் எமக்கொரு தீதிலை
தெத்தே யெனமுரன் றெம்முள் உழிதர்வர்
முத்தீ யனையதொர் மூவிலை வேல்பிடித்
தத்தீ நிறத்தார் அரநெறி யாரே (4.17:1)

என்பது 17-ஆம் பதிகத்தின் முதற் பாடல். ‘இதன் முதலடியில் ‘எத்தீ புகினும்’ என்ற பாடத்திற்கு வேறாக ‘எத்திசை புகினும்’ என்ற பாடம் சிலபதிப்புகளில் காணப் பெறுகின்றது. ‘எத்திசை புகினும்’ என வரும் இருசீர்களும் **கூவிளம் புளிமா** என நின்று நிரையொன்றாசிரியத் தளையாய் வெண்டளை பிழைத்தலால் ‘எத்தீ புகினும்’ என்ற பாடமே இப்பதிகத்தின் யாப்பமைதிக்கு ஏற்புடைத்தென்பது நன்கு துணியப்படும்.

திருமூலர் அருளிய **திருமந்திரமாலை**யிலுள்ள திருப்பாடல்கள் யாவும் இவண் குறித்த **இந்தளப்** பதிகங்களின் யாப்பின் வண்ணம் அமைந்தனவாகும்.

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தானைந்து
வென்றனன் ஆறு விரித்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.[33]

எனவரும் திருமந்திரப் பனுவல் நாற்சீரடி நான்கினால் இயன்று முதல் மூன்றடிகளிலும் அடியொன்றிற்குப் பன்னிரண்டெழுத்துகளும், ஈற்றடி நேரசையினை முதலாகக் கொண்டு தொடங்கினமையின் பதினோரெழுத்தும் பெற்று வெண்டளை பிழையாது வந்தமை காணலாம். எனவே திருமூல நாயனார் அருளிய திருமந்திர யாப்பு திருநாவுக்கரசர் அருளிய **இந்தளப்** பதிகங்களின் யாப்புக்கு மூல இலக்கியமாக அமைந்தது எனக் கொள்ளுதல் பொருந்தும்.

சீகாமரம்

19, 20-ஆம் பதிகங்கள் **சீகாமரப்** பண்ணுக்கு உரியன. இவற்றுள்,

சூலப் படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட் டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை, நான்கண்ட தாரூரே (4.19:1)

என வரும் 19-ஆம் திருப்பதிகம், வெண்பாக்களில் பயிலுதற்குரிய **மாச்சீர் விளச்சீர் காய்ச்சீர்** ஆகிய சீர்களைப் பெற்று வெண்டளை தழுவி நடக்கும் **கொச்சகக் கலிப்பா** யாப்பில் அமைந்ததாகும்.

---

33. திருமந்திரமாலை - பாயிரம் - கடவுள் வாழ்த்து - 1

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்.[34]

என்பது முதலாகச் சிலப்பதிகாரத்தில் வரும் வரிப்பாடல்கள் மேற்குறித்த வண்ணம் வெண்டளை தழுவி நடக்கும் **கொச்சகக் கலிப்**பாவுக்குரிய இலக்கியமாகத் திகழ்தல் காணலாம். இப்பாடல் களின் ஈற்றுச்சீர் இரண்டினை நீக்கிவிட்டு அவ் விடத்து **ஓரசைச் சீர்** ஒன்றினைப் பெய்து வாசித்தால் இக் கொச்சகக் கலிப்பாக்கள் **வெண்பாவின் வடிவத்தைப்** பெறுதல் காணலாம்.

சூலப் படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட் டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை (யாம்)

என கீழ்க் குறித்த பாடலில் வெண்பாவின் உருவம் புலனாதல் காணலாம்.

20-ஆம் பதிகம்,

காண்ட லேகருத் தாய்நி
    னைந்திருந் தேன்மனம்புகுந் தாய்கழலடி
பூண்டுகொண் டொழிந்தேன் - புறம்-
    போயினா லறையோ (4.20:1)

தான தானன தான தானன தான
    தானன தானன தன
தானனா தனனா - தன
    தானனா தனனா

என முன்னீரடிகளைப் போன்று பன்னீரடிகளும் வருவன. இரண்டாம் திருமுறையில் 49 முதல் 53 வரையுள்ள **சீகாமரப்** பதிகங்களின் யாப்பினை ஒத்தமைந்தது இத்திருப்பதிகமாகும்.

---

34. சிலப். மதுரை - வேட்டுவவரி - வள்ளிக் கூத்து - முன்னிலைப் பரவல்

திருமூலர் அருளிய **திருமந்திரமாலையி**லுள்ள திருப்பாடல்கள் யாவும் இவண் குறித்த **இந்தளப்** பதிகங்களின் யாப்பின் வண்ணம் அமைந்தனவாகும்.

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தானைந்து
வென்றனன் ஆறு விரித்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.[33]

எனவரும் திருமந்திரப் பனுவல் நாற்சீரடி நான்கினால் இயன்று முதல் மூன்றடிகளிலும் அடியொன்றிற்குப் பன்னிரண்டெழுத்துகளும், ஈற்றடி நேரசையினை முதலாகக் கொண்டு தொடங்கினமையின் பதினோரெழுத்தும் பெற்று வெண்டளை பிழையாது வந்தமை காணலாம். எனவே திருமூல நாயனார் அருளிய திருமந்திர யாப்பு திருநாவுக்கரசர் அருளிய **இந்தளப்** பதிகங்களின் யாப்புக்கு மூல இலக்கியமாக அமைந்தது எனக் கொள்ளுதல் பொருந்தும்.

சீகாமரம்

19, 20-ஆம் பதிகங்கள் **சீகாமரப்** பண்ணுக்கு உரியன. இவற்றுள்,

சூலப் படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட் டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை, நான்கண்ட தாரூரே (4.19:1)

என வரும் 19-ஆம் திருப்பதிகம், வெண்பாக்களில் பயிலுதற்குரிய **மாச்சீர் விளச்சீர் காய்ச்சீர்** ஆகிய சீர்களைப் பெற்று வெண்டளை தழுவி நடக்கும் **கொச்சகக் கலிப்பா** யாப்பில் அமைந்ததாகும்.

---

33. திருமந்திரமாலை - பாயிரம் - கடவுள் வாழ்த்து - 1

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்.[34]

என்பது முதலாகச் சிலப்பதிகாரத்தில் வரும் வரிப்பாடல்கள் மேற்குறித்த வண்ணம் வெண்டளை தழுவி நடக்கும் **கொச்சகக் கலிப்பாவுக்குரிய** இலக்கியமாகத் திகழ்தல் காணலாம். இப்பாடல் களின் ஈற்றுச்சீர் இரண்டினை நீக்கிவிட்டு அவ் விடத்து **ஓரசைச் சீர்** ஒன்றினைப் பெய்து வாசித்தால் இக் கொச்சகக் கலிப்பாக்கள் **வெண்பாவின் வடிவத்தைப்** பெறுதல் காணலாம்.

சூலப் படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட் டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை (யாம்)

என கீழ்க் குறித்த பாடலில் வெண்பாவின் உருவம் புலனாதல் காணலாம்.

20-ஆம் பதிகம்,

காண்ட லேகருத் தாய்நி
 னைந்திருந் தேன்மனம்புகுந் தாய்கழலடி
பூண்டுகொண் டொழிந்தேன் - புறம்-
 போயினா லறையோ (4.20:1)

தான தானன தான தானன தான
 தானன தானன தன
தானனா தனனா - தன
 தானனா தனனா

என முன்னீரடிகளைப் போன்று பன்னீரடிகளும் வருவன. இரண்டாம் திருமுறையில் 49 முதல் 53 வரையுள்ள **சீகாமரப்** பதிகங்களின் யாப்பினை ஒத்தமைந்தது இத்திருப்பதிகமாகும்.

---

34. சிலப். மதுரை - வேட்டுவவரி - வள்ளிக் கூத்து - முன்னிலைப் பரவல்

21-ஆம் பதிகம் **குறிஞ்சிப்** பண்ணுக்கு உரியது.

முத்து விதான மணிப்பொற்
கவரி முறையாலே (4.21:1)

தானா தனான தனனா
தனன தனதானா

என வருதல் இதன் கட்டளையடியாகும். 'தானா' 'தனானா' 'தனனா' 'தனன' 'தானன' என்பன ஒத்த அளவினவாய் வருதல் பொருந்தும். முதல் திருமுறையில் **குறிஞ்சி** என்ற பண்ணுக்கு உரியனவாய் 97 முதல் 102 வரையுள்ள பதிகங்களை யொத்த யாப்பியல்புடையது இத்திருப்பதிகமாகும்.

திருநேரிசை

இத்திருமுறையில் 22 முதல் 79 முடியவுள்ள பதிகங்கள்.

விளம், மா, மா விளம் மா மா

என்ற **அறுசீரடி** யாப்பாக வரும். **திருநேரிசைப் பதிகங்களாகும்.**

திருவிருத்தம்

80. முதல் 113 வரையுள்ள பதிகங்கள் கட்டளைக் கலித்துறையாப்பாகிய **திருவிருத்த** பதிகங்கள். இவ்விருவகைத் திருப்பதிகங்களையும் **கொல்லிப் பண்ணின்** இருவேறு கட்டளை களாகக் கொள்வர். 'தந்தாத நேரிசையாங் கொல்லிக்கு நாட்டில் இரண்டு' என திருமுறைகண்ட புராணம் குறிப்பிடுதலால் திரு நேரிசைப் பதிகங்களை **'நேரிசைக் கொல்லி'** என்றும், திரு விருத்தப் பதிகங்களை **'விருத்தக் கொல்லி'** என்றும் வழங்கும் வழக்குண்மை இனிது விளங்கும். இத்திருமுறையின் முதற்கண் கொல்லிப் பண்ணுக்குரியதாகக் குறிக்கப் பெற்ற **'கூற்றாயின'** (4.1) என்ற திருப்பதிகம். 'வாகீசர் அருந்தமிழின் முத்தாய **தமிழுக்கு**

ஒன்றொன்றா மொழி வித்து' என்றபடி தனியே ஒரு கட்டளை யாகக் கொள்ளப் பெற்றமையாலும் நேரிசையின் பின்னுள்ள திருவிருத்தப் பதிகங்களைத் திருமுறை கண்டபுராணம் குறிப் பிடாது விட்டமையாலும் 'நேரிசையாங் கொல்லிக்கு இரண்டு' என்னும் தொகையுள் நேரிசை ஒரு கட்டளையாகவும், திருவிருத்தம் ஒரு கட்டளையாகவும் அடங்கினமை உய்த்துணரப் பெறும்.

ஐந்தாம் திருமுறை

திருக்குறுந்தொகை யாப்பமைந்த திருப்பதிகங்கள் **நூறு** கொண்டது ஐந்தாம் திருமுறையாகும்.

(ஒரு) மா, கூவிளம், கூவிளம்

என வருதல் திருக் குறுந்தொகைச் செய்யுளின் கட்டளையடி என்பது முன்னர் விளக்கப் பெற்றதை நினைவு கூறலாம். 'குறுந் தொகைக்கு ஓர் கட்டளையா விரித்துரைத்தார்' என்பது திருமுறை கண்டபுராணம்.

ஆறாம் திருமுறை

திருத்தொண்டகப் பதிகங்கள் அனைத்தும் ஒருமுறையாகத் தொகுக்கப் பெற்றது ஆறாந் திருமுறையாகும். இதன் கண் **தொண்ணூற்றொன்பது** திருப்பதிகங்கள் அடங்கியுள்ளன. **காய்ச் சீரடி, நான்கினால்** இயன்ற கொச்சகச் செய்யுளில் அடிதோறும் **இரண்டாம்** சீர்க்குப் பின்னும் **நான்காம்** சீர்க்குப் பின்னும் இரண்டிரண்டு **மாச்சீர்களைப்** பெற்று வரும் யாப்பு தாண்டகம் என்னும் பாவாகும் என்பது முன்னர் விளக்கப் பெற்றதை ஈண்டு நினைவு கூர்தல் பொருத்தமாகும். 'தாண்டகம் பாவுக்கோர் கட்டளையாத் தாபித்து' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப் பிடுதலால் திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகப் பதிகங்கள் யாவும் ஒரே கட்டளையாதல் இனிது விளங்கும்.

ஏழாந் திருமுறை

நம்பியாரூரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் யாவும் ஏழாம் திருமுறை என **ஒரே திருமுறையாக** வகுக்கப் பெற்றுள்ளதை நாம் அறிவோம்.

இந்தளம்

இத்திருமுறையில் 1 முதல் 12 வரை அமைந்த பதிகங்கள் **இந்தளப்** பண்ணுக்கு உரியன. இப் பதிகங்களில் **ஒன்பது** யாப்பு விகற்பங்கள் உள்ளன.

யாப்பு - 1

பித்தா பிறைசூடி பெருமானே யருளளா (7.1:9)
தானாதன தானாதன தானாதன தானா

என வரும். இவ்வாறு வகையுளியாக்காது,

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
தானா தனதானா தனதானா தனதானா.

எனப் பொருள் இனிது புலப்படப் பிரித்திசைத்தலும் ஏற்புடையதே யாகும். முதல் திருமுறையில் 9 முதல் 18 வரையுள்ள **நட்ட பாடைப்** பதிகங்களை அடியொற்றியமைந்தது இப்பதிகமாகும்.

யாப்பு - 2

கோத்திட்டை யுங்கோவ லுங்கோயில் கொண்டீர்
உமைக்கொண்டு ழல்கிறை தோர்கொலைச் சில்லைச்
(7.2:1)

தானான தானான தானான தானா
தானான தானான தானான தானா

என **எண் சீரடியாக** வரும். இதனை,

கோதிட்டையும் கோவலும் கோயில்கொண்டீர்
உமைக்கொண்டுழல் கின்றதோர் கொல்லைச் சில்லைச்

என **அறுசீரடியாகப்** பிரிந்திசைத்தலும் பொருந்தும். இத் திருமுறையில் 2, 4, 9 - ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.

'நாலாந் திருமுறையில் முதற் பதிகமாகிய **கூற்றாயின**' (4.1) என்பதன் யாப்பினை அடியொற்றி அமைந்தன இப்பதிகங்களாகும்.

யாப்பு - 3

கல்வா யகிலும் கதிர்மா மணியும்
கலந்துத் திலருந் திவலின் கரைமேல் *(7.3:1)*

தானா தனனா தனனா தனனா
தனனா தனனா தனனா தனனா

எனவரும் **தானா 'தனனா'** ஆதலும், **தனனா 'தானா'** ஆதலும் அமையும். இரண்டாம் திருமுறையில் 17 முதல் 24 வரையுள்ள **இந்தளப்** பதிகங்களின் கட்டளையடி இரண்டு கொண்டது ஓரடியாக வருதல், இம்மூன்றாம் திருப்பதிகத்தின் கட்டளையாகும்.

யாப்பு - 4

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றால் *(7.5:1)*

தானா தானா தனனா தான்
தானா தானன தான தானா

எனவரும். 5, 6 -ம் பதிகங்கள் ஒரே யாப்பின. **'தானா' தனனா** ஆதலும் **'தனனா' தானா** ஆதலும் அமையும்.

யாப்பு - 5

மத்த யானை யேறி மன்னர் சூழ வருவீர்காள் *(7.7:1)*

தான தானா தான தானா தான தனதானா

 என வரும்.

தான 'தனன' ஆதலும் **தானா 'தனனா'** ஆதலும் **தன தானா 'தானதனா'** ஆதலும் அமையும். இத்திருமுறையில் **ஏழாந் திருப்** பதிகமாகிய இது **காரைக்கால் அம்மையார்** அருளிய திருவாலங் காட்டு **மூத்ததிருப்பதிகங்கள்** இரண்டனுள் **'எட்டிளவம்'** என்னும் **இந்தளப்** பதிக யாப்பினை ஒத்தமைந்ததாகும்.

யாப்பு - 6

இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு *(7.8:1)*

கருவிளம் புளிமா தேமா
தேமாங்காய் புளிமா தேமா

என வருவது **எட்டாந்** திருப்பதிகத்தின் கட்டளையடியாகும். இது திருநாவுக்கரசர் அருளிய திருநேரிசை யாப்பில் அமைந்தமை காணலாம். இதன்கண் **'தேமாங்காய்'** என்னும் வாய்பாடமைந்த 'இன்பத்தோ' என்ற சீர் **'கூவிளம்'** என்ற சீரளவாய் நின்றமை **செவி கருவியாக** உணரத்தக்கதாகும்.

யாப்பு - 7

தேனெய் புரிந்துழல் செஞ்சடை யெம்பெரு
மான்தி டந்திகழ் ஐங்கணையக் (7.10:1)

தான தனாதன தானன தானன
தானன தானன தானதனா

என வருவது பத்தாந் திருப்பதிகத்தின் அடியமைப்பாகும். இதனை,

தேனெய்புரிந் - தழல் - செஞ்செடை யெம்பெரு
மானதிடந் - திகழ் - ஐங்கணையக

தானதனா - தன - தானன தானன
தானதனா - தன - தானதனா

எனப் பிரித்துப் பாடுதலும் பொருந்தும்.

யாப்பு - 8

திருவுடை யார்திரு மாலய னாலும் *(7.11:1)*

கருவிளம் கூவிளம் கூவிளம் தேமா

என நாற்சீரடியாய் வெண்டளை தழுவி வருவது பதினோராந் திருப்பதிகம்.

இப்பதிகம் நான்காம் திருமுறையில் 17-ஆம் பதிகமாகிய **'எத்தீ புகிலும்'** (4.17) என்னும் **இந்தளப்** பதிகத்தினை அடியொற்றி அமைந்திருத்தல் உணரத் தக்கதாகும்.

யாப்பு - 9

வீழக் காலனைக் கால்கொடு
பாய்ந்த விலங்கலான் *(7.12:1)*

தானா தானனா தானன
தான தனதானா

என வரும் அடியமைப்பினை யுடையது **பன்னிரண்டாம்** திருப் பதிகமாகும். **தானா 'தனனா'** ஆதலும், **'தானன'** ஆதலும், **தனதனா 'தானனா'** ஆதலும் அமையும்.

''ஈண்டிசைசேர் இந்தளத்துக்கு இரண்டாக'' என்றமையின் கீழ்ப்போந்த **பன்னிரண்டு** பதிகங்களிடையே பத்து யாப்பு விகற்பங்கள் உளவேனும், தாள விகற்பங்கள் இரண்டெனவே கொள்ளல் வேண்டும்'' என்பர் யாழ் நூலார்.[35]

தக்கராகம்

13 முதல் 16 வரையுள்ள பதிகங்கள் **தக்கராகப்** பண்ணுக்கு உரியன. இவற்றில் நான்கு யாப்பு விகற்பங்கள் உள்ளன.

யாப்பு - 1

மலையாரரு வித்திரண் மாமணி யுந்தி (7.13:1)

தனனாதன தானன தான தானா

---

35. யாழ்நூல் - பக்.251

என வரும் (13-ஆம் பதிகம்). இத்திருப்பதிகப் பாடல்களின் இரண்டாம் அடிகளில் முதற் சீர்களாகிய 'குலையார'1 'சுரும்பார' (3), 'மொட்டார' (6), 'தாதார' (7), 'செய்யார' (8), 'மண்ணார' (9) என்பவற்றில் ஈற்று ரகரம் மெய்ந் நீர்மை பெறும் என்பர் யாழ் நூலார்.

யாப்பு - 2

வைத்தனன் றனக்கே தலையுமென் னாவும்
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி *(7.14:1)*

கூவிளம் புளிமா கருவிளம் தேமா
கூவிளம் கூவிளம் தேமா

என எழுசீரடி பெற்றுவரும் (14-ஆம் பதிகம்).

தானன தனனா தனதன தானா
தானன தானன தானா

என்பதனைக் கட்டளை யடியாகக் கொள்ளலாம்.

யாப்பு - 3

பூணா ணாவதோ ராவங்கண் டஞ்சேன்
புறங்காட் டாடல்கண் டிகழேன் *(7.15:1)*

தேமா கூவிளம் கருவிளம் தேமா
புளிமா கூவிளம் புளிமா

என எழுசீராய் வரும் (15-ஆம் பதிகம்). இவ்வடியில் 'ரரவங்கண்' என்புழி ஙகர வொற்றும், 'டாடல்கண்' எனபுழி லகர வொற்றும் ஒலியடங்கி நிற்க, அவ்வொற்றின் முன்னும் பின்னும் நின்ற குறில்கள் இணைந்து நிரையசையாயின. ஆதலால் அச்சீர்கள் முறையே: **'கருவிளம்' 'கூவிளம்'** என ஓசையூட்டப் பெற்றன.

தானா தானன தனதன தானா
தனனா தானன தனனா

என்பதனை இப்பதிகத்தின் கட்டளையடியாகக் கொள்ளலாம்.

யாப்பு - 4

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவங்கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவடன் குணத்தினைநன் கறிந்து
(7.16:1)

என **எண்சீரடியாக** வருவது 16ஆம் பதிகம்.

தனனதன தனதனன தானதன தானா
தனனதன தானதன தனதனன தானா

என்பதனை இதன் கட்டளையடியாகக் கொள்ளலாம். **தனனதன 'தானதன'** ஆதலும், **தானா 'தனனா'** ஆதலும் பொருந்தும். 'நீண்ட **தக்கராகத்துக்கு** இரண்டாக நிகழ்வித்தார்' எனத் திருமுறை கண்டபுராணம் குறிப்பிடுதலால் கீழ்க்காட்டிய நான்கு யாப்பு விகற்பங்களையும் ஓசை யொற்றுமையையும் **தாள** அமைதியையும் நோக்கி முன்னுள்ளோர் **இரண்டு கட்டளை யாக** அடக்கினார்கள் என்பது புலனாம்.

நட்டராகம்

17 முதல் 30 வரையுள்ள பதிகங்கள் **'நட்டராகம்'** என்ற பண்ணுக்கு உரியன. 'கூறற்கரிய நட்ட ராகத்து இரண்டு' என்பது திருமுறை கண்ட புராணத்துக் குறிப்பாதலின் இப்பதிகங்கள் இரண்டு கட்டளையுள் அடங்கும் எனத் தெரிகின்றது. 17 முதல் 29 வரையுள்ள பதிகங்கள் ஒரு கட்டளையாகக் கொள்ளத்தக்கன. 30-ஆம் பதிகம் மற்றொரு கட்டளையாகும். முதற் கட்டளைக் குரிய பதிகங்களில் இரண்டு யாப்பு விகற்பங்கள் உள்ளன.

யாப்பு - 1

கோவல னான்முகன் வானவர்
கோனுங்குற் றேவல்செய்ய *(7.17:1)*

கூவிளம் கூவிளம் கூவிளம்
தேமாங்காய் கூவிளங்காய்

எனக் கட்டளைக் கலித்துறை யாப்பாக அமைந்தன 17-20, 22, 24-28-ஆம் பதிகங்களாகும். இவற்றில் 'ஏவல்செய்ய' என்றாங்கு அடியின் ஈற்றில் வரும் சீர்களில் இடையே **லகரம்** முதலிய ஒற்றுக் காரணமாக 'கடையொரு சீரும் விளங்காய் ஆகி' என்னும் விதி மாறுபடுமாயின், அச்சீர்களின் இடையே நின்ற 'லகரம்' முதலிய ஒற்றினைக் குறைந்த ஒலியினதாகக் கொண்டு அதனை விட்டு அதன் முன்னும் பின்னும் உள்ள குறில்களை இணைத்து நிரையசையாக்கி விளங்காய்ச் சீராக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பதிகங்கள் மூன்றாந் திருமுறையில் **பஞ்சமப்** பண்ணுக்கு உரியனவாக 56 முதல் 62 வரையுள்ள திருப்பதிகங் களை யொத்து அமைந்தன கட்டளைக் கலித்துறை யாப்பில் வரும் இத்திருப்பதிகங்களை,

பொன்னார் மேனியனே - புலித் - தோலை யரைக்கசைத்து
(21, 22)

தானா தானதனா - தன - தானா தனதனனா

என இவ்வாறு பிரித்து இசைத்தல் மரபாகும்.

யாப்பு - 2

21, 23, 29-ஆம் பதிகங்கள் இவை போன்று கட்டளைக் கலித்துறையாக அமைந்தன அல்லவாயினும்,

நொந்தா ஒண்சுடரே - நுனை - யேநி னைந்திருந்தேன்
(7.21:1)

தானா தானதனா - தன - தான தானதனா

என கீழ்க்குறித்த வண்ணம் பிரித்துப் பாடுதற்கேற்ற ஒத்த ஓசைய வாய் உள்ளன. ஆகவே இப்பதிகங்கள் கீழ்க் குறித்த பதிகங் களுடன் சேர்த்து ஒரே கட்டளையாகக் கொள்ளப் பெற்றன.

கட்டளை - 2

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில்
வைத்துகந்து திறம்பா வண்ணம் (7.30:1)

கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய்
கூவிளங்காய் புளிமா தேமா

என முன்னுள்ள சீர்கள் நான்கும் **காய்ச்சீர்களாகவும்** பின்வந்த சீர்கள் இரண்டும் **மாச்சீர்களாகவும்** வருதல் **நட்டராகத்தின்** இரண்டாங் கட்டளையாகும். 30-ஆம் பதிகமாகிய இது முதல் திருமுறையில் 129 முதல் 132 வரையுள்ள **மேகராகக் குறிஞ்சிப் பதிகங்களை** யொத்த யாப்பமைதியுடையதாயினும் அப்பதிகங்கள் போன்று தொடர்ந்து செல்லும் ஒழுகிய ஓசையினதாகாது சீர்தோறும் தாள அறுதி பட இடையறவு பட்டிசைக்கும் ஓசையினதாதல் நுணுகி நோக்கத் தக்கதாகும்.

கொல்லி

31 முதல் 37 வரையுள்ள பதிகங்கள் **கொல்லிப்** பண்ணுக்கு உரியன. 'கொல்லிக்கு வேறுவகை மூன்றாக' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலால் **கொல்லிக்கு** உரிய பதிகங்கள் **மூன்று** கட்டளை பெறும் என்பது புலனாகும்.

கட்டளை - 1

முந்தை யூர்முது குன்றம் குரங்கணின் முட்டம் (7.31:1)

தான தானன தான தனாதன தானா

என வரும். **தான 'தனன'** ஆதலும், **தானா 'தனனா'** ஆதலும் அமையும். பதின்மூன்று எழுத்துகளால் இயன்ற இக்கட்டளையடி யில் **தான தானன** என்னும் முதலிரண்டு சீர்களும் **'தனனாதன'** என ஒரு சீராக ஒன்றியிசைத்தலும், **தான தனாதன** என்னும் மூன்றாம் நான்காம் சீர்கள் **'தானன தானா'** எனப் பிரிந்திசைத் தலும் பொருந்தும்.

கடிதாய்க்கடற் காற்றுவந் தெற்றக் கரைமேல் *(17.32:1)*

தனனாதன தானன தான தனனா

என வருதல் காணலாம். 31, 32-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.

கட்டளை – 2

பாறு தாங்கிய காடரோபடு
தலைய ரோமலைப் பாவையோர் (7.33:1)

தான தானன தான தானன
தனன தானன தானனா

என வரும் ஈற்றுச்சீர் **'தனதனா'** ஆதலும் ஒழிந்த சீர்களிலே **தான 'தனன'** ஆதலும், அமையும். 32 முதல் 36 வரையுள்ள பதிகங்கள் ஒரே யாப்பின. இவை மூன்றாம் திருமுறையில் **கொல்லிப்** பண்ணுக்கு உரியனவாக 37 முதல் 39 வரை அமைந்த திருப் பதிகங்களின் யாப்பமைதியினை உடையன.

கட்டளை – 3

குருகுபா யக்கொழுங் கரும்புகள் நெரிந்தசா (7:37:1)

தனதனா தானனா தனதன தனதனா

என வருவது 37-ஆம் பதிகம். இது மூன்றாந் திருமுறையில் **கொல்லிப்** பண்ணைச் சேர்ந்த 24 முதல் 36 வரையுள்ள திருப்பதிகங்களை அடியொற்றி அமைந்ததாகும்.

திருமுறை கண்ட புராணத்தில் சுந்தரர் அருளிய திருப்பதிகங் களைக் குறிக்குமிடத்துக் **கொல்லிபண்ணை** யடுத்துப் **பழம் பஞ்சுரம்** என்ற பண் குறிக்கப் பெற்றதே யன்றிக் **கொல்லிக் கௌவாணம்** என்ற பண் குறிக்கப்பெற வில்லை. இவ்வாறே ஆளுடைய பிள்ளையார் அருளிய பதிகங்களைக் குறிக்குமிடத்தும் கொல்லியின் வேறாகக் **கொல்லிக் கௌவாணம்** குறிக்கப் பெற வில்லை. ஆயினும் கொல்லியின் வேறாகக் **(கொல்லிக்) கௌவாணம்** என்ற பண் உள்ளமை நாம் அறிவோம். 'கொல்லிக்கு வேறு வகை மூன்றாக்' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலைக் கூர்ந்து நோக்குங்கால் கொல்லிப் பண்ணுக்கு உரிய கட்டளைப் பதிகங்களும் அக் கட்டளையின்

தொடர்புடைய கொல்லிக் கௌவாணப் பண்ணுக்குரிய திருப் பதிகங்களும் உள என்பது குறிப்பாற் புலனாதல் காணலாம்.

கொல்லிக் கௌவாணம்

இத்திருமுறையில் 38 முதல் 41 வரையுள்ள பதிகங்கள் கொல்லிக்கௌவாணப் பண் அமைந்தன. இப் பதிகங்களுக்குரிய யாப்பு விகற்பங்கள் **நான்காகும்.**

யாப்பு - 1

தம்மானை யறியாத சாதிய ருளரே
சடைமேற்கொள பிறையானை விடை மேற்கோள்
விகிர்தன *(7.38:1)*

என **எண் சீரடியால்** வரும்

காய் காய் காய் மா
காய் காய் காய் மா

என்பதனை இதன் கட்டளையடியாகக் கொள்ளலாம். 38, 39, 40, 46 பதிகங்கள் ஒரே யாப்பின. இப் பதிகங்களில் 'சாதிய்யார்' 'வெல்லும்மா' என ஓர் ஒற்றெழுத்தினைப் பெய்து **காய்ச்சீர்** கொள்ள வேண்டிய இடங்களும், 'தில்லை - வாழ்' 'இல்லை - யே' என ஐகாரத்தை இரண்டு மாத்திரையுடையதாகக் கொண்டு **காய்ச்சீர்** கொள்ள வேண்டிய இடங்களும் 'வம்ப-றா' 'எம்பி-ரான்' எனக் குற்றெழுத்தினை விட்டிசைத்துக் **காய்ச்சீர்** கொள்ள வேண்டிய இடங்களும் உள.

யாப்பு - 2

முதுவா யோரி கதற முதுகாட்
டெரிகொண் டாடல் முயல்வானே *(7.41:1)*

தனனா தானா தனன தன்னா
தனனா தானா தனதானா

என வருவது 41-ஆம் பதிகமாகும்.

யாப்பு - 3

எறிக்குங்கதிர் வேயுதிர் முத்தமோ
டேலமில வங்கநதக் கோலமிஞ்சி *(7.42:1)*

தனனாதன தானன தானன
தானாதன தானான தானதானா

எனவருவது 42-ஆம் பதிகம். இது **'கூற்றாயின'** (4.1) என்ற பதிகத்தின் யாப்பினை ஒத்திருத்தல் காணலாம்.

யாப்பு - 4

நஞ்சி யிடையின்று நாளையென்
றும்மை நச்சுவார் *(7.43:1)*

தான தனதான தானனா
தானா தானனா

என வருவது 43-ஆம் பதிகம். இக்கட்டளையடியினை

தானதன தானன தான தானன தானனா

எனவும்,

தானன தானன தான தான தனதனா

எனவும் பிரிந்திசைக்கும்படி இப்பதிகப் பாடல்கள் அமைந்துள்ளன. 43-45 ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின. **கொல்லிப்** பதிகங்களுக்கு மூன்று கட்டளைகள். எனவே அவற்றுடன் தொடர்புடைய **கொல்லிக் கௌவாணப்** பதிகங்களின் கட்டளைகளும் மூன்றெனக் கொள்ளுதல் பொருந்தும். இவண் காட்டிய யாப்பு விகற்பங்களுள் 1, 2-ஆம் விகற்பங்கள் இருவேறு கட்டளைகளாகவும் 3,4-ஆம் விகற்பங்கள் இரண்டும் ஓசை ஒப்புமைபற்றி ஒரு கட்டளையாகவும் கொள்ளுதல் பொருந்தும்.

பழம்பஞ்சுரம்

47 முதல் 53 வரையுள்ள பதிகங்கள் **பழம் பஞ்சுரம்** என்ற பண்ணைச் சார்ந்தன. இவற்றில் யாப்பு விகற்பங்கள் **ஐந்து** உள்ளன.

யாப்பு - 1

காட்டூர்க் கடலே கடம்பூர்
மலையே காப் பேரூராம் *(7.47:1)*

தேமா புளிமா புளிமா
புளிமா தேமா தேமாங்காய்

என அறுசீரடியால் முன்னுள்ள ஐந்து சீர்களும் **மாச்சீர்களாகவும்,** ஆறாம் சீராகிய கடைச்சீர் மட்டும் **காய்ச்சீராகவும்** வருவது 47-ஆம் பதிகம்.

யாப்பு - 2

மற்று பற்றெனக் கின்றி நின்றிருப்
பாத மேமனம் பாவித்தேன் *(7.48:1)*

தேமா கூவிளம் தேமா கூவிளம்
தேமா கூவிளம் தேமாங்காய்

என **மாச்சீரும் விளச்சீரும்** ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து வந்து இறுதிச் சீர் பெரும்பாலும் **காய்ச்சீராகவும்** சிறுபான்மை **விளச்சீராகவும்** அமைய எழுசீரடியால் இயன்றது 48 -ஆம் பதிகம்.

தான தானன தான தானன
தான தானன தானன

என்பதனை இதன் கட்டளையாகக் கொள்ளலாம். **இதன்கண் தான 'தனன'** ஆதலும், **தானன 'தானனா'** என வருதலும் அமையும். இவ்வாறு,

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமை சொல்லித் *(7.49:1)*

தனன தானன தனன தானன
தனன தானா தானா

என வரும் 49-ஆம் பதிகம். இதன்கண் பாடல்தோறும் நான்காமடியின் நான்காஞ்சீரின் பின் **'எத்துக் கிருந்தீர்'** என இரு சீர்கள் வந்து முடிய, அத் தொடரின்பின் **'எம்பிரானிரே'** என்ற தொடர் **'வைப்பு'** ஆக அமைந்துள்ளமை காணலாம். வைப்பாக வந்த **'எம்பிரானிரே'** என்ற விளியையும் அதன்முன் வந்த **'எத்துக் கிருந்தீர்'** என்ற வினாவையும் மீண்டும் ஒருமுறை இசைக்குமிடத்து அத்திருப்பாடற் பொருளும் இசை நலமும் சிறந்து விளங்குதல் அறிந்து பாடி மகிழத் தக்கதாகும்.

யாப்பு - 3

சித்த நீரினை என்னொடு
சூளறும் வைகலும் *(7.50:1)*

தான தானன தானன
தானன தானனா

என்னும் கட்டளையடி பெற்றது 50-ஆம் திருப்பதிகம். முதற் சீராகிய **தான 'தன்ன'** ஆதலும் **தான தானன** என்னும் முதலிரு சீர்களும் ஒன்றித் **'தானாதன'** என வருதலும், முதல் சீர் **'தன தான'** என நிற்க ஏனைச் சீர்கள் வேறுபடாமல் வருதலும் முதலிய விகற்பங்களை இப்பதிகத் திருப்பாடல்களில் காணலாம்.

யாப்பு - 4

பத்திமையும் அடிமையையும் கைவிடுவோன் பாவியேன்

(7.51:1)

கூவிளங்காய் கருவிளங்காய் கூவிளங்காய் தேமாங்காய்

எனக் **காய்ச்சீர்** நான்கு கொண்ட அடிகளாலாய தரவு **கொச்சகக் கலிப்பாக்களாக** அமைந்தது 51-ஆம் பதிகம்.

யாப்பு - 5

முத்தா முத்தி தரவல்ல
முகிழ்மென் முலையாள் உமைபங்கா *(7.52:1)*

தேமா தேமா புளிமாங்காய்
புளிமா புளிமா புளிமாங்காய்

என்றாங்கு **'மா, மா, காய், மா, மா, காய்'** என்னும் அறுசீரடிகளால் இயன்றன. 52, 53ஆம் பதிகங்கள். இவ்விரு பதிகங்களும் நாலாந் திருமுறையில் 15-ஆம் எண்ணுள்ள **'பற்றற்றார் சேர'** (4.15) என்னும் **பழம்பஞ்சுரப்** பதிகத்தினை ஒத்துள்ளமை காணலாம். பழம் பஞ்சுரத்தான் ஏழு பதிகங்களும் கீழ்க் கூறிய வண்ணம் ஐந்து யாப்பு விகற்பங்கள் பெற்றன. 'மிகுந்த பழம் பஞ்சுரத்துக் கேலும் வகை இரண்டாக்கி' எனத் திருமுறை கண்டபுராணம் குறிப்பிடுதலை ஆழ்ந்து நோக்குங்கால் வாகீசர் அருந்தமிழில் **பழம்பஞ்சுரப்** பதிகம் பெற்ற கட்டளை ஒன்றோடு மேலும் இரண்டு கட்டளை பெறுவன சுந்தரர் அருளிய **பழம் பஞ்சுரப்** பதிகங்கள் என்பதும், எனவே அவை பெற்ற மொத்தக் கட்டளைகள் மூன்றென்பதும் நன்கு புலனாகும். கீழ்க்குறித்த ஐந்து யாப்பு விகற்பங்களுள் 1, 2, 3 ஆம் யாப்பு விகற்பங்கள் சீர் வகையால் வேறுபடினும் ஓசைஒப்புமைநோக்கி ஒரு கட்டளை யாகவும், 4-ஆம் யாப்பு விகற்பம் ஒரு கட்டளையாகவும், 5-ஆம் யாப்பு ஒரு கட்டளையாகவும் கொள்ளத் தக்கனவாகும்.

தக்கேசி

இனி 54 முதல் 70 வரையுள்ள பதிகங்கள் **தக்கேசிப்** பண்ணுக்கு உரியன.

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நாள்படப் பாலதொன் றானால் *(7.54:1)*

தனன தானன தானன தனனா
தனன தானன தானனா தானா

என்றாங்கு **மாச்சீரும் விளச்சீரும்** விரவி எண்சீரடியாக வருதல் இத்திருப்பதிகங்களின் கட்டளையாகும். **'தனன' தான** ஆதலும், **'தானன' தனதன** ஆதலும், **'தனனா' தானா** ஆதலும், **'தானா' தனனா** ஆதலும் அமையும். 54 முதல் 70 வரை **தக்கேசிப்** பண்ணமைந்த திருப்பதிகங்கள் யாவும் ஒரே யாப்பினவாய் ஒரே கட்டளையில் அடங்குதலால் 'தக்கேசிப் பேரிசையாற்றாக்கி' என வரும் திருமுறை கண்ட புராணத் தொடர், 'தக்கேசிப் பேரிசை யொன்றாக்கி' என்றிருத்தல் வேண்டும் என்பது யாழ் நூலாசிரியர் கருத்தாகும்.

காந்தாரம்

71 முதல் 75 வரையுள்ள பதிகங்கள் **காந்தாரப்** பண்ணுக்கு உரியன. இவற்றில் அமைந்துள்ள யாப்பு வகைகள் **நான்காகும்.**

யாப்பு - 1

யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன் *(7.71:1)*

தானத்தன தானாதன தானாதன தானா

என வருவது 71-ஆம் பதிகம். இதன்கண் முதற்சீராகிய **தானத்தன** என்பது **'தனதத்தன', 'தந்தந்தன', 'தந்தத்தன', 'தனதன தன', 'தனந்தனதன', 'தனனாதன', 'தானாதன'** என வருதலும், இரண்டாஞ் சீராகவும், மூன்றாஞ் சீராகவும் வந்த **தானாதன** என்பது **'தனனாதன'** ஆதலும் நான்காஞ் சீராகிய **தானா 'தனனா'** ஆதலும் பொருந்தும்.

யாப்பு - 2

கரையும் கடலும் மலையும்
காலையு மாலையு மெல்லாம் *(7.73:1)*

தனனா தனனா தனனா
தானன தானன தானா

என வரும். 73, 75-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின் பாற்படும்.

யாப்பு - 4

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்றும்

(7.74:1)

தானனா தானன தனதன தானா
தனதன தனதன தனதன தானா

என **எண்சீரடியாக** வருதல் 74-ஆம் பதிகத்தின் கட்டளையடி யாகும். 'காந்தாரம் பிரிந்திரண்டாம்' எனத் திருமுறைகண்ட புராணம் குறிப்பிடுதலால் **காந்தாரப்பண்** அமைந்த திருப்பதிகங்கள் **காந்தாரமும், பியந்தைக் காந்தாரமும்** என இரு திறப்பட்டு இரண்டு கட்டளை பெறுவன எனக் கொள்ளுதல் ஏற்புடைய தாகும். கீழே காட்டிய காந்தாரப் பதிகங்களில் 1, 2-ஆம் யாப்பு விகற்பங்கள் ஒரு கட்டளையாகவும் 3, 4-ஆம் விகற்பங்கள் மற்றொரு கட்டளையாகவும் கொள்ளத்தக்கன.

பியந்தைக் காந்தாரம்

76-ஆம் பியந்தைக் காந்தாரமாகும்.

பொருவ னார்புரி நூலர்
புணர்முலை யுமையவ ளோடு *(7.76:1)*

தனன தானன தானா
தனதன தனதன தானா

என வரும். இரண்டாம் திருமுறையில் 90-ஆம் எண் பெற்ற **'எந்தை யீசனெம் பெருமான்'** (2.90) என்னும் பியந்தைக் காந்தாரப் பதிகத்தை ஒத்து இத்திருப்பதிகம் அமைந்திருத்தல் அறியத்தக்க தாகும்.

காந்தார பஞ்சமம்

77-ஆம் பதிகம் **காந்தாரப் பஞ்சமம்.** ''ஒன்றாகும் காந்தாரப் பஞ்சமத்துக்கு'' என்றமையால் இப்பண்ணமைந்த பதிகம் ஒரே கட்டளையினதாதல் பெறப்படும்.

பரவும் பரிசொன் றறியேனான்
பண்டே யும்மைப் பயிலாதேன் *(7.77:1)*

தனனா தனனா தனதானா
தானா தானா தனதானா

என அறுசீராய் வருவது இதன் கட்டளையடியாகும். ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் வந்துள்ள 'அடிகளோ' என்பதன் நடுவே யுள்ள ககரமாகிய குற்றெழுத்து 'அடிக-ளோ' என விட்டிசைத்து நிற்க அச்சொல் **புளிமாங்காய்** எனக் **காய்ச்சீர்** ஆயிற்று.

நட்டபாடை

78 முதல் 82 வரையுள்ள பதிகங்கள் **நட்டபாடைப்** பண்ணில் அமைந்தன. ''ஓர் இரண்டாம் நன்றான சீர் நட்டபாடைக்கு' என்றமையால் இப்பதிகங்களில் அமைந்த கட்டளைகள் இரண்டு என்பது பெறப்படும்.

கட்டளை - 1

வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம் *(7.78:1)*

தானாதன தானாதன தானாதன தானா

எனவரும். **'தானாதன' தனனாதன** ஆதலும், **'தானா' தனனா** ஆதலும் அமையும். முதல் திருமுறையில் 11 முதல் 18 வரை யுள்ள **நைவள** (நட்டபாடை)ப் பதிகங்களையும் இத்திரு முறையில் முதலாவதாகவுள்ள **'பித்தா பிறைசூடி'** (7.1) என்னும் இந்தளப் பதிகத்தையும் அடியொற்றி அமைந்தது இக் கட்டளையடியாகும். 78-80, 82-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.

கட்டளை - 2

கொன்று செய்த கொடுமை
யாற்பல சொல்லவே *(7.81:1)*

தான தான தனன
தானன தானனா

என வருவது 81-ஆம் பதிகமாகும்.

புறநீர்மை

83 முதல் 85 வரையுள்ள பதிகங்கள் **புறநீர்மை** என்ற பண்ணமைந்தன. 'குன்றாத புறநீர்மைக்கு இரண்டாகக் கூறும் இசை ஒன்றாக' என திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலால் இப் பதிகங்களில் இரண்டு கட்டளைகள் உள என்பதும், கட்டளைகள் இரண்டாயினும் இப்பதிகங்களை இசைக்கும் **ஓசை முறை ஒன்றே** என்பதும் நன்கு புலனாகும்.

கட்டளை - 1

அந்தியு நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி *(7.83:1)*

தானன தானதனா தானன தானானா

என வரும். முதற்சீரின் ஈற்றெழுத்து அடுத்த சீருடன் இயை வரும். **'தான தனதனனா தானன தானதனா'** என்னும் விகற்பமும், அவ்வாறே மூன்றாஞ்சீரின் ஈற்றெழுத்து நான்காஞ்சீரின் இயைய வரும். **'தான தனன தனா தான தனன தனா'** என்னும் விகற்பமும் இம்முதற் கட்டளையுள் அடங்கும். மூன்றாந் திருமுறையில் 56 முதல் 62 வரையுள்ள **பஞ்சமம்** என்ற பண்ணமைந்த பதிகங்களின் கட்டளையாகிய,

தானன தானதனா - தன - தானன தானதனா

-17 என்பதில் நடுவே நின்ற **'தன'** ஓரசையை நீக்கப் புறநீர்மைப் பதிகங்களுக்கு உரியதாக கீழ்க்காட்டிய கட்டளையடி வந்தெய்தும்.

சூழ்தரு வல்வினையும் - உடல்-
தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் - மிக-
ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் - அனல்-
பொங்கர வும்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள் - திருத்-
தாடகை யீச்சரமே *(3.62:4)*

என ஆளுடைய பிள்ளையார் அருளிய **பஞ்சமத்திற்குரிய** பதிகப்பாடலில் அடிதோறும் நடுவே பிரிந்து இசைக்கும். 'உடல்', 'மிக', 'அனல்' 'திருத்' என்னும் தனியசைகளை விலக்கிப்படிக்க,

சூழ்தரு வல்வினையும்
தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல்
ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும்
பொங்கர வும்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள்
தாடகை யீச்சரமே *(3.62:4)*

என்ற பாடலமைப்பு வந்தெய்தும். இவ் யாப்புருவம் **புறநீர்மைப்** பதிகமாகிய **'அந்தியும் நண்பகலும்'** (7.83) **'வடிவுடை மழுவேந்தி'** (7.85) என்ற பதிகங்களின் யாப்பிற்கு அடிப்படை யாக உள்ளமை ஆழ்ந்து உணரத்தக்கதாகும். 83, 85-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.

கட்டளை - 2

தொண்ட ரடித்தொழலும் சோதி இளம்பிறையும்
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும் *(7.84:1)*

தான தனதனனா தான தனதனரா
தானன தானதனா தானன தானதனா

என வருவது. 84-ஆம் பதிகம் இவண் குறித்த கட்டளையினை இரட்டிக்க வரும் கட்டளையினையுடையதாகும்.

சீகாமரம்

86 முதல் 89 வரையுள்ள பதிகங்கள் **சீகாமரப்** பண்ணைச் சார்ந்தன. இப் பதிகங்களில் யாப்பு விகற்பங்கள் இரண்டுள்ளன.

விடையின்மேல் வருவானை
வேதத்தின் பொருளானை (7.86:1)

புளிமாங்காய் புளிமாங்காய்
தேமாங்காய் புளிமாங்காய்

எனக் **காய்ச்சீர்** நான்கு கொண்ட அடியினால் இயன்ற தரவு கொச்சகக் கலிப்பாவாக அமைந்தவை. 86, 89-ஆம் பதிகங்கள். இவை இரண்டாம் திருமுறையில் 40 முதல் 48 வரையுள்ள **சீகாமரப்** பதிகங்களை ஒத்தமைந்தன. இரண்டாந் திருமுறையில் 49 முதல் 53 வரையுள்ள **சீகாமரப்** பதிகங்களையும், நாலாந் திருமுறையில் 29 -ஆம் எண் பெற்ற **சீகாமரப்** பதிகத்தினையும் ஒத்தமைந்திருத்தல் அறியத்தக்கதாகும். 'காமரத்துக்கு ஒன்றாகப் போற்றினார்' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதல் இவண் காட்டிய யாப்பு விகற்பங்கள் இரண்டும் ஒரே கட்டளை யாய் அடங்கும் என்பது புலனாம்.

குறிஞ்சி

90 முதல் 93 வரையுள்ள பதிகங்கள் **குறிஞ்சிப் பண்ணைச்** சார்ந்தன. 'உற்றவிசைக் குறிஞ்சிக்கு ஓர் இரண்டாக வகுத்தமைத்து' எனத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலால் சுந்தரர் அருளிய **குறிஞ்சிப்** பதிகங்கள் இரண்டு கட்டளையுடையன என்பது பெறப்படும். இப்பதிகங்களில் உள்ள யாப்பு விகற்பங் கள் **மூன்றாகும்.**

யாப்பு - 1

மடித்தாடு மடிமைக்க ணன்றியே
மனனேநீ வாழு நாளும் *(7.90:1)*

புளிதமாங்காய் புளிமாங்காய் தேமாங்காய்
புளிமாங்காய் தேமா தேமா

எனக் **காய்ச்சீர்** நான்கும் **மாச்சீர்** இரண்டும் பெற்று அறுசீரடியாய் வரும். முதல் திருமுறையில் 129 முதல் 132 வரை உள்ள பதிகங்களையும் இவ் வேழாந்திருமுறையில் (7.30) எண்ணுடைய நட்டராகப் பதிகத்தினையும் அடியொற்றியது 90-ஆம் எண்ணுள்ள இப்பதிகமாகும்.

யாப்பு.- 2

பாட்டுப் பாடிப் பரவித் திரிவார் *(7.91:1)*

தானா தானா தனனா தனனா

எனவும்,

பந்துங் கிளியும் பயிலும் பாவை *(7.91:2)*

தானா தனனா தனனா தானா

எனவும் பத்தெழுத் தடிகளாகவும்,

என்ன தெழிலு நிறையுங் கவர்வாள *(7.91:4)*

தானா தனனா தனனா தனனா

எனவும்,

பணங்கொ ளரவம் பற்றிப் பரமன் *(7.91:5)*

எனவும் பதினோரெழுத்தடிகளாகவும்,

முழுநீறணிமே னியின்மொய் குழலார் *(7:93:5)*

தனனா தனனா தனனா தனனா

எனப் பன்னிரண்டெழுத்தடிகளாகவும் வருதல் இதன் கட்டளை யமைப்பாகும். 91, 93, 94-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின.

யாப்பு - 3

எற்றான் மறக்கே னெழுமைக்கு
மெம்பெரு மானையே *(7.92:1)*

தானா தனனா தனதான
தானன தானனா

என வரும் 92-ஆம் பதிகம் பலவாறு விகற்பித்து வரும் கட்டளை யடியினையுடையதாகும்.

''இப்பதிகமானது 91, 93, 94 என்னும் எண் பெற்ற பதிகங் களோடு **தாளம்** ஒன்றப் பாடுதற்குரியது. அம்மூன்று பதிகமும் ஒரு கட்டளையாக, **'மடித்தாடு மடிமை'** (7.90) என்ற திருப்பதிகம் மற்றொரு கட்டளையாகக் **குறிஞ்சி பண்** இரண்டு கட்டளை பெற்றது' என்பர் யாழ் நூலாசிரியர்.

இவண் குறித்த பதிகங்களுள் (7.94) எண் பெற்ற **'அழனீ ரொழுகி யனைய சடையும்'** என்ற திருப்பதிகம் **'கவுசிகம்'** என்ற பண்ணுக்கு உரியதாக வெளிவந்த பதிப்புகளில் குறிக்கப் பெற்றுள்ளது. திருமுறை கண்ட புராணத்தில் சுந்தரர் அருளிய ஏழாந்திருமுறைப் பண்களை நிரல் படக் கூறுமிடத்துக் **குறிஞ்சிப்** பண்ணின் பின் **செந்துருத்தியும்** அதனையடுத்துக் **கவுசிகப்** பண்ணும் முறையே இடம் பெற்றிருத்தலாலும், **குறிஞ்சி**க்கும் **செந்துருத்தி**க்கும் இடையேயுள்ள **'அழநீரொழுகி'** (7.94) என்னும் பதிகம் முன் **குறிஞ்சிப்** பண்ணுக்கு உரியனவாகக் குறித்த இரண்டு கட்டளைகளுள் ஒன்றெனத் தெளிவாகத் தெரித லாலும் அதனைக் **'கவுசிகம்'** என்ற பண்ணுக்குரியதாகக் கொள் வதைக் காட்டிலும் **குறிஞ்சி** எனக் கொள்ளுதலே ஏற்புடையதாகும்.

'உற்றவிசைக் குறிஞ்சிக்கோ
ரிரண்டாக வகுத்தமைத்து
பற்றறிய செந்துருத்திக்
கொன்றாகக் கவுசிகப்பாற்
றுற்றவிசை யிரண்டாக்கி'

எனத் திருமுறைகண்ட புராணம் குறிப்பிடுதலால் 95-ஆம் பதிகமாகிய **'மீளா அடிமை'** (7.95) என்னும் **செந்துருத்திப்** பதிகத்திற்கு முன்னுள்ள (7.94) என்ற பதிகம் **குறிஞ்சிப்** பண்ணுக்கு உரியதென்பதும், **செந்துருத்திப்** பதிகத்தின் பின்னுள்ள **'தூவாயா'** (7.96) என்னும் பதிகம் **கவுசிகப்** பண்ணுக்கு உரியதென்பதும் நன்கு பெறப்படும்.

'செந்துருத்தி' என்ற பண்ணின் பழைய பெயர் **'செந்திறம்'** என்பதாகும். 'செந்துருத்திக்கு ஒன்றாக்கி' என்றதனால் இஃது ஒரு கட்டளை பெறும் என்பது புலனாம்.

மீளா அடிமை யுமக்கே
யாளாய்ப் பிறரை வேண்டாதே *(7.95:1)*

தானா தனனா தனனா
தானா தனனா தானானா

என வரும்.

தானா 'தனனா' ஆதலும், **தனனா 'தானா'** ஆதலும், **தானானா 'தனதானா'** ஆதலும் அமையும். ஏழாந்திருமுறையில் (7.96) என்ற இப்பதிகம் முதல் திருமுறையில் 66 முதல் 74 வரையுள்ள **தக்கேசிப்** பதிகங்களின் யாப்பினை ஒத்திருத்தல் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

(7.96) பதிகம் **பஞ்சமம்** என்ற பண்ணிற்கு உரியதாக அச்சிடப் பெற்ற பதிப்புகளில் குறிக்கப் பெற்றுள்ளது. சுந்தரர் பாடியருளிய திருப்பதிகங்களில் **செந்துருத்தி** என வழங்கும். செந்திறப் பண்ணிற்கும் **பஞ்சமம்** என்ற பண்ணிற்கும் இடையே **கவுசிகம்** என்ற பண் அமைந்ததாகத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுதலால், **'தூவாயா'** (7.96) என்ற பதிகத்தினைக் **கவுசிகப்** பண்ணிற்கு உரியதாகக் கொள்ள வேண்டும் என்பது **விபுலானந்த அடிகளார்** (யாழ்நூலாசிரியர்) கருத்தாகும்.

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள் *(7.96:1)*
தானானா தானனா தானன தானானா

என்பது 96-ஆம் பதிகத்தின் கட்டளையாகும். **'தானானா' தனதானா** ஆதலும், **'தானன' தனதன** ஆதலும் அமையும். 'கவுசிகப்பாற், றுற்றவிசை இரண்டாக்கி' என்பதனால் இப்பண் ஆளுடைய பிள்ளையார் அருளிய **கவுசிகப்** பதிகங்களில் போன்று இங்கு இரண்டு கட்டளை பெறுமெனக் கருத வேண்டியுளது.

மூன்றாம் திருமுறையிலும் ஏழாந்திருமுறையிலும் **கவுசிகம்** என்ற பண்ணமைந்த பதிகங்களின் பின் **பஞ்சமம்** என்னும் பண்ணுக்குரிய பதிகங்கள் முறைப்படுத்தப் பெற்றுள்ளன. இம் முறையில் **கவுசிகப்** பண்ணுக்குரிய இறுதிப் பதிகம் **பஞ்சமத்** திற்கு உரியதாகவும் **பஞ்சமத்**திற்குரிய முதற்பதிகம் **கவுசிகத்**திற்கு உரியதாகவும் ஏடுகளில் பண்பெயர்கள் இடம்மாறிக் குறிக்கப் பெறுதல் நிகழக் கூடியதேயாம். மூன்றாம் திருமுறையில் **'விரையார் கொன்றையினாய்'** (3.55) என்ற திருப்பதிகம் **பஞ்சமம்** என்ற பண்ணுக்குரிய இயலிசை அமைப்புடையதாகவும், முன்னுள்ள **கவுசிகப்** பதிகங்களுடன் சேர்த் தெண்ணப் பெற்றுள்ளது. அது போலவே, இவ் வேழாந்திருமுறையில் **கவுசிகப்** பண்ணுக்கு உரிய **''தூவாயா''** (7.96) என்னும் பதிகம் பின்னுள்ள **பஞ்சமம்** என்ற பண்ணுக்குரிய பதிகங்களுடன் சேர்த்து எண்ணப் பெற் றிருத்தல் வேண்டும் எனத் தெரிகின்றது.

பஞ்சமம்

97 முதல் 100 வரை உள்ள திருப்பதிகங்கள் **பஞ்சமம்** என்ற பண்ணில் அமைந்துள்ளன. 'தூய இசைப்பஞ்சமத்துக்கு அற்ற இசை ஒன்றாக்கி அரனருளால் விரித்துரைத்தார்' எனத் திருமுறை கண்ட புராண ஆசிரியர் தேவாரப் பண்ணின் கட்டளை வகை யினைக் கூறி முடித்துள்ளார். எனவே ஏழாந்திருமுறையின் இறுதிப் பண்ணாக அமைந்தது **பஞ்சமம்** என்பதும், அப்பண்ணுக்கு உரிய பதிகங்கள் ஒரே கட்டளையாய் அடங்கும் என்பதும் நன்கு புலனாகும்.

ஆதியன் ஆதிரையன் - அயன் -
மாலறி தற்கரிய *(7.97:1)*

தானன தானதனா - தன -
தானன தானதனா

என வருவது இதன் கட்டளையாகும். 97-100-ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின. இவை மூன்றாம் திருமுறையில் **பஞ்சமம்** என்ற பண்ணுக்கு உரிய 56-62-ஆம் பதிகங்களை அடியொற்றி அமைந்தனவாகும்.

முடிவுரை

இதுகாறும் தேவார ஆசிரியர்கள் மூவரும் திருவாய் மலர்ந் தருளிய ஏழு திருமுறைகளிலும் முறையே அமைந்துள்ள பண்கள் இவை என்பதும், அப் பண்களுக்குரிய திருப்பதிகங்கள் பெற் றுள்ள கட்டளை விகற்பங்களின் தொகையும், அவை புலப்படும் நிலையில் இப்பொழுது தேவாரத் திருப்பதிகங்களில் தெளிவாக விளங்கும் யாப்பமைதிகளும் ஏடு எழுதுவோர்களால் பிற்காலத் தில் நேர்ந்த சில மாற்றங்களும் திருமுறை கண்டபுராணத்தை ஆதரவாகக் கொண்டு எடுத்துக் காட்டி விளக்கினேன்.

தேவாரத் திருப்பதிகங்களை இசையுடன் பாடியும் கேட்டும் மகிழ வேண்டுமானால் அப்பதிகங்களுக்குரிய பண்ணாகிய இசையமைப்பினையும் பாடல்களுக்கு உரிய தாள அமைப்பினை யும் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். செய்யுட்களின் தாள அமைதியினைப் புலப்படுத்துவன அவற்றில் அமைந்த சீர்நிலைகளேயாகும். ''சீர்'' என்னும் சொல்லுக்குத் **தாளம்** என்பதும் ஒரு பொருள்.[36] எனவே திருப்பதிகப் பாடல்களின் சீர்நிலை

36 'கொடிபுரை நுசுப்பினாள் கொண்ட சீர் தருவாளோ?' - கலித்தொகை கடவுள் வாழ்த்து.

களாகிய யாப்பமைதியினைப் பகுத்து உணருங்கால் அதனை நிலைக்களனாகக் கொண்டு நிகழும் தாளக் கூறுபாடும் இனிது விளங்கும் என்னும் கருத்தால் திருமுறைகண்ட புராண ஆசிரியர் தேவாரத் திருப்பதிகங்களின் பண்முறை பற்றியமைந்த கட்டளை களைப் பகுத்துக் கூறியுள்ளார்.

திருமுறை கண்டபுராணத்தில் கூறிய வண்ணம் தேவாரப் பதிகங்களுக்குரிய பண்களும் கட்டளைகளும் பெரிய புராண ஆசிரியராகிய **சேக்கிழார் பெருமான்** காலத்திற்கு முன்பிருந்தே வழங்கி வந்துள்ளன. **திருமுறைகண்டபுராணம்** காலத்தாற் பிற்பட்டதாயினும் அந்நூல் விரித்துரைக்கும் திருமுறைப் பகுப்பும் பண்ணடைவும் கட்டளை வகைகளும் திருமுறை வகுத்த **நம்பியாண்டார் நம்பி** காலத்திலேயே நிலை பெற்று வழங்கிய தொன்மை வாய்ந்தன என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. ஆளுடைய பிள்ளையார் பாடிய **'பூவார் கொன்றை'** (1.24) என்னும் திருப்பதிகம் **தக்கராகப்** பண்ணுக்குரிய கட்டளைகளுள் ஒரு கட்டளைக்குரிய எட்டுத் திருப்பதிகங்களுள் ஒன்றாக அமைந்தது என்பதனை,

"திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங்
கொண்டருளித் திருமுன் நின்றே
அருட்பெருகு திருப்பதிகம் எட்டொருகட்
டளையாக்கி அவற்றுள் ஒன்று
விருப்புறுபொற் றிருத்தோணி வீற்றிருந்தார்
தமைப்பாட வரவு காதல்
பொருத்தமுற அருள்பெற்றுப் போற்றியெடுத்
தருளினார் பூவார் கொன்றை."[37]

என்ற பாடலில் **சேக்கிழார் பெருமான்** தெளிவாக விளக்கி யுள்ளார்கள். சம்பந்தர் அருளிய முதல் திருமுறையில் **'மடையில் வாளை'** (1.23) முதல் **'விதியாய் விளைவாய்'** (1.30) என்பது

37 பெரி.புரா - சம்பந்தர் புரா.107

வரையுள்ள எட்டுத் திருப்பதிகங்களும் **தக்கராகத்**திற்குரிய ஏழு கட்டளைகளுள் முதல் கட்டளையாக அமைந்தவை என்பதும், முதல் கட்டளையுள் அடங்கிய எட்டுத் திருப்பதிகங்களுள் ஒன்றே **'பூவார் கொன்றை'** (1.24) என்னும் இப்பதிகம் என்பதும் யாழ்நூல் தேவார இயலுள் தொகுத்துரைக்கப் பெற்றுள்ளன. இங்ஙனம் சேக்கிழாரடிகள் **தக்கராகப்** பண்ணுக்குரிய கட்டளை களுள் ஒரு கட்டளையுள் அடக்கிய திருப்பதிகம் எட்டெனவும், அவ் வெட்டினுள் ஒன்றாக அமைந்தது **'பூவார் கொன்றை'** (1.24) என்னும் திருப்பதிகம் எனவும் வரையறுத்துக் கூறுதலைக் கூர்ந்து நோக்குமிடத்து அவ்வாசிரியர் காலத்திலேயே தேவாரப் பண்களுக்குரிய கட்டளைகளும் அவற்றுள் அடங்கிய திருப் பதிகங்கள் இத்தனை இத்தனை என்னும் வரையறையும் விளங்க அமைந்த தெளிவான கட்டளை அமைப்பு நிலை பெற்று விளங்கினமை நன்கு புலனாகும்.

இன்னொரு முக்கிய குறிப்பு: சேக்கிழாரடிகள் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் சம்பந்தர், நாவுக்கரசர், தம்பிரான் தோழர் ஆகிய மூவர் வரலாறுகளையும் விரித்துக் கூறும்பொழுது அவர்கள் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களில்[38] இன்ன இன்ன பதிகங்கள் இன்னின்ன செவ்வியில் அருளிச் செய்யப் பெற்றன எனவும், அவற்றுள் சிலவற்றின் பண்கள் இவை எனவும், சில திருப்பதிகளுக்குள்ள பெயர்கள் இவை எனவும் விரித்துக் கூறியுள்ளார். திருப்பதிகங்கள் பாடப்பெற்ற செவ்வியினை குறிப் பிடும் இடங்களில் அவ்வத் திருப்பதிகங்களின் கட்டளை யமைப்பு இனிது புலப்படுத்தற்கு ஏற்ற சந்தர்ப்பங்களையும் ஆங்காங்கே அமைத்துப் பாடியுள்ளார். நம்பியாரூரர் முதன் முதலில் பாடியருளிய **'பித்தா பிறை சூடி'** (7.1) என்னும் திருப்பதிகம் **இந்தளம்** என்ற பண்ணிற் பாடப் பெற்றதென்பதும் அதன்கண் அமைந்த **தாள** அமைதியும் ஆகிய குறிப்புகளை,

---

38 முதற் பொழிவில் அற்புதப் பதிகங்கள் மட்டும்தான் காட்டப் பெற்றன.

''முறையால் வரு மதுரத்துடன்
மொழிஇந்தள முதலில்
குறையாநிலை மும்மைப்படி
கூடுங்கிழ மையினால்
நிறைபாணியின் இசைகோள்புணர்
நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன்
எல்லாம்நிகர் வல்லான்.''[39]

எனவரும் பாடலில் சேக்கிழாரடிகள் தெளிவாகக் குறித்துள்ளமை கவனிக்கத் தக்கது.

'பித்தாபிறைசூடி' (7.1) என்ற பதிகத்தின் இசையமைதியினை விளக்கும் இப்பாடல் அத்திருப்பதிகத்தின் இசைநிலையை விளக்கும் அதே யாப்பில் அமைந்திருத்தல் காணலாம். ஏழாம் திருமுறையின் முதலிலுள்ள இத்திருப்பதிகம் **இந்தளம்** பண்ணுக்கு உரியதென்றும், இந்தளப் பண் அமைய நம்பியாரூரர் பாடியருளின் திருப்பதிகங்கள் இரண்டு கட்டளைகள் பெறுவன என்றும், திருமுறை கண்ட புராணம் கூறும் குறிப்பு பெரிய புராணத்தில் சேக்கிழார் கூறும் குறிப்புகளுடன் ஒத்திருத்தல் காணலாம். இவ்வாறே தேவாரத் திருமுறைகளின் அமைப்புபற்றித் திருமுறை கண்ட புராணத்தில் கூறப்பெறும் செய்திகள் பலவும் சேக்கிழார், நம்பியாண்டார் நம்பி முதலிய முன்னையோர் கருத்துகளை அடியொற்றி அமைந்தன என்பது திருமுறை நூல்களை ஒப்பு நோக்கிப் பயிலுங்கால் இனிது புலனாகும்.

இயற்றமிழில் வகுத்துரைக்கப்பெறும் யாப்பு விகற்பம் ஒன்றிலேயே இசைத் தமிழ் விகற்பங்கள் பல தோன்றுதல் கூடும். இந்நுட்பம்

---

39 பெரி.புரா. தடுத்தாட்.புரா.75

அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உரைத்தலும் வல்லோர் ஆறே.[40]

என வரும் தொல்காப்பிய நூற்பாவால் உய்த்துணரப் பெறும். செய்யுட்களின் உறுப்புகளாகிய அசையினையும் சீரினையும் இசையமைதியோடு சேர்த்து நோக்கி, இசையமைப்புக்கு ஏற்ப அவ்விசையினையும் சீரினையும் பகுத்து உணர்த்துதலும் இயலிசைத் திறத்தில் வல்ல நல்லிசைப் புலவர் நெறியாகும் என்பது இவண் காட்டிய நூற்பாவின் பொருளாகும். ஒரு சீரின் முன்னும் பின்னும் உள்ள அசையினை விட்டிசைத்துத் தனியசையாக நிறுத்தியும், சீரின் ஈற்றசையினையினைப் பின்வரும் சீரின் முதலிலும் முதலசையினை முன்னுள்ள சீரின் ஈற்றிலும் பிரித்து இசைத்தும், இவ்வாறு எழுத்துப் பிரிந்திசைத்தலாகிய இசைமுறைபற்றி இயற்றமிழ் யாப்பு ஒன்றிலேயே இசைத் தொடர்புடைய வேறு சில யாப்பு விகற்பங்கள் தோன்றுதல் கூடும். இதற்கு இயற்றமிழ் யாப்பாகிய கட்டளைக் கலித்துறையினை எடுத்துக்காட்டாக்குதல் மிகவும் பொருந்தும்.

முதல் திருமுறையில் (1.116), (1.117) என்ற பதிகங்கள் **'வியாழக் குறிஞ்சி'** என்ற பண்ணில் அமைந்தன. மூன்றாந் திருமுறையும் (3.56), (3.57) ஆம் பதிகங்கள் **'பஞ்சமம்'** என்னும் பண்ணுக்கு உரியன. நான்காம் திருமுறையில் (4.80) முதல் (4.100) வரையுள்ள பதிகங்கள் **திருவிருத்தம்** எனப் பெயர் பெற்றன. ஏழாம் திருமுறையில் (7.18) முதல் (7.28) வரையுள்ள பதிகங்களில் பல **'நட்டராகம்'** என்ற பண்ணிலும் (7.97) முதல் (7.100) வரையுள்ள பதிகங்கள் **'பஞ்சமம்'** என்ற பண்ணிலும் அமைந்துள்ளன. இவை யாவும் இயற்றமிழ் யாப்பின் படி கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களே. ஆயினும் இவற்றுள் **திருவிருத்தப்** பதிகங்கள் மட்டும் 'கட்டளைக் கலித்துறை' என்ற முறையில் பாடப் பெறுகின்றன. ஏனைய பதிகங்கள் எழுத்துப்

---

40 தொல்.பொருள். செய்யுளி-11

பிரிந்திசைக்கும் முறைபற்றி வெவ்வேறு யாப்பு விகற்பங்களாகப் பாடப் பெற்று வருவதனைத் தேவார ஓதுவார்கள் பலரும் நன்கு உணர்வார்கள்.

அசையும் சீரும் இசையொடு சேர்ந்து எழுத்துப் பிரிந்திசைத் தலாகிய இசை முறையினால் முதல் திருமுறையில் **நட்டபாடைப்** பண்ணில் அமைந்த யாப்பு விகற்பங்கள் நான்கும், இரண்டிரண்டு யாப்பு வகைகளாகப் பிரிந்து எட்டுக் கட்டளையாகிய திறத்தை யாழ் நூலாசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

இனி, இயற்றமிழில் வேறு வேறாகிய யாப்பு விகற்பங்கள் சில **ஒத்த ஓசைபற்றியும்** சீர்நிலையினால் உளவாம் **ஒத்த தாளங்களின்** இயைபு பற்றியும் ஒரு கட்டளையாக அடக்கப் பெறுதலும் உண்டு. சம்பந்தப் பெருமான் அருளிய இரண்டாந் திருமுறையில் (2.54) முதல் (2.82) வரையுள்ள **இந்தளப்** பண்ணுக்குரிய பதிகங்களில் **பத்து** யாப்பு விகற்பங்கள் உள்ளன. 'தேவு வந்த இந்தளத்தின் செய்திக்கு நான்கு' எனத் திருமுறை கண்டபுராணத்தில் **இந்தளத்**திற்கு நான்கு கட்டளைகளே கூறப் பெற்றன. இவண் கூறிய யாப்பு வகைகள் பத்தும் **ஓசையொப்புமை** பற்றியும் **தாள இயைபு** பற்றியும் நான்கு கட்டளைகளுள் அடங்கின.

இனி, ஒரே யாப்பு விகற்பம் பல பண்களிலும் பயிலக் காண் கிறோம். **காந்தாரப் பண்ணில்** சம்பந்தப் பெருமான் அருளிய **'வேயுறுதோளி பங்கன்'** (2.85) என்ற பதிகத்தின் யாப்பு விகற்பம், நாவுக்கரசர் பெருமான் பாடியருளிய **'சிவனெனுமோசை'** (4.8) என்ற **பியந்தைக் காந்தாரப்** பண்ணிலும், **'பருவரை யொன்று சுற்றி'** (4.14) என்னும் **பழம் பஞ்சுரப்** பண்ணிலும் வருதல் காணலாம்.

இவ்வாறே முதல் திருமுறையில் உள்ள **'வடந்திகழ் மென்முலையாளை'** (1.43) என்ற **தக்கராகப்** பதிகத்தின் யாப்பு, இரண்டாம் திருமுறையில் **'மந்திரமாவது நீறு'** (2.66) முதலிய

காந்தாரப் பதிகங்களில் அமைந்திருத்தலும், **'சீரணி திகழ் தரு'** (1.41), **'விழையாருள்ளம்'** (1.42) என வரும் **தக்கராகப்** பதிகங்களின் யாப்பு விகற்பம் ஏழாம் திருமுறையில் **'வைத்தனன் றனக்கே'** (7.14) **'பூணாணாவதோர்'** (7.15) என வரும் **தக்கராகப்** பதிகங்களில் அமைந்திருத்தலும், மூன்றாம் திருமுறை யில் **பஞ்சமப்** பண்ணில் அமைந்த **'பைங்கோட்டு மலர்ப் புன்னை'** (3.63) என்ற பதிகத்தின் யாப்பமைதி நாவுக்கரசர் அருளிய **'கரவாடும்'** (4.1) என்னும் **காந்தாரப்** பண்ணில் காணப்படுதலும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கனவாகும்.

ஆகவே, இதுகாறும் எடுத்துக் காட்டிய குறிப்புகளால் தேவாரத் திருப்பதிகங்களில் **சீர்நிலை**பற்றியும், எழுத்தளவாகிய **மாத்திரை** பற்றியும், சீர்களில் முன்னும் பின்னும் உள்ள எழுத்துகள் அசை யாய் நின்று முன்பின்னுள்ள சீர்களின் ஈற்றிலும் முதலிலும் பிரிந்திணைந்து இசைத்தலால் உளவாம் **இசைமுறை** பற்றியும், அமைந்த **ஓசைக் கூறுபாடுகளே** திருமுறை கண்ட புராணம் கூறும் தேவாரப் பதிகங்களின் கட்டளைகளாம் என்பது நன்கு தெளியப்படும். தேவாரத் திருப்பதிகங்களாகிய ஏழு திருமுறை களிலும் பண்கள் தோறும் அமைந்த கட்டளைகளின் தொகையினை யும் அவற்றுக்குரிய யாப்பு விகற்பங்களின் தொகையினையும் உற்று நோக்கித் தெளிவு பெறுதல் இசைப் புலவர்களின் இன்றி யமையாத கடமையாகும்.

பின்னிணைப்பு

பயன்பட்ட நூல்கள்

அமிர்தசாகரர் : **யாப்பருங்கலக்காரிகை** மூலமும், குணசாகரர் இயற்றிய உரையும் (வேங்கடசாமி நாட்டார் பதிப்பு) வெளியீடு : கழகம். (டி.டி.கே. சாலை, சென்னை - 18 - 1944)

அமிர்தசாகரர் : **யாப்பருங்கலக் காரிகை** (பாட நூண் பதிப்பு) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - (1973)

ஆழ்வார்கள் : **நாலாயிர திவ்வியப் பிரபந்தம்** - மகாவித்துவான் கி. வேங்கடசாமி ரெட்டியார் வெளியீடு. திருவேங்கடத்தான் திருமன்றம், 32, பெருமாள் முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் : **தேவாரம் அடங்கன் முறை.** (இரண்டு தொகுதிகள்) மயிலைக்கிழார் இளமுருகனார் பதிப்பு, 150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை - 1.

சுப்புரெட்டியார், ந. : **ஞானசம்பந்தர்,** வேங்கடம் வெளியீடு. AD13, அண்ணா நகர், சென்னை - 40 (நவம்பர் 1986).

சுப்புரெட்டியார், ந : **நாவுக்கரசர்,** வேங்கடம் வெளியீடு, AD13, அண்ணா நகர், சென்னை - 40 (ஜுன் - 1986).

சுப்பு ரெட்டியார், ந : **தம்பிரான் தோழர்,** வேங்கடம் வெளியீடு, AD13, அண்ணா நகர், சென்னை - 40 (திசம்பர் 1985)

திருமூலநாயனார் : **திருமந்திர மாலை,** பதிப்பாசிரியர் K. சுப்பிரமணிய பிள்ளை (1976) குமர குருபரன் சங்கம், சீன வணிகம், நெல்லை மாவட்டம்.

தொல்காப்பியர் : **தொல்காப்பியம் பொருளதிகாரம்.** இளம்பூரணர் உரை கழகம், டி.டி.கே. சாலை, சென்னை - 18 (1953).

தொல்காப்பியர் : **தொல்காப்பியம் பொருளதிகாரம். முதற் பாகம்.** (நச்சினார்க்கினியர்) (1934).

இரண்டாம் பாகம் பேராசிரியம் - 1935. பதிப்பு - சாது அச்சுக்கூடம் - சென்னை - 14.

வெள்ளை வாரணன். க : **பன்னிரு திருமுறை வரலாறு** (முதற் பகுதி) - 1961. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

★



First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்



Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) **Tamil Payitrum Murai [1957]**
2) **Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]**
3) **Kalvi Ulaviyal Kotpaadukal [1989]**
4) **Vainava Selvam [1995]**

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)



பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
http://tinyurl.com/nsr100collections
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]

India Book of Records

CERTIFICATE

CENTENARY CELEBRATIONS OF PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.

India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.

ISBN: 978-81-938927-5-6

9 788193 892756 >

